 மேன்மைபெறத் தானேயூதித் தியானம்பண்ணி
கண்ணப்பா பெண்களுக்குக் குளிசங்கட்டி
 நன்மையுள்ள வரிசைபெறன்று இஷ்டங்கேளே. (66)

யோக ஞான சாஸ்திரத்திரட்டு.

கேளடா குருக்குறியில் இன்னபாசம்
கிருபையுடன் ஞானவிலாச மருந்துகேளு
[illegible]
மெய்யடக்கமுடன் நல்லின்பமாய் தன்னிலேவாங்கிக்
கேளடா அந்தரங்கமொன்று தன்பரிசுத்தான
கேள்வியென்ன பெருக்காயந் துரையுரைத்துக்
கேளடா பெண்ணுடம்பிற் றவித்தாலும்
கெட்டியாய்ப் புருடனையும் பேசச்சொல்லே.

சொல்லடா நான்முன்னு தினத்திலென்று
சற்குருவின் மாதுரகி தலைக்குதாயும்
நில்லடா ஊர்ப்போதே ஏருகுத்தம்
நேர்மையுள்ள செற்பழுதாய்ப் பிள்ளையுண்டாம்
அல்லடா இதின்விபரம் மைத்தாயும்
ஆருக்குஞ் சொல்லாதே அறிவாய்பில்லு
செல்லடா இக்குமுறை நாதன்சொல்லச்
செம்மையுடன் நானறிந்து தெளிந்தேன்பாரே.

தெளிந்துகொண்டு வெக்கிரம் எக்கிலுத்தைச்
செம்மையுடன் சற்குருவின் பாதம்போற்றி
அறிந்துமனைக் கனிவதனுற் பூசைபண்ணி
ஆதார மூலமதை யன்பாய்க்கண்டு
தெளிந்துமனை மலையாமல் வாசியேறி
தெற்றிகெடப் புருவமையச் சுடரைப்போற்றிக்
குளிர்ந்துவரு மமுதரச பானம்பண்ணிக்
குருவான பதிதனிலே குவித்தேன்பாரே.

பாரப்பா குவிந்துமனங் கொண்டெல்ல
பதிவான கலைக்கியானந் தன்னைப்பார்த்துக்
காரப்பா சத்தியதம் பூசைபண்ணி
கனிந்துவரு மமுதரச பானங்கொண்டு
சேரப்பா நின்றுவந்து செய்தவினில்
நிலையான பூரணமும் நிறைந்தும்
வீரப்பா கொண்டுவொரு புத்தியாலே
மெய்மறந்து நின்றநிலை விண்ணுள்ளோனே.

தருணப்பா தெய்வதங்கள் சேவிதற்குக்
கருவான பூமியுடன் வளமைசேரு
பூணப்பா குறிஞ்சிப்பிரு திவியுமாகும்
புகழான நெய்தனிலம் அப்புவாகும்
பேணப்பா மருதநிலம் தேயுவாகும்
பிலமான முல்லைநிலம் வாயுவாகும்
காணப்பா பாலைநிலம் ஆகாயந்தான்
உத்தமனே அஞ்சுநிலத் தன்மைதானே.

உண்மையுள்ள பஞ்சநில மஞ்சிலேதான்
உத்தமனே மூன்றுநில முண்மையுண்மை
நன்மையுள்ள மூன்றுநில மேதென்றக்கால்
நலமாகச் சொல்லுகிறேன் மைந்தகேளு
தன்மையுள்ள குறிஞ்சிநிலஞ் சித்தர்க்காகும்
தயவான கெவனிகட்குஞ் சார்வாமைந்தா
இன்மையில்லா மௌனசிவ யோகிக்கெல்லாஞ்
சிவசிவா குறிஞ்சிநிலந் திறந்தான்பாரே.

பாரப்பா இல்லறத்தோ டொத்துநின்று
பதிவான ஞானசிவ யோகிக்கெல்லாம்
நேரப்பா மருதமுல்லை நிலமிரண்டும்
நேர்மையுள்ள செபதபத் துக்குறுதியாகும்
காரப்பா சம்சாரிக் காருயிர்க்குக்
கருணையுள்ள நிலமதுதான் மெய்ந்தநன்று
வீரப்பா பாலைநெய்தல் நிலமிரண்டும்
வெருகடனம் வெருகடன்ம் சுத்தப்பாழே.

சுத்தமுள்ள நிலமதிலே யஞ்சிலுமொன்று
சுகமான அகமதிலே ஆழ்ந்துபாரு
பக்குவமுடன் பார்த்ததிலே பதிவாய்நின்று
பதியறிந்து கெதியறிந்து பதிவாய்நின்றால்
புத்தியது கோசரமாய்ப் பிரகாசிக்கும்
பூரணமுங் காரணமும் பொருந்திவாழும்
சித்தமுடன் நிலையறிந்து நிலையைப்பெற்றுச்
சின்மயமாய்த் தன்மையுடன் நன்மையாமே.

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] 75

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]


[illegible]
[illegible]
[illegible]
படைத்தவனை கோடியிலே யொருவன்றானும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible] வெளியாமே சுபமாச்சே.

ஆச்சப்பா பரமவெளி போதமாக
அதிலிருந்து சகலகலைக் கியானம்பாரு
மூச்சப்பா [illegible] வாசிபாரு
மூலமான [illegible] நன்றாய்ப்பாரு
பேச்சப்பா போத [illegible]
பெருகிநின்ற அமுதரச பானங்கொண்டு
[illegible] நிலையறிந்து யோகம்பாரு
நின்றநிலை [illegible] நிலையாய்நில்லே.

பில்லென்ற கலைதனிலே நினைவாய்நின்று
நிசமான பிரணவமாய் நிலைகண்டோர்க்குச்
செல்லென்ற தசதீட்சை சடாக்ஷம்பண்ணித்
திருவான பூரணமு மனைந்திருந்து
சொல்லென்ற சாத்திரமுந் திரமுரைத்து
கருதியுள்ள மந்திரத்தின் [illegible]
ஓல்லென்ற ஆதாரம் அறுதாரம்;
ஓமென்ற அனுக்கிரக உண்மைசொல்வேன்.

உண்மையுள்ள கர்மமதை யறிந்துகொண்டு
உத்தமனே சகலமே வாகிதேயுந்
நன்மையுள்ள நாட்டமதாய் மௌனம்பார்த்து
மௌனமென்ற கண்ணாடிக்கு விண்ணிலோர்கிளித்
தன்மையுடன் தன்னறிந்து தானுமெய்ந்து
தன்னொளியும் விண்ணொளியு மொன்றாய்க்கண்டே
சின்மயமாந் தன்மயமு மென்மையாகத்
தெளிந்துசிவ சின்மயமாய்த் தெளிவாகுமே.

கடைப்பிள்ளை ஞானக்கண்ணாடி 80
முற்றிற்று.



திருச்செந்தூர் [illegible] சாஸ்வதி யதி அவர்களாற் பிரசுரிக்கப்பட்ட இந்த சாஸ்திரம் அச்சிட்டது.



உ

முருகன் துணை.

ஐந்தாவது

சடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

சிவயோக ஞானம் 100.

காப்பு.

பூமகள் மணாக்கன் வாலை பொருந்திய நந்தி காப்பு
மாமகள் மனோனந் தாதி வாசியுள் மூலங் காப்பு
நாமகள் கமலக்கண்ணன் நாதாந்தத் தந்தங் காப்பு
பூமகள் கிருபையாலே முன்னவன் காப்புத் தானே.

பூத்திடு முருகன் காப்பு புருவமை யக்கண் காப்பு
சேத்திடு மருட்கண் காப்பு சின்மயக் கண்ணே காப்பு
வேத்திடு மையன் பக்கன் வேதாந்தக் கணேசி புக்கன்
காத்திடு மௌனிகண் காப்பு சடைக்கண்ணூப் பாழ்கண் காப்பே

வேறு.

காப்புலி சிவபுலி கருத்தன் கோப்புலி
திப்புலி திண்றுகாண் செத்து நின்றுகொண்
டாப்புலி புன்முனை படங்கிச் சூத்திரம்
தூப்புலி மலிகுடி பூசிற் புக்குவாம்.

புலிபூசிற் காடியென்றே னப்பாபூசை
புலிபோலே பாய்ந்தடா பாச்சல்கண்டு
புலிபோலே பதுங்கியொரு புத்திற்சார்ந்தேன்
புற்றிலிவனார் சூளிபனை யெட்டிக்கொத்த
நலியாமற் புத்தரவு சிறிச்சிற
நானுமொரு காடியெனப் புத்தில்நின்று
வலியாமை லரவுபட மறித்தாக்கொண்டு
வாயிலுள்ள விஷத்தையுங்கீ வாங்கினேனே. (1)

வாங்கியொரு கிச்சிலிவெட்டு எலிமையக்கண்டேன்
வனுத்தளவி யெட்டையஞ்சு கடிவன்றான்று
யாங்குபெற வலிக்குவழி பெண்டான்மேலே
பக்கமதி லிருக்குமதைத் தொக்காய்க்கண்டேன்
தாங்கியதிற் பெண்டானில் வழியேசெல்லத்
தாட்டிகமா யெட்டெலியுந் தன்னித்தன்னித்
ஓங்கியது பெண்டானில் வழிமேலோடி
ஒருமிக்க வந்ததடா ஒருமித்தேனே. (2)

ஒருமித்தேன் பெண்டானி லெலிதானெட்டும்
ஓமூடிந்து போகவல்லோ வந்ததப்பா
தருமித்தேன் பெட்டையது அஞ்சில்மூன்று
தனிப்பட்டு வந்ததடா திரும்பவஞ்சும்
ஒருமித்துப் பஞ்சான்றன் மடிக்கைபார்க்க
ஓடாது அஞ்சில்ரெண்டு மூன்றுதண்டாய்
ஒருமித்து எதிரேறிப் பெண்டான்றேடி
ஓரைந்து மூன்றுமொன்றாய்ச் சண்டானுச்சே. (3)

சண்டானைப் பெண்டானிற் சட்டுத்தின்றேன்
சட்டதிலே பச்சையடா வெடிவால்விசங்
கண்டாலு மூரிலுள்ளோ ரடிப்பாரென்று
கரையடியி லொருபுறமாய் வெளியில்வந்தேன்
உண்டான தோரடியில் மச்சங்கண்டேன்
ஓகோகோ அம்மச்ச மானேனப்பா
சண்டானில் மூன்னெலிபோற் சுருக்கிக்கொண்டு
சவாசம்விட்ட குறையாலே வழிகண்டேடே. (4)

வழியேதான் பாதையிலே குளியுன்பாம்பு
வால்மடித்துச் சிரசபடம் விரித்துக்கொண்டு
வெளியாடிச் சிறியங்கே பாதைகட்டி
விரட்டியது தாத்திமெத்த வேகங்கொண்டு
குளியான குளியனது அலைகுசாய்த்துக்
கொத்தயிலே கைவாசிக் குளிகைகொண்டு
தெளிவான சித்தரென்று பிடித்தேன்பாம்பைச்
சிக்கியொரு பக்கமதாய்ச் சுகியமாச்சே. (5)

யோக ஞான சாஸ்திரத் திரட்டு.

சவியமா யிருக்கையிலோ சவியினொன்று
கருக்காட வத்தினால் சுற்றிக்கொண்டு
சவியமென வுரையளவு பட்டமுமேக்கால்
சுகந்லெயாய்ச் சுற்றியோரு வட்டஞ்செய்ய
முனியதிலே யிருநாடிய மனந்தனக்கண்டு
[illegible]மாகம் வந்தவினை முழுத்தக்கொண்டேன்
மிசந்தடன் முவிதையாந் திரியாவைகை
வெளிப்பிக்கிச் சூலங்கை படக்கினேனே. (௧)

அடக்கினேன் சரகாமடக்கந் திரியாமத்தை
அக்கசரமாதி வாசியில் வெள்ளையாடி
விட்டுப்பா படிவிசிக்க கூற்றோதக்கொட்டும்
[illegible]
பூனைக்குப்பொரு அருவருவே செத்தியோன் பரம்பு
பூனை யிருந்தவைப் புற்றிற் பாயும்
நாசிக்கமறிந் நோப்பமுந்து யீடத்திற்றிக்கது
ஒருமிக்க முருசோபாப்ப் பெருந்தேனப்பா. (௨)

பெருத்தையிலே நூராக மனோகமாக்க
பத்திருந்த சிவிடங்க சொல்லம்போக்க
அடுக்காயிலே அடக்கமென்ற திரியாவைக்கை
ஆசாய வொன்றுக்கு நூராகத்தைத்
தடுக்குமென வாயமாக வென்றெக்குன்னே
கத்தரப்ப நூராகத் தக்கம்போரே
கொடுக்குமா வம்பைப்பு வெப்பொக்கேசுடு
கொடுவெப்பிர வொத்துமோயே கோடிதானே. (௩)

தானெனா நூர்க்கு தக்குமொப்பான்
சாய்த்துவிட சமுமேமாய் விசைபாச்ச
மானெனா புகைபாய் [illegible]
[illegible]
தேனெனா நூரான் [illegible]
[illegible]
[illegible]
[illegible] (௪)

வின்னெருவிழிக் [illegible] கண்டோரமாறும்
 [illegible]
வின்னெருவிழிக் [illegible]
 [illegible]
கண்ணெருவிழிய [illegible]
 [illegible]
ஒன்னெருவிசிய [illegible]
 [illegible]

பெய்யிறைற் பொய்முகம் [illegible]
 [illegible]
செய்யிரூற் [illegible]
 [illegible]
ஆய்யிரு [illegible]
 [illegible]
பொய்யிருந் [illegible]
 பூரணமாய் நின்மைப் [illegible]

ஆச்சப்பா சதிர்மதியா பிரவுபகாரச்
 அம்மதியின் கதிருதியார் பேசுவார்க்க
பேச்சப்பா அட்டாங்க யோகந் தாயிக்கே
 பின்னுந்தின் முனைப்புருவத் [illegible]
மூச்சப்பா [illegible]
 போசசிக்லே படிமூன்று பன்னிபாரு
நீச்சப்பா வென் வாத்திற் பாவேரூனா!
 நிலைக்குமடா காற்றுலையாய் நிலைக்கும்பாரே.

நிலைக்குமோ நிலையாதோ வென்றாரியும்
 நின்றுக்கால் வைரியிடம் நிலைக்கொட்டாது
நிலைக்குமேற் காலாறுல் மலைக்கவேண்டாம்
 சமநிலையா யடிமூலம் நிறுத்திக்கொண்டு
மலைக்குமனை மலையாமல் மூக்காப்பாரு
 மனதாலே மனதுக்கு முக்கோணச்
சிலைக்குமா மேனாத்திசாத் தொடுக்குமப்போற்
 சித்திரத்தார் குறிதந்த சுருக்கமாமே. (13)

சூறுக்குமடா பூரணத்தின் மூனைமையப்பாரு
சொல்லாலே தெரியாது மூக்காலப்பா
தூறுற்றுமடா தருகாமல் தருக்கவென்றால்
தன்வாயில் நாக்கிருக்க ஊமையாச்சு
வெறுக்குமடா மனம்விருக்கச் சொல்லப்போமோ
[illegible] விருப்பிருக்கப் பேசாக் குள்ளாக்காமோ
சுருக்குமடா சுழுநாக்குப் பலிக்குமப்பா
கண்மெளன்றாம் பொல்லாது கடினந்தானே. (14)

கடினமது திட்டிரெண்டு மொன்றுப்பார்வை
கள்ளனடா இருநீராளவன் கபடஞ்செய்வான்
கடினமவன் மடமையெளிக் கண்ணன்கண்ணன்
கசடருக்குச் சங்கார ருத்திரன்றுத்திரன்
கடினமடா யிவர்களுட மூலமப்பா
கண்டவர்கள் கசடறப்பார் கண்ணோக்கொண்டு
கடினமடா யிதற்றுமொரு மூலங்கேளு
கபடத்தைச் சொல்லுகிறேன் கருத்தான் கேளே. (15)

கேளப்பா கருவூரிற் கொள்ளைகொள்ளை
கேட்டவர்க்குங் கேளாமற் கூகூகூகூ
நாளப்பா யந்நாளில் நாவிதின்றேன்
நான்செத்தேன் பிறந்தனடா கட்டமென்ன
கோளப்பா சொல்லறியேன் கோலங்கோலம்
கோலமெனக் கூக்குரல்போற் கூவுங்கோழி
தேளப்பா கூடுவிடையந் தெளிவாய்ச்சொன்னேன்
தேள்கொடுக்கு மறியாட்டாற் கொட்டுந்தேனே. (16)

தேளிருக்குஞ் சவரோர மடுக்கப்போமோ
செந்தேளுங் கருந்தேளுங் கொடிதாமப்பா
ஆளிருக்குஞ் சிவக்கயிறை நிழலுக்குள்ளே
ஆமர்ந்திருக்குந் சாண்முழுத்துக் கடையிலப்பா
ஆளிருக்கு மிடந்தேடி யெழுந்தென்பீறி
ஆசைத்தவைசந்து ஆசையாமல் நாலுநாளும்
கோளிருக்கக் கோளறுமோ கொட்டுந்தேளைக்
கொட்டிறைற் கொல்லுமது கொட்டமுக்கொல்[illegible] (17)

கொல்லத்திற் கொச்சியடா மஞ்சளிஞ்சி
 கொடிதான ஆலாவேற்று மிறைவைத்தண்ணீர்
கொல்லத்திற் கால்வாய்க்கு மிடக்காலூடே
 கொடுஞ்சுருக்கு மடைவாயிற் குமிழியாயும்
வல்லத்துக் கோட்டையடா மவுனராஜன்
 வங்கணமாய் சிங்கமுக மாகுன்பாரு
சொல்லற்றுக் கூக்குரல்போற் கூகூவென்னச்
 சுகமவுன ராஜனவன் சோதிப்பானே.

சோதிப்பான் சிங்கவங் கணமேசெய்தான்
 சொல்லரிது மடைவாயிற் பட்சிபோலே
சோதித்து வருமச்சங் கண்டுபாரு
 தொந்தமென வந்துவிடு மைந்தாமைந்தா
போதித்து ராப்பகலாய்க் கண்டுபோதி
 போகமென்ன சிவயோகஞ் சிவயோகந்தான்
பேதித்து வாழாதே போதம்போதம்
 பேசாதே மவுனமது கூக்கலாமே.

கூக்கலென்று லதன்பெருமை சொல்லப்போமோ
 கூகமென்ன சொல்லுகிறேன் குமரிகற்பம்
பார்க்கவென்றாற் கொடுமையடா பஞ்சவர்ணம்
 பட்டமாம் பாலூறும் பஞ்சவர்ணம்
மார்க்கமிது பெரியோர்க ளாருஞ்சொல்லார்
 மாச்சரியம் மெத்தவுண்டு உண்மைசொன்னேன்
தீர்க்கமிதை யறிபவனே சித்தன்சித்தன்
 திறம்வேணும் மனதுறந்தாற் றிறமுமாமே.

திறமான மனதுறக்கக் கருத்தான்கேளு
 சித்தருடன் முனிவோருஞ் சொல்லார்சொல்லார்
அறமான இல்லறமே சொர்க்கஞ்சொர்க்கம்
 அந்தரமே யளிகாக மாகுமாகும்
அறமான இல்லறத்தின் குட்சங்கேளு
 அடிக்கடிதான் சொல்லவது போகமப்பா
உறமான அனுபோகஞ் செய்யும்போது
 உற்பனமாந் தப்பாது உண்மைகேளே. (21)

உண்மையென்றும் உறுதியென்றும் இறந்தானென்றும்
உற்பனமாய் மனதுறுத்துப் பார்ப்பேனென்றும்
தன்மையுள்ள மனத்தாலே புத்திமெத்த
தயவுண்டு கல்மிஷங்க ளில்லையில்லை
கன்மமிது தானெனவே பெண்கள்தன்னை
நயந்தவரை உபசாரஞ் செய்துவிந்தைப்
பெண்மையவள் மையல்கொண்ட நாதம்வாங்கிப்
பிரியமுடன் வேணவிதஞ் செய்வார்பாரே. (22)

செய்வார்கள் கைமுறையாய்ச் செய்யமாட்டார்
சிவயோகஞ் சிவலிங்கங் காணமாட்டார்
மைவாசி சுத்தமென்று கொள்ளமாட்டார்
மருத்துவைத்துக் கருவிடையங் காணமாட்டார்
மெய்வாய்கண் ணொளியொன்று மவுனஞ்செய்து
வீணருக்குத் தெரியாமல் விழலாய்ப்போச்சு
உய்வாய்தன் யோனிதனிற் பூசைபண்ணி
உபயமது சிவலிங்க மொன்றும்பாரே. (23)

ஒன்றான லிங்கமா யிடையுமாகும்
உற்பனமாஞ் சித்தருட பூசையாகும்
ஒன்றான சத்தியுட பூசைமார்க்கம்
ஓகோகோ ஆனந்த மானமார்க்கம்
ஒன்றான இட்சைவழி மார்க்கமப்பா
உலகத்தோ ரறியாமற் கெட்டார்பாரு
ஒன்றான பூசையடா வாதிசத்தி
உற்பனமாம் பூசையிது வுண்மைதானே. (24)

தானான சத்தியுட இட்சைபூசை
ஞானவனாய்ச் செய்வார்கள் கூடச்செய்வார்
மானான பெண்ணையொரு கொடியபெண்ணை
மவுனத்தாற் றியானித்து மகத்துவமானார்
தேனான இப்பூசை தேவிபூசை
ஜெகஜாலச் சித்தருக்குத் தோனாப்பூசை
ஊனான தன்மையடா பெண்ணாள்தேவி
உறவின்முறை குருமுறையா யுரைக்கக்கேளே. (25)

உரைக்குமுறை கருவறியா ரிக்நூல்பார்த்தால்
உள்நின்று பகையறியா ருறவுமாகார்
உரைக்கமன துறக்கவல்லோ சொன்னேனப்பா
உன்கருத்தா லுள்ளமதி லுள்ளாந்தோ றுறவாம்
உரைக்கமனந் தன்னிலையே உறவுமாகும்
உள்ளமதி லபிஷேக மனமாம்பூசை
உரைபழுதாய்ப் பழுதொன்றுஞ் சொல்லவில்லை
உன்மனோத்தா யுன்மத்த மாகுள்பாரே. (26)

பாரிதுவே பெரிதுசிறி திதுவேயூரும்
பதிவாகு முறவின்முறைப் பண்புமாகும்
பாரிதுவே முறையோடே யுறவாங்கன்னி
பண்டொளதாய் போகி வந்தயோனி
பாரிதுவே ஆணுகிப் பெண்ணுமாகிப்
பகலென்றும் இரவென்றுந் தோன்றுப்க்கன்றும்
பாரிதுவே கண்ணான கண்ணேமக்காள்
பழுதில்லை பழுதில்லை கனியுந்தானே. (27)

கனியாதே மனதுமிகக் கனிந்தாலப்பா
கசடருக்குட் கனிதோணுக் கன்னிகன்னி
இனிதான கன்னியடா வென்தாயாகுள்
என்மக்கா ளுங்களுக்கு இவளேயாகுள்
தொனியாதே பாதகர்க்குச் சொல்லவேண்டாம்
தோலாசை கொண்டவர்க்கு விள்ளவேண்டாம்
செனியாதே பேரின்ப வீடுயர்ந்தால்
தெரியாது தெரிமடா யின்னைக்கேளே. (28)

இன்னமுமே வெளிதோணச் சொல்லக்கேளு
இன்பமுற்றுக் கேளாட்டாற் சிவமேமன்பாய்
முன்னையுமே சொன்னதெல்லாம் நானுக்கம்பாரு
முழுதுமது தெரியாட்டாற் பின்னைபாரு
கன்னமுமே தகரவடா அஷ்டத்துச்சொல்வேன்
கருத்தொட்டுக் காட்டையிலே கருவாய்ப்பாரு
அன்னமுமே பொசித்தாக்காற் பசியுண்டாமே
அற்பசியிற் கார்த்திகையில் அமையுந்தானே. (29)

அமைந்துறநான் மார்க்கமுறி பாய்ப் போனவண்ணம்
அத்தையுமே மருமகளாய் வசியானுள்
சமைந்தனக்கைத் தடருபத்தைத் தழுவினுக்காற்
சந்தோஷ மானதை மாறுபென்றே
சமைந்தனக்கும் தீயுமொன்றாய்ச் சாருமப்போ
தனித்திருப்பேர் சுனைறுலே கண்டாற்குட்சம்
சமைந்துவாசைப் பார்த்துறிறந்தக் கண்ணேகண்ணு
தல்கனுரு மவன்கண்ணுக் குருடாய்ப்போச்சே. (30

குருடர்கரு வறியாத குருடர்மெத்தக்
குருக்கண்ட கள்ளரியார் குருவைப்போற்றார்
குருடரவர் காணுக்குக் குடிகேடாட்டுக்
குத்திரமாய் வேடங்கள் தரித்துக்கொண்டு
திருடரவர் சத்திசிவ பூசைகொண்டு
தேசத்திற் செங்கலைத்து பணங்கள்வாங்கி
வருடமவர் பெண்டிர்பிள்ளை பிழைப்புக்காக
வாய்ப்பேச்சாய்த் திரிவார்கள் மடையர்தானே. (31)

மடையருக்குள் ளிப்படியே வெகுபேருண்டு
மரக்கத்தால் வாய்ப்பேச்சால் மருளவேண்டாம்
அடையாருக்கும் கண்மணியே கண்ணாய்க்கண்டு
கைப்பிடியாய்ப் பிடித்துக் கண்ணைப்பார்த்து
உடையவனும் லிங்கமா விடையமென்று
உண்ணப்பா கண்ணப்பா உள்ளன்பேகண்
நடைபொருளான் வாசாம லிங்கபூசை
சன்மயமாய்ப் பெற்றதித்தப் பூசைதானே. (32)

பெற்றவனை யுற்றதிவன் தாரமானன்
பிரியாத பார்வைவிளுற் பெண்மையானன்
கற்றவனே கடைக்கண்ணாற் பார்த்தவன்பார்த்தான்
படமாய்ச் சொல்லறிவேன் கண்டேன்கண்டேன்
குற்றமவன் பூசையிலே ஒன்றுமாகா
குமரிசிறு பிள்ளையடா கூச்சமிட்டான்
சற்றவனைத் தியானத்தாற் பூசைசெய்யத்
தன்பேரு மவன்பேரு மொருபோச்சே, (33)

ஒருவருக்குந் தெரியாத தாரேயம்
ஒருவன்டா னொன்றுறி யுமைபாகன்
ஒருவருக்குந் தெரியாமல் மௌனமடைந்தேனடி.
ஒருமுடியாய் முடிக்கவிட முறையோர்க
இருபேர்க்கும் முப்பேரா யிருந்தானைத் தான்
எத்தனையோ பேரிட்டுக் காணப்போமோ
அறுபேர்க்கும் அறுமுகமா யிருந்தோனை
ஆகாச மிவன்போலே யாதிசேயமாமே. (34)

பாரறிய வூரறியப் பரமசிவனிவனைப்
பற்றினமே லெத்தனையோ அப்பேயா அப்பேயா
கூறியச் சிறுபிள்ளை யென்றான் கன்னி
குணமிவனைப் பார்க்கிற் றுணையேயாகுன்
ஆரறிய வூரிலவன் சரியாடி.
அயர்த்தயிடந் தெரியாம லைக்கிறான்
ஊரறியக் கைபிடித்தாக் கவனேயடி
உத்தமியா யிருந்தானைத் தொடுக்கிறானே. (35)

ஒடுங்கிமனை தொடுக்கமிவ ளடக்கங்கேளு
உள்ளமடா தெரியார்க்குக் கள்ளங்கள்ளம்
கடுகளவு முழியிருக்க முழியிறான்றோ
கள்ளமுழிப் பார்வையதிற் கடைமொன்று
அடக்குகடை விழிப்புனலாற் குமிழிப்பிள்ளைகாம்
அருவாடா கறுப்பாரும் நடுகேயக்கைச்
இடங்கருவி லமைத்தபடி யென்றான் கன்னி
இவன்கருவை யறியாதித் தனையுமாச்சே. (36)

இந்தாறு கோணமுக் கோணப்பந்தி
ஏகோபி மகாமந்த்ர மிவனேசந்தன்
அந்தருவி லிவளொருத்தி முத்தியானோர்
கண்டருக்குப் பெண்டாகிக் கன்னியுமானாள்
அந்தமவன் கையிருக்க முகத்தைப்பார்க்க
அவன்முகமே கண்ணாக நின்றாள்கன்னி
உத்தமனை யிவன்மனைக்குக் கத்தன்கத்தன்
உச்சத்தா லிவன்பேச்சு மிச்சமாச்சே. (37)

ஆச்சப்பா ஆதிசிவ பூரணயாலே
அவனவரு மொன்றாகத் தோற்றுந் தானும்
காச்சப்பா பழுத்ததொரு பழத்தைப்போலக்
கனியான பொருளிதப்பா கண்டுதேறு
பேச்சப்பா சொல்லாதே சொல்லேன் தேறு
பேரறிவே ஞானறிவேயா மெய்ஞ்ஞானமே
வாச்சப்பா சத்திசிவப் பாதத்திற்க
வசிசையுட னிருத்தியாரு வசித்தியில்லை. (38)

இல்லடா சற்புத்திர னுறுத்தீகத்த
இருந்தையிலே யிருவைகயு மிவரடமேத்த
இல்லடா மனப்புத்தி யில்லாவுமொன்றாய்
இருத்திடவே மனதிலாரு வருவைக்கேறு
அல்லடா மூன்மவுன மாத்ரான்தத்த
அழுதமரு வுண்ணையிலே அக்கைகொண்டும்
சொல்லடா வெங்கையப்பா பாயுங்கையும்
சொற்பமென்றா னன்றுதே சொல்லக்கேளே. (39)

சொற்கேளாய் விண்ணாவென்று சொல்லவேண்டாம்
சொல்லினால் தோஷமடா விளையுஞ்சாசம்
மூற்கோதிப் பேசாதே மூலங்கேளு
மும்மூல மொன்றான மூலமப்பா
சட்கோண வட்டமடா தனமாம்பாரு
சத்திசிவ லிங்கமென வந்தமூலம்
இட்கோல மாகசத்தி தனையிரண்டும்
இந்தநதி ராசகுறி யின்னங்கேளா. (40)

கேளப்பா யிந்திராணி விருந்துகொண்டு
இருடையெற்ற சிவானந்த தியானம்பண்ணக்
கேளப்பா குறிசொல்வேன் நினைவாய்க்கேளு
கிரியென்றும் பூதியென்றும் இரண்டுமொன்றாய்க்
போளப்பா மூப்புமிற்று டையுமானுள்
கிரிவழி கொண்டேறும் மலைக்கவேண்டாம்
ஆளப்பா யிவர்தன்யம் இடசுதன்யம்
ஆதிகிருஷ்ண னதற்குற்ற லெய்தம்பாரே. (41)

பார்க்கையிலே மும்மூன்று பிரண்டையாகும்
பகலவனும் பிரகாசித்திரு மானவாறும்
பார்க்கையிலே ஞாயிறுமே பதுமனாள் திங்கள்
பகலவனைத் திங்களிலே மாறிப்பாரு
சேர்க்கையிலே ஆதித்தன் சேருந்திங்கள்
சேர்ந்திரண்டு மொன்றாய தன்மையாம்பார்
மூர்க்கமிதைப் பூசைபண்ண முத்தியாகும்
மும்மூன்று மொன்றான சூட்சத்தானே. (42)

சூட்சமதைப் பார்க்கப்பால் வண்ணமாவார்
சுயம்பாக மூலத்தெழுந்து பேச்சுமாவார்
ஆட்சியிலே தன்னையுந்தா னறியுமுன்னே
ஆகார தலைவனையுங் கண்டான்கண்டான்
காட்சியிலே கண்டகடைக் கண்ணேகாட்சி
கண்ணொன்றாற் கண்ணுள்ளே கண்டுகொளுதி
சூட்சமிலே முழியறிந்து மணைபிக்கிச்
சோதித்துப் பார்த்ததெல்லா முத்தியாமே. (43)

முத்தியு மொன்றாகி மூலத்தலிங்கம்
மூலத்திலே ஆவுடைய மானலிங்கம்
சத்திசிவ மானசிவ லிங்கபூசை
சதானந்த சச்சிதா னந்தியாகும்
சத்தியமா யிப்பூசை சொன்னோமாச்சி
தன்னியத்திற் கன்றுடையான் கண்டபத்துச்
சித்திபெற யிக்கண்ணை யறிந்தாற்பூசை
செய்யலாஞ் சிவபூசை தீர்க்கமாமே. (44)

ஆமப்பா யிப்பூசை ஆச்சிக்குள்ளே
அடக்கமடா சித்தருடன் முனிவர்சொல்லைச்
நாமப்பா சொல்லுகிறுக் கண்ணேயாகி
நடுக்கண்ணிற் கடைக்கண்ணை வெளியிலேபார்த்துக்
காமப்பால் காணப்பா விரண்டுகொண்டு
கண்கண்ட பழயமே சொச்சேசப்பா
ஓமப்பா யிட்டபடியே கண்டேந்திக்கல்லாம்
உரையறியா ரொளியறியார் குலைக்கிதாரே. (45)

உலகமதில் வேளைபடி பூசைசெய்வார்
உள்ளபடி யன்னாக்ஷிசய ஞானமாட்டார்
பலகலைக ளோதுமதை யெடுத்தோமென்பர்
பற்றறியார் சுத்தியுட னிட்டையாரார்
அலகையிலி வாசிரியி லதிசுட்டேபதி
சுக்கைபயக்கோடு நக்கமகிட்டுத் திரிவார்மாண்பா
விலையிக்கெ மேய்க்கந்நிலைக் கண்டாலப்பா
மெய்யான சத்திதனைக் கண்ணிற்காணே. (46)

காணுக பாட்டி யெல்லாங் கண்ணிற்காணும்
கண்டவிடக் கண்ணுமேல பொருளியுங்காணும்
தோணுகை வேதாந்தப் பொருள்தான்தோணும்
சொற்றுற்ற மிக்குவி லொன்றுமில்லை
ஆணுக ளுண்டியின்னை யென்றேகேளு
அங்கேதி சொக்கனைக் கண்ணிற்காணு
வீணுகத் திரியாதே மனத்தைநூறு
விட்டதுறை யிதுதானே வெளியுமாச்சே. (47)

வெளியொளியும் விண்ணுவா கண்டோகண்டோ
வேதாந்தப் பாராழ் சும்மாயினேன
பரியாதே பெரியோரைப் பாவம்பாவம்
பாழ்நரகில் வீழாதே சொன்னேன்சொன்னேன்
வழியான பாதையடா யின்னாலப்பா
மக்கையர்மே லாசைகொண்டு மருளவேண்டாம்
தெளிவான மனபிரமம் ஒன்றாய்க்காணச்
சிவானந்த மதியாவை யிதுதான்காணே. (48)

இதினாலே பொருந்தொளி யில்லையில்லை
இப்பொருட்குப் பணிக்காக சொலவுமில்லை
இதினாலே காட்டியடா தனங்கள்கோடி
இப்பாழ் முண்டாகுந் தேகஞ்சித்தி
இதினாலே பாவங்க ளறுப்பார் சித்தர்
இந்தமுறை வேதாந்த ஞானியர்தம்
இதினாலே பூரணமுங் கண்ணிற்றேறும்
இடமொன்றும் வாராது திடனும்பாரே. (49)

திடமான மனதல்லோ திடந்தானப்பா
திருவான லட்சுமிப்பெண் ணுக்கமாமே
குடமான கன்னியத்திற் பத்தாக்கண்ணும்
கூர்விழியாங் கண்பத்து தனத்திரண்டும்
சடமான கொங்கைக்குட் கண்தானேது
சாத்திரத்திற் பெரியோர்கள் சொல்லாரப்பா
அடமான மங்கையடா சொல்லக்கேளு
ஆகாகா கொங்கைதன்னிற் கண்ணோக்கிக்கேளே. (50)

கண்ணான வொருகொங்கைக் கந்தேசகண்ணாம்
கதித்தெழுந்த கொங்கைதனிற் பத்தாங்கண்ணாம்
ஒண்ணான கொங்கைக்கு ஒன்றேகண்ணாம்
ஒன்றுமுதல் மூன்றாக இருந்தால்நன்றாம்
கண்ணான திருகொங்கைக் கந்தேசகண்ணாய்க்
கண்டாலு மெத்தவன்றா ஆறாங்கண்ணே
பெண்ணான கொங்கைக்கே கண்தாய்பத்தாம்
பிரியாம லிருந்ததென்றால் முத்தியாமே; (51)

முத்தியா மிப்படிக்கண் ணறிந்துகண்டால்
முக்கியமாம் பூசைவிதி முறையுமாமே
சத்தியாஞ் சித்தியடா மூலகண்பாரு
சண்முகற்கு மமுதளிக்குங் கொங்கைகொங்கை
புத்தியாய்க் கண்டறிவா யிந்தப்பூசை
புண்ணியற்கு மெய்யதடா கர்மிக்கில்லை
உத்தியாய்ப் பாரேகே குருவைக்காரு
உன்மனத்தைக் கண்டுகுரு வுபதேசிப்பார். (52)

உபதேசம் தந்திகுரு வாய்க்கவேணும்
உன்மனத்தா யமுதகண்பால் கொள்ளவேணும்
உபதேசஞ் சற்குருவைக் காண்பதெப்போ
உன்தேகஞ் சத்தியமாய் வாழ்வதெப்போ
உபதேச மானதெட்டு பிரண்டும்பத்தாய்
உட்கொண்ட தப்பாது மூலகண்பத்தாய்
உபதேச மானதிந்த மூலகண்பார்க்க
ஒருபிள்ளை பிறவாதோ குருவாய்ப்பத்தாலே. (53)

கருப்பத்தி யுறுப்பத்துங் கண்ணேபிள்ளாய்
கைப்பத்திக் கொண்டதைநீ முறுகண்பார்த்து
உருப்பத்திப் பத்திலையும் வந்தாய்வந்தாய்
உற்பத்தி கண்ணாலே குருவைப்பாரு
திருப்பத்தி கந்தியொளி கண்ணேகண்டாற்
சிவானந்தி குருவாகுங் கருவைச்சொல்வார்
விருப்பத்தா லதைக்கேளு விண்ணைப்பாரு
விள்ளாதே கசடருக்கு வெளியாகாதே. (54)

ஆகாத பிள்ளையென்றா லடித்துத்தள்ளு
அந்தமுறை கண்ணைநின் றுண்டாகச்சேரு
வேகாத கால்தலையை யோதச்சொல்லு
விள்ளாத வேதாந்த முடிவைச்சொல்லு
சாகாத தலையறிய மூக்கால்சொல்லு
சமூலமாய்க் காண்பதற்கு மூலஞ்சொல்லு
போகாத புனல்காட்டி மதியைக்காட்டிப்
புத்தியாய்ச் சிவசத்தி பூசைசொல்லே. (55)

சொல்லக்கேள் வாதமுறை சூட்சந்தன்னைத்
தொகுதியாய்ச் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
கல்லுக்கு ளத்தாலே பாரையுப்பைக்
கல்லுப்பைக் கண்டுமதி யுப்போடப்பா
புல்லுக்குள் நாதவிந்து உண்டுஉண்டு
புத்தியா யுப்பெடுத்து அப்புவோடே
மல்லுக்கு மென்னோடே கைகட்டாதே
வாதுக்குச் சொல்லுகிறேன் வாதம்பாரே. (56)

வாதத்திரத் தாலேகால் வாதமாச்சு
வாய்ப்பாச்சு பொய்யென்றால் வீணாய்ப்போச்சு
நாதத்தில் விந்துவடா பூவிற்றுக்கு
நாக்குண்டு பேசுதற்குப் போக்கைக்கேளு
காதத்துக் கப்பாலே தூரமல்ல
கண்ணுக்கு மூக்குக்குச் செவிதோணுது
சூதத்துக் கதினாலே யெல்லாந்தோணும்
சொன்னாலுந் தெரியாட்டாற் சும்மாபோமோ. (57)

யோமோதான் குதத்தில் வேதைகம்மா
போக்கறிந்தாற் குதமடா அந்தா அந்த
ஆமோதா னிதிருவென் றெண்ணவேண்டாம்
அமுரியடா உப்பாலே குமரிநாதம்
வேமோதான் கோமுகத்தில் வேகம்வேகம்
வேகமா மூப்புடக்குக் குடமாம்வேதை.
ஓமோமோ சரக்குவகை சொல்லவில்லை
ஒருசரக்கும் வேண்டாங்கா ணுறுதியாமே. (௫௮)

உறுதியா மெட்டுக்கு ளண்டபிண்டம்
உட்கருவும் வெளிக்கருவு மொன்றாய்க்காணும்
உறுதியடா வேதையிது வுண்மையாகு
உட்புகுந்து கருவிடையம் பார்த்தாற்சேரு
உறுதியடா கோமுகத்தில் வாதவித்தை
உப்பாலே ஆமடா தொந்தங்கோடி
உறுதியடா பிழைவிட்டா லொன்றுமில்லை
உத்தமர்க்கு உள்ளாமே யுள்ளத்தானே. (௫௯)

உள்ளபடி சாத்திரங்கள் சித்தர்சொன்னார்
உட்புகுந்து முதுகண்பார்த் தொளித்தாரப்பா
கள்ளமன்றிச் சொன்னேனு னிந்தநூலிற்
கருவிடையம் பார்த்திதனைக் கண்டாலப்பா
உள்ளமதிற் கன்னியடா ஓமசத்தி
உள்மணித்தாய் மணிகாட்டி யுரைப்பாளப்பா
விள்ளவென்று விதைப்பார்க்க விள்ளப்போமோ
வெளிதோணக் கருவிடையம் வெளியாய்த்தானே. (௬௦)

வெளியல்லோ செவிக்குறைத்தார் சூட்சத்தாலே
விண்கண்ட தெந்தக்கண் கண்ணேகண்ணே
வெளியல்லோ செவியாலே நன்றாய்க்கேளு
வேதாந்தஞ் செவிகேட்க இன்னங்கேளு.
வெளியல்லோ மூச்சென்ற காலாற்றீயை
வேகத்தால் மூட்டியல்லோ வெளியைக்கண்டால்
வளியல்லோ வாயிருக்க நாவும்பேச
வார்த்தையென்ன புருவமையம் நாவுமச்சே. (௬௧)

நாவாலே பேசுதற்கு நாவுமுண்டோ
        நாதாக்கள் பேசார்கள் வேதாந்தத்தைச்
சாவாலே செத்தாலே அந்தம்போச்சு
        சார்ந்துநின்ற லந்தமது அந்தமெத்தப்
பூவாலே காமமது மனாறுமாச்சு
        புத்திகெட்ட மனத்தாலே விருப்பபோச்சு
ஆவாலே புனாவாடை வுங்கைகொண்டு
        ஆலாக்கட்டிடக் காலாலே அமுதங்கொள்ளே. (62)

அமுதமடா புத்திகெட்ட மாடேகேளு
        அப்புவடா ஆயிரத்தெட் டிதழாயின்ற
அமுதமடா சத்தியமாய்ச் சொல்லக்கேளு
        ஆச்சரியஞ் சொல்லவென்றாற் சொல்லப்போமோ
அமுதமடா மூதுகண்ணாற் பாருபாரு
        ஆனந்தம் பொங்குதடா அருவிபாயும்
அமுதமடா மூதாகண்ணாற் கண்ணையுண்ண
        அரிவரியி னெழுத்தெல்லா மந்தமாச்சே. (63)

ஆச்சர்ய மாதியடா முதலேசோதி
        ஆகுமடா சரசுவதி நாவுக்குள்ளே
பேச்சென்று பேசாமற் பேசிக்கொள்ள
        பேய்மக்க ளுங்களுக்குச் சூட்சஞ்சொன்னேன்
ஏச்சென்று மிந்நூலைச் சொல்லவேண்டாம்
        ஏழையைப்போல் வாய்பேசா திருந்துகொண்டு
காச்சென்று காச்சியிடு உலகத்தோரைக்
        கைக்குள்ளாய் வருமட்டுங் கருவைப்பாரே. (64)

கருவறிய விந்நூலிற் கருத்தான்தோனும்
        கருத்துவைத்துப் பாராட்டாற் கருத்தோன்று
கருவறிய காமப்பால் கானற்பாலைக்
        கருச்சொல்லிக் காட்டாமற் கொள்ளச்சொன்னோர்
கருவறியக் கண்கெலாம் முதுகண்பார்த்துக்
        கண்டபடி கொங்கணர்தன் கண்ணேயென்று
கருவறியா வித்தையுண்டோ குருவேஐயா
        கண்காட்டுங் கண்காட்டு மென்றுகூவே. (65)

கண்காட்டும் சற்குருவை கண்டேனே அய்யா
அருக்காட்டும் உருக்காட்டும் கண்ணோகாட்டும்
விண்காட்டும் பூர்த்தை வெளியுங்காட்டும்
மெய்காட்டும் கைகாட்டும் தேவர்போல
வான்காட்டும் அறியாத வெளியைக்காட்டும்
ஏகாந்த விளையாட்டும் குளிகைகாட்டும்
புண்காட்டிப் பொறியாகி நாறும்பூவும்
பூவரிய பெண்கண்ணும் புதுமண்பூட்டே. (66)

பூட்டான கண்ணொட்டு பிரண்டே கண்ணும்
பூப்பட்டு முதிருருப்பத் தேனாவில்லை
காட்டான பூவொன்று சந்திரவட்டம்
கண்கண்ட பூவோடே சரிகைவெள்ளி
கூட்டான குளிகையது றெங்காங்கட்டிக்
குருடான கண்ணுக்கு குளிகைப்பாட்டு
ஆட்டான காலாட்டைக் கண்மணிக்காண
அய்யா சொல்லக்கண்டீ ரருள்செய்வீரே. (67)

அருள்செய்வீ ரென்குருவே யென்றுபோற்று
ஆனாக அருட்கண்ணு னருளைக்காண
அருள்செய்வார் ஞானத்தி குருவைக்காண
ஆச்சரியங் கண்ணாலே பார்க்கப்போமோ
அருள்செய்வார் கொங்கணர்தான் குளிகைகாட்டி
ஆடுதற்குச் சதுவேடி தொக்தமாட
அருள்செய்வார் சிலம்பொலிதான் கண்டமூர்த்தி
அருபத்து நாலுசித்து மாடலாமே. (68)

ஆடுதற்குக் காலைகாட்டி மூலைகாட்டி
ஆறாவதை மேல்மூலத் தாராங்காட்டி
ஆடுதற்கு அட்டாங்க யோகங்காட்டி
அப்பாலும் லகிரிகொண்டுத் குளிகைதாண்டி
ஆடுதற்கு அண்டம்பே ரண்டங்காட்டி
ஆனந்த லகிரிகொண்டு பெருகியேறிக்
கூடுதற்கு விரையமாய் நின்றிசாதி
குண்டலிய விக்குணமாய் கூடுவாரே.

கூடுவா னைச்சுற்றி யைம்பத்தேழிற்
குணமுடைய கடைப்பிள்ளை யாகத்தானே
கூடுவார் பதினெட்டுப் பேரோரெட்டாய்க்
கோத்திரமுஞ் சூத்திரமும் பார்க்கப்பார்க்கக்
கூடுவார் கடைக்கண்டத் தந்தத்தோடே
கோடியிலே நவகோடி சித்தர்க்கனா
நாடுவார் கண்ணோட்டங் காண்பதேதான்
நாதாந்தப் பூரணத்தி னிலைக்கானே. (70)

நாலான பூரணமே முதுகண்ணாதும்
நாதமடா நாதாந்த வித்தைக்கேறு
காலான பனிரண்டில் நாலேவிர்த்து
காலெட்டுங் காயத்திற் சூட்சமூலம்
மாலான காயத்தில் சத்தில்உண்ணில்
மகாரத்தில் மாயையைத்தா னறுப்பார்சித்தர்
வேலான வேலனுட கைவேல்சத்தி
வெத்திவே லெட்டான வேலும்ரண்டே. (71)

ரண்டெட்டும் பூரணமாய் நின்றவேலை
நாதாக்க ளாறுமுகமாய்க் கண்டாவேலை
ரண்டெட்டிற் காலாலே யெண்காலோடில்
காட்டினார் மூக்காலும் வேலைக்கொண்டு
மூன்றெட்டா தகார்கிளை மாண்டுபோச்சு
முத்தியடா அறுமுகனார் கைவேலப்பா
ஒன்றிட்டா தகாரத் தவர்தான்போச்சு
ஓராறு மொருமுகமாய்க் காணலாச்சே. (72)

காணவே சாரூப சாயுஜ்யத்தைக்
கண்கண்ட சாரூபங் கண்ணேரூபம்
தோணவே சாரூபம் வேதாக்காலைச்
சொல்லுக்குட் படியாத ரூபாரூபம்
ஊணவே முதுகண்ணால் மனக்கண்ணான
உட்காலும் மூக்காலாய் ரூபங்காணும்
நாணவே நாணாதே சொல்லக்கேளு
நாச்சியார் நெற்றியிலே சர்வையுமானே. (73)

காணாசரி யனையிலே மூக்காலாய்க்
கண்காணு ரூபமடா ரூபக்காறும்
காணாமலி மூலத்தில் மேயம்பாரு
கருணைபுரி திருமூலர் பாதம்போற்று
நூலான சாஸ்திரங்கள் பார்த்தாலென்ன
நூறுதர முபதேசஞ் சொன்னாலென்ன
சேலான மூலருட போனெங்கள்
சிங்கமடா கொங்கணர்தன் செயலைப்பாரே. (74)

செயலான கொங்கணரே யெங்கள்நாயன்
சித்தான சித்தருக்குங் கீர்த்திசெய்தார்
மயலான பெண்மாயைக் கண்ணைக்குத்தி
மனமான முறைகண்றால் மனக்கண்பூட்டி
நியமான தந்திரியா மந்திபாதம்
நிற்குணமாய்க் கண்டறியத் தெண்டம்பண்ணி
மையமான வமுதமடா வுண்மைச்சொல்லி
மவுனதகாம் பேர்சொல்லி வழிசொன்னாரே. (75)

வழிசொல்லு முன்னேதான் பட்டபாடு
வழிபோடே சொல்லவென்றால் வெகுநாட்செல்லும்
தெளிவில்லாப் புலையாகி யன்றுகொண்டு
தேசத்தில் வாய்வீணை பேசிப்பேசி
அளியான சேற்றில்மன மழுன்றேனப்பா
ஐம்பொறியாற பரியைவிட்ட பிச்சமாகி
வெளியேறி வருகையிலே வாதவூரில்
வேதியன்போ லென்குருவும் வந்தார்பாரே. (76)

பாரப்பா அவ்வூரி லையனையன்
பண்பாம்வே தியனுந்தா யாதியென்முன்
ஆரப்பா தாயாதிப் பங்குதன்னை
ஆர்கொடுப்பா ரென்றேடே பிறந்தாருண்டோ
சீரப்பா வேதியன்றா னென்னைப்பார்த்துச்
சீதனமோ உன்தேட்டு வெங்கேயென்றான்
போரப்பா சொல்லறியே னையன்சொன்ன
பேச்சாலே பிரட்டெல்லாங் கண்டேன்பாரே. (77)

கண்டேனே வேதியரைக் கண்டபோதே
கருப்பெல்லாம் வெள்ளையடா சிவப்பிறப்பச்சை
பண்டேனு மறியாமற் றிகைத்தேன்டாய்ப்
பார்க்கவேணுஞ் சாயாதிப் பக்குவக்காணேன்
தொண்டனென வேதியரைத் தொண்டுபண்ணிச்
சொன்னதுருஞ் சாயாதிப் பக்கைக்கண்டேன்
உண்டேனுஞ் சாயாதிப் பக்கைக்கண்டு
உங்கையிலே கொடுக்கவர்த்தான் போற்றினேனே. (78)

போற்றினேன் சாயாதி யென்றுசொன்ன
பூரணநான் வேதியன்றன் காலைப்பார்த்துப்
போற்றினேன் முக்காலும் அங்கைகொண்டும்
பூட்டினேன் கொட்டவெளி பூண்டேன்காலைப்
போற்றினேன் காலினையே பொட்டுபோட்டுப்
போய்ப்பற்றிப் பிடித்தடா முத்திகாணா
மாற்றினே னுலகத்திற் சாத்திரமெல்லாம்
மாண்டுமனம் பார்த்ததடா பார்வைதானே. (79)

பார்வையிலே வெகுசுருக்கு விராலிதாதி
பார்த்தக்கா லருணகிரி யித்தப்பப்பா
பார்வையிலே விலக்குருடு பார்வையொன்றும்
பகாரிது கதிர்மதியா மொன்றேபார்வை
சேர்வையிலே சுழினையடா சத்திபார்வை
சித்தருக்குள் இருப்புமோம் கண்டபார்வை
கூர்மையிலே கூர்மையடா முதுகன் கூர்மை
குருடனுக்கு வழிகாணுங் குறிதான்பாரே. (80)

குறிபாருங் கொளாறுஞ் சாலமூலம்
வொள்மூலை மூச்சேறி றுடிதாமப்பா
குறிபாரும் நானுமாய் காலுக்கல்லே
குற்றமில்லை மேல்மூலம் பின்னேபாரு
அறிவாகு மூலமூத லஞ்சம்பாரு
அண்டமடா கண்டவரை யஞ்சமொன்றாம்
நெறியாக ஐயஞ்சா யஞ்சம்பார்க்க
நிலைத்தவஞ்ச மூன்றுமொன்றாய் நிலைத்ததுவே. (81)

நிலைத்தாக்காய் காலைநிற்க நிலையுமட்டு
　　நெருப்பாறு மயிர்ப்பால மப்பாற் சேரு
மலைத்தாக்கா லொன்றுமில்லை மனதே கண்டாய்
　　மதியத்திற் காலைக்கழிக் கலைப்புடா
உலைத்தாக்கா லுலைகயிலே நத்தியதுபி
　　ஓசைகேள் பற்பமடா வருவெல்லாமாம்
சிலைதாக்குஞ் சத்திரோடும் வசிரியாண்டி
　　சிவசிவா கால்கலையுஞ் சாபோகந்தே. (௩௨)

வாசியடா சைவாசிவ வாடமிதில்
　　வதனமசட் கோணமுக் கோணப்பா
தேசியடா வுதையகிரி யட்டமேறிச்
　　சிவசிவா வென்றல்லோ மாற்றுவாறு
நாசியடா கண்ணாக்கு செவியுமெட்டு
　　நாலுமது காலாகி வந்துதேசி
வீசியடா வாய்பேசி வீசவீசப்
　　வீதியிலே யறுவீதி யட்டமேறு. (௩௩)

வட்டமடா சூரியனை சந்திரந்தி
　　மதியாலே யுள்ளமதில் மதியமூலும்
வட்டமடா பிரணவமே போராவட்டம்
　　மவுனமடா நாதாக்கள் சொல்லாச்சொல்லாம்
வட்டமடா ஆதியிற்கண் வட்டமாகி
　　மனக்கண்ணால் மேலாந்தம் பார்த்துமார்க்கம்
வட்டமடா துன்மார்க்கம் நன்மார்க்கந்தான்
　　வந்தவித மெந்தவித மந்தம்பாரே. (௩௪)

அந்தமடா ஆதிமுத லவ்வுஞ் சவ்வாய்
　　அந்தகுறி யட்சரங்க ளல்லவல்ல
அந்தமடா முடிந்தவிட மறியப்போமோ
　　ஆதியென்ற நாதத்தால் விந்தையந்தம்
சொந்தமடா வுண்கொண்ட காயந்தன்னில்
　　சூலமுடன் சூட்சமுமாய் பின்றதேகம்
வந்தவித மறியாமல் மாண்டேபோறார்
　　மவுனமடா பிள்ளைகளே சொல்லக்கேளே. (௩௫)

சொல்லியிலே தெரியாட்டாற் றொட்டுக்காட்டு
தொட்டுங் காட்டையிலே தெரியாவிட்டாற்
கொல்லியிலே கூட்டிப்போய்க் கையைக்கொண்டு
குட்டிட்டுக் கைகொண்டு திரமாய்ச்சொல்லு
செக்கிலியிலே யிப்படியுந் தெரியாவிட்டாற்
செப்பக்கேள் வின்னமொன்று தெரியச்சொல்வேன்
அல்லையடா சொன்னதிற்றன் வில்லைக்கொண்டு
அந்தவிழி தெரியவன்பாற் கண்ணையெய்யே. (86)

எய்யயிலே மூன்றாது மெய்குருபரு
இப்படியுந் தெரியாட்டா லின்னமேற்கேளு
கையதிலே திருநீலவர்ணி மாரிற்போட்டுக்
கந்தபமே பாவமென்று நடுத்தாத்தள்ளு
செய்யதிலே யாறாதாரமுங் கண்டுபாலே
தேத்திரமாய்த் திருப்பியதை வெள்ளையாக்கி
ஐய்யதிலே சத்திரனி லுருக்கிக்கொள்ள
ஆதியந்தச் சதானந்தியாகுந்தானே. (87)

சதாசிவரூபம் சக்திகுரு வென்றேநின்று
சலியாதே தவியாதே குருவைக்காண
மதாமிர்தமா யிருக்காதே செவியேகேளு
வாக்கான நாக்காலே நாலேகூடவும்
பிதாவாதி நாதாந்த மூர்த்தியென்று
பிசகாதே மூக்காலும் வாசிவாசி
சதாசிவமாம் கன்னறுக்குங் கண்ணோகண்ணாய்ச்
சாவான நாலெயுந்தா னுள்ளன்பாலே. (88)

உள்ளன்போ டுஞ்சமதை யுள்ளங்கொண்டு
உருக்கியிடு மனதுருக வுருக்கமாகும்
கள்ளன்பு வையாதே யுள்ளங்கண்ணாய்க்
கனிந்துவிடுந் தெளிவான மணியாங்கண்ணில்
உள்ளின்ப மிதுவாம்பே ரின்பமாகும்
உத்தமனே பொய்யல்லவே உண்மையுண்மை
விள்ளன்பாய் விள்ளாதே யமுதங்கொள்ள
வெளியாகு மொளியாகும் பேருங்காலே. (89)

காலையிலே நடப்பதற்குக் கண்டாயிவ் வாறு
கண்பார்த்து நடவாட்ட விடமென்றாலும்
நாலையிலே முன்னூன்றாடக் குட்சர்மனைப்
நாட்டாரிக் கட்டெட்டாய் எட்டுக்கண்டபடல்
ஞாலையிலே பருவமாய் நடந்தார் பாரு
மைகள்குன்ணே ஞானத் தூய காயடம்பில்லே
சேலைபோல் செழுத்துமிதால் வைத்திடப்பா
சேர்ந்திருப்பா ருதன்னிரத்து நித்தியமே. (90)

நித்தியமாம் யோகமுதல் ஞானத்திருத்தி
செய்வதற்கு முறையுடன் பாதத்திருத்தி
நித்தியாந் திவசத்தி பூசைசெய்யத்
திடமெனுத்தச் செபதந்திறன் முனிவோர்செய்யப்
நித்தியா யெந்தைப் பூசைக்குத்தான்
செய்முறைகள் தானிதனுள் ஆமென்பவரமென்னேன்
முத்தியா மிந்நூலில் கருவைப்பார்த்து
முறையோடே செய்தக்கால் முத்திதானே (91)

தானென்ற இந்நூலின் வேதாந்தத்தைத்
தவறாமல் மூலமுதற் றட்சத்தைச் சொன்னேன்
தேனென்ற யோகமுதல் ஞானபாதம்
தேர்ந்துமட்டுக் கெளிவாய்க் கருவைச்சொன்னேன்
வானென்ற கதிர்மதியுஞ் சுழினையோடு
மந்திரங்கள் தியானத்தின் வழியுஞ்சொன்னேன்
நானென்ற மதத்தாலே வாய்விண்டேனாம்
நாய்மட்டை யிதைக்கூட்டம் தவிர்ப்பாயேனே. (92)

என்றென்று மழியாத குருவேதந்தி
யென்றென்றுங் கெட்டதற்கு தியானஞ்சொன்னேன்
நன்றென்ற நாதாந்த வமுதங்கொண்டு
ஏதாந்த முதகன்றாற் கொள்ளச்சொன்னேன்
ஒன்றென்ற சதாசிவப் பூசைமார்க்கம்
உத்தமர்கள் செய்வதற்கு முறையுஞ்சொன்னேன்
அன்றென்ல அந்தமுத லாதிமூலம்
அட்சரத்தி லட்சுட்ச மறியச்சொல்லே. (93)

அறிவதற்குக் கால்முதலாய் மூர்க்கால்மூலம்
அப்புமுத லுப்பாமுப் பூவுஞ்சொன்னேன்
அறிவதற்கு முத்தியுமே யொன்றாய்ச்சொன்னேன்
ஐயரெங்கள் கொங்கணரே ஆதியென்று
அறிவதற்கு முக்கண்ணாங் கண்ணுற்பத்தாம்
அடிமூலம் பார்ப்பதற்குக் கண்ணைச்சொன்னேன்
அறிவதற்குப் பேரின்ப வீடுஞ்சொல்லி
ஆராறு மறுமுகம்வேல் முனையென்றேனே. (94)

முனைபார்க்கும் பார்வையின்கண் முதுகண்சூட்சம்
முழிகண்ணிற் சுருடான முனையுஞ்சொன்னேன்
தனையறியத் தாய்பதமுந் தனமுஞ்சொன்னேன்
தன்னியத்திற் பால்வண்ண ரூபஞ்சொன்னேன்
மனையான ஆறுதல மனையுஞ்சொன்னேன்
வழிதுறையும் நிரைநிரையாய் வகுத்துச்சொன்னேன்
அனையான தாயாதி பங்குஞ்சொன்னேன்
அமுதகன்னில் காலுதான் வழிசொன்னேனே. (95)

சொன்னேனா னாதிபுலி யூர்க்குப்பாதை
சுற்றத்தார் புற்றில்வா ளரவுஞ்சொன்னேன்
சொன்னேனா னந்தரவு விஷங்களெல்லாம்
சமமாகும் மூலிகையின் கருவுஞ்சொன்னேன்
சொன்னேனான் முன்னேறிப் பின்னும்பாரு
சூட்சமதில் வெளிதோணக் கருவுஞ்சொன்னேன்
சொன்னேனான் கருவெல்லாங் கருத்தானுள்ளே
சோதித்தக் கருப்பாரு சோதிகாணே. (96)

சோதியடா காயாத்துச் சோதிசொன்னேன்
சுருக்கமடா கடுஞ்சுருக்கு விந்தேதொந்தம்
ஆதியடா விந்தான தொந்தம்பாரு
அந்தரங்கஞ் சொல்லாதே அய்யாவைய்யா
நீதியடா பேர்பாதி யென்தாயாதி
நின்பங்கு மென்பங்கும் நினைவாய்வாங்கு
பாதியிலே பலபாதி சூட்சமப்பா
பக்கத்திற் சொல்லாதே பங்கைவாங்கே. (97)

வாங்கையிலே ருட்சமுடன் வாவாவென்றால்
மாம்பொருக்க வையகத்தில் சித்தியென்பார்
ரிங்காரத்தை நின்கவருள் காலமையா
நித்திரையில் புத்திவரும் நிசவுதீங்காப்
பாங்கான சொன்னையிலே பூசாதுகன்னிற்
பழுத்தகனி கனித்துவிழும் பண்புமாகும்.
பூங்காவும் காவடா புத்தயக்கமத்த
புத்தாது தூயமாம் புத்திரபானே. (98)

புத்திவர முன்சொன்னேன் பின்னாதிசொன்னேன்
பொய்யென்று சொன்னக்கால் புத்திரனசம்
புத்திரனே சொன்னேனே வித்தாரமாய்ப்
போற்றிப்பார் சாயுட்ச பதமுமெய்தும்
புத்திபடா சொல்லுமனம் ஞானயயின்று
பொதிநமுனிக் குருபீடத் சொன்ன புத்தி
புத்தியடா நம்பக்போற் சொன்னார்தாய்
புத்திசொன்ன பெருமானையுத்தப் புனைமகனே. (99)

காரணத கண்காறும் முத்திவாறும்
கயிலாசச் சொர்க்கமடா பதவியுண்டாம்
தோணாத ருத்திரங்கள் முன்னால்ருட்சம்
தோணுமடா வின்னாலே சொன்னேன்கண்ணே
பூணாத பூஷணமா மென்றால்தானும்
பூவாதும் வாசமடா அவாசத்தலத்தும்
வீணாகப் போகாது வெகாந்தத்தானி
வேதாந்த ருத்திரத்தின் கண்தான்முற்றே. (100)

கடைப்பிள்ளை சிவயோகஞானம்
முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி பங்காரு சாமியார் அவர்கள் குமாரர் முத்தியாலு நாயுடு அவர்களிடம் வாங்கிய ஒட்டுப்பிரதியின்படி இத்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

முருகன் துணை.

ஆருவது

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

கலைக்கியானம் 120.

ஓமென்ற மூலகணபதியைப்போற்றி
உறுதியுள்ள கொங்கணவர் பதமேற்கொண்டு
ஆமென்ற பூரணமாங் கலைஞானத்தை
அறிந்துமதி ரவியினுட கலையைப்போற்றி
நாமென்ற சுழிமுனையூடிக் குள்ளேசென்று
நாதாந்தம் வேதாந்தம் நன்றாய்ப்பார்த்துத்
தாமென்ற சங்கற்ப விகற்பம்போக்கி
சகலகலைக் கியானபூ ரணங்கொண் டேனே.

கொண்டேனப்போது குருவாய்நின்ற
கொங்கணவர் மனமகிழ்ந்து வாவாவென்னச்
சென்றேனந்நிலை தன்னைப்பார்த்துச்
சேயான கடைமணியே தெளிவாயென்னக்
கொண்டேனவருடைய பாதம்போற்றிக்
குறித்துமிகத் திருவடியைப் பூசைசெய்து
மண்டலமூன் றதினிறைந்த கலைக்கியானத்தில்
வாழ்கதிருவென் றநுக்கிரகம் வசனித்தாரே.

வசனித்து அநுக்கிரக வார்த்தைபெற்று
மார்க்கமுடன் உட்கிரக மார்க்கங்கண்டு
நிசனித்த ஆகார மூலங்கொண்டு
நிலைதவறுக் கலையறிந்து முடிமேற்சென்று
திசனித்த சுழிமுனையில் நிற்கும்போது
திருவாசி வாசியென்ற கலையைக்கண்டேன்
பசனித்த கலையறிந்து மைந்தாநானும்
பாடினேன் பன்னிரண்டு பத்துதானே.

தாவென்ற வாசிக்கு பன்னிரண்டாய்
 தாவுமப்பா தானெழுந்து தானேதானாய்
வாவென்ற உள்வெளியாய்ப் பாய்ந்துபாய்ந்து
 குடிபுகுந்து வுதைமெல்லா முறுதிரெட்டி
போவென்ற குருவருளை யறிவாய்த்தான்
 போற்றுவனே னா பாசந்தீர்ந் துலைந்துபோனான்
ஏவென்ற சத்திசிவ சங்காரமே
 இடைத்தமனோ தனைநாடி யிருந்தார்பாரே. (3)

பாரப்பா உடலுயிரை யறிந்துகொண்டு
 பத்தியுடன் சிவபாத தானமாய்நின்றால்
காரப்பா மின்னலொளி [illegible] நிதங்களு
 [illegible] சிவசிவமாக சகுணநிற்குணம்
சேரப்பா [illegible]
 [illegible] வசமதாக
ஆரப்பா [illegible] பட்டாய்
 அறந்தவிர் பெருவெளிக்கு அயமாக்கினேனே. (4)

கேளப்பா ஈசனென்றுந் தெட்டிச்சாமம்
 இருதையுட னில்லறத்தோ டிருந்துவாழ்ந்து
நாளப்பா விடியவொரு சாமத்தன்னில்
 நாட்டமுடன் றொழுந்து நம்மையாக
நீளப்பா தன்னுடலை சாலூதங்கள்
 நேசமுடன் சுத்திசெய்து யிருந்துகொண்டு
ஆளப்பா விபூதிதா ளிதமேசெய்து
 சுத்தசெப மாலைபத்தி யுடனெடுத்தே. (5)

பத்திசெப மாலைவா வெணவெடுத்துப்
 பதியிடத்து மையிற்பூதி அணிநிறுத்திச்
சத்தமுடன் வித்திட்டு வித்துள்ளமைந்தா
 சருதியுளா பிரணவத்தைச் சதமாய்ச்சாத்திப்
புத்தியுடன் பிரணவத்துள் ஸ்ரீங்கென்று
 பூரணமாய்க் கேசரியில் மனக்கண்சாத்தி
சித்தமுடன் ஓம்சிவம் வென்றேனமைந்தா
 திருவேறப் பதினாறு உருவேசெய்யே. (6)

உருவறிந்து ஓதையிலே கணபதிவல்லபையும்
ஒளிவிளக்காய் நின்றவெளி யுடனே காணும்
கருவறிந்து அவ்வெளியி லொளியாய்நின்ற
கருணைபெற றப்ஸ்ரீ ங்கென்றோது
தெருவறிந்து ஓங்கிலி மங்கென்றோது
சிவசிவா ஓம்கிலி சிங்கென்றோது
குருவறிந்து செய்ததினால் மைந்தாநீயும்
கூர்மையுடன் ஓர்கிலி வங்கென்றோதே. (7)

வங்கென்று வோதியபின் மைந்தாகேளு
மார்க்கமுட னோயங்கிலி யங்கென்றோது
சங்குப்பிறைத் திருந்தபஞ்ச கர்த்தாவங்கே
ஏகமா மயமான சொரூபங்காணும்
சங்கையுடன் ஓம்சிறீம் ஹ்ரீங்கென்னச்
சணத்திலொளி ரவிமதியைக் காணலாகும்
மங்களமாய் நித்தியமும் விடியச்சாமம்
மார்க்கமுடன் றனெழுந்து வாசையாயோதே. (8)

வாசையறிந்து ஓதையிலே மைந்தாகேளு
மகத்தான பஞ்சகர்த்தா ரவரோடொக்கத்
தகையாது ரவிமதியோ டேழுபேரும்
சங்கையுடன் தன்னொளியிற் காணலாகும்
நகையாமல் மனதடங்கி விடியச்சாமம்
நாட்டமுடன் றனெழுந்து நன்மையாகத்
திகையாமற் றானிருந்து ஆறுதாரத்
தெரிசனையிற் கட்டளையாய்த் தினமுநோக்கே. (9)

நோக்கமுடன் தானிருந்து மனக்கண்கொண்டு
நுண்மையுடன் ஆதார தியானம்பண்ணி
வாக்குமனம் ஒன்றாக மைந்தாமைந்தா
மனதடங்கிச் சுழிமுனையில் வங்கென்றோட்டி
தாக்கிமன தறிவாலே நின்றாலையா
சணத்திலே சுழினைவழி தானேகாணும்
பாக்கியமாய் சுழினைவழி கண்டால்மைந்தா
பத்தியுடன் வாசிசிவ யோகஞ்செய்யே. (10)

செய்யப்பா வாசிசிவ யோகத்தைச் செய்யத்
நிர்க்கமுடன் லக்ஷியமு வதுமேனி
பய்யப்பா மூலத்திற் சேர்த்துப்பார்த்
பாலைபோல் சுழிமுனையிற் குள்ளேயோடியும்
மெய்யப்பா சிக்கென்று பூரிபூரி
மேன்மையப்போ சேர்க்கு ககனாமிர்தம்
பொய்யப்பா போகாது வாசிதானும்
பூரணமாய் உள்வெளியாய் பொருந்தும்பாரே. (11)

பாரப்பா மனம்பொருந்து மேரு சக்கரமாய்ப்
பத்திமுதல் பாவனையாய் ராக்கியமாக
சேரப்பா நாயிருந்து மலக்கமின்றி
தேகமுடன் வாசிதான் மேலேயெழும்பச்
சாரப்பா திருவடியை மேவிநின்று
சத்திசிவ கலைகள்செல்லும் வீட்டுக்குள்ளும்
ஆரப்பா கலைமுக்கு தீர்த்தப்போவார்
அருள்பெருகுஞ் சுழிமுனையை யழுத்திப்பாரே. (12)

அழுத்தியத்தக் சுழிமுனையைப் பார்க்கும்போது
அகாரமுடன் உகாரமது மகாரமூன்றும்
சுழித்தசுழி வெளியதனிற் கண்டாக்கி
சொல்லுகின்றேன் ஓங்கார சக்தியாக
வழுத்தாநிற்கு அதிகார வடிவேல்போலே
மன்றுவினாறும் வைகுந்த பார்த்துகொண்டு
செழித்தமனை அறுதியுள்ள சித்தருக்குச்
சிவசிவா பழம்பொருளாய் விளங்குந்தானே. (13)

தானேதான் தானவனும் விளங்குகின்ற
சகலகலை பூரணமுங் காரத்துக்கோர்
தானேதான் சூரியகலை உகாரமாகும்
சதாபோத சுழிமுனையுங் மகாரமாச்சு
தானேதான் சுழிமுனையிற் றொக்கிப்பார்த்தாற்
சந்திரகலை அகாரமதாய்த் தானேகாணும்
தானேதான் மூன்றுமொன்றாய்க் கண்டபோதே
சகலகலைக் கியானமெல்லாம் ஒன்றாய்ப்பாரே. (14)

ஒன்றான ஓங்காரம் சகலத்துக்கும்
உடலுயிரும் பொருளான உறுதியாகி
நன்றான முப்பொருளு மொன்றாய்நின்று
நாடகமாய்த் திருநடனம் நன்றாயாட்டிக்
குன்றாத முக்குளிகை தானுமாகிக்
குருவான திருமூர்த்தி மூப்பாழாகி
நின்றாடக் கொண்டதொரு நாடிமூன்றாய்
நிறைந்ததுவும் மறைந்ததுவும் மாயந்தானே. (15)

மாயமென்ற வாழ்க்கையிலே உபாயமாக
மைந்தனே தானிருந்து மார்க்கமாகக்
காயமென்றே கருவிகளை யறிந்துகொண்டு
கலையான ரவிமதியின் கலையைப்பத்தி
நேயமுடன் கண்டமதி லங்கென் றாணி;
நீமகனே வங்குசிங்கு வங்கென்றேதான்
தாயகமாய்க் கால்மாறி நடனங்கொண்டால்
சதாபோத யோகசிவ வாழ்வுதானே. (16)

தானான வாழ்வுசிவ யோகவாழ்வு
தன்மையுள்ள அஷ்டாங்கச் சித்துவாழ்வு
கோனான குருவருளால் தான்றானாகிச்
குருவான கலையறிந்து கலைமேற்கொண்டு
தேனான நவக்கிரக பூசைசெய்து
சிவசிவா இல்லறத்தைச் சுத்திபண்ணி
நானான அகபிருத்தி யேகமாக
நாட்டமுடன் பூசைமடந் தன்னுட்செல்லே. (17)

செல்லடா பூசைமடந் தன்னுட்சென்று
சிவாவெனவே செலமெடுத்துப் புரோசித்தப்பால்
மெல்லடா வடமுகமா யிருந்துகொண்டு
மேன்மையுட னீசான முகூர்த்தங்கொண்டு
சொல்லடா சிவயநம வென்றுசொல்லித்
சுத்தமுடன் விபூதியைநீ கையில்வாங்கி
நில்லடா பலகையின்மேல் நிறுத்திமைந்தா
நீமகனே நவகோணம் நன்றாய்ச்செய்யே; (18)

செய்யடா நவகோணம் நன்றாய்ச்செய்து
　　தீர்க்கமுட னதுமேலே விந்துசாத்தி
மெய்யடா நால்வாசல் கோட்டைசெய்து
　　மேன்மையுள்ள நவகோணம் நடுவைமைந்தா
கையடா தவறுமுக் கோணத்துள்ளே
　　கருணைபெற வட்டவித்துக் குள்ளேபோடு
வையடா ஓம்றீங் கென்றுசாத்திக்
　　மார்க்கமுட னெட்டெழுத்து வகையாய்ச்சாத்தே. (19)

சாத்தியே நவகோணந் தன்னில்மைந்தா
　　சங்கையுடன் நவகும்பந் தன்னைவாங்கிப்
போத்தியே கும்பமெல்லாம் நூலணிந்து
　　பூரணமாய் மனமிருத்திச் சவாதனித்து
பாத்தியனே மாங்குலையுந் தேங்காய்சாத்திப்
　　பதிவாகக் கும்பமெல்லா மாடைசாத்திக்
கேத்திரத்தின் பேரொளியாய் நவகோணத்தில்
　　நீமகனே கும்பமெல்லாம் நிறுத்திடாயே. (20)

நிறுத்தியந்த நடுவான கும்பந்தன்னில்
　　நேர்மையுடன் பரித்தகடு நன்றாய்ச்செய்து
கருத்துடனே பரித்தகட்டில் மைந்தாகேளு
　　கருணைபெற ஓம்கிலியுங் கிறிறீங்கென்று
திருத்தமுடன் நடுவான கும்பந்தன்னிற்
　　றிருவான பரித்தகட்டை யதனுட்போட்டு
மருத்திருந்த கும்பமெல்லாஞ் சொர்ணபுட்பம்
　　வரிசையுடன் தானிருத்தி மலர்கள்தூவே. (21)

தூவிநன்றா யமுதாச வர்க்கம்வைத்துச்
　　சுத்தமுடன் தாம்பூலந் தேங்காய்சாத்தி
ஆவலுடன் நாலுபுறந் தீபம்வைத்து
　　அன்பாகச் சற்குருவைத் தியானம்பண்ணித்
தேவிபரி பூரணியே யென்றுபோற்றிச்
　　சிவசிவா நவகும்பந் தனக்குமைந்தா
பாவகமாய்ப் பூசைபண்ணித் தீபதூபம்
　　பத்தியுடன் சோடசமாய்ப் பூசைபண்ணே. (22

பூசையென்ன மானதமாய்ப் பூசையாகும்
புத்தியுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
ஆசையுடன் செபதவங்கள் தியானஞ்செய்து
அருள்வளர மனதுருக அன்பாய்நீயும்
நேசமுடன் தோத்திரங்கள் நன்றாய்ச்செய்து
நிமலனுட விபூதியைநீ தரித்துக்கொண்டு
பாசபிர சமையுமுதல் நவமிட்டும்
பத்தியுடன் நவநாளும் பூசைபண்ணே. (23)

பண்ணப்பா நவநாளும் பூசைபண்ணிப்
பரமகுரு சீர்பாதம் பணிந்துபோற்றி
விண்ணப்ப நோக்கிதவ சோணஞ்செய்து
விசையான விபூதியை யெடுத்துமைந்தா
உண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
உடம்பெல்லாந் தாரிதமா யணிந்துகொண்டு
கண்ணப்பா தானோக்கி யுலகோர்க்கெல்லாம்
கருணையுடன் விபூதியைநீ கடாட்சஞ்செய்யே. (24)

செய்யப்பா விபூதியைநீ கடாட்சித்தாக்காற்
சிவசிவா நவக்கிரகத் தோஷந்தீரும்
தையப்பா பண்ணிவிக்குங் குணமுந்தீரும்
நஞ்சான விஷமுதலாய் நாடாதோடும்
வெய்யதொரு பிணிகளெல்லாம் வீறிட்டோடும்
விதமான நோய்களெல்லாங் கதிகெட்டோடும்
கொய்யப்பா லக்ஷகூத் தானும்போவான்
குருவான சற்குருவின் பாதம்போத்தே. (25)

போத்துவது குருபதத்தைப் போற்றவேணும்
பூரணமாய் வாலைபதம் பணியவேணும்
பாத்திபனே சுழிமுனையை அறியவேணும்
மதிவான வாசியிலே பதியவேணும்
ஆத்துமத்தின் செயலறிந்து ஆறுதாரம்
அடங்குமந்த நிலையறிந்து வொடுங்கவேணும்
காத்துநிலை தனையறிந்து ஒடுக்கிருக்காற்
கயிலாச தேகமடா தன்னைப்பாரே. (26)

பாரப்பா தன்னையிகத் தானேகண்டு
பாதாதி கேசமுதற் பார்க்கும்போது
நேரப்பா நின்றவொரு சொன்றேனுட்சம்
நிசமான சூட்சமடா மாயமாயம்
ஆரப்பா அறிவார்கள் மாயாரூபம்
ஆதியந்த மாய்நிறைந்த அரூபந்தானுங்
மோரப்பா கொண்டுநின்ற விசுவரூபம்
மேலான சுழிமுனையில் மேவிப்பாரே. (27)

பாரடா சுழிமுனையில் மேவிப்பார்க்கப்
பராபரமாய் நின்றபாதஞ் சொரூபமைந்தா
நேரடா சுழிமுனைமுதற் றுயசதாசக்தம்
நிறைந்துநின்ற கேசரியாமா னென்னசொல்வேன்
போடா அண்டகிரி நுணுகிச்சென்று
வேதாந்தத் திருநடனங் காட்சிகண்டால்
நாடா அடிமுடியு மொன்றாய்ப்போகும்
ஆலங்குணற கேசரிவரு மாயந்தானே. (28)

மாயமென்ற மாயமடா உலகவாசம்
மறுவீதி யறியாத உலகத்தன்னை
தாயகமாய்த் தானிருந்து தன்னைப்பார்த்துச்
சகலகலைக் கியானதிரு வாசியேறி
காயமென்ற கருவிகளை நிறுத்திநாதத்த
கருணையுடை ஜோதிதலங் கண்டுமேவி
நேயமுடன் கலையறிந்து தன்னுள்ளேதான்
நேசிப்பாய் பூசிப்பாய் கும்பிப்பாயே. (29)

கும்பித்து மீராறு வகைகள்தாண்டிக்
குருவான பதியறிந்து பதியின்மேலே
தம்பித்துச் சந்திரபுஷ் கரணிதன்னிற்
றனிருந்து தியானசிவ யோகஞ்செய்து
அம்பரத்து வெளியேறி நடனங்கண்ட
ஆதிகுரு கொங்கணவ ரருளினாலே
தெம்பித்துச் சகலகலைக் கியானஞ்சொன்னால்
திர்க்கமுடன் யானறிந்து திரம்பெற்றேனே. (30)

திரம்பெற்ற மகிமையை யறிந்துகொண்டு
சிவசிவா வென்றகலைக் கியானந்தன்னை
உரம்பெற்ற சிந்தைபணி ரண்டுபத்தும்
ஒடுக்கமென்ற கலைக்கியான முறுதிசொன்னேன்
வரம்பெற்ற பெரியோர்க ளெடுத்துப்பார்த்து
வலமிடமாய் நின்றகலை வாசியேறி
சிரம்பெற்ற தெளிவதனா லமுதங்கொண்டு
தேவிபரி பூரணியைப் பூசைபண்ணே. (31)

பூசையென்ன மதியமுத முண்ணவேணும்
பூரணமாய்ச் சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
ஆசையுடன் வாசியிலே மனதுவைத்து
ஆதார தெரிசனையை யறியவேணும்
ஓசையுட னாதார நடனங்கண்டு
உண்மையென்ற விடமறிந்து வொடுங்கவேணும்
பாசையென்ற பலபாஷை பதினெண்பாஷை
பயனறிந்து சாஸ்திரத்தைப் பணிந்திடாயே. (32)

பணியவென்றாற் குருபதத்தைப் பணியவேணும்
பரமகயி லாசவரை காணவேணும்
கனியவென்றால் வாலைபதங் கனியவேண்டும்
காலான வாசியிற்சென் றேறவேணும்
மணியான மனோமணியைக் காணவேணும்
மகத்தான சுழிமுனையில் மனக்கண்சாத்தி
அணியான ஆதார சிவாலயத்தை
அங்கமுடன் பூசித்தோன் சித்தன்றானே. (33)

சித்தமுட னிந்நூலைப் பாடினனும்
சிவசிவா நந்தியிடம் செப்பினேன்யான்
சுத்தமுட னவர்பார்த்து மூலர்க்கீய்ந்தார்
சுகமாக மூலர்கா லாங்கிக்கீய்ந்தார்
பத்தியுடன் காலாங்கி போகர்க்கீய்ந்தார்
பரமான போகருமென் குருவுக்கீய்ந்தார்
வெத்தியுள்ள வென்குருவும் நன்றாய்ப்பார்த்து
வேதமே வுலகமெல்லாம் நிறைந்திட்டாரே. (34)

நிறைந்திட்டே னிந்நூலை யுலகத்துள்ளே
நேரறிந்து சொல்லுதற்கு மனம்பேசாது
உறைந்திட்டே னுலகமெல்லாம் நானேநானாய்
உந்தமருக் குண்மையா யுறுதியாகும்
மறைந்திட்ட வேதநூலை யெந்தன்சாபம்
மார்க்கமுடன் றீர்த்தாக்கால் வளருந்தீட்சை
சிறந்திட்ட பூசையினு லதிகமாகும்
சிவசிவா வாலைகற்பந் திறமாயுண்ணே. (35)

உண்ணப்பா வாலைபதம் பணிந்துகொண்டு
உத்தசிவ யோகமதி னுறுதியாக
நண்ணப்பா ஆதார தியானசூட்சம்
நன்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
விண்ணப்பா நோக்கிடும் கிலி அங்கென்று
விநாயகனைத் தியானித்து அப்பால்மைந்தா
கண்ணப்பா நிறுத்தி அங் கிலிசங்கென்னை
கருணையுடன் பிரமனுட தியானமாச்சே. (36)

ஆச்சப்பா பிரமனுட தியானம்பண்ணி
அதின்பிறகு நங்கிலி மங்கென்றோது
நீச்சப்பா மாலினுட தியானமாச்சு
நிசமாக மங்கிலி சிங்கென்றோது
மூச்சப்பா ருத்திரனுட தியானமாச்சு
முனையறிந்து சிங்கிலி வங்கென்றோது
பேச்சப்பா மயேஸ்பரத்தின் தியானமாச்சு
பெருமையுடன் வங்கிலி யங்கென்றோதே. (37)

ஓதவே சதாசிவத்தின் தியானமாச்சு
உத்தமனே அங்கிலி உங்கென்றோது
நீதமா பிரவியுட தியானமாச்சு
நிச்சயமாய் உங்கிலி அங்கென்றோதப்
பேதமிலா மதியினுட தியானமாச்சு
பிலமாக அங்கிலி மங்கென்றோதச்
சாதகமாய்ச் சுடரினுட தியானமாச்சு
சங்கையுடன் மங்கிலி ஓமென்றெண்ணே. (38)

என்னையே ஞானியினூடே தியானமாச்சு
　　என்மகனே ஒப்பிலி செப்பினேனென்று
உன்னையே பரவெளி தியானமாச்சு
　　உற்றியுள்ள வெளியோடே வெளியாய்நின்று
தன்னையே வெளியோடே ஒளியாய்நின்று
　　நாடெல்லாம் வெளியேறிப் போகாமற்றான்
அன்னையே உடலறிந்து கட்டுக்கொண்டு
　　சோதிமணி வீடதுவே துலங்குவாயே. (39)

துலங்குமணி மண்டபமாம் புருவமத்தி
　　சோதியென்ற அறிவையடா அண்டமேரு
இலங்கொளிவாய் நின்றபர மேருதன்னில்
　　இச்சையுடன் சிவசிவா யோகஞ்செய்யக்
கலக்கமில்லா மாதாதி வாலைதன்னைக்
　　கருணைபெற அவள்பதத்தைப் பூசைபண்ணிப்
பலன்கனிந்த அமுதரச பானங்கொண்டாற்
　　பரப்பிர்ம ரூபமதாய் வாழலாமே. (40)

வாழப்பா யின்னமொரு வகைகேளு
　　மகத்தான மாதாதி தனக்குமைந்தா
ஆழப்பா அமுதரச பானமூட்டி
　　அன்பான உபசார மகேசஞ்செய்து
மேலப்பா களபசந் தனங்கள்பூசி
　　மெத்தையின்மேற் றனிநிறுத்தி மேன்மையாகக்
காலப்பா தான்பிடித்துக் கமலக்கண்ணிற்
　　கனிந்துவரு மமுதரச தேனைவாங்கே. (41)

வாங்கினன்றாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி
　　வளமையுடன் றன்பொசிக்க இளமையாகும்,
ஓங்கிநின்ற வாசியது ஓடாதையா
　　உறுதியுடன் சுழிமுனையி லுகந்துநின்று
பாங்குடனே சிவயோகம் பதிவாய்நிற்கும்
　　பதிவாகக் கற்பூர தீபங்காணும்
பூங்கமல மாதாதி பழக்கத்தாலே
　　புத்தியுடனொக்காரும் வாழலாமே. (42)

ஆமப்பா பின்னமொரு பாகங்கேளு
அருள்பெருகும் மாதாதிக் கன்பாய்நீயும்
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுடன் பாலமுது சீனிகூட்டி
ஓமப்பா நிலையறிந்து வூட்டினக்கால்
உண்மையென்ற மந்திரகலை யமுதமூறும்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் கெங்கைதனை யுண்டுபாரே. (43)

உண்டுபா ரமுதரச கெங்கைதன்னை
உத்தமனே சத்தியமாய்க் கொண்டாயானாற்
கண்டுபார் தேகமது ரவிபோற்காந்தி
காணுமடா பூரணத்தின கலையினாலே
நின்றுபா ரண்டாண்டங் கண்ணிற்றோனும்
நிசமாக வாலைமன் மதன்போலாவாய்
கொண்டதொரு அமுதரச பானத்தாலே
குடியிருப்புப் பிலத்துதடா குருவைக்காரே. (44)

காரப்பா பின்னமொரு கருவைக்கேளு
கற்புடைய மாதாதி தனக்குமைந்தா
நேரப்பா பருத்திவிரைப் பாலைவாங்கி
நிசமாகச் சர்க்கரையுந் தேனுங்கூட்டிச்
சாரப்பா அதில்விட்டுப் பிசைந்துகொண்டு
சங்கையுடன் மாதுதனைக் கூட்டிமைந்தா
போரப்பா கொண்டதொரு அமுதங்கொண்டாற்
பேரண்டஞ் சத்திவசக் கெவுனமாமே. (45)

ஆமப்பா கெவுனரச பானந்தன்னை
ஆத்தாளை யனுதினமும் பூசைபண்ணி
நாமப்பா சொல்லுகிற லகிரியூட்டி
நன்மையுடனே மெத்தைவிரித் தொழுதுபோட்டுத்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் கைக்காணத் தானேசெய்தாற்
காமப்பால் வடிந்தொழுகு மந்தத்தேனைக்
கருணையுடன் பீங்கானில் வாங்கிக்கொள்ளே. (46)

வாங்கியே காமகளைத் தன்னிலேதான்
மகத்தான குங்குமகஸ் தூரிமஞ்சள்
பாங்குபெறக் கோரோசனைப் புனுகுகூட்டி
பத்தியுடன் றனைத்துத் திலதம்போட்டு
ஆங்காரங் கொண்டதொரு மிருகந்தன்னை
அதட்டிநீ பார்க்கவது அசந்துபோகும்
தீங்கான சத்துருக்கள் வசியமாகும்
திருவான லெட்சுமியும் வசமாவாளே. (47)

வசமான சத்தியடா வென்றாய்தேவி
மகத்தான சோதியடா மாயாரூபி
தேசமான திட்சையிலே வெளியாய்நின்று
சிந்தைதன்னில் நினைத்தபடி திர்க்கஞ்செய்வாள்
விசமான கொடுமைகளை யகற்றிநல்ல
மெய்ஞ்ஞான மானசிவ யோகம்பெற்று
நிசமான பூரணமாங் கலைக்கியானத்தை
நீமகனே அந்திசந்தி நினைவாய்ப்பாரே. (48)

பாரப்பா பதியதிந்து நினைவாய்ப்பார்த்தால்
பத்தியுட னறுதலம் பதிவாய்த்தோணும்
நேரப்பா ஆதார நிலையில்நின்றால்
நிசமான சுழிமுனையிற் றீபங்காணும்
காரப்பா சுழினையிலே தீபங்கண்டாற்
கருணைவளர் சிவயோகங் கைக்குள்ளாகும்
சாரப்பா சிவயோகத் திருந்துகொண்டு
சதாபோத மானசுழி கண்ணைக்காணே. (49)

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருணைவளர் சந்திரகலை அகாரமாச்சு
பூணவே பானுகலை உகாரமாச்சு
பொருந்திநின்ற சுழினையிலே மகாரமாச்சு
தோணவே மூன்றுதிரு நேத்திரந்தன்னைச்
சுத்தமுடன் றான்பார்க்க வேகமாச்சு
பேணவே யேகமென்று தன்னைப்பார்த்தாற்
பிலமான ஓங்காரக் கம்பமாச்சே. (50)

ஆச்சப்பா ஓங்காரக் கம்பந்தன்னை
ஆதிமூத லந்தம்வரை பார்க்கும்போது
பேச்சப்பா பேசுதற்கு நாவங்கேது
பிலமான மூலனுங் காரத்தீப்தான்
மூச்சப்பா நிறைந்தகலை வாசியாகி
மூதண்ட அண்டவரை மூட்டிநின்று
போச்சப்பா நாலுகலை பாழேபோய்ந்து
பொருந்துமடா பெண்கலைதான் மூலங்காணே. (51)

காணவே கலைகள்பனி ரண்டுக்காறும்
கடந்துவெளி பாயாமற் றன்னுள்ளேதான்
பூணவே வங்கென்றும் சிங்கென்றுந்தான்
புத்தியுடன் வாசிகொண்டு பூருவத்தேகித்
தோணவே தானிருந்து தன்னைப்பார்த்தாற்
சுகசீவ பிராணகலை சுத்தமாகும்
ஊணவே பிராணகலை சுத்தமானால்
உடலைவிட்டு வுயிரிழந்து போகாதென்னே. (52)

போகாத புனலதுதான் மைந்தாமைந்தா
பூரணமாய் நின்றிலங்கும் வாசிவாசி
சாகாத காலதுதா னென்னவென்றாற்
சதாபோத மானதொரு நாதமாகும்
வேகாத தலையதுதான் விந்துவிந்து
வேதாந்த மூலமடா யார்க்குந்தோணா
வாகாக யிதுமூன்றுந் தன்னுட்கண்டு
மகத்தான சிவயோகம் வழுமைபாரே. (53)

வலமையுடன் பூரணமாங் கலைக்கியானத்தை
மகத்தான வாக்கியமென்று மனத்துட்கொண்டு
தலைமையென்று சுழியறிந்து தன்னைப்பாரு
சதாகாலம் பூரணத்திற் சார்ந்துபாரு
இலமையிலே வனுவறிந்து கற்பங்கொள்ளு
இல்லாட்டாற் சள்ளையடா அத்தைநோக்கு
குலமறிந்து நாதமதைக் கண்டுகொண்டாற்
குழியான வாசியது குதிக்காதென்னே. (54)

குதிக்காது உன்னைவிட்டு வாசிதானும்
குறியான நாதவிந்தைக் கொண்டதாலே
மதிக்காதே யென்னவினை வந்தாலுந்தான்
வாசியென்ற அக்கினியில் மடிந்துபோகும்
கெதிக்கான மோட்சமடா வாசியோகம்
கீழ்மூல வன்னியடா மேல்மூலத்திற்
பதிக்கான அமுதமது யிருக்குதப்பா
பாலகனே வாலைபதம் பதிவாய்க்காரே. (55)

கார்க்கவே யாதியந்தம் பிண்டமாகிக்
கருணையுள்ள நாதவிந்து ரூபமாகி
ஏர்க்கவே சத்தாகிச் சித்துமாகி
ஏகாந்த வாசிகுரு மூலமாகித்
தீர்க்கமுள்ள சிவயநம சித்துமாகித்
தெளியாத பொருளாகித் தெளிவுமாகி
பார்க்கவே ஆறெழுத்தாய் நின்றமூலம்
பத்தியுட னோரெழுத்தாய் நின்றவாறே. (56)

வாரான சுழிமூல மறியவென்றால்
மகத்தான ஓங்கார வடிவமாச்சு
நேரான ஓங்கார வடிவேதென்றால்
நிலையான ரூபமடா பிராணநாதம்
கூரான நாதசத்தி சிவமதாச்சு
குருசத்தி சிவம்உடலு முயிராய்நிற்கும்
பேரான உடலுயிரைக் காணுமற்றான்
பேய்க்கூத்தாய் நின்றலைந்து பிலங்கெட்டாரே. (57)

பிலமான அகாரத்தை மூலந்தொட்டுப்
பிசகாமல் உகாரத்தை நடுவிற்சேரு
குலமான மகாரத்தைச் சுழியிலேற்று
குறையாது வாசியது நிலையில்நிற்கும்
தலமான பதியறிசிங் கென்றேசி
தன்மையுடன் சுழினையில்வங் கென்றுபூரி
நலமான ரண்டுங்கும் பித்துக்கொண்டு
நாட்டமுடன் ரேசகபூ ரகமாய்நில்லே. (58)

நில்லென்ற நிலையேது மனமங்கேது
நிரஞ்சனமாய் நிறைகின்ற மவுனமேது
சொல்லென்ற சொல்லேது சுத்தமேது
சுத்தமென்ற விடமேது நாகமேது
வெல்லென்ற வாசிசிவ யோகமேது
வேதசாஸ் திரபுரா ணங்களேது
அல்லென்ற அசைவேதாங் காரமேது
அரகரா வொன்றுமில்லை வெளிதானுச்சே. (59)

வெளியாக யின்னமொரு கருவைக்கேளு
விபரமுடன் நாற்கோணம் நன்றாய்க்கீறி
சுழியாக அதினுள்ளே விந்துபோட்டுச்
சுத்தமுட னதினுள்ளோங் காரஞ்சாத்தி
வழியாக அதினுள்ளே நங்கிளீங் கங்கென்று
மார்க்கமுட னெழுதிமஞ்சள் நூலணிந்து
தெளிவாக மானதமாய்ப் பூசைபண்ணிச்
செகத்தோர்க்கு யெந்திரத்தைக் கட்டிப்பாரே. (60)

பாரப்பா யெந்திரத்தைக் கட்டினுக்காற்
பத்தியுடன் சரஸ்வதியும் நாவில்நின்று
நேரப்பா கவித்திரங்கள் பாடவைக்கும்
நிசமான தேகவச்சிர காயமாகும்
சாரப்பா சகலகலைக் கியானந்தோற்றும்
சகலருமே வசீகரமாய்த் தானேநிற்பார்
தேரப்பா சரஸ்வதியின் கடாட்சத்தாலே
சித்திமுத்தி யாகியவன் ஜெனிப்பான்காணே. (61)

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருணையுட னிருகோணம் பிறையுமிட்டுப்
பூணவே பிறையதனுள் விந்துசாத்திப்
புத்தியுடன் ஓங்கார மதனுள்ளிட்டுத்
தோணவே ஓங்காரத் துள்ளேமைந்தா
சுத்தமுடன் மங்கிலிங் மங்கென்றிட்டு
ஊணவே மானதமாய்ப் பூசைபண்ணி
உத்தமனே மானிடர்க்குக் கட்டித்தீரே. (62)

தீர்க்கமுடன் மானிடர்க்குக் குளிசங்கட்டத்
திருவான லட்சுமியும் வசமாய்நின்று
மார்க்கமுடன் சந்தான பாக்கியங்கள்
வரிசையாய்த் தான்கொடுத்து மகிழ்ச்சியாக்கி
ஏர்க்கவே இல்லறத்தோ டிருக்கச்செய்து
எல்லோர்க்குந் தானவளா யிருப்பாள்கண்டாய்
ஆர்க்குமிவள் நல்லவளா யருளே தங்கி
அதிகசெல்வப் பதியாக்கி வைப்பாள்காணே. (63)

காணப்பா யின்னமொரு கருமானங்கேள்
கைகண்ட ஆடசமுக் கோணமிட்டு
ஊணப்பா ஓங்காரத் துள்ளேமைந்த
உத்தமனே சிங்கிலியும் சிங்கென்றிட்டுத்
தூணப்பா வென்றசதா சிவனையெண்ணித்
தன்னினைவை யோர்நினைவாய்த் தங்கவைத்துத்
தோணப்பா மானமதாய்ப் பூசைபண்ணிச்
சுத்தமுடன் மானிடர்க்குக் கட்டித்தேறே. (64)

தேரப்பா யெந்திரத்தைக் கட்டினக்கால்
தீர்க்கமுள்ள ருத்திரன்றன் கடாட்சத்தாலே
வீரப்பா கொண்டதொரு தோஷமெல்லாம்
விட்டகன்று தேகமதில் வினைநில்லாது
சேரப்பா அவனிடத்தில் ஞானசோதி
நின்றுவினை யாடுமடா நிசமாம்வித்தை
ஆரப்பா அறிவார்கள் பஞ்சசத்தி
அவர்களுட திருநடனத் நாட்டுந்தானே. (65)

தானாக யின்னமொரு சித்துமார்க்கம்
தன்மையுடன் சொல்லுகிறே னுண்மையாகக்
கோனாக அறுகோணம் நன்றாய்க்கீறிக்
குறிப்புடனே நடுமையம் விந்துசாத்தி
ஊனாக விந்துவோங் காரமிட்டு
உத்தமனே ஓங்காரத் துள்ளேகேளு
நானாக வங்கிலீவங் கிட்டுக்கொண்டு
நன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணே. (66,

பண்ணப்பா மானதமாய்ப் பூசைபண்ணிப்
பத்தியுட னெந்திரத்தைக் கட்டித்தாக்கால்
விண்ணப்பா நிறைந்தமயேஸ் பரியிருலே
மெய்நின்ற தோஷமெல்லாம் விலகிநல்ல
உண்ணப்பா வாசியது உறுதியாகும்
உத்தமனே தேகமது வலுவுண்டாகும்
கண்ணப்பா தான்றுலக்கிக் கருணைதங்கும்
கருணையுடன் சிவயோகங் கருத்தொன்றாமே. (67)

ஒன்றாடச் செய்தியைத்தான் சொல்லக்கேளு
உத்தமனே விந்தெழுதி விந்துக்குள்ளே
நன்றாட ஓங்கார மதனுட்போட்டு
நாட்டமுடன் ஓங்காரத் துள்ளேமைந்தா
நின்றாட அங்கிலிஉங் கென்றுசாத்தி
நேமகனே மானதமாய்ப் பூசைபண்ணிச்
சென்றாட யெந்திரத்தை மாணிடர்க்குத்
தெளிவாகக் கட்டினதாற் றீர்க்கமாமே. (68)

தீர்க்கமென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு
திருவாகும் பராபரியின் செயலுண்டாகும்
மார்க்கமுடன் சனபவுசு மக்கள்சூழும்
மகத்தான யோகமுடன் வாகனங்கள்
சேர்க்கைபல கழனிநவ தானியங்கள்
சேங்கன்று பசுமாடு சிலதுண்டாகும்
ஆர்க்குமே அவனிதனி லதிகமேன்மை
அன்பான மனோன்மணியா ளருள்தன்றாலே. (69)

அருளான கருமானஞ் சொல்லக்கேளு
அங்கமுடன் நவகோணம் நன்றாய்கீறிப்
பொருளான நடுமையம் முக்கோணத்திற்
பூரணமாய் விந்தெழுதி விந்துக்குள்ளே
உருவான ஓங்கார மதனுட்சாத்தி
உத்தமனே ஓங்காரத் துள்ளேகேளு
திருவான செயலதனிற் சிங்சிங்கென்று
சித்தமுடன் தானெழுதத் தீர்க்கமாமே. (70)

தீர்க்கமுடன் சக்கரத்தை முன்னேவைத்துச்
  சிவசிவா மானதமாய்ப் பூசைபண்ணி
மார்க்கமுடன் மானிடர்க்குக் கட்டினுக்கால்
  வஞ்சனைகள் பில்லிமுதல் யேவல்தோஷம்
மூர்க்கமுள்ள கண்ணேறு கிரகதோஷம்
  முன்னாளிற் செய்ததொரு பாவமெல்லாம்
சேர்க்கையுள்ள நவக்கிரக குளிசத்தாலே
  தீருமடா கலைநின்ற நிலையைப்பாரே. (71)

நிலையறிய மாட்டாம லுலகமாந்தர்
  நெடுந்தூரஞ் சென்றுகுரு பரனைத்தேடி
மலையேறிச் சடைவளர்த்து மதியுங்கெட்டு
  வாழுமிடந் தனையறியா மாண்பர்தானும்
தலைகெட்ட நூல்போலே பின்னலாகித்
  தத்தளித்துக் கெட்டவர்கள் கோடாகோடி
அலையாம லடிதொழுது முடிமேலேறி
  அம்பரத்தைக் கண்டுநட மாடினாரே. (72)

ஆடியதோர் பரனுட னாத்தாளாட
  அண்டரொடு தேவர்முதல் ரிஷிகளாடப்
பாடியதோர் தோத்திரஞ்சே கண்டிநாதம்
  பருமணியுஞ் சங்கினொலி தீபதூபம்
தேடியதோர் சிவகணங்கள் தாளம்போடச்
  சிலம்பொலியுங் கலகலென்னச் சிவனுமாட
நாடியதோர் பூரணமும் நானுமாட
  நன்மையுடன் நானுட னீயுமாடே. (73)

நீயென்ற நிலையத்துச் சொல்லுமற்று
  நினைப்பதுவு மறப்பதுவு மிரண்டுமற்று
மாயையென்ற மயக்கமொடு இயக்கமற்று
  வஞ்சனைகள் பொய்களவு மாயமற்றுத்
தாயென்றும் பிள்ளையென்றும் பெண்டென்றும்
  சங்கையென்ற வுறவற்றுத் தய்வுமற்றுக்
காயென்றும் பழமென்றுங் கர்மமற்றுக்
  கருணையுடன் றானிருந்து துலங்குவாரே. (74)

அலங்கியதோர் பூரணமாங் கலைக்கியானத்தைச்
சொல்லறிவுக் கறியாதார்க் கீயவேண்டாம்
இலங்கியதோர் சிவயோகி மவுனயோகி
இல்லறத்தோ டேவாழும் பரமயோகி
விலங்கியதோர் தபோதனருக் கீயவேனும்
விடந்தனையே தருங்குறும்பர்க் கீய்ந்தாயானால்
கலங்கிமனம் தான்வெந்து மயங்குமென்று
கமலசாஸ் பதியறியக் கடாட்சித்தேனே. (75)

மேகத்திற்கு

சித்தான மந்திரமாஞ் சித்துஞ்சொன்னேன்
சிவசிவா மூலிகையின் சித்தைக்கேளு
மூத்தான மூலியடா குப்பைமேனி
முதன்மையாம் மிளகுடனே கொண்டாயானாற்
சத்தான சாமுடனே யீளைகாசம்
சருக்காகத் திருமடா சத்தமாக
வித்தான மூலமதில் மனதைவைத்து
வேதாந்தக் குருபதியில் மேவிச்செல்லே. (76)

செல்லப்பா பட்டையுடன் வெள்ளைப்பூடு
திறமான மிளகுடனே மூன்றுங்கூட்டிக்
கொல்லப்பா தானரைத்துக் கொண்டாயானாற்
குடலமென்ற கிராந்திமுதற் சொறிசிரங்கு
மல்லப்பா வயிற்றுவலி குன்மரோகம்
வாதபித்த சிலேத்துமநோய் வருவதெல்லாம்
வெல்லுமப்பா மகோதரமும் பெருநோயெல்லாம்
விட்டகன்று போகுமென்று விளம்பினேனே.

குட்டநோய்க்கு

விளம்பெறவே யின்னமொரு கருமானங்கேள்
வெள்ளெருக்கின் வேரினுட பட்டைவாங்கி
வளம்பெறவே ஊடுசலின் பட்டைகூட்டி
வாட்டமுட னிருவகையு மாவதாக்கி
உளம்பெறவே வெருகடிமா தேனிற்கொள்ள
உத்தமனே பதினெட்டுக் குட்டந்தீரும்
தளம்பெறவே விஷகடிக ளெல்லாந்தீரும்
தன்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணே

பண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
பத்தியுடன் பூரணத்திற் பதிவாய்நில்லு
கண்ணப்பா தானறிந்து மனக்கண்கொண்டு
கருணையுடன் சாஸ்திரத்தைக் கனிவாய்ப்பாரு
உண்ணப்பா வாசியிற்சென் றிருந்துகொண்டு
உத்தமனே சிவயோகம் உன்னிப்பாரு
விண்ணப்பா தானோக்கி மனக்கண்கொண்டு
வேதாந்தச் சுழிமுனையில் மேவிநில்லே. (79)

நில்லந்த நிலைதனிலே நின்றுகொண்டு
நேசமுடன் வாசியுட நிலையைப்பற்றிச்
செல்லந்தப் பூரணத்தில் நின்றாயானாற்
சிவசிவா சிலம்பினுட நாதங்கேட்கும்
கொல்லந்த நாதமடா குமரிகற்பம்
குறியறிந்து கற்பமதைக் கொண்டாயானால்
உல்லந்த மானசிவ சோதிசூட்சம்
உறுதியுள்ள சூட்சமடா வுரைக்கொணாதே. (80)

ஒன்றான மனதையல்லோ காக்கவேணும்
உத்தமனே சற்குருவைக் காணவேணும்
கண்ணான வெளியல்லோ பிர்மரூபம்
கற்பமுண்டு பூரணத்து ளிருக்கவேணும்
பண்ணான பலநூலைப் பார்க்கவேணும்
பரமான யோனைதயிலே பணியவேணும்
விண்ணான அமுர்தத்தை யுண்ணவேணும்
வேதாந்த சாஸ்திரத்தி னுண்மைகேளே. (81)

உண்மையென்ற சிவயோகம் சொல்லக்கேளு
உறுதியுள்ள சிவகலை நாதனப்பா
வெண்மையென்று வந்ததுதான் அகாரபீடம்
வேதாந்தக் குருவிருந்தாற் சுழினைக்குள்ளே
தன்மையென்று தானிருந்த உகாரபீடம்
சார்ந்தங்கு தானிலங்கும் மகாரபீடம்
நன்மையென்ற குருபரன்றான் வெளிபோற்காணும்
நாதாந்தம் பெற்றவர்கள் சாதித்தாரே. (82)

சாதிக்கும் சிவயோகந் தன்னைக்கேளு
சங்கையுடன் சொல்லுகிறே னப்பாசிக்க
வேதிக்கும் அன்னமதை வயிறாயுண்ணு
வெண்ணீருங் கால்வயிறு மதுபோற்காலே
பேதிக்கும் பொருமலும் அபானவாயிற்
பிலக்கவே யிறுக்காதே ஜலத்தைமைந்தா
போதிக்கும் படுக்கையடா யிடக்கைகீழாய்ப்
புறனாம லுறங்குசா தகந்தானென்னே. (83)

எண்ணப்பா விந்துதனை யிகழவேண்டாம்
எடுத்ததெல்லாம் மனதாசை கொள்ளவேண்டாம்
நண்ணப்பா அபினாக்குக் கொள்ளவேண்டாம்
நாதாந்தக் கற்பமதைக் கொள்ளும்போது
உண்ணப்பா லகிரியிலே வாழவேண்டாம்
உண்மையென்று கஞ்சாவை புணாசவேண்டாம்
முன்னப்பா நாதகற்பங் கொண்டதெல்லாம்
மோசம்வந்து போகாம லுத்தப்பாரே. (84)

உத்திகொண்டு யிப்படியே நடந்தாயானால்
உண்மையென்ற சிவயோகம் உரைக்கும்பாரு
புத்திகொண்டு சரியையொடு கிரியையோகம்
பூரணமாய் ஞானமொடு நாலுமைந்தா
வெத்திகொண்ட சரியையென்ற குணத்தைக்கேளு
வேதாந்தத் தேகமப்பா நாதத்தாலே
முத்திகொண்ட வாயுவுட விசையினாலே
மூன்றுலக மூண்டாச்சு சரியைவாழ்வே.

சரியையிலே கிரியையுட குணத்தைக்கேளு
தயவான விந்தினாற் றேய்வும்வாய்வும்
உரிசையிலே சாதிலிங்க பீடமாச்சு
உண்மையென்ற யோகத்தி னுறுதிகேளு
வரிசையாய் விந்துவுட நாதங்கட்டி
மகத்தான தத்துவமாய்த் தேகமாச்சு
கரிசனமாய் ஞானத்தின் கருவைக்கேளு
கருணையுள்ள கணபதியுந் தெய்வந்தானே.

தானென்ற கணபதியே பஞ்சபூதம்
　　தன்மையுட னேபிறப்பால் நின்றஞானம்
ஊனென்ற கணபதியே ஆண்பெண்ணாகி
　　உறுதியுடன் நடனமொடு பிண்டமானார்
நானென்ற கணபதியே குருவாமென்று
　　நன்மையுடன் பூரணதனைக் கண்டோரில்லை
வானென்ற கணபதியே வகையேழாகி
　　மகத்தான யோனிநால் தோற்றந்தானே. (87)

தானென்ற ரவிமதியே சுழிலைக்குள்ளே
　　தன்னாட்டம் விண்ணாட்டம் விசையிறாட்டம்
கோனென்ற நாட்டமதைக் குறியாயெண்ணிக்
　　குவிந்துநின்ற நாதமதால் வாசியோகம்
வானென்ற ஞானத்தின் யேககங்கேளு
　　மகத்தான நந்தியல்லோ மூலத்தியிற்
றேனென்ற திசைநாத வடியாய்நிற்கும்
　　சிவசிவா மூக்குநுனி தெளிவாய்ப்பாரே. (88)

தெளிவான யோகத்தின் குணமுஞ்சொன்னேன்
　　சிவசிவா முப்புரத்தின் செயலுஞ்சொன்னேன்
ஒளிவான புருவமையத் தமருக்குள்ளே
　　உண்மையென்ற வாசிசிவ யோகஞ்சொன்னேன்
அழியாத பேரின்ப மோட்சஞ்சொன்னேன்
　　அருள்பெருகுங் கலைக்கியான கற்பஞ்சொன்னேன்
வெளியாமல் நிற்பதற்கு நிலையுஞ்சொன்னேன்
　　நிலையறிய ஞானபூ ரணஞ்சொன்னேனே. (89)

சொன்னதொரு சூட்சமென்ன ஞானமென்ன
　　சுகமான வாசியென்ன யோகமென்ன
விண்ணதிலே கண்டதொரு சோதியென்ன
　　வேதமென்ற நாதாந்த விலாசமென்ன
ஒண்ணதிலே ரண்டென்ன ஆண்பெண்ணென்ன
　　ஒருகோடி மந்திரத்தி னுண்மையென்ன
கண்ணதிலே கண்டதெல்லாம் மாயாமாயம்
　　கருவறிந்து பார்த்ததெல்லாங் கதையாய்ப்போச்சே. (90)

பாச்சென்று நினையாதே தன்னைப்பாரு
பூரணமுங் காரணமும் பொருந்தியொன்றாய்
நீச்சென்ற நிலையறிந்து நீந்திறுக்கால்
நெடுந்தூரஞ் சென்றுவிளை யாடலாகும்
மூச்சென்ற வாசியினால் முழுங்குஞ்சத்தம்
முன்னேறிப் பாயுதடா முதுகண்வெள்ளம்
ஆச்சென்ற வெள்ளமடா இடைகாலூடே
அமந்துவருங் கெங்கையைநீ அறிவாற்கொள்ளே (91)

அறிவான அறிவதனால் முக்கண்பார்த்து
ஆதியென்ற மணியதனை அங்கையுண்டு
குறியான அரவுபட மணியையைமந்தா
குணமறிந்து மனம்பொருந்திக் கூர்மையாக
நெறியாகத் தானிருந்து நெருடிறுக்கால்
நேரறிந்து சாரையொன்று கீழேபாயும்
சரியாகப் பாய்கிறதோர் வேலைபார்த்துச்
சங்கையுடன் தன்வாயா லருந்திவாங்கே. (92)

வாங்கிமிக வாசியினா லருந்திவாங்க
மகத்தான நாதமென்ற வழலைப்பாம்பு
ஓங்கியே வழியாக முதுகண்ணாலே
ஓடிவரு மங்கோ முருஞ்சிக்கொள்ளும்
பூங்கமல மாதுபதம் பணிந்துபோற்றிப்
பூரணமா யெந்நாளும் பூசித்தாக்கால்
ஆங்கெதிகொண் டெந்நாளும் வாழ்வாய்மைந்தா
அன்பான வாலைபத மறிவாய்ப்போற்றே. (93)

போற்றியே யிப்படியே மவுனமூலம்
பூரணமாய்க் கண்டவர்க ளொருவரில்லை
வாற்றியே மவுனத்தை யாருஞ்சொல்லார்
மகத்தான குருச்சொல்ல அறியவேனும்
நாற்றிசையும் வெற்றிகொங் கணர்தான்வந்து
நலமான கடைப்பிள்ளை யென்றமைத்தார்
சாத்தியதோ ருபதேசப் படியோநாளும்
சங்கையுடன் ஓம்அங்உங் மங்கென்றங்கே. (94)

அஞ்செழுத்தும் மூன்றதிலே அடங்கிப்போச்சே
அரகரா மூன்றுமோங் காரமாச்சு
விஞ்செழுத்தை அறியாத நெஞ்சத்தோரே
விட்டெழுத்துத் தொட்டெழுத்தும் வினவிப்பார்க்கும்
பஞ்செழுத்தைப் பார்த்தவரே கிரியாயோகம்
பார்தனிலே மேலான ஞானியாவான்
செஞ்சொல்முறை வேதமெனக் கண்டேனையா
செம்மையுடன் ஞனிருந்து சிவமேயெண்ணே. (95)

எண்ணவே இடகலைதான் அகாரமாச்சு
இன்பமுள்ள பிங்கலைதான் உகாரமாச்சு
உண்ணவே பிழினையது மகாரமாச்சு
உத்தமனே கண்ணொளிதான் விந்துநாதம்
முன்னமே ஆதியிலே மூலத்தசத்தம்
மூவுலகந் தானறிந்து மூலத்தையா
சொன்னபடி விழிப்பறிந்து பார்த்தாயானற்
சோதிசிவ சூட்சமடா சொல்லக்கேளே. (96)

கேளப்பா கண்டதெல்லா மழிந்துபோச்சு
கேள்வியென்ன ஒளிவெளியே நிசமதாச்சு
வாளப்பா அரூபமென்ன சுழினைகாந்தி
மக்களே சுழினையிலே மனதையூணு
வேளப்பா நிர்க்குணமே துவாதசாந்தம்
மெய்யான நிற்குணமே மூலசூட்சம்
ஆளப்பா நிர்க்குணமே ஒளிதான்தேகம்
அப்பனே சத்திகடு ஆடும்பாரே. (97)

ஆடுமடா ஓங்கார வாளின்கூர்மை
அரகரா வேதாந்த மானதேகம்
நாடுமடா பூரணத்தை நாடிநாடி
நலமான சுழினையிலே நாடிப்போச்சு
ஓடுமடா ஓட்டப்பூரணத் திரட்டம்
உத்தமனே அண்டபகி ரண்டத்தாட்டு
பாடுமடா ஓசைபரா பரையின்நாதம்
பத்திகொண்ட சித்தமதின் மோட்சம்பாரே. (98)

பாரப்பா மோட்சஞ்சின் மயத்தைக்கண்டாற்
பதிவான சிவயோகம் ஞானமாச்சு
தேரப்பா ஞானியென்றால் ஜடத்தைப்பேணான்
சிவசிவா ஜீவனிலை யறியமாட்டான
காரப்பா சித்தன்கற் பத்தோடொன்றிக்
கைலாச பாசமதாய்க் கருதிவாழ்வான்
நேரப்பா கற்பமதை யுண்டுதேறி
நிசமான வாசியிற்சென் றிருப்பான்றானே. (99)

தானான தானவனாய் நின்றுவாழ்வான்
சதாகோடி நாளுமொரு நாளாய்நிற்பான்
ஊனான காயாதி சற்பமெல்லாம்
உண்டுகரை யேறியவ னுறுதியாவான்
வானான அண்டபகி ரண்டமெல்லாம்
வரைகடந்து திரையகற்றி வந்துசேர்வான்
தேனான மொழியுடையா ளமுதுபானம்
தினந்தோறுங் கொண்டவனே சித்தனாமே. (100)

ஆமப்பா வாலையுட திட்சைதன்னை
அருள்பெருகச் சற்குருவி னிடமேகேட்டு
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் பூரணியைப் பூசைபண்ண
நாமப்பா அவளாகு மவள்நானாகும்
நாட்டமுட னறுபதுக்குட் சித்தியாகும்
ஓமப்பா அறுபதுக்குள் மேலேமைந்தா
ஊனுறுதி காலுறுதி உழன்றுபோமே. (161)

உழன்றுசெடம் போகாமற் காத்தோன்சித்தன்
உண்மையென்ற வாசிகண்டா லவனேயோகி
குழன்றுமனம் போகாமற் காத்தோன் ஞானி
குறியறிந்து கொண்டவனே கெவுனியாகும்
அழன்றுசெகந் தனைமறந்து அகந்தைபேசி
அம்பரத்தைக் காணாமல் ஐயோவென்று
தழன்றுகெதி அறியாத மூடரோடே
தானிருந்து பேசாதே தன்னைக்காணே. (102)

காணப்பா பூரணமாங் கலைக்கியானத்தைக்
கருத்தறவே தான்பார்த்துக் கலைகொண்டேறி
ஊணப்பா போம்வாய்வு இவமதாகும்
உள்ளுணர்ந்து வாய்வதுவே சத்தியாகும்
பேணப்பா பெண்ணையுமே ஒன்றுபண்ணிப்
பிண்டமுதல் அண்டவரை கொண்டாயானாற்
பூணப்பா பொற்கமலந் தன்னிலேதான்
பூரணமா மமுதமுடம் பொங்கும்பாரே. (103)

பாசப்பா பதியறிந்து புருவநதேகிப்
பதிவான கண்ணின்மலர் கண்ணுறலேதான்
தேசப்பா வனிந்தொழுகுஞ் செந்தேன்தன்னை
நிசமாக அறுவளவு கொண்டாயானால்
ஆசப்பா உனக்கீடு ஆருமில்லை
அமுதாசந் தான்கொடுத்த ஆத்தாள்தன்னை
வீரப்பா கொண்டுமதி கெட்டாயானால்
விண்ணிடிந்து தலைதெறிக்கும் மெய்தான்பாரே. (104)

மெய்யாகச் சொல்லுகிறேன் மெய்யும்பொய்யும்
விளங்குதடா உலகத்தி லதினால்மைந்தா
பொய்யாகப் போகுதடா மனிதர்வாழ்வு
பொய்யகற்றி மெய்யாக விருந்தானால்
கையாறக் கண்டபலன் மெய்யாய்நிற்கும்
கண்ணறிந்து பாவமதைச் செய்யவேண்டாம்
ஐயாகே ளறிவுவந்து பாவஞ்செய்தால்
அவன்தலையைக் காக்குமடா அறிவாய்க்கேளே. (105)

கேளப்பா அஞ்சான வயதுதன்னிற்
கெருவமுடன் செய்தவொரு பாவமெல்லாம்
ஞாளப்பா தாயிடமே சேருங்கண்டாய்
சத்தமுடன் பத்தான வயதுதன்னில்
வேளப்பா செய்தவொரு பாவமெல்லாம்
மெய்யாகத் தகப்பனிடம் மேவும்பாரு
ஆளப்பா பதினஞ்சாம் வயதுதன்னில்
அவன்செய்பா வங்குருவுக் காகுங்காரே; (106)

காக்குமடா பதினாறு வயதுதன்னிற்
　　கருத்துறவே செய்தவொரு பாவந்தானும்
ஏர்க்குமடா தெய்வமது காத்துக்கொள்ளும்
　　என்மகனே பதினாறு வயதுக்கப்பால்
தீர்க்கமுடன் செய்தவொரு பாவமெல்லாம்
　　சிவசிவா செய்தவனைக் காக்கும்பாரு
பார்க்கமுட னிதையறிந்து அறிவுகொண்டு
　　மகத்தான புத்தியினால் வாழ்வாய்பாரே. (107)

பாருமப்பா பகுத்தறிவு வந்தபோது
　　பாழான கொடுமைகளைச் செய்வாயானாற்
சேருமப்பா பாவமெல்லா மவனைக்காத்துச்
　　சீக்கிரத்தில் நரகமதைச் சேர்வானையோ
காருமப்பா சத்தியத்தைக் காக்கவேணும்
　　கருணையுடன் செபதவங்கள் செய்யவேணும்
நேருமப்பா நிலையறிந்து குருவைத்தேடி
　　நித்தியமுஞ் சுழிமுனையை நேர்ந்துநில்லே. (108)

நில்லப்பா வாசிதிரு வாசியேறி
　　நின்றவொரு பூரணமாங் கலைக்கியானத்திற்
செல்லப்பா சென்றிருந்து வாசியோகம்
　　தீர்க்கமுடன் நிலையறிந்து கொண்டாயானால்
அல்லப்பா உள்வெளியாய் நின்றவாசி
　　அடங்குமடா யிருதயத்தி லதுதான்போதம்
சொல்லப்பா சொல்மொழியை மறவாமற்றான்
　　சுருதியுடன் நாதமதில் வாழ்வாய்காணே. (109)

காணவே யின்னமொரு சூட்சந்தேரு
　　கருணையுடன் வாலையைநீ பூசைபண்ணி
தோணவே யெச்சாதி யானாலென்ன
　　அந்தரமாய் நின்றவொரு வாலைதன்னைப்
பூணவே பூரணமாய்த் தொழுதுபோற்றிப்
　　புத்தியுடன் மனதுவா டடங்குகொண்டு
ஊணவே அமுதரச வர்க்கமீய்ந்து
　　உகந்தமன மெருகிடநீ பூசைபண்ணே. (110)

பண்ணப்பா வாலைபதம் பூசைபண்ணிப்
பத்தியுடன் தானிருந்து வரும்போதையா
வெண்ணப்பா தன்னையுமே யறியுங்காலம்
பிரியப்பி ராட்டியரா பரணம்பூட்டி
நண்ணப்பா சுகந்தமுடன் கனபமீய்ந்து
நாதாந்தப் பூரணிக்குந் தாம்பூலங்கள்
உண்ணப்பா தாயீய்ந்து மகிழ்ச்சியாக
உத்தியுடன் குதமதில் ரசத்தைவாங்கே. (111)

வாங்கியே பூரணமாய்ப் பூசைபண்ணி
மாதவமாய்ச் சிவயோக வாழ்க்கையாறும்
பூங்கமல மாறுசெயல் அன்றலக்கப்
பூரணமுங் காரணமும் பொருந்தின்றாய்
ஓங்காரக் கம்பமதி லாதியாறல்
உண்மையுட னெக்காலும் உகந்துவாழ்வாய்
சாங்கமதாய் தனையறிந்து சுழியில்நின்றாற்
சதாபோத மானசிவ யோகமாமே. (112)

ஆமப்பா சிவயோகத் திருந்துகொண்டு
அருமையுடன் வாலைபதம் பூசைபண்ணிக்
காமப்பா லமுதாசங் கொண்டாயானால்
கருணையுடன் நாதாந்தத் தேகமாகும்
நாமப்பா சொன்னபடி யறிந்துகொண்டு
நாதாந்தப் பூரணமாங் கலைக்கியானத்தைத்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
தன்மையுடன் பூசித்துத் தன்னைப்பாரே. (113)

தன்னைத்தா னறியாத மூடர்தானும்
தாரணியிற் பலவேடந் தானேபூண்டு
விண்ணைத்தா னறியாத மூடர்மெத்த
வேணபடி சாஸ்திரத்தை விரும்பிப்பார்த்து
உன்னைத்தா னறியாம லழுன்றுகந்தி
ஊர்வழியே நாய்போலே உறுமிக்கொண்டு
கண்ணைத்தான் விண்ணறிந்து காக்கமாட்டார்
கழுதைகளாக் கண்டாக்கா லடித்துத்தள்ளே. (114)

அடியறிந்து முடிமீதில் நிற்கவேணும்
ஆசைகொண்டு சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
முடியறிந்து மோனநிலை காணவேணும்
முத்திபெறச் சிவயோகந் இருக்கவேணும்
பிடியறிந்து கதிர்மதியிற் சேர்க்கவேணும
பிங்கலையு மிடகலையுந் தெரியவேணும்
வடிவறிந்து வாலைபதங் காணவேணும்
மகத்தான சிவயோக வளமைகாணே. (115)

காணவே பூரணமாங் கலைக்கியானத்தைக்
கருத்தறியா மாந்தருக்கு ஈயவேண்டாம்
தோணவே ஆகாரஞ் சொல்லவேண்டாம்
சுத்தமுடன் வாசிநிலை காட்டவேண்டாம்
ஊணவே ஆதியந்தப் பொருளைநீயும்
உற்றிருந்து ரகசியங்கள் பேசவேண்டாம்
பூணவே தன்னறிவைத் தானேகண்டு
புத்தியுடன் சித்தமதாய்ப் பொருளைப்பாரே. (116)

பாரப்பா பொருளறிய வேணுமென்றால்
பதிவாக சற்குருவைக் காக்கவேணும்
நேரப்பா நினைவையொரு நினைவாய்வைத்து
நிலைபெறவே தலமறிந்து நீயுநன்றாய்ச்
சாரப்பா சார்வறிந்து குருவைமேவிச்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
மேரப்பா அண்டாண்ட முடிவிற்சென்று
மெய்யான அக்கினியில் மேவிநில்லே. (117)


நில்லப்பா அக்கினியே வாசமாகி
நேமமுடன் நித்தியா னுஷ்டானங்கள்
செல்லப்பா விடியவொரு சாமந்தானும்
சிவசிவா வேளாரிஷி யானவேளை
நல்லப்பா அவ்வேளை தனியெழுந்து
நாட்டமுட னுதார தியானம்பண்ணி
அல்லப்பா உதயாதி உச்சிநேரம்
அனுசரிப்பாய் சிவயோகம் அன்பாய்த்தானே. (11

தானேதான் அவனுமாய் நிற்கவேணும்
　　தன்மையுடன் குருபதியிற் சார்வேணும்
வானேதான் கெதியெனவே வாசிபோதி
　　மந்திரபஞ் சாட்சரத்தில் மனதுபூட்டு
கோனேதான் தானாக அந்திசந்தி
　　குறிபதித்து ஆதார லிங்கமின்று
ஊனேதான் தானாக உறுதிபெற்று
　　ஞானமிக்க பட்டணத்தி லேமிக்கமுற்றே. (119)

முத்தான பூரணமாம் கலைக்கியானத்தை
　　முடியவுரைத்து பன்னிரண்டு பத்தும்சொன்னேன்
பத்தான பயனைதா னறிந்துகொண்டு
　　பன்னிரண்டு பத்தையுங் குறுக்கிமைந்தா
சுத்தான சோதியென்று அறுபதுக்குட்
　　சுருக்கிவைத்துச் சூஸ்திரத்தைச் சுகமாய்ப்பார்த்துச்
சித்தான சித்தெடுத்து வெத்திகொண்டு
　　சிவசிவா சிதம்பரத்திற் றெளிவாய்முற்றே. (120)

கடைப்பிள்ளை கலைக்கியானம் 120

முற்றிற்று.



மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ஙு. சா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

குருதுணை.

[illegible]

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

ஞான திட்சாவிதி 16.

ஆதியந்த மூங்கடந்த வெளியுந்தாண்டி
அகண்டசத்தி தானந்தத் தப்பாஞ்ஞானம்
ஜோதியந்த மாகியெந்தும் நிறைந்தேதானாய்
ஒளியான கொங்கணவர் பாதம்போற்றி
நீதியந்த ஞானமாந் திட்சைதன்னை
நிச்சயமா யோதிவிரா மயத்திறுள்ளே
விதியந்த மானஅறு கோணத்துக்கும்
விநாயகனும் முன்னிருந்த விதியேகாப்பு.

ஆனந்த மானசிவ நந்திமூலர்
அருள்பெருகுங் குருமுனிகோ ரக்கநாதர்
தானந்த மாமச்சர் கொங்கணர்க்குத்
தாயான போகரிடைக் காடரோடு
வானந்த மாகும்புண் ணாக்குச்சித்தர்
வாசமுனி கமலமுனி சண்டிகேசர்
கானந்த சுந்தரா னந்தர்பிரமர்
கயிலாசச் சட்டைமுனி பாதந்தானே. (1)

தானென்ற கருவூரார் கொங்கணர்க்குச்
சமர்த்தான உரோமருட பாதந்தன்னை
நானென்ற ஆணவமும் மலங்கள்போக்கி
நாயடியேன் சித்திருங்கள் பாதந்தானும்
வானென்ற வெளிகடந்து மவுனத்துள்ளே
வைத்துபதே சித்ததொரு திட்சைதன்னைப்
பானென்ற இரவிமதி சுழினைமுன்றிற்
பாடுகின்றே னறுமுக மஞ்சேசிற்குவே. (2)

அஞ்செழுத்தி லாறான சூட்சந்தன்னை
　　அறைகிறே னன்புடைய அறிவுள்ளோர்க்குப்
பிஞ்செழுத்தாய்ப் போகாமற் பிஞ்சிற்பூத்துப்
　　பிலமாகி யுட்புகுந்து தீட்சைகண்டால்
வஞ்செழுத்துப் புருவமதி லிருந்தவுண்மை
　　மவுனமுட னமையுரு வாகிவந்து
கொஞ்செழுத்தாய் நின்றபொருள் வெழுத்துட்பாய்ந்து
　　கும்மென்ற இருள்நீக்குஞ் சுவாசந்தானே. (3)

வாசமென்ற சுவாசமதாய் வந்தமூலம்
　　வலமிடமாய் மாறியெழுந் தந்தத்துள்ளே
நேசமென்ற பன்னிரண்டாய்ப் பிரிந்தாலும்
　　நேர்மையி லெட்டேதா லாகிநின்று
பாசமென்ற எட்டுள்ளாய்ப் பிரிந்தாலும்
　　பரமாகி அவ்வெளியிற் பாய்ந்துவோடும்
வீசமென்ற எழுத்தாலே எட்டிற்சேர்ந்து
　　விண்ணொளியைக் கண்ணொளியால் மேவிக்காணே. (4)

காணப்பா யிதுவழியே தீட்சைசொல்வேன்
　　கல்லென்ற நந்திதிரு மூலர்தீட்சை
பூணப்பா போகருட தீட்சைசங்கம்
　　பொருந்துமுக மொன்றாகி ரெண்டிற்கேளு
நாணப்பா குருமுனிக்குத் தீட்சைஐவாம்
　　ஞானமுள்ள கொங்கணர்க்குச் சுழிமூன்றாகும்
பேணப்பா சட்டைமுனி டகாரத்தானைப்
　　பேறுபெற்றார் மூன்றுமுகந் தன்னிற்கேளே. (5)

கேளடா சுந்தரற்கு ணைகாரமாகிக்
　　இருவையதருந் தகாரமடா சண்டிகேசர்
ஆளடா கருவூரார் பகாரத்துள்ளே
　　ஆகின்றார் காளாங்கா முகத்துக்குள்ளே
வாளடா பிரமமுனி மகாரத்துள்ளாய்
　　வாழுகின்ற ரோமரிஷி ரகாரத்தானைப்
சூளடா அவ்வெளியில் அகாரஞ்சாயச்
　　சூட்சமாய் நின்றபஞ்ச முகத்துட்பாரே. (6)

பாரப்பா அஞ்சான முகத்துக்குள்ளே
    பதிந்திருந்த லகாரமடா புண்ணாக்கிச்சர்
நேரப்பா வகாரத்தி லிடைக்காட்டார்தான்
    நேரான கோரக்கர் மகாரதீட்சை
மாரப்பா ஆறான முகத்துக்குள்ளே
    மவுனவெளி யுள்நிறைந்த வாசனுக்குத்
தேரப்பா றகாரமடா தீட்சையாகி
    செழுங்கமல முனிநாதா யிளமைதானே. (7)

இளமையென்ற கயிலாச ரமுகன்னிக்கு
    எனைஞ்சேர்த்தா னிருசுழியில் நாதமாக
பளமையென்ற ஆறுமுகச் சடாட்சரத்துள்
    பதிந்திருந்தார் மும்மூன்று மறுகோணத்துள்
களமையென்ற கோணத்து வெளியில்நின்றுச்
    கண்டுகொண்டு தெரிசிப்பாய் தன்னுட்டாலும்
உளமையென்ற பதினெட்டின் ஞறவுமாக
    உரைத்திட்டேன் தீட்சைபதி னெட்டுந்தானே. (8)

தானென்ற பதினெட்டுள் பதினைஞ்சொன்னேன்
    சாற்றவில்லை மூவருக்குக் ககாரந்தானுய்
தேனென்ற தீட்சையடா சாங்கமெல்லாம்
    திறமாக மூவருட தீட்சைகூட்டிப்
பானென்ற ரவிமதியாம் சுழினைமூன்றிற்
    பாயுமே அதுமூவா யிரமுஞ்சேர்ந்து
வானென்ற சுழிமுனையி லொன்றாய்க்கூடி
    மாசற்ற வெளியினுள்ளே சோதிகாணே. (9)

சோதியொளி கோடியையா ரவியோகோடி
    சூழமதி வன்னியுமோ கோடாகோடி
ஆதிபரை யாகின்ற ஒளியைத்தன்னுள்
    ஓங்காரைக் காணுதற்குத் தீட்சையானும்
ஓதினேன் பதினெட்டும் மூன்றுக்குள்ளே
    ஒன்றான பதினெட்டைத் தெரிசிக்கத்தான்
நீதியாய்ச் சமாசமாய் மவுனத்தாக்கி
    நிலைத்தநீ தெரிசிக்கக் காணுவாயே. (10)

காணுவாய் பதினெட்டின் தாயேதன்னைக்
காணுதற்குக் கண்கூசுங் கண்டாயானால்
தாணுவாய் நிறைந்தசிவ யோகியாவாய்
தாயுன்னைத் திருப்பியவர் கண்டாலையா
ஆணுவாய் நின்றமல மாசறுத்து
ஆணுருவாய் நின்றமெய்ஞ் ஞானிபோல
பேணுவாய் பராபரையும் பதினெட்டொன்றாய்ப்
பேசினதால் தீட்சைவிதி யானவாறே. (11)

வாறான தீட்சையுரைத் திட்டதாதர்
மனமகிழ வந்தகுரு தேசிகாநீ
ஆறான வரையிலுள்ளோ பதினெட்டொன்றாய்
அங்கவோ தாயாகக் காட்டினப்போல்
பேறான தீட்சைபதி னெட்டுக்குந்தான்
மிலைத்துநின்ற மூலத்தைப் பேசுவாய்நீ
பாறான வெளிகடந்த சிலம்போசைக்குட்
பாய்ந்துவந்த குருபாதப் பலித்தேனையா. (12)

ஐயனை கடைப்பின்னை யாகியந்த
ஆனதிறத் தெட்டதெல்லா மருளிச்செய்தாய்
துய்யனை பதினெட்டு மூலந்தேரு
சூட்சமிலை அரியெழுத்துக் கெட்டாரென்னடை
மெய்யனை அறிந்துநின் சிங்கென்றோதான்
விளம்புவாய் சாபமதை நீக்கிமைந்தா
தையனை தையலட் சாங்கமெல்லாம்
சுழுனைத்திலே காணுமையா தங்கம்பூணே. (13)

பூணவே பூசைவிதி நாற்பான்மூன்றிற்
பூரணமாம் வாலையருள் கற்பந்தன்னைப்
பூணவே யான்சொன்னேன் பூண்டுகொண்டு
புலத்தியன்றன் பதப்பிணைந்து தீட்சைதன்னை
பூணவே அண்டாண்டத் தித்தியெல்லாம்
பொருந்திநின்றே புன்னாக்குள் ளாடுமையா
பூணவே சிவயோக ஞானியென்னைப்
பூதலமெல் லாம்வணங்கும் புனிதங்காணே. (14)

காணப்பா தீட்சைவிதி கருவாய்ப்பார்த்துக்
கண்டுகொண்டு கரைகண்டோ ரனந்தங்கோடி
ஆணப்பா பிறந்தல்லோ குளிகைகட்டி
அண்டரண்டங் கடந்தவரை தாண்டியேறி
வீணப்பா நிறைந்தசிவ சோதிதன்னை
விராமயமாய்க் கலந்துநின்றோர் கோடாகோடி
வேணப்பா வேணபேர் தீட்சைபெற்று
வெளியேறிச் சுயம்புக்குட் பிச்சைதானே. (15)

தானேதான் சுயம்பில்வந்து பிச்சையேந்தோர்
சதாகோடி நவகோடி கோடாகோடி
வானேதான் வெளிகடந்து வெளியிலப்போ
மாசற்ற பிரமமாங் கோடாகோடி
தானேதான் ஆலயாமற் சூட்சத்தைக்கண்டோர்
தன்னிலேயு முடிவறிந்தோர் கயிலாசத்தை
நானேதான் தீட்சைவிதி பதினாறுமாச்சு
நாயகமாய்ச் சொல்லிவைத்தேன் தீட்சைமுற்றே. (16)

கடைப்பிள்ளை ஞானதீட்சாவிதி 16
முற்றிற்று.

கடைப்பிள்ளை ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அனேகம் ஓலை ஏட்டுப் பிரதிகளிருப்பினும் தற்போது இதிற்சிலவைத அச்சிட்டிருக் கிறோம் மற்றவைகள் அடுத்த பாகத்தில் வெளியிடக்கூடும்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி கோத்திரம் வை. சிவகுருநாத மூப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதி யின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

குருவே துணை.

எட்டாவது

ஜெயமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

திருமந்திர ஞானம் 37.

ஆதியிலே பரப்பிர்ம மொன்றதாகி
  அதிலிருந்தே சகலஜெந்துக் குயிர்தானாகி
சோதிதனைக் காண்பதென்று வெளிதானல்ல
  சுத்தசித்தத் துடன்பார்த்தா லறியலாகும்
சேதியல்ல பலகோடிக் கொருவனுண்டு
  தெளிந்துமனம் விரியாமல் நிலைநிறுத்திப்
பேதியா திருந்துசுழி முனையின் சூட்சம்
  பேரறிவாற் கண்டறிந்தாற் சித்திதானே.

சித்திபெற வேணுமென்றால் விகற்பகற்பம்
  சிந்தையினிற் கோபமொடு குரோதமோகம்
பத்தியதோர் கொலைகளவு மதமாங்காரம்
  பாதகமா மென்றசெய லனைத்தும்போக்கி
சுத்திவாய் நற்செய்கை யுள்ளதெல்லாம்
  கானிலத்துன் பொருளெனவே கொண்டுகொள்ளு
வெத்திபெற விற்பனர்கள் சொன்னநூலை
  மேவிப்பார் மற்றதைநீ பார்த்தால்வீணே. (1)

வீணப்பா வேதமென்றும் சாஸ்திரமென்றும்
  விளம்பினார் வயிற்பிழைக்க மெய்யைப்போலக்
காணப்பா அவைமுற்றும் உலகத்தோர்கள்
  கையாண்டு மெய்சலித்து மாண்டுபோனார்
பூணப்பா அவர்களைப்போல் நீயாகாமற்
  பூரணத்தை நாடிநிற்பாய் புகலக்கேளு
தோணப்பா வொன்றறியா மடையரெல்லாம்
  சோதிநிலை யண்டறிந்தோன் போலப்பேச்சே. (2)

பேச்சப்பா பேசிமாத் தரைமயக்கிப்
பேராசை கொண்டுகாய் போற்றிரிந்து
ஆச்சப்பா ஆச்சரிய மையன்கூத்தை
ஆகாகா வென்றெங்கும் பல்லைக்காட்டி
வீச்சப்பா வீச்சிதெனப் பணம்பறித்து
விருதாவாய்த் திரிவானே கள்ளஞானி
மாச்சப்பா அவர்ருடன் சேர்ந்திடாதே
மகத்தான நிலையைக்கண் டப்பாநில்லே. (3)

அப்பனே ஆதிநிலை யறிவதென்றால்
அரிதரிது கண்டிடுவான் வினையன்றானும்
தப்பிதமி தல்லபரை கனிபழுக்குந்
தான்கனியுஞ் ரசம்போல மனக்கனிந்து
ஒப்புயர்வாம் பருவமதில் விளைந்தவிளைந்து
உத்தமனே வளர்த்திடுவாய் பயிரைநன்றாய்க்
கொப்புகவ ரிலைபூபிஞ் சாகுமுன்னே
கொடுமையுள்ள வேடர்வெட் டிடுவார்பாரே. (4)

பார்த்திடுவா யவர்களுக்கு அஞ்சிடாமற்
பராகுரு தனைமனதிற் றியானஞ்செய்து
சேர்த்திடுவாய் சேனைகளா தாரமாகச்
சேர்ந்திடவே வேடரஞ்சி யோடுவார்கள்
பூர்த்திபடா நினைவுசெய்கை நாட்டம்பாரு
பூண்டிடுவாய் நித்தமொன்று பூடணத்தை
நேர்த்திபடா நின்பெருமை சொல்லப்போமோ
நினைவொன்றித் தெரிவதென்ன வென்றாற்கேளே. (5)

கேளடா தாய்தந்தை கூடும்போது
கெற்பத்தி லுருவான தெக்கவஸ்து
நாளடா நீயறிந்து தொழுதுநில்லு
நலமில்லா மூடருக்குத் தோணுதப்பா
தாளடா காணுதல்கோ டிக்கொருத்தன்
தன்மனத்தி லுலவேவா தெரியவேணும்
வேளடா வேளவினை நீக்கவேணும்
மேன்மைபெற மனம்விட்டால் மோசம்போச்சே. (6)

போச்சப்பா முக்தினதோர் குருக்களெங்கே
போராகேந் சாதியென்ற குலந்தானெங்கே
நீச்சப்பா காலனென்ற சடலமெங்கே
நினைவான நினைவுங்கூ டழிந்ததெங்கே
பேச்சப்பா அடங்கினின்ற விடந்தானெங்கே
பெற்றாள் மாயையென வறியாமற்றான்
கூச்சப்பா கூச்சமிட வுயிர்போமுக்தன்
கூட்டோடே போச்சோசொல் முக்தந்தானே. (7)

சொல்லப்பா அடங்குமிட மாருக்காணார்
சோதிநிலை யறிந்தவனே காண்பான் காண்பான்
நில்லப்பா அண்டத்தச் சியிலேசென்று
நித்தியா னந்தசுக வழிதந்தன்னிற்
செல்லப்பா பவவினைக ளெல்லாம்நீங்கும்
செகசோதி யுன்றனக்கே தோணுந்தோணும்
அல்லப்பா வொன்றுமில்லை யறிவுதானும்
ஆதியந்த மில்லாதற் சோதிதானே. (8)

காணவே இன்னமொரு வசியஞ்சொல்வேன்
கணபதியின் வசியமடா கண்டுதேறு
தோணவே பதினெண்க ணேசனென்று
சொன்னாலும் ஆதிப்பிறந்த திந்தமார்க்கம்
பூணவே நீயிதனைத் தியானம்பண்ணு
பூதலத்தி லிதைமறந்தாற் புகழுண்டாமோ
பேணவே ஓர்நினைவாய் நின்றுகொண்டு
பிசகாமல் மந்திரத்தைச் செய்யுகந்தே. (9)

ஆதி கணபதி வசியம்.

உகந்தெளிய வசீகரத்தின் ஆட்சங்கேளு
உத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா
அகந்தெளிய விபூதியுந் தனமாய்ப்பூசி
ஆனகலை யாசனமே லிருந்துகொண்டு
முகந்தெளிந்த ருத்ராட்ச மணியைவாங்கி
முத்திபெற ஆதிகண பதியைநன்றாய்ச்
செகந்தெளியச் செபிப்பதற்கு மந்திரத்தைச்
செப்புகிறேன் சிவஹ்ரீம் அங்கென்றோதே. (10)

ஓகவா யிரத்தெட்டுரு வுருவேசெய்தால்
உண்மையென்ற ஆதிகண பதிதான்மைந்தா
இதமா புவியிடத்தில் இருந்துகொண்டு
இதிலிருக்க காரியங்கள் வசியஞ்செய்வார்
வேதமாம் புராணமொடு சாஸ்திரங்கள்
விளங்கிநின்ற மந்திரங்கள் வசியமென்று
சாதகமா யுந்தனுக்குத் தெரியச்சொன்னேன்
தன்னிலையிற் றனிருந்து செய்யலாமே (11)

ஆரப்பா தேவரொடு முனிவர்தானும்
அடங்காத பிசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்டநாகம்
ஒடுங்காத பட்சிமுதற் சகலமெல்லாம்
தாமப்பா ஆதிகண பதியின் சூட்சம்
தன்மையுடன் தியானித்துத் தானேநின்றால்
காமப்பால் காணற்பால் வசியமாகிக்
கருணையுடன் சகலமுமே வசியங்காணே. (12)

மகாகணபதி மோகனம்.

காணவே வசீகரத்தின் மூலஞ்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருணைகேளு
பேணவே கிழ்த்திசையை நோக்கிமைந்தா
பிரணவத்தால் விபூதியையுந் தளமாய்ப்பூசித்
தோணவே வெண்புலியா சனமேற்கொண்டு
சுத்தமென்ற துளசிமணி கையில்வாங்கிப்
பூணவே செபிப்பதற்கு மந்திரத்தைப்
புகலமகா கணபதியின் சூட்சந்தானே. (13)

தானென்ற சூட்சமது சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்கிலி சிங்கென்றேதான்
வானென்ற குருபதியில் நின்றுகொண்டு
மார்க்கமா யிரத்தெட்டுரு வுருவேசெய்தால்
கோனென்ற விக்கினேச் சுரன்றான்மைந்தா
குருவான இருதயத்திற் பிரகாசிப்பான்
ஊனென்ற இருதயத்திற் பிரகாசித்தால்
உத்தமனே சர்வமோ கனமாம்பாரே. (14)

பாரப்பா ரிஷிமுனிவ ரருளாலேதான்
பகருகிறேன் கணபதியின் தியானத்தாலே
காரப்பா கடிவிஷங்கள் சகலநோயும்
கண்டவுடன் பறந்தோடிப் போகும்பாரு
நேரப்பா பிருசரூகற் பட்சியெல்லாம்
நின்றவுட னுக்கமோயுங் கண்டால்மைந்தா
வீரப்பா யொகிக்குமோ கணேசராகும்
வேதமகா கணபதியின் வித்தைபாச்சே. (15)

நடனகணபதி தம்பனம்.

ஆச்சப்பா மோகனத்தின் அருமைசொன்னேன்
அரகார தம்பனத்தின் பெருமைபாரு
காச்சப்பா மேல்திசையை நோக்கிமைந்தா
கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
பேச்சப்பா தானிருந்தி பவுனமாகப்
பெருமையாத் தெற்பையா சனமேற்கொண்டு
மூச்சப்பா யிருத்தித்தா மரைப்பூதன்னில்
மூன்றுமணி யாற்செபிக்கும் முறைமைகேளே. (16)

கேளப்பா நடனகண பதியின் சூட்சம்
கிருபையுடன் ஓம்ஸ்ரீயும் கிலீயென்றேதான்
வாளப்பா தானிருந்தி மைந்தாகேளு
மகிமையா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
வேளப்பா நடனகண பதிதான்மைந்தா
மேன்மைபெற விதயத்தில் நடனஞ்செய்து
ஆளப்பா உன்னிடத்தி லிருந்துகொண்டு
சத்தமுடன் தம்பனத்துக் கருள்செய்வாரே. (17)

வாறான தம்பனத்தா லென்னவென்றால்
மகத்தான அஷ்டரோக மிருகமெல்லாம்
நீறான உன்னுடைய சமுகங்கண்டால்
நேர்மையுடன் தொகிக்கித்தம் பணிமேயாவார்
பேறான வாய்வுடனே நெருப்புத்தண்ணீர்
பிரளமற் றம்பிக்கும் பெருமைபாரு
கூறான நடனகண பதியினாலே
கூர்மையுடன் சகலமுந்தம் பனமாம்பாரே. (18)

சந்திரகணபதி உச்சாடனம்.

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேனென்மைந்தா
        பதிவாமுச் சாடனத்தைச் சொல்லக்கேளு
நேரப்பா தென்றிசையை நோக்கிமைந்தா
        நேர்மையாய் விபூதியையுத் தூளமாய்ப்பூசி
காரப்பா கலைமானு சனமேற்கொண்டு
        கருணைபெறச் சங்குமணி கையில்வாங்கிச்
சாரப்பா சந்திரகண பதியின்றட்சம்
        தன்மையுடன் ஓம்கிலியும் சவ்வென்றெண்ணே. (19)

எண்ணியா யிரத்தெட்டுரு றுருவேசெய்ய
        ஏகாந்தச் சந்திரகண பதியினாலே
உண்ணியுச்சா டனமுந்தான் மைந்தாமைந்தா
        உறுதியுடன் சத்தியமா மாகும்பாரு
நண்ணியுச்சா டனமுந்தான் சித்தியானால்
        நானிலத்தில் ஞானியடா சொல்லக்கேளு
நுண்ணிமையாய்க் கண்டதெல்லாம் முச்சாடிக்கும்
        நோக்குமனக் கண்ணதிறந் தன்னைப்பாரே. (20)

பாரப்பா ரவிதனிலே யிருந்துகொண்டு
        பத்தியுடன் சிவயோகந் துதிக்கும்போது
வீரப்பா பலிதமாய்க் கொண்டநோய்கள்
        விஷமுடனே பில்லிசூனியங்களெல்லாம்
நேரப்பா உனைக்கண்டாற் காணுதோடும்
        நீடுலகிற் சகலசித்து மாடலாகும்
தோப்பா சந்திரகண பதியினாலே
        தீர்க்கமுச்சா டனமுந்தான் சித்தியாமே. (21)

வாலைக்கணபதி ஆகிருஷணம்.

சித்தியுடன் நாலுமுச்சா டனத்தைச்சொன்னேன்
        தீர்க்கமுமா ஆகிருஷ ணத்தைக்கேளு
முத்தியுடன் வடகிழக்கு முகமிருந்து
        மோனமுடன் விபூதியுமுத் தூளமாய்ப்பூசி
பத்தியுடன் பட்டுவஸ் திரமேற்கொண்டு
        பதிவாகப் படிகமணி கையில்வாங்கிப்
புத்தியுடன் வாலைகண பதியின்றட்சம்
        பூரணமாய் ஓம்றியுங் கிலியென்றோதே. (22)

ஓதிடவா பிரத்தென்றா ற்குருவேசெய்தால்
உத்தமமா இருதணைத்த வையறுதியாகும்
நீதிடமா இருதணைத்தான் சித்தியானால்
நினைத்தபடி வினையவினை யாவும்போகு
சோதியென்றே சன்னுவினை யாவுந்தீருஞ்
சொல்லுகிறேன் வாலைகளை பதியினிலே
ஆதியென்ற வினைகளெல்லா மகன்றுபோகும்
அடங்காத வினைகளெல்லா மகலும்பாரே. (23)

பாரான பரிதனிலே அஷ்டகர்மம்
பத்தியுடன் செய்துவினை யாவும்போகு
வீரான மாந்தருடை கருமமெல்லாம்
விட்டகன்று போருமடா வினையோநோக்கும்
சேரான மெய்யுணர்க் கண்ணுறுக்கியுஞ்
நேர்மையுடன் குருபதியில் நின்றுபோனால்
போரான வாலைகளை பதியினிலே
பெருமையா இருதணைத்தைப் பேணிப்பாரே. (24)

உச்சிட்டகணபதி வித்துவேசனம்.

பாரடா இருதணைத்தைச் சொல்லுவேன்மைந்தா
பதிவாய்வித் வேசனத்தைப் பகரக்கேளு
காரடா தென்மேற்கு முகமிருந்து
கருணையாய் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
சங்கையுள்ள பவளமணி கையில்வாங்கி
கோரடா உச்சிட்ட முன்னேறுஞ்சுட்சர்
கோமையுடன் சொல்லுகிறேன் மெய்வாய்க்காணே. (25)

காணவே ஓம்ஸ்ரீயும் கிரீயுமென்று
கருணைபா பிரத்தென்று குருவேசெய்தால்
பூணவே வித்துவே சனைதான்மைந்தா
பூரணமாய்ப் பூதலத்திற் சித்தியாகும்
தோணவே நின்றுவினை யாவுஞ்செய்தி
சொல்லவித்து வேசனத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்தாக்கால்
பெருமையுள்ள திருநீற்றுற் செற்பமாமே. (26)

கெற்பமென்ன உற்பனந்தான் சித்தியாகும்
கிருபையா யுன்காரத்தா லேதாரணும்
உற்பனமா யுன்காரந்தொட் டைந்தால்மைந்தா
ஒன்றுபத்தாய்த் தானவளரும் உண்மைமேன்மை
விற்பனமும் விவேகமுட னிருந்துகொண்டு
வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
அற்புதவுச் சிட்டணை பதியைப்போற்ற
அடுத்திருந்தோர் காரியமுஞ் சித்தியாமே. (27)

உக்கிரகணைபதி மாரணம்.

சித்தியுடன் வித்துவே சனத்தைச்சொன்னேன்
தீர்க்கமினி மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமிருந்து
பாலகனே விபூதியுந் தளமாய்ப்பூசி
வெத்தியுடன் வெங்கையா சனமேற்கொண்டு
வேகமா மெட்டிமணி கையில்வாங்கி
முத்தியுட னுக்கிரகணை பதியின்சூட்சம்
மூர்க்கமாய் ஓம்றீயும் கசியென்றெண்ணே. (28)

என்னப்பா ஆயிரத்தெண் ணூறுருத்தான்
இணக்கமாய்ச் செய்திடவே என்னசொல்வேன்
தன்னப்பா மாரணந்தான் சித்தியானால்
காடுமுன்னே சகலபிணி மாண்டுபோகும்
இன்னப்பா எதிர்த்தசத் துருவின்பேரை
எடுத்தெழுதித் தியானமதா யுருச்செபித்தால்
முன்னப்பா குண்ணியவன் நோயதாவான்
மூர்க்கமுடன் மாரணத்தை யோதிடுதே. (29)

ஓதியதோர் நாழிகையில் மைந்தாகேளு
உதிரமதி லக்கினிதா னுடனேபாய்ந்து
வீதியென்ற தெருத்தோறும் அலைவான்மட்டை
விந்தையென்ற மாரணத்தை நெஞ்சுள்வைத்து
நீதியுடன் விபூதியை கடாக்ஷித்தாக்கால்
சேர்மையுடன் சகலபிணி மாண்டுபோகும்
சோதியென்ற உக்ரகணை பதியின்சூட்சம்
சுத்தமுடன் மாரணத்துக் குயிருமாச்சே. (30)

மூலகணபதி பேதனம்:

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன்மைந்தா
    ஆகார பேதனத்தை யருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
    கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
    முத்திபெற மேவிருந்து சலமேற்கொண்டு
பாச்சப்பா மூலகணபதியின் சூட்சம்
    பத்தியுடன் ஓர்ந்திடும் மௌனவேயென்னே. (31)

என்னடா மின்னுமலி தன்னல்மைந்தா
    இப்பமாயி சத்தெதன்றா லருவேசெய்தால்
உன்னடா பேதனத்தா லுறுதியாகும்
    உத்தமனே அறிவுடைய சித்தாகேளு
என்னடா அறிந்துபேதனத்தையோது
    கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நன்னடா உந்தனுட சொரூபந்தானும்
    நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும்பாரே. (32)

பாரப்பா பாரதனிற் பகரக்கேளு
    பத்தியுடன் பேதனத்தை தியானம்பண்ணி
நேரப்பா நின்றபிணி யாளருக்கு
    விபூதியுமெடுத்துக் கொடுத்தாயானால்
சாரப்பா சாதோஷம் விக்கினமெல்லாம்
    க்ஷணத்திலே பேதிக்கும் விருதுபோடு
தேரப்பா மூலகணபதியினாலே
    தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. (33)

அஷ்ட கணபதி.

செம்மையதாம் அஷ்டகர்ம மெட்டுக்குந்தான்
    தீர்க்கமா யஷ்டகணபதியின் சூட்சம்
இம்மையதாய்ச் சொன்னடா நயந்துபாரு
    எல்லோர்க்கு மித்தவழி கிட்டாதப்பா
கொம்மையதா யஷ்டதிசைக் காசாய்நின்று
    கொண்டுவினை பாடுதற்கு இதுவேசூட்சம்
தம்மையதாய்க் காறுவது சாக்ஷியாகத்
    தானிருந்து அஷ்டகர்மந் தான்றானுமே. (34)

ஆமப்பா அஷ்டதிசைக் காசாய்நின்று
அருமையுள்ள சித்துவினை யாடப்பாரு
ஓமப்பா ஆதிகனை பதிதாவென்று
உறுதியாம் மகாகனை பதிதாவென்று
நாமப்பா நடனகனை பதிதாவென்று
சங்கையுள்ள சத்திகனை பதிதாவென்று
காமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
கன்மையுள்ள பாலகனை பதிதாவென்றே. (35)

ஒன்றுமுச் சிட்டகனை பதிதாவென்று
உத்தமனே உக்ரகனை பதிதாவென்று
நன்றான மூலகனை பதிதாவென்று
நாட்டமுட னஷ்டகனை பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூட்சந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
நின்றிடும் மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓய்வில் அடங்குமென்னே. (36)

என்னமோ சொன்னேனென் றெண்ணவேண்டாம்
இகத்துக்கும் பரத்துக்கும் இதுவேமெய்மை
முன்னமே சிலமுனிவர் மொழிந்தமார்க்கம்
முறைகள்பல விருந்தாலு மிதனுக்கீடோ
பின்னமொன்றும் வாராது செய்துபாரு
பிராமணர்க்கும் அதிப தேசிகட்கும்
அன்னமொடு அறுசுவையா லமுதளிப்பாய்
அதனாலே அருளுண்டா மறிந்துபாரே. (37)

ஜெயமுனிவர் திருமந்திர ஞானம் 37
முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகா ரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது பட்டம் ஸ்ரீ தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பரமபதி துணை.

ஒன்பதாவது

கல்லுளிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

ஞானாந்த சூஸ்திரம் 19.

அப்பனே பராபரையால் பாதங்காப்பு
    அடிமுடியுங் கடியான மூலங்காப்பு
இப்புவியில் மனோன்மணியாள் அருளேகாப்பு
    ஈரெட்டு லாகிகின்ற கணேசன்காப்பு
செப்பமுள்ள யென்குருவாம் கொண்டிச்சித்தர்
    திருவாக்கால் கல்லுள்ளிச் சித்தனென்றே
எப்புவியுங் கீர்த்திபெறச் சொல்லிவிட்டார்
    இயல்பான சித்தனென்று இயம்புவாரே. (1)

இயல்பாகச் சூட்சத்தில் மோட்சஞ்சொல்வேன்
    என்மகனே பொய்களவு கொலைசெய்யாதே
சயமாகக் கோபத்தைத் தள்ளிப்போடு
    சுந்தரம்போல் புண்ணியத்தைக் கருதிக்கொள்ளு
செயமான பெரியோர்கள் மொழிதட்டாதே
    செப்பியதால் வேதமுந்தான் பாருபாரு
பயமில்லா தேயுலகில் ஞானக்கண்டு
    பார்த்திருந்து நடந்துகொள்வாய் பாரிற்றுனே. (2)

தானேதான் நால்வேதம் படித்துத்தேறு
    சமத்துவமாய் ஓங்கார வட்டம்பாரு
கோனேதா னிதுகான்குத் தெரிந்தபின்பு
    குண்டலியின் மூலசத்தி தோணும்பாரு
நானென்ற ஆன்மாவும் நீயேயாகும்
    நன்மையுடன் பிரணவத்தை பாருங்காணோர்
ஏனென்ற விலையறியப் போனாப்பா
    எண்ணரிய கோடியிலே யொருவன்பாரே. (3)

பாரேதான சுயரூபந் தெரிந்துகொண்டு
　　பற்றுதனை யொழிக்காதார் ஞானியல்ல
நேராமற் றிரிவர்கள் ஞானியென்றும்
　　தேசத்தி லலைவார்கள் சித்தனென்றும்
சீரான தாய்தானும் ஒன்றேதெய்வம்
　　சிறப்புடனே தாய்தகப்பன் சேரும்போது
நேரான கருப்பிடித்துக் கொண்டுவந்து
　　நிலைத்ததோர் சுயரூபந் தெரிந்துகொள்ளே. (4)

தெரிந்துகொண்ட தெய்வமதை வணங்கவேணும்
　　சித்துடனே பூமியிலே யிருக்கவேணும்
அறிந்துகொண்டு சிவயோகஞ் செய்யவேணும்
　　அப்பனே ஆங்கார மடக்கவேணும்
பிரியமுடன் அட்டாங்க யோகந்தன்னை
　　பெரியோர்க ளாற்றெரிந்து கொள்ளவேணும்
சிறியதொரு மந்திரங்கற் றறியதேனும்
　　தெரியாம லலைவார்கள் சிலபேரப்பா. (5)

அப்பனே மோட்சத்தின் வழிதானெங்கே
　　அடைவாக முன்னிறந்தார் குறிப்புமெங்கே
செப்பமுள்ள குருக்களெங்கே குலங்களெங்கே
　　செத்தவர்கள் கூடிழந்த தேகங்களெங்கே
இப்பவே யிறந்தவர்க ளெங்கேபாரு
　　என்மகனே கூடழிந்தால் மூச்சுப்போச்சு
ஒப்பவே யிதைவெளியா யுனக்குச்சொன்னேன்
　　ஓங்கார மூலவட்ட மடங்கிப்போச்சே. (6)

போச்சேதான் உயிர்போன இடமுங்காணார்
　　பூவுலகில் வந்தவர்க ளிருப்புங்காணார்
மூச்சடங்கி யிருந்தநிலை யாருங்காணார்
　　முன்னிருந்த திருக்கூத்தை யாருங்காணார்
ஆச்சுதென்று வெட்டவெளி நன்றாய்ப்பாரு
　　அப்பனே வேதாந்தம் வெளியாய்ப்போச்சு
பேச்சப்பா கருவமைப்பின் படியேயாகும்
　　பேணிப்பார் தெரியுமல்லா லறிவாய்ப்பாரே. (7)

பாரேதான் அண்டத்தி லிரவிகோடி
　　பரமனுடை படைப்பென்பார் கோடாகோடி
கூறேதான் மண்டலத்திற் பிறவிகோடி
　　கட்டைவிட்டு அழிந்தார்கள் அனந்தங்கோடி
சேரேதான் வெளியொளியின் முடிவைக்கண்டு
　　செப்புகின்ற டாகாசந் தன்னிலப்பா
நேரேதான் தெரியுமது வெளியைத்தானே
　　நேர்த்தியுடன் கண்டுகொள்வாய் நிலையில்நின்றே. (8)

நின்றேதான் அஷ்டாங்க நிலையில்நின்று
　　நினைவுடன் சமாதிவிட்டு நிலைபோதே
அன்றேதான் அஷ்டாங்க யோகசித்தி
　　அதிலிருந்து மூச்சடக்கி யிருந்துகொண்டு
சென்றேதான் பார்த்தாக்கால் ஞானத்தேற்றம்
　　தெரிந்துகொள்வா யிதன்சூட்சந் திவமையாக
ஒன்றேயென் றேயிருப்பா யழிபார்த்தாலும்
　　உலகத்தி லெட்டிலென்பர் பரிவிதாமே. (9)

ரசகர்ப்பூர மாத்திரை.

பரிவுரச கற்பூரம் பலமதொன்று
　　பண்பாகத் தேனதிலே சுத்திசெய்து
எரிவான சம்பழத்தின் சாற்றினாலே
　　இணக்கமுடன் சுருக்கிடவா யிரண்டுசாமம்
தெரிவான மூலைப்பாலா லிரண்டுசாமம்
　　தீர்க்கமாய்ச் செய்தபின்பு கல்வத்திட்டு
விரிவான வெண்மிளகு பலந்தானொன்று
　　விளங்கவே சேர்த்தரைக்க வழிசொல்வேனே. (10)

சொல்லுறவாம் சம்பழத்தின் சாற்றால்சாமம்
　　சுருக்காக வரைத்துமணிப் பயறுபோல
வெல்லுறவாய் மணிமணியா யுருட்டிக்கொண்டு
　　விவேகமுடன் நிழலில்வைத்து வுலரச்செய்து
நல்லுறவாய்க் குழல்தனிலே அடைத்துதேவ
　　நாதாந்தக் கடவுள்தன்னைத் தெண்டம்பண்ணி
பல்லுறவாம் வாய்வுபக்கச் சூலைகுத்தல்
　　பார்வான குளிர்தனக்குக் கொடுப்பீர்தானே. (11)

கொடுத்துவிடு அந்திசந்தி யிரண்டுவேளை
குறிப்புடனே திரிகடுகு தேனிற்றானும்
அடுத்துவரும் வாய்வுமுதற் குடைச்சலெல்லாம்
அறுகாமல் நீங்கிவிடும் அறிந்துபாரு
எடுத்ததொழிலில் தப்பாது வெகுசமர்த்து
எவ்விதமும் நல்லகுண மாக்குமப்பா
விடுத்தசொல்லை மனதில்வைத்துத் தெளிந்தபேர்க்கு
வினைவியநற் பாகமது விளக்குந்தானே. (12)

நற்பாகத் துடன்செய்வா யின்னங்கேளு
நலமான சாதிக்காய் சாதிப்பத்திரி
பொற்பாக அதிவிடையம் கூராத்திக்காய்
புகழ்பெரிய வெட்பாலை சிறுநாகப்பூ
வற்பாக லவங்கமுக் காட்டாத்திப்பூவும்
வளமான சீனத்தின் பட்டையோமம்
சிற்பாகச் சிங்கிருபோ சாளிசக்கு
சிதறாத புளியன்தோல் காசுகட்டி. (13)

காசுகட்டி மையூரின் கஞ்சாவித்து
கருதரிய பெருங்காயம் அசமதாகம்
ஆசகளில் லாதிரு பேர்சொல்லாது
அடவுடனே வகைக்குவகை பலமதாகப்
பேசுகிறேன் திட்கமுடன் கேளுகேளு
பிரபலிக்க வரவிவிட்டு யிடித்துநன்றாய்
பூசுகின்ற கல்வத்திற் போட்டுக்கொண்டு
புளிக்குமெலு மிச்சைபழச் சாற்றாலாட்டே. (14)

ஆட்டியபின் விளாவினுட பிசினிதானும்
அன்பாகப் பலமரைதா னெதனிற்போடு
நீட்டியதோ ரதினதுகாற் பலந்தான்போடு
நேர்ந்தரைப்பா பொருசாமம் நிலைமையாகப்
பூட்டிவிடு லிங்கமரைப் பலந்தானப்பா
புனிதமுள்ள கெந்தகமு மரைப்பலந்தான்
நாட்டமுடன் தேனதனை லிரண்டுசாமம்
நலம்பெறவே அரைத்தபின்போர் பாகங்கேளே. (15)

கேளப்பா மறுபடியும் நிறுத்தியேதான்
திருடைபெற வொருசாம மரைத்துக்கூட்டி
நாளப்பா விப்படியே மூன்றுநாள் தான்
நலம்பெறவே வழித்தெடுத்துப் பாணிதன்னில்
கோளப்பா வாராம லடைத்துக்கொண்டு
குணம்பெறவே மனதில்வைத்து விவரமாகத்
தாளப்பா வங்கசார மாசனிக்கும்
தடங்கல்செய்யும் நோய்தனக்குக் கொடுப்பீர்தானே. ()

பிரமாணம் கண்டகாயளவு

தானப்பா வியாதியது தீர்வதற்குத்
தயவாகத் தெளிவிடு பயமேயில்லை
வேனப்பா சர்க்கரைநற் கண்டிலாதல்
விதமுடனி விடையக் கியாழந்தன்னில்
தேனப்பா அரிசியுட கியாழமாதல்
சேர்த்துவிடு கல்லோமஞ் சருகல்செய்து
பானப்பா காற்பலஞ் சீரகத்தைப்
பாகமாய்க் கியாழங்கற் கண்டுசேரே. (17)

கற்கண்டு சர்க்கரைப்பா லூற்றிக்கொள்வாய்
கருத்துடனே கொட்டியதைக் கூட்டியுண்ணு
நெற்கொண்டு கோதுமையைக் கஞ்சிசெய்து
நீதாலும் சீனியிட்டுக் கூட்டியுண்ணு
சற்குணமாய் வாழைக்கச்சல் பூச்சிராவும்
சமைத்துமிகக் கொடுத்தாலும் மெத்தநன்று
பொற்கணைமாம் ஆட்டிறைச்சி காடையாகும்
பொருந்திவிதைப் பத்தியமாய்ப் பார்த்துச்செய்யே. (18)

பார்த்தபடி சொன்னதல்லால் மறைப்பொன்றில்லை
பதறாமல் ஓமமிட்டு வெந்நீர்தன்னில்
காத்துமிகத் தலைமுழுங் யசனஞ்செய்யக்
கடவுளார்தன் கிருபையினாற் சவுக்யமாகும்
சேர்த்ததிற்குப் பாகமது மெத்தநன்மை
செழிப்பாகக் குணங்கொடுக்குந் தேகத்திற்கு
வார்த்தபடி பண்டிதற்குச் சகுறுயதாச்ச
யெடுத்தசொழிற் பொய்யாது யிணைக்கந்தானே. (19)

கல்லுளிச்சித்தர் ஞானசூத்திரம் 19

முற்றிற்று.



முருகன் துணை.

பத்தாவது

கல்லுளிச்சித்தர் பாடல்.

பிர்ம சொரூபத்தை நாடி — உடன்
கர்ம வினையோட வழிதனைத் தேடி

எட்டி பழுத்தாலு மென்ன — காக
மீயாத லோபிகள் வாழ்ந்தாலு மென்ன
கட்டி வராகனிருந் தென்ன — ஆனைக்
காவல்கள் போட்டுநீ காத்திருந் தென்ன. (1)

நீரிலாக் கிணறிருந் தென்ன — மனது
நேராய்நடவாத பிள்ளையிருந் தென்ன
ஊரிலா ஆறிருந் தென்ன — நமக்
குதவியில்லாத பணித ருறவிருந்தென்ன. (2)

தவமது செய்தாலு மென்ன — நீ
சமத்தனென்றேபே ரெடுத்தாலு மென்ன
சிவபூசை செய்தாலு மென்ன — அரன்
சேவடியை மறவாம லிருந்தாலுமென்ன. (3)

காசிபோய் வந்தாலு மென்ன — பெரிய
கனகதண்டிகையேறித் திரிந்தாலு மென்ன
வாசியைத் தெரிந்தாலு மென்ன — நாளும்
மகராஜனென்றுபேர் பெற்றாலு மென்ன. (4)

புராணம் படித்தாலு மென்ன — இந்தப்
பூலோகந்தன்னில் மறைந்திருந் தென்ன
திராசநிலையாயிருந் தென்ன — தினம்
சிவசிவாவென்றே செபித்தாலு மென்ன. (5)

வித்தைகள் பலபடித் தென்ன
மென்மேலுஞ் சாஸ்திரங் கற்றாலுமென்ன

சித்துகள் தெரிந்தாலு மென்ன — நாளும்
சிறப்பாக வார்த்தை யுரைத்தாலுமென்ன. (6)

பெண்டாட்டி பிள்ளையாயிருந் தென்ன — முதிர்ந்த
பெரியோர்கள் பாதத்தைப் பூசித்துமென்ன
தண்டாகப் பேசியிருந் தென்ன — நீ
தப்பாத கற்கோட்டை கட்டியிருந்தென்ன. (7)

மாடிமேல் வீடிருந் தென்ன — இந்த
வையகத் தோர்மெச்ச வாழ்ந்தாலுமென்ன
கூடிக் குலாவியிருந் தென்ன — கையெடுத்துக்
கும்பிட்டுக் கூத்தாடித் திரிந்தாலுமென்ன. (8)

தாய்தந்தை கூடவாயிருந் தென்ன — உற்ற
ஜனங்களு முபகார மாயிருந்தென்ன
காய்போல விளைத்தாலு மென்ன — வரும்
யமனுக்குத் தப்பி யொளித்தாலுமென்ன. (9)

சரியை நடத்திடவும் வேணும் — இந்த
சகத்தினுடை மாயை யொழித்திடவும்வேணும்
கிரியையைப் பார்த்தறிய வேணும் — மனவாக்குக்
கெட்டாத சொரூபத்தைத் தெரிந்திடவேணும். (10)

யோகத் தெரிந்திட வேணும் — உனக்
குண்டிருந்த லானதைச் சுருக்கிடவேணும்
பாகமது தெரியவே வேணும் — குரு
பாதமதை மறவாம லிருந்திடவேணும். (11)

கொலைகளவு நீக்கிவிட வேணும் — உலகில்
கொடியோ னெனும்பேரைப் போக்கிடவேணும்
புலைகளைத் தொலைத்து விடவேணும் — இன்று
பொல்லாத மாயையை விலக்கிவிடவேணும். (12)


சோதியைக் கண்டறிய வேணும் — வேதச்
சடமென்றுந் திடத்தைப் பார்த்தறியவேணும்
ஆதிபிரமத்தெரிய வேணும் — அதை
அன்புடன் சாஸ்திரத் தாற்றெரியவேணும். (13)

ஞானநிலை தெரியவே வேணும் — இதில்
கால்யோக வுண்மை தெரிந்திடவேணும்
யோகநிலை தெரியவே வேணும் — யோக
முடிவான வஸ்துவை முன்தெரியவேணும்.

அட்டாங்க மத்தெரிய வேணும் — அதற்
காதார மானகலை தெரியவேவேணும்
திட்டமாய் வாசியிலே வேணும்
தெரிந்துகொண் டாற்சித்த ராகவேவேணும். (15)

பந்தம் கடந்தவனே சித்தன் — பாரில்
பஞ்சமா பாதகத்தை விட்டோனே பத்தன்
இந்தவிதம் தெரிந்தவனே சித்தன் — அதி
லென்றிலமை கண்டவனே ஜீவமுத்தன். (16)

கல்லுளிச்சித்தர் பாடல் 16
முற்றிற்று.



திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதின ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது பட்டம் ஸ்ரீ [illegible] சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய [illegible]

உ

பரமபதி துணை.

பதினோராவது

கஞ்சமலைச்சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

கலைக்கியானம் 23

மூலவட்ட மானகுரு பாதங்காப்பு
முத்திக்கு வித்தான முதலேகாப்பு
நாலவட்டத் தங்கிமதி யமுதங்காப்பு
நான்முகனும் நாரணனும் ருத்ரன்காப்பு
காலவட்டச் சுழிமுனையு மிடையுங்காப்பு
கதிர்முனையும் பிங்கலையும் வாசிகாப்பு
கோலவட்டக் குமரியுட பாதங்காப்பு
குருபாதம் மறவாத குணங்காப்பாமே. (1)

காப்பொன்று அப்பாக்கை காட்டிக்கண்டாற்
கண்கெட்ட குருடனுக்குத் தோனும்தோனும்
கோப்பொன்றும் வேண்டாய்மெய்க் குகைக்குட்செல்லக்
கூசாம லொருமனதாய் நின்றுதேறு
ஏப்பொன்று மில்லையப்பா வெந்தன்னூலில்
என்சொல்வேன் வேதமுறை யியம்பக்கேளு
மாப்பொன்று மில்லையப்பா வகையதான
வழியொன்று மிருபாதை வழியைக்கண்டே. (2)

கண்டுகொண்டு சித்தரெல்லாம் மனதிரங்கி
கள்ளம்வைத்துக் கண்திறந்து வெளியாய்ச்சொன்னார்
கொண்டுகொண்டு அவரவர்கள் பாஷையாலே
கொட்டினார் வெகுகோடி தேசபாஷை
விண்டுவிண்டு வெகுகோடி சாஸ்திரத்தை
விளம்பினார் கோணத்தி லிருந்துகொண்டு
பண்டுபண்டு பலநூல்கள் படித்ததெல்லாம்
பார்க்கிற தசூன்றிப் பலனைப்பாரே. (3)

பலனேது ஒன்றுமில்லை பார்த்தறிந்தால்
பரமகுரு வெளிசாறும் பார்க்கும்போது
புலனேது ஒன்றுமில்லை பூந்தன்னிற்
புத்தியுள்ள மானிடரே புகலக்கேளு
கலனேது ஒன்றுமில்லை அழைப்பதற்குக்
கலங்காமல் மயங்காமற் கருதிப்பாரு
தலனேது பல்விடத்தி லெடுமுமுண்டோ
தாயாரைத் தனிவீட்டிற் றூக்கிப்பாரே. 4)

வீட்டிலிருந் தாயிதனைக் கொஞ்சிக்கொஞ்சி
விளையாட வரவுரைத்தேன் மெய்யுள்ளோரே
நாட்டிலிருந் தாயிதனைக் கொஞ்சிக்கெஞ்சி
நலமான இருகாலைப் பிடித்தாயானால்
எட்டிலிருந் தாயிசனை யெங்குந்தானாய்
ஏகாந்த வெளிகாண்பாய் இருளோக்கானாய்
பாட்டிலிருந் தாலென்ன பலிக்குமோடா
பாங்கான பொளிமலையிற் பாய்ந்துபாரே. (5)

பாரப்பா கண்மூக்கு மத்திக்குள்ளே
பதறாமற் பார்த்திருந்தாற் பசிதானுண்டோ
காரப்பா அடிமுடியுங் கவெங்காணும்
கலங்காமல் நாலுமதிற் குள்ளேசேரும்
ஆரப்பா யிந்தமுறை பார்க்கப்போரார்
அருளான தாயெனக்குச் சொன்னவித்தை
தூரப்போ பலேந்தானுஞ் சொல்வாருண்டோ;
சூட்சமிந்த வழிகண்டு தொழிலைப்பாரே. (6)

பாரப்பா வேதமுறை பதியிற்பாரு
பதினாறும் பன்னிரண்டும் அதுதான்வேதம்
மூரப்பா அஞ்செழுத்திற் பிறந்தவேதம்
முகமதன்பின் னஞ்செழுத்தின் விபரங்கேளு
வேரப்பா அ இ உ எ ஒ அஞ்சும்
விதமான வேதமென்ற தாய்தானப்பா
சாரப்பா நால்வேத மதினாலாச்சு
சத்திசிவ மென்றறிவீர் நாலினாலே. (7)

காலென்று சொன்னமொழி யைநன்றாய்ந்தால்
கல்லமணிப் புத்தியுள் ளமைந்திருக்கும்
வாலென்றாற் றலையென்று மேதகைசெப்பும்
வழியென்று வெழுத்ததும் சாகசைக்க
கோலென்று குறிமூன்று நான் நடுவதாச்சு
சுழுமான யிடைபிங்கலை நடு முடிவாறுச்ச
பாலென்ற அமுதமையா நினைவதாச்சு
பதினாலும் பனிரண்டும் பதித்தபாரே. (8)

பாரப்பா ஒளிக்கப்பா லொன்றுமில்லை
பதிகடந்து அப்புறத்தே போனாயானல்
சீரப்பா உன்னிடத்தி லாணிப்பார்த்தாற்
செகமெல்லாந் திறந்தண்டத் துள்ளே காணும்
ஊரப்பா வுலகத்தி லுள்ளதெல்லாம்
உன்னுடம்பிற் றனித்தனியே காணலாகும்
காரப்பா கல்லுமண் குளங்கள்கோவில்
கண்மூக்கு மத்தியினுட் கருத்திற்காணே. (9)

கருத்திலே காணுமடா வேதாந்தங்கள்
காலென்றாந் தலையென்றும் மாறிச்சேர்த்தால்
பொருத்திலே காணுமடா சத்திமூலம்
[illegible]சிகட்டு மெய்பொய்யாகும்
வருத்திறே லாவந்த பாலீணாய்
வண்டெல்லாம் வாய்விரைப்பத் தள்ளுவார்கள்
குருத்துக்குள் இலைபூகாய் பழமுமாகும்
குறியான குலைசாயுங் குன்றம்பாரே. (10)

இரசபதங்கம்.

குன்றான ரசபதங்கங் கூறக்கேளு
குறிப்பாகச் சொல்லுகிறேன் மணியதாக
நன்றான செங்கலுப்பு பிடித்துத்தூளாய்
நயம்பெறவே சட்டிக்குட் பாதியிட்டு
மன்றான குகைதனையே நடுவில்வைத்து
மனம்பெறவே ரசமதனை யூத்தியேதான்
நின்றான மேலுமிந்த வுப்பிட்டேதான்
நிதானமாய் மேற்சட்டி கவிழ்த்துமூடே. (11)

மூடிய அகண்டகொரு வதிப்பின்மேலே
மூவந்திலிபுற மெழ்மிலைன்றத் நிலைமூட்டி
நாடிய நிராமயத வெளிக்குளியும்
கண்புக ஆதியின் னைடுக்கப்பார்க்கத்
தேடிய மேற்சட்டி மேலேவிருந்துத்
திற வாள பாக்காரு படிகம்போலாம்
சாடிய பார்ஸ்ரிறும் வடிக்கிரிக்கு
அண்டையுடன் பரணிசாரி வைடத்தவையே. (12)

அடைத்திருந்த பகர்கனை சாப பளிச்சென்லாந்திக்
கொண்டுசேக்க விடைபோத விழுதோயிய
கடைபிடைதன் மாசாபயி லுடைச்சல்மற்ற
கலயில்லைப் பார்த்திருந்து நூலிமேயாமெ
அடைபில்லாக் குழவிபோறுல் தனியிருட்டு
தனமுடன் பார்த்தறிந் மிகமேடபூட்டு
இடையீறு வாய்பிடிக்கால் மேலாம்பட்டை
பெருங்கொழுங் கொம்பனிப்பா யுத்துதானே. (13)

உகந்தவயச் செந்தூரஞ் செப்பக்கேளு
உண்மையாய் லாடமதை சாவியேதான்
இகந்துவிடா மற்படிக்குப் பலத்தானேத்து
இன்பமுடன் சம்பனத்தின் சாற்றிவிட்டு
புகந்தவாய் மூன்றுநா ளரைவின்பு
புன்மையிலாத் தண்ணீர்விட் டரைத்தெடுத்துச்
சகந்தரமே வெள்வேலாம் பட்டைச்சாற்றால்
சேரம்பாம லேத்துபுடம் அரைத்துப்போடே; (14)

புடமிகொய் செவ்வீக்காய்ச் சாற்றிலப்பா
புகழ்ச்சிபுட ஹறுபுடந் இர்த்துப்போடு
அடவுடனே பார்த்திதனை யெடுத்துக்கொண்டு
அதிசிதமாய் வெற்றிலையின் சாற்றாலப்பா
திடமுடனே பத்துபுடந் இர்த்தாயானுல்
திவ்யமதாய்க் கண்டுகொள் சிவப்புமாகும்
கடவுள்பதந் தொழுதேற்றிக் குழலில்வைத்துக்
கனத்தபித்த வாய்வுதனை யெடுத்துப்பூட்டே. (15)

எடுத்துபல சோதனைகவிக்கல் வாத்திபாண்டு
எதிர்த்தருணை வெறும்புருக்கி யிளைத்தமேனி
அடுத்ததொரு கழிச்சலன்னத் துவேசம்யாவும்
அகன்றவிடச் செந்தூரத் தட்டிக்கேட்கும்
தொடுத்துவிடு மையப்பான மறித்துமேலாய்த்
தொடர்ந்துசெய்தா லிவ்வளம்வெகு நோய்கள்தன்னைச்
சடுத்தமிட்டுத் தீர்க்குமப்பா ரசபதங்கம்
சமர்த்துடனே யித்தொழிலைச் செய்வாய்நீயே. (16)

தொழில்பார்த்துச் சுளுவாகச் செய்துகொண்டால்
தோற்றுது பலவிதமாய்ப் புத்திதானும்
விழியதனால் நோக்குமெள்ள அறிவைத்தாண்டி
வியப்புடனே வைகபாக மேற்றிநின்றால்
ஒழியாது அவிழ்தமதின் மார்க்கமப்பா
ஓதுவாய் பலவிதமாய்ப் பேசுவார்கள்
வழியிதுதா னிலைசான முறையிற்றேர்ந்து
வகுத்தபடி பண்டிதத்தைப் பார்ப்பீர்தாமே. (17

பார்த்திதனை நோயாள ருண்ணும்போது
பண்புடனே நெய்பாலும் வெண்ணெய்யாகும்
தேர்ந்தாட்டி னிறைச்சிகிச் சடியுமாகும்
தித்திக்க திராட்சியென்ற பழமதாகும்
ஏத்தபடி கோதுமையின் ரொட்டியாகும்
இன்பமுடன் கொண்டவர்க்கு ஏற்குமேற்கும்
சீர்த்துலமாய்த் தெரிந்துணர்ந்து பார்த்துநின்றால்
தெய்வமித்தப் படியெதுவு மாகுந்தானே. (18

வேறு சந்தம்.

ஆகிய சொல்லே தென்றால் அடைவுடன் புகலக் கேளு
பாகிய சுத்த ஞாதி பண்புறுந் தயிலந் தன்னை
பூகியாய் ஸ்நானஞ் செய்ய வுற்றதோர் பிணிகள் நீங்கும்
யோகிக ளெனக்குச் சொன்ன வுச்சித மொழியி தாமே. (19)

மொழிந்தசொற் றவறி டாமல் முனிந்துநேர் பாகங் கண்டு
அழிந்திடச் செய்யும் நோயை அதட்டியே நீக்கும் பாரு
தெளிந்திடத் தேகந் தன்னைத் திறப்படப் போற்றி நிற்கும்
ஒழிந்திடாத் தேக மென்றே வுயர்பட வுணர்வீர் தாமே. (20)

படர்ந்தது அனேக மென்று பார்ப்பது வொன்று தானே
நடமிது வேறொன் றெண்ணித் தவறிடா திருந்தல் நன்று
அடவுடன் சென்றா ரத்தா லாகிடு மனந்த மார்க்கம்
சடமது தெளிவுற் றோங்கிச் சகலமும் நன்மை யாமே. (21)

நன்மையாய் நான்தான்சொன்ன நடத்தையைப் பதிந்துமேலோர்
இன்பமாய்க் கண்டு தேர்ந்து யிவ்வித பாக மொப்ப
அன்புடன் செய்வோர்க் கெல்லா மதிகநற் குணம தாகும்
முன்புளோம் மொழிந்த நியாய முறையிது விசம தாமே. (22)


முறையது கருவி தெய்வ முனிவர்க ளெனக்குச் சொன்னார்
நிறையுட னிந்நாள் யாவும் நிகழ்த்தினேன் அருமையாக
மறைபொரு ளறிய வேண்டி மாநிலத் துதித்தோர்க் கெல்லாம்
குறையிது வறுமி டாது குணந்தரும் வகைய மாமே. (23)

கஞ்சமலைச்சித்தர் கலைக்கியானம் 23

முற்றிற்று.



மதுரை மேலமாசிவீதியிலிருக்கும் பார்த்தியனூர் கிராம முன்சீப் சொக்கலிங்கம்பிள்ளை குமாரர் நாடகஉபாத்தியாயர் சங்கிலியாபிள்ளை அவர்களிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



குருவே துணை.

பனிரெண்டாவது

கஞ்சமலைச் சித்தர் பாடல்.

பரிபூர ணானந்த போதம்-சிவ
பரப்பிர்ம மான சதானந்த பாதம்

உரிதாம் பரம்பொருளை யுள்ளு-மாய
முற்ற பிரபஞ்ச மயக்கத்தைத்தள்ளு
அரிதான சிவகாமம் விள்ளு-சிவ
னடியார்கள் பணிவிடை யன்பாகக்கொள்ளு. (1)

தச்சரூப சாரவி சாரம்-அற்ப
சுகமது துக்கமதாம் வெகுகோரம்
நிச்சய மானவி சாரம்-ஞான
நிர்மல வேதாந்த சாரமேசாரம். (2)

கற்பனை யாகிய ஞாலம்-அந்தக்
கரணங்க ளாலே விளைந்தவிசாலம்
சொற்பன மாயிந்திர ஜாலம்-அன்று
தோன்றி விட்டாலது சூட்சானுகூலம். (3)

அற்பம தானப்பிர பஞ்சம்-அது
அநுசரித்தாலே வுனக்கிது கொஞ்சம்
நிற்பத ருள்மேவி நெஞ்சம்-அன்று
நிகரில்லை நிகரில்லை மெய்ஞ்ஞானத்தஞ்சம். (4)

ஆங்காரத் தால்வந்த கேடு-முத
லாசையைக் கட்டோடே அப்பாலேபோடு
தாங்காம லானந்த வீடு-அன்று
தாக்கும தெலயந் தானுகக்கூடு. (5)

தத்துவக் குப்பைக ளோது-சித்தி
சாத்திர மான சடங்குகளோது

பத்தி யுடன்மற வாது-குரு
 பாதத்தைக் கண்டாற் றெரியுமப்போது. (6)

ஆராதி ஞாரங்க ளில்லை-அத்தைத்
 தொட்டுப்பிடிக்க வென்றால்வெகு தொல்லை
காரண தேசிகன் சொல்லை-நம்பிக்
 கருத்தில் நிறுத்தியுங் காணலாமெல்லை. (7)

ஆறுலவத் தால்வந்த காயம்-அதில்
 ஐவரிருந்து தொழில்செய்யும்-ஞாயம்
காணவு மாம்போகு மாயம்-நன்றாய்க்
 கைகண்ட ருத்திரஞ் சொன்னே னுபாயம். (8)

மூட ருறவு பிடியாதே-நாரி
 மோக விகாரத்தால் நீமடியாதே
ஆடம் பரம் படியாதே-ஞான
 அமுதமிருக்க விஷங்குடியாதே. (9)

தானென்று வாது கூறாதே-பேசி
 தர்க்கங்களிட்டுச் சளன்று சீறாதே.
ஊனென்ற பாச மாறாதே-போனால்
 உன்றனை யுன்மனஞ் செத்தாங்கீறாதே. (10)

வந்த பொருளைத் தள்ளாதே-நீயும்
 வாராததற்குவீ ணாசை கொள்ளாதே
சிந்தை வசமாய்த் துள்ளாதே-சும்மா
 சித்திரம் போலிருந் தொன்றும்விள்ளாதே. (11)

தேக பாசபவ பந்தப்-அப்பொருள்
 சிற்றின்ப மானது சீச்சீதுற்கந்தம்
பாகம தானவே தாந்தப்-பொருள்
 பாவித்துப் பார்க்கி லுனக்கிதுசொந்தம். (12)

வஞ்சிய ராசை யாகாதே-அந்த
 மயக்கமானாற் கொஞ்ச மட்டிற்போகாதே
அஞ்சி யமன்கைச் சாகாதே-கெட்ட
 ஆசாபாசமந் நெருப்பில் வேகாதே. (13)

கல்வி மயக்கங் கடந்து-கல்லாங்
கற்றேறுமென் றெண்ணுங் கசட்டைத்தொலைந்து
சொல்வெப் பிறுலே கிடந்து-இரு
சூட்சாதி சூட்சத்தி லாசைபடர்ந்து. (14)

ஓடித் திரியுங் கருத்து-அதை
ஓடாமற் கட்டிப் பிடித்துத் திருத்து
நாடிக் கொண்டம்மைப் பொருந்து-அந்த
நாதாந்த வெட்டவெளிக் குள்ளிருந்து. (15)

சாண்வயிற் றலையாதே-மிதம்
சஞ்சலப்பட்டுக் கொண்டே மலையாதே
ஆறுவத் தாறலை யாதே-உனக்
கானந்த முத்தி யதுநிலையாதே. (16)

அபிமானி யாகிய ஜீவன்-அவன்
அஞ்ஞானத்தாலே அழிவுண்டு போவன்
தபம்பிழைத் தாற்போதகம் சார்வன்-நிலை
சார்ந்து கொண்டாற்சத்தி ரூபமுமாவன. (17)

சற்குரு சொன்னதே சொல்லு-தம்பம்
காட்ட வென்றல்வன்னி நிலையிலே நில்லு
துர்சம யங்களை வின்று-உண்டு
தன்மயமாகவே தானேநீ கொள்ளு. (18)

துன்ப வின்பங்களைத் தொட்டு-அந்தத்
தொந்தங்க ளெல்லாந் துருசறச்சுட்டு
பின்பு பாசத்தைக் கைவிட்டு-ஒன்று
பேசாம லந்தம் பெருமையைவிட்டு. (19)

பேச்சிறு லென்னென்ன தோனும்-சும்மா
பேசப்பேசப் பிழையல்லோ காணும்
வாக்கதா லாலம்பு பூனும்-நல்ல
மாசற்ற ஞான விசாரணைவேணும். (20)

அநித்திய மானது தேகம்-அதி
லாசையு மொன்றா லடங்காது மோகம்

தனித்திருந் தாலந்த போகம்-ஒன்று
　　தாறுகி யிப்பது வெகுவிவேகம். (21)

விருப்பாசைக் கிடங்கள் கொடாதே-காய
　　வேதனைக் குள்ளேநீ கட்டுப்படாதே
திரும்பச் செனனம் எடாதே-குரு
　　தேசிகன்பாதத்தி லன்பு விடாதே. (22)

கோடான கோடி தவங்கள்-அக்கக்
　　கோவிலைச் சுற்றிச் செபிக்குஞ் செபங்கள்
பாடான தல்லலா பலங்கள்-இது
　　பண்ணுமுன் னண்ணுமத் துன்பமலங்கள். (23)

அந்தக் கரணவி லாசம்-அதை
　　யாராலுந் தள்ளக் கூடாதுபிரயாசம்
தொந்தித்து நிற்பதே பாசம்-அதிற்
　　றென்றுமற் றென்றுஞ் சுயம்பிரகாசம் (24)

நாமசொ ரூபமே சித்தி-அதை
　　நாடித் தெளிந்துகொண் டாலல்லோ முத்தி
சேம சொரூபமே சித்து-எங்கும்
　　நிட்சய மாகும் நிரந்தரவஸ்து. (25)

கஞ்சமலைச்சித்தர் பாடல் 25.

முற்றிற்று.



திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது பட்டம் ஸ்ரீதெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



பரமபதி துணை.

பதிமூன்றாவது

புலிப்பாணி முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

பூஜாவிதி 50.

அத்திமுகன் றனையளித்த அரனேகாப்பு
    ஆகிலமெங்கும் நிறைந்துநின்ற அருளேகாப்பு
முத்திதரும் வேதாந்த முதலேகாப்பு
    முப்புரத்தைத் தகித்தெரித்த பரனேகாப்பு
சத்தியொரு பாகம்வைத்த அரனேகாப்பு
    சங்கரனே அம்பரனே ஞானமூர்த்தி
வெத்தியாம் சிதம்பரத்தின் பூசைமார்க்கம்
    விளம்புகிறேன் கணேசனுட பாதங்காப்பே; (1)

காப்பென்ற பிருதிவியி லைம்பதாகும்
    கனமான அப்புதனிற் பதினொன்றாகும்
வாப்பென்ற தேய்வுதனில் நாலதாகும்
    வளருகின்ற வாய்வுதனிற் பதினைந்தாகும்
தாப்பென்ற ஆகாயந் தனக்குமைந்தா
    தன்மையுட னீராறு தானேயாகும்
நாப்பென்ற நடனமிடுஞ் சிதம்பரத்தின்
    நல்லதொகை யைம்பத்தொன் றாகத்தானே. (2)

ஆகமாய்ப் பாடுமுன்னே நவசித்தாதி
    அதன்பிறகு நவகோடி கோடாகோடி
பாகமாய் ஆச்சதென்று பேசிக்கொண்டு
    பரமசிவன் சாபமிட பாலித்தார்காண்
ஏகமாய்ச் சாபமிட்டார் வாமத்துக்கு
    இயல்பான அட்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமாய் உயிர்களைத்தான் வாங்கிப்போட்டார்
    போட்டதனால் நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே.

போச்சுதென்று அலையாமற் சிவனுத்தாரம்
பூட்டியே கேட்டோ ரிந்நூலில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லாம் அருளிச்செய்தேன்
ஆகார சாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணாமல்
காச்சுதென்று காச்சிவிட்டேன் உலகத்துள்ளோர்
கண்டவருக் கிந்நூல்தான் சித்திமுத்தி. (4)

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
மூடருக்கும் வீணருக்குங் காட்டொணாது
சத்தியிது சம்புவிது ஒன்றாய்ச்சொன்னேன்
சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்திறர் சாபத்தை நிவர்த்திசெய்து
ஏத்திறற் றீட்சைதா னெளிதிலாகும்
புத்தியுட னிந்நூல்தா னோர்க்குங்கிட்டாப்
புண்ணியருக் கிதுகிட்டும் பொருளோப்பாரே. (5)

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
புகட்டினேன் சாபமது பொய்யாய்போக
அருளான சிவயநம அம்உம்என்று
அப்பனே சிம்கிலீம் ஸ்ரீம்ஓம்என்றே
மருளாமல் ரம்யம்யம் ஓம்என்றேதான்
மாட்டுவாய் லட்சமுரு வேற்றினக்கால்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே. (6)

காணப்பா ஆறுவரை குறுக்கேகீறி
களங்கமில்லா தாறுவரை நேரேகீறி
ஆணப்பா விருபத்தஞ் சறையுமாச்சு
அடைவான முனைதோறும் சூலம்போடு
தாணப்பா முதலறையில் நாலுகோணம்
தயவான நகாரமொடு அகாரங்கூட
வாணப்பா ஐயோடு உகாரந்தோறும்
வளமான லக்கமது ஒன்பதாமே. (7)

ஆமப்பா அடுத்தரையிற் பிறைதான்கோணம்
அடைவான மகாரமொடு இகாரங்கூட்டத்
தாமப்பா இவிமேயாடு யகாரந்தானும்
தயவான லக்கமது பதினெழுந்தாகும்
வாமப்பா அடுத்தரையில் முக்கோணந்தான்
வளமான சிகாரமொடு உகாரந்தானும்
நாமப்பா சவ்வுடனே நகாரந்தொட்டு
நலமான லக்கமது நாலுமாமே. (8)

ஆமடா யிதனருகே அறுகோணந்தான்
அடைவான வகாரமொடு எகாரந்தானும்
தாமடா ஸ்ரீமுடனே யகாரங்கூட்டத்
தயவான லக்கமது பதினொந்தாகும்
வாமடா யிதனருகே வட்டம்போடு
வளமான யகாரமொடு ஓகாரந்தானும்
நாமடா ஹரீஓம் என்றுகாட்டி
நலமான அகாரலக்க மீராறாமே. (9)

ஆரப்பா தம்பனத்தின் மகிமைமெத்த
அப்பனே தம்பனம்போ லுண்டோவித்தை
வாரப்பா அஞ்செழுத்தின் பீசஞ்சொல்வேன்
வளமான சிகாரத்தில் நகாரம்வைநீ
நாரப்பா யகாரத்தில் மகாரம்வைநீ
நலமான வகாரத்தில் சிகாரம்மாட்டு
காரப்பா மகாரத்தில் வகாரம்மாட்டு
கணக்காக நகாரத்தில் யகாரமாட்டே. (10)

மாட்டடா அஞ்செழுத்துக் காணும்பெண்ணும்
வரைதோறும் பீசத்தை அனுகமாட்டு
வாட்டடா பீசமில்லா விட்டால்மைந்தா
வளமாகப் பலியாது பீசம்விட்டால்
ஆட்டடா அஞ்செழுத்தின் தொகைதான்கேளு
அகாரமுதல் நகாரம்வரை ஒன்பதாச்சு
கூட்டடா மகாரமென்ற மால்தனக்குக்
கொள்அகர முதல்மகாரம் பதினொன்றாச்சே. (11)

ஏச்சப்பா சிகாரமென்ற ருத்திரற்கு
    இகரமுதல் சிகாரம்வரை நாலதாகும்
பச்சப்பா வகாரமென்ற மகேசனுக்குப்
    பதிஅகர முதல்வகாரம் பதினோந்தாச்சு
விச்சப்பா யகாரமென்ற சதாசிவற்கு
    மேல்அகாரம் முதல்யகாரம் மீராறாகும்
காச்சப்பா ஐம்பத்தோ ரெழுத்தானாய்
    கருதிநின்ற சிதம்பரற்குக் கண்டான்மூன்றே. (12)

மூன்றான கவினையை எடுத்துமாறி
    முன்வரைந்த சக்கரமே ரூபத்தஞ்சில்
நான்றான குலத்தி னிடைகள்தோறும்
    நாயகனே ஹ்ரீயும்ஸ்ரீயும் என்றுமாட்டு
பான்றான குலமுனை ஸ்ரீமம்போடு
    பண்பான திரிவட்டம் பாங்காய்ச்சூட்டு
வென்றான உள்வட்ட மிதழ்நான்றன்று
    உத்தமனே யிருவட்ட மிதழ்யெட்டே. (13)

எட்டான திரிவட்டம் எண்காண்கப்பா
    இதமாக நடுவட்ட முதலாம்ஆதி
அட்டான அகாரமுதல் ஓகாரமட்டும்
    அணிவாக ஐம்பத்தி யொன்றுமாச்சு
இட்டான உபரேகை வாசல்நாலு
    கீழ்வாசல் கணபதிக்குக் கங்குநாட்டு
நட்டான மேல்வாசல் வடுகன்பீசம்
    நாயகனே வங்கென்று நாட்டிடாயே. (14)

நாட்டியே தென்வாசல் பிரிதிபீசம்
    நலமாக இம்மென்று நாட்டிநாட்டு
கூட்டியே வடவாசல் மதியின்பீசம்
    குணமாகச் சம்மென்று குறித்தும்போடு
ஆட்டியே உபரேகை வீதிக்குள்ளே
    அடைவாக இந்திரனில் லம்மாம்பாரு
வாட்டியே அக்கினியில் ரம்மென்றப்பா
    வளமாக யமனிற்சம் மென்றுபோடே. (15)

போடவே நிருதியிலே டம்மையாகும்
பொரிவான வருணனிலே வம்மையாகு
சாடவே வாய்வுதனில் பம்மைபோடு
சார்வான குபேரனிலே ளம்மைநாட்டு
வீடவே ஈசானியம் சம்மைசேரு
விதமான அஷ்டதிக்குப் பாலராக்கு
ஆடவே போகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி பாடினேனே. (16)

பாடினேன் தமிழெழுத்தில் அகாரந்தொட்டு
பண்பான பிரணவத்தின் வரைக்கும்போடு
கூடியே தமிழெழுத்தில் அகாரந்தொட்டு
கொற்றவனே ஔவரையி லுயிராய்ப்பாரு
ஆடியே அசாங்கமென்ற எழுத்தோபத்து
அப்பனே சக்கரத்திற் சுத்திப்போடு
நாடியே சக்கரத்தில் சுத்திப்போட
நலமாக பீரஞ்சு எழுத்துமாச்சே. (17)

ஆச்சப்பா அசையுட எழுத்தச்சம்அம்
அடைவாக மேல்வாசல் கீழேபோடு
பாச்சப்பா வலமங்கி சத்திபீசம்
பண்பாக அம்மென்று பதித்துப்போடு
வாச்சப்பா இடம்பார சத்திபீசம்
வளமாகக் கிரீமென்று குறித்துப்போடு
வீச்சப்பா வலப்பாக மிடப்பாகந்தான்
விதமான ஐயுங்கிலியும் சவ்வுமாமே. (18)

ஆமடா அம் இம் உம் எம் ஒம்மென்றே
அப்பபஞ்ச பக்ஷியிரு புறமும்போடு
வாமடா அம்சம் ஸ்ரீயும்மென்று
வளமாக மந்துடனே நசிவென்றோது
தாமடா கிறீம்முடனே றீமுங்கூட்டித்
தயவான கிம்முடனே அங்கியென்று
நாமடா நவக்கிரக பீசமாக்க
நலமான சக்கரத்திற் சுத்திப்போடே. (19)

போடப்பா சொருபியென்ற வெழுத்தையப்பா
    புகழ்தருவம் கிலியல்லோ மதனபீசம்
நாடப்பா கீழ்வாசல் மேலேயப்பா
    நலமாக பீரிரண்டும் பதித்துப்போடு
கூடப்பா சிதம்பரத்தின் பூசைசெய்யக்
    கூத்தாடுங் கணங்கள்முத லெல்லாமாடும்
ஆடப்பா போகருட கடாக்ஷத்தாலே
    அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. (20)

பாடியே அகாரத்தி லுகாரமிட்டுப்
    பண்பான ஓங்காரங் கொண்டுகட்டு
நாடியே அதன்கீழே மகாரமிட்டு
    நலமாக வதின்மேலே றீங்காரந்தான்
கூடியே அரிஎழுத்து மேலேதாக்கிக்
    குணமாகச் சூலமிட்டு ஸ்ரீமட்காட்டு
ஆடியே சிங்குவங்கு மென்றுநாட்டு
    அடைவாயே சாட்சாத்தைப் பதித்துப்போடே. (21)

போடுசிந்தா மணிக்குச்சி காரமிட்டு
    பொங்கமுடன் மகாரமொடு யகாரம்போடு
ஆடவே அகாரமுடன் விந்தைப்போட்டு
    அடைவாஞ்சக் கரத்தில்திரு வாசிகூட்டுக்
கூடச்சிந் தாமணிக்குப் பீசமாக்க
    குணமான சக்கரத்திற் பதித்துப்போடு
நாடியே போகருட கடாக்ஷத்தாலே
    நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (22)

பாடியே வலப்புருவம் அகாரம்போடு
    பண்பான இடப்புருவம் ஆகாரந்தான்
நாடியே வலக்கண்ணு இகாரம்போடு
    நலமான இடக்கண்ணு ஈகாரந்தான்
சாடியே வலக்காது உகாரம்போடு
    சமத்தான இடக்காது ஊகாரந்தான்
வாடியே வலக்கன்னம் ருகாரம்போடு
    வடிவான இடக்கன்னம் ரூகாரநாட்டே. (23)

நாட்டடா வலமூக்கு இல்லாவென்று
நாயகனே இடமூக்கு சல்லாவாகும்
ஆட்டடா மேலுதடு ஏயைப்போடு
அடைவான கீழுதடு ஊயைப்போடு
கூட்டடா மேற்றந்தம் ஒவ்வைப்போடு
குணமான கீழ்த்தந்தம் ஔவ்வைகாட்டு
மாட்டடா நாவுதிலே அம்மென்றப்பா
மணியான கண்டத்தில் அகாரமென்றே. (24)

என்னவே சக்கரத்திற் பதித்தபின்பு
இதமான சாபங்கள் நிவிர்த்திசெய்து
கன்னவே பிராணபிர திஷ்டைசெய்து
கனிவாவோம் பூசைசோடசமுஞ்செய்து
அன்னவே சுகந்தபரி மளங்கள்புஷ்பம்
அடைவாக வர்ச்சித்துக் கனிகளோடு
தன்னவே பலகாரம் பரமான்னங்கம்
தாம்பூலம் இளநீரும் பாலுந்தேனே. (25)

தேனான பாலோக்கம் அன்னத்தோடு
தெளிவாகு மாறுசுவை வஸ்துசத்தி
தானான சருவமும் சுத்திவைத்துத்
தயவாகப் பூசித்துத் தியானமோது
வானான கற்பூரத் தீபமேற்றி
வணங்கவே அஷ்டசித்தாம் சித்தியாகும்
மானான அஷ்டசத்தி நடனஞ்செய்வாள்
வானவரும் லோகமெல்லாம் வசியமாமே. (26)

ஆமேதான் யநமசிவ வசியமாகும்
வளமான நமசிவய தம்பனந்தான்
தாமேதான் மசிவயந மோகனந்தான்
தன்மைபெற சிவயநம மாரணந்தான்
நாமேதான் வயநமசி யுச்சாடனம்
நலமான யவசிமந பேதனந்தான்
பாமேதான் நமவசிய வித்துவேஷம்
பண்பாக வசிமநய அழைப்புமாமே. (27)

ஆமடா காரியம் வசியமாகும்
அப்பனே பிந்தனே போ கனமோகித்தி
தாமடா பகல்போல் நானாகுற்பமாகும்
தயவான செய்யுதல் பலமேசெய்யும்
வாமடா வெஸ்ரியம் உச்சாடிக்கும்
வளமாம்வெங் கலக்கித்து வேதனைத்தான்
போமடா யிருப்புபே தனமேயாகும்
பொங்கமுடன் வெள்ளிமா பனைக்காறுமே. (28)

தாவென்ற தம்பரங்கள் கொடியுமாகும்
தயவாகத் தான்பூசி வுலமர்போக்கி
ஊவென்ற முப்புரவி மதியின்பேசம்
உத்தமனே புடன்கட்டிக் அபிலம்வாக்கி
ஆவென்ற அஷ்டகாம வெட்டெட்டிக்கும்
அடைவான தொழில்முறைக்கு மெல்லாமாகும்
நாவென்ற போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (29)

பாடியே மோகனைதம் பனைவசியம்
பண்பான அழைப்புமுத லிவைகாலுக்கும்
வாடியே ஆள்காட்டி விரலேனீளம்
வளமாகப் பெருவிரலி னகலமப்பா
சாடியே மாரணமே தனைவித்வேஷம்
சார்ந்திடுமுச் சாடனங்க ளிவைகாலுக்கும்
கூடியே பவுத்திரவிரல் நீளமப்பா
குணமான சிறுவிரலி னகலமாமே. (30)

ஆமடா யிரையாறு வீசமாகும்
அப்பனே பன்னிரண்டு அரைக்காலாகும்
தாமடா மூவெட்டுக் காலேயாகும்
தயவாக இதினிரட்டி அரையேயாகும்
வாமடா யிதினிரட்டி முழுதென்பார்கள்
வளமான கனமப்பா தெற்கனத்தான்
காமடா வீசமது ஒருநெல்லாகும்
நலமான சிதம்பரத்தின் பூசைகாணே. (31)

வாரம்.

காணப்பா ஞாயிறதில் வசியமாகும்
கண்மணியே செவ்வாய்மோ கனமாகும்
தாணப்பா வியாழனுமுச் சாடனந்தான்
தகைமைபெறும் திங்கள்தம் பனமாம்பாரு
வாணப்பா புதனில்மா ரணமதாகும்
வண்மைவெள்ளி வாரமதி லழைப்பதாகும்
நாணப்பா சனியில்வித் துவேஷணந்தான்
நலமான ஞாயிறுபே தனக்காகுமே. (32)

திக்கு.

நாமேதான் ஈசான்யம் வசியமாகும்
நலமான அக்கினிமோ கனமாம்பாரு
தாமேதான் நிருதியினுச் சாடனந்தான்
தலைமைபெறும் இந்திரன்தம் பனமதாகும்
வாமேதான் எமன்மா ரணமதாகும்
வளமான வருணனது அழைப்பாம்பாரு
காமேதான் வாயுவித்து வேஷணந்தான்
கனமான குபேரன்பே தனமாம்செய்யே. (33)

செய்யவே ருத்திராக்ஷம் வசியமாகும்
செயலான மிளகுமணி மோகனந்தான்
அய்யவே துளசிமணி உச்சாடனம்
அப்பனே தாமரைதம் பனமாம்பாரு
நையவே நாகமணி மாரணந்தான்
நலமான சங்குமணி அழைப்பதாகும்
வையவே வெட்டிமணி வித்துவேஷம்
வளமான பேதனம்வெண் முத்துத்தானே. (34)

பலகை ஆசனம்.

தானென்ற பலாப்பலகை தம்பனந்தான்
தன்மைபெறும் மாம்பலகை மோகனந்தான்
நானென்ற வில்வமது வசியமாகும்
நல்லேயத் தேத்தான்பே தனமதாகும்
கானென்ற எட்டிவித்து வேஷணந்தான்
கண்மணியே அத்தியும்மா ரணமதாகும்
வானென்ற அழைப்புவெண் நாவலாகும்
வளமாம்வெப் பாலையுச்சா டனமாம்பாரே. (35)

பாரப்பா மல்லிகைதான் வகையதாகும்
பரிய [illegible] கனகமாகும்
ஆரப்பா அரளியது தான் சாட்சாத்தான்
அப்பனே அரளியா சிறுசண்பகத்தான்
வாரப்பா காக்ரணத்தி பிரியமாகும்
வளவான பேதன்று மத்தம்பூவு
நாரப்பா கடலைப்பூ மாரணத்தான்
நலமான தாமரைதம் பணத்தாறுமே. (36)

பட்டு வஸ்திரம்.

ஆமப்பா செம்பட்டு வகையதாகும்
அப்பனே மஞ்சளது மேகனத்தான்
நாமப்பா பச்சையுத்தம் பனமதாகும்
நலமான வெள்ளையது பேதனத்தான்
காமப்பா கருநைதிறம் வேடனத்தான்
கண்மணியுச் சாடனத்தான் பஞ்சவர்ணம்
வாமப்பா ஆத்மதவர்ணம் அழைப்பதாகும்
வசமான கறுப்புமா ரணமாங்கேளே. (37)

ஓமகுண்டம்.

கேளப்பா மணலில்நவ கோணமாகக்
கீற்ப்போட்டு மணலாலே கட்டிக்கொண்டு
வாளப்பா கிழக்குமுகம் பார்வையாக
வளமான மணலாலே பரப்பிக்கொண்டு
ஆளப்பா நவகோணம் நடுவேலைமந்த
அப்பனே சாண்திகளஞ் சதுரந்தோண்டி
நாளப்பா சமுத்துவகை சொல்லக்கேளு
நலமான அரசிலொடு மாவின்சப்பி. (38)

சப்பென்ற புங்கினொடு அத்திக்கொம்பு
சொல்வெட்டி வேர்விழா மிச்சியோடு
அப்பென்ற ஆலுடன்மல் லிகையின்சப்பி
அப்பனே நெல்லிசப்பி நவ்வல்சப்பி
கப்பென்ற அத்திசப்பி யிலுப்பைசப்பி
கண்மணியே பேயத்திச் சப்பிலோடு
நப்பென்ற கடுகுரோ கணியுங்கூட
நலமான யெருக்கினொடு கள்ளிக்கொம்பே. (39)

கொம்பாம்பன் றுறுமா ரணத்துக்காகும்
　　கொடிகாம்பேவப் பெண்ணெம்மா ரணத்துக்காகும்
கம்பான வென்றாவிற் சமித்துவேமரவிணாய்
　　கம்பவியாளிப் பெல்லாமற் றிறத்துசொன்னேன்
அம்பான சிதம்பாத்தின் நடனக்காண
　　அப்பனே [illegible] சுவிசி சுற்றுப் சொன்னேன்
வம்பான மேபாகருடை [illegible]
　　வளமாகச் சிதம்பாத்தின் பூசைபாரே. (40)

மூலமந்திரம்.

வசியம்-ஓம் யநமசிவ அரிஓம் ஐயும்கிலியும் சுவாகா.
தம்பனம்-ஓம் மசிவய ஐயுங்கிலியும் சவ்வும் சுவாகா.
மோகனம்-ஓம் மசிவயந கிலியும் சவ்வும் ஸ்ரீயும் சுவாகா.
மாரணம்-ஓம் சிவயநம சவ்வும் ஸ்ரீயும் அரிஓம் சுவாகா.
உச்சாடனம்-ஓம் வயநமசி ஸ்ரீயும் அரிஓம் ஐயும் சுவாகா.
பேதனம்-ஓம் யவசியந அரிஓம் ஸ்ரீயும் சவ்வும் சுவாகா.
வித்துவேஷணம்-ஓம் நமசிவய ஐயும் கிலியும் ஸ்ரீயும் சுவாகா.
அழைப்பு-ஓம் வசியநய ஸ்ரீயும் சவ்வும் கிலியும் சுவாகா.

பகவதி தியானம்.

பாரப்பா இன்னமொரு திட்டமார்க்கம்
　　பத்தியுள்ள பாலகனே சொல்லக்கேளு
நேரப்பா பகவதியாள் தியானந்தன்னை
　　நேர்மையுடன் சொல்லுகிறேன் நிசமதாகச்
சாரப்பா தன்சார்பு நிலையில்நின்று
　　சங்கையுடன் ஒப்றிக்கு உங்கென்றேதான்
காரப்பா புருவநடுக் கமலத்தேதி
　　கருணையுட ஞயிரத்தெண் ணுருவேசெய்யே. (41)

செய்யடா மானதமா யுருவேசெய்யத்
　　திருவுருவாய் நின்றபக வதியாள்தானும்
மெய்யடா வுனதிடமாய் நடனஞ்செய்வாள்
　　மெய்ஞ்ஞானக் கருணைவிழிக் கண்ணாற்பார்த்துக்
கையடா கூப்பியடி பணிந்துகொண்டு
　　கருணைபா தேவதா பகவதிவாவென்று
வையடா அமுதரச பானம்வைத்து
　　மார்க்கமுள்ள ராஜராஜேஸ் பரியேயென்னே. (42)

என்னம்மா ராஜராஜேஸ் பரியென்று
ஏகசிர மயமாகத் தியானம்பண்ணிக்
கன்னம்மா கமலாசனி மந்திரந்தி
கபலசித்து ருபிசிவ சோதித்தாலே
முன்னம்மா யிருந்து வென்னைக்காத்து
முத்தியுடன் கிளைத்தபடி சுத்தமாகப்
பன்னம்மா யிதுசயம் மென்றுநீயும்
பதிவாக விதிபூசைபரி தரித்துக்கொள்ளே. (43)

கொள்ளடா விபூதியை தியானம்பண்ணிக்
கூசாமல் நெற்றியிலே அணிந்துகொண்டு
நில்லடா வுன்சமூகங் கண்டோர்க்கெல்லாம்
நீங்காத பாவமெல்லாம் நீங்கிப்போகும்
சொல்லடா உன்வசனம் நன்மையாகும்
சோதிதிரு பகவதியாள் அருக்கிறாலே
அல்லடா உன்மனதை நோகப்பண்ணும்
அவர்கள்குடி செந்தியிலே அழுந்தும்பாரே. (44)

பாரப்பா பகவதிசென் றிருக்குந்நாடு
பாதாள மலையாள நடோடாகும்
காரப்பா மலையாள நடேசடையா
கண்டறக்கு மந்திவென்ற வுச்சிவட்டம்
நேரப்பா வுச்சிவட்ட மலையாளத்தில்
நிலையான பகவதியை பார்தான்காண்பார்
ஆரப்பா அறிவார்க ளாறுமில்லை
அந்தமலை யுச்சியடி வாரம்பாரே. (45)

பாரப்பா உச்சியடி வாரமான
பதிவான மலையாள பகவதிதன்பீசம்
கோரப்பா சொல்லுகிறேன் ஸ்ரீம்றீங்கென்று
நிலையான மலையாளத் தருவபீதிற்
சாரப்பா சார்ந்துமந்த அடிவாரத்திற்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணிக்
காரப்பா அக்கினிகொண் டேயாவேறிக்
கண்ணாரியக் கண்ணாறாத் தியானம்பண்ணே. (46)

பண்ணப்பா பகவதியைத் தியானம்பண்ணப்
பாஞான கேசரியிற் பரிசென்றேதான்
உண்ணப்பா நிறைந்திருக் கண்ணிற்றேனும்
உக்திதரு மவ்வொளியில் நின்றுபாரு
மண்ணப்பா குவிந்தமதி யானத்தன்னில்
மக்களோ வெகுமதிகள் காணலாகும்
எண்ணப்பா அதனில்வெகு சோதிகாணும்
எங்ஙுமக்கண் ஞகவேதி நின்றுபாரே. (47)

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தாமைந்தா
நிசமாக வருநோடு பொருளுங்கண்டேன்
அண்டரொடு முனிவர்களும் ரிஷிகள்சித்தர்
அநேகவிதம் விதவிதமா யங்கேகண்டேன்
பண்டுடைய வேதமொடு சாஸ்திரங்கள்
பலவிதமாய் நின்றுவிளை யாடல்கண்டேன்
கண்டதொரு காட்சியெல்லா மங்கேகண்டேன்
கலந்தவெளி வெளியான கருக்கண்டேனே. (48)

கருக்கண்டு கருவறிந்து உன்னும்போது
கருவுருவாய் நின்றதொரு நாதங்கண்டேன்
உருக்கொண்டு நின்றதொரு நாதந்தானும்
ஓமுடிந்து நின்றவிடம் பார்க்கும்போது
திருக்கண்டு ஆடியது முடிந்ததப்பா
சிவசிவா வென்னசொல்வேன் வெளிதானுச்சு
மருக்கொண்டு நின்றவெளி தன்னைக்கேளு
மகத்தான அண்டவெளி உச்சிதானே. (49)

உச்சியென்ற மூலமடா ஆர்தான்காண்பார்
உண்மையென்ற ரகசியத்தை வெளிவிடாதே
பட்சியென்ற பட்சியடா அண்டரண்டம்
பாய்ந்துநின்ற மத்தியடா புருவமத்தி
குச்சியென்ற கோலநுறை ளைந்துபார்க்கக்
கொடிமுடிக்கும் அடிப்படைக்கும் மிச்சமாச்சு
உச்சமென்ற மாளிகையில் நின்றுபார்த்தால்
ஓங்காரக் கம்பநுனி மிச்சமாச்சே. (50)


ஆச்சப்பா மிச்சமதாய் நின்றமிச்சம்
அண்டமென்ற சுழுனையிலே நின்றுபார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம்பார்த்தால்
கம்பநுனி கற்பூர தீபம்போலே
பேச்சப்பா பேசாத சோதியாச்சு
பிரணவமாய் நின்றதொரு சோதித்தாயே
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
மூனைகண்டு கம்பமதி லேறினேனே. (51)

ஏறினேன் சவுதகிரி வட்டமேறி
யேகாந்த வெளியொளியைப் பார்த்துமைந்த
வீறினேன் அகாரமதிற் செயல்தன்னாலே
மின்னொளியி னமுர்தரச பானங்கொண்டு
தேறினேன் சாகாத கால்மேல்நின்று
தெளிந்துகொண்டு போகாத புனலைக்கண்டு
ஆறினேன் வேகாத தலையைக்கொண்டு
அடங்கினே னெப்பொழுது அடங்கினேனே. (52)

புலிப்பாணி முனிவர் பூஜாவிதி 50
முற்றிற்று.



சாப்டூர் அரமனையார் களஞ்சியத்தில் வசிக்கும் கணபதிப்பர தேசியவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பராபதி துணை.

பதிஞலாவது

கௌசிக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் 30.

ஓங்காரச் சுழிமுனையி லொளிவுமாகி
　　ஒன்றாகி யிரண்டாகி யுலகமாகி
றீங்காரப் பெருவெளியா யணுவதாகி
　　நிரந்தரமா யருவுருவா யல்லாதாகி
ஆங்கார மத்துவித நிலையதாகி
　　அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
ஸ்ரீங்கார நடுவணைமூச் சுடருமாகிச்
　　சித்தான வஸ்துதனைச் சிந்தைசெய்வாம். (1

அகாரமல்லோ கருவுடனே விந்துமாச்சு
　　அகாரமல்லோ அன்னையொடு தந்தையாச்சு
அகாரமல்லோ ஆடுகிற வித்தையாச்சு
　　அகாரமல்லோ கண்காணு தெட்டதாச்சு
அகாரமல்லோ மதியுடனே விதியுமாச்சு
　　அகாரமல்லோ அகண்டபர வெளியுமாச்சு
அகாரமல்லோ குருவுடனே சீடனாச்சு
　　அகாரமடா வுபதேசப் பொருளுமாச்சே. (2)

ஆச்சப்பா அகாரமுட னுகாரமாகி
　　அருளொளியா யிருந்தானே ஆத்தாளாத்தாள்
பேச்சப்பா வயதுபத்து னென்னையீன்றாள்
　　போனா ராசிகன்னி விண்மீன்சோதி
நீச்சப்பா பூர்வமெனுங் கசமிதன்னில்
　　நிராமயத்தின் பேருரைத்து யெனையழைத்து
மூச்சப்பா ஆதியென்ற பொருளதாகி
　　முழங்குகின்ற மூலமந்திரஞ்சொன்னாளே. (3)

சொன்னபதி சென்றிருந்து வாழ்ந்தேனப்பா
சுத்தகந்து வக்கொண்டாறுந் தாமுடிப்போமே
இன்னமன்றிச் சார்ந்திருக்க வேண்டிக்கொண்டேன்
இணைங்காதா லவர்களையுந் கட்டிவிட்டு
அன்னையின்றன் சத்தியக் குவத்தேயின்றேன்
அதன்மேலென் னுடன்பேசப் பனிரண்டாண்டு
கன்னயமாய்ச் சென்றபின்பு பேசாப்பேச்சை
கவின்றுமைப் பொருள்கன்று பதிவென்பாரே. (4)

பாரடா ஆம்மென உளம் மென்றேனித்தைப்
பகருதற்கு ஆண்டுபதி மூன்றேயானால்
சேரடா மற்றசொர் சொல்லதெப்போ
தென்றாயின் தெரிந்துகொண்ட வுண்மையாலே
கோடா பதியாறுங் கண்டுகொண்டேன்
கிலையாகப் பதிமூன்று கோணத்துள்ளோ
சீரடா வெனதன்னை யிருந்தருட்சம்
செப்பவென்று வெட்டாத பொருளிதாமே. (5)

ஆமப்பா தாயவரும் வளருப்வீட்டில்
ஆறேறு புருவமையத் தேகமாக
தாமப்பா தலைமாறு சகோருகத்திற்
சதிராகப் பதியுடனே நடனந்தானும்
தோமப்பா வென்றுடுங் காலைக்கண்டேன்
சொருபமூட னடமாடுங் காலைச்சொல்ல
காமப்பா மாசற்ற துரியாதீத
நடனவொளி யானதையுந் தெரிந்துகொள்ளே. (6)

கொள்வதென்ன கேள்கிட்டி மடக்குக்காலின்
குறிப்பறிந்து வாய்மைபிலே தனிமேலின்று
கள்ளமன்றிக் கால்இறக்குந் திறவுகோலைக்
கண்டுகொண்டாற் பூரணத்தின் புதுமைகாணும்
தெள்ளமுத வெள்ளமது பழமையாகிச்
சிந்துமடா வாறுதலத் துள்ளேயீறி
வள்ளஞ்செல் விதமிரண்டு கரையுஞ்செல்லும்
வகைகண்டு பதினெட்டுப் பேருக்தானே. (7)

தானான நவமாகி யறுமூன் றாகித்
　　தன்மையருட் புனலதனிற் படிந்திட்டாரே
வேறான மூவர்களு மொன்றேயாகும்
　　வெளிதோறு தெவர்களையு மெச்சப்போட்டார்
நானான விட்டகுறை யார்க்கங்கண்ட
　　நல்லவர்க்குச் சாபமதை நிவர்த்திசெய்ய
வானான அக்கரத்தைத் தியானியென்று
　　வழுத்தினர் மந்திரோப தேசமென்னே. (8)

என்னசொல்வேன் பெரியோர்க்குப் பெருமையாச்சு
　　இதையறியா மாந்தர்களுக் கழிவுண்டாச்சு
முன்னமே பதினெண்பேர் சொன்னநூலை
　　முற்றுமுணர்ந் தேசோதி நிலையிலேறு
தன்மயமாய் மனதொருமை யாகக்கண்டேன்
　　நற்செம்பு கற்காடு யெல்லாம்நீரே
சொன்னநீர் கனலாச்சு பற்பமாச்சு
　　சோதிசெய லாற்றிடவே மெய்யென்றெப்பே. (9)

ஒப்பிடவே மூன்றுபொரு ளொன்றதாச்சு
　　உற்றபேச் செல்லாமங் கொடுங்கிப்போச்சு
அப்பனே லகிரியென்ற புரவியேறி
　　அப்பாற்செல் பொய்நீங்கி மெய்யேயாச்சு
செப்பாதே செகத்தோர்க்குத் தெரிந்தாற்போச்சு
　　செயலான சொல்லதுவும் பொய்யாய்ப்போச்சு
தப்பாதே நாம்பார்க்கத் தெளிவதாச்சு
　　தன்மூச்சால் மூச்சற்ற விடத்தைக்காணே. (10)

காணவே முக்காலுந் தப்பிடாது
　　கணக்காக அஷ்டசித்தி யிதனாலாகும்
தோணவிந்த நூலறியாக் கொன்றுமில்லை
　　சுத்தமுட னெட்டிரண்டு மறிந்துபாரு
நாணமற்று நூலறியா மடையரோடே
　　நாடிநீ கூடாமல் முத்திசித்தி
பேணவே வாலைபதி மூன்றுள்ளாகப்
　　பெருமையுடன் மதியமுத மங்கேயுண்டே. (11

உண்டிருப்பா யகுணோவிட்டு மாயைதன்னில்
உழன்றுபொருள் தேடிகா விளிக்கிறாதே
கண்டிடுவா யிந்தப்பூ ரணத்திற்சேர்க்கும்
மதிசேயுங் குருநுட்பன் மூன்றுங்கோணம்
விண்டிடுவா வெட்டிரண்டும் வீதியமைப்பும்
விட்டகுறை யுந்தானும் கடபன்மூன்றில்
பண்டான மலங்கழிய மூட்டிறைக்காற்
பவமகன்று முத்தியின் சித்திகேளே. (12)

கேளப்பா பன்மூன்று பதியிதன்னில்
கொடியார்த்து நாவுனர்த்து பூரணத்தை
மீளப்பா பொங்கப்பற் காத்தாயாருக்
விதமான காணமுடி யொளியேயகம்
வேளப்பா வேடிமதி கதிருந்தானும்
மேவியதோர் சோதியதைக் காணக்கூடும்
காளப்பா குதயகதி ரினமைவீசும்
நாடிப்பார் சொருபசித்தி மெய்யுமாமே. (13)

மெய்யான மண்டலமுங் குருவுமாக
மேவியதச் சோதியதங் குலங்கும்பாரு
செய்யாமற் றயங்காதே சத்தியஞ்சொன்னேன்
சிந்தைமகிழ்ந் தின்னமொரு கருவைக்கேளு
வைபவமாய்ச் சொல்லுகிறேன் சேர்க்கையாக
வளமான நாதமதை முன்னேதானும்
மெய்யப்பா வாங்கிமதி யுப்பினோடு
மேவுபொரி காரமிந்த மூன்றுமொன்றே. (14)

ஒன்றான இடைதசரா தத்தினோடு
உற்றபுரு கும்பமுச்சார் பலந்தான்கெந்தி
நன்றான வேழதனாற் கண்டேன்வேதை
ரகசியமீ தெகினாப்பெற்றான் மெச்சிக்கொண்டான்
வென்றியிதை யுடனிக் கோபஞ்சேர
விதமான கருவெட்டு மறைக்கும்போது
கன்றுடனே பசுச்சேருந் தன்மைபோலக்
கனவேந்தன் சார்துளிவிட் டேற்றுவாயே. (15)

ஏற்றசாக் கறுப்பத்தி காலுஞ்சாகும்
இதைமதியாற் காணாட மாடும்வேதை
போற்றுவா யிறுகிருரு வாகியுன்னைப்
பூரணத்திற் சேர்த்துவிடும் பொய்யிதல்ல
சாற்றியதை நம்பாம லலைக்கிடாதே
தாளிறப் பசுவுக்குக் கன்றங்கேது
காற்றிரமாய் ஊமையட் சரத்தையோதி
கள்ளமிலா வொன்பதுக்கு மாகுமென்னே. (16)

என்னவெட்டி ரண்டாலே சகந்தான்கண்டு
இயல்பான மனந்தேறிப் பாருபாரு
நன்மையிக்க தாற்பார்க்கக் குருவுமாச்சு
நாடுமே ரறுவாச்சு அறுமேமாச்சு
தன்மையா மவுனமல்லோ உடமென்றாச்சு
தலையனே அறிவிலு லறிவைப்பற்றி
ஒன்றிடவே அதீதமடா துரியாதீதம்
உற்றமனக் குவிக்குபூ ரணத்தைக்காணே. (17)

காணவே அன்னையுனக் கமுதமீய்வாள்
காரணமா மறுபிறவி யில்லையப்பா
தோணவே சொரூபமது வொன்றேயாகும்
சத்தெழுத்து விருபத்தி யொன்பதாகும்
பூணவே அருட்கண்ணாற் சூட்சம்பாரு
புகலான வுலகத்தி லகத்தைக்கண்டு
மாணவனே ஆச்சரிய மைம்பத்தொன்று
மகத்தான விருபத்தி யொன்றதாமே. (18)

ஆமப்பா சிவலிங்க மானமூலம்
அளவற்ற தேகமதற் கெல்லாமாதி
தாமப்பா யிரண்டொன்றாஞ் சுயம்புஸ்தானம்
தற்பரத்தி லிருபத்தொன் றாகும்பாரு
நாமப்பா நவசித்த சரியைசித்தி
நலமான மண்ணாம்விண் ஞானமூலம்
வாமப்பா மற்றதில்லை யிதனின்மூலம்
வளமான நவமூலஞ் சுயம்புதானே. (19)

சயம்பதுவே முன்னின்று முடித்தபேச்சு
சூட்சமெனும் மூலமதே யெல்லாமாச்சு
வயமான முப்பொருளோர் வடிவமாச்சு
வல்லவிடக் கண்ணறுத கற்பமாச்சு
பயனறியார் தமக்கிதுவே நரகமாச்சு
பாலமுடா மயிர்ப்பாலம் நெருப்பாறாச்சு
நயமான பதியறியக் கதியுண்டாச்சு
நாட்டிலே பேச்சொன்றும் பேசொண்ணாதே. (20)

ஒன்றாது பேச்சதனால் மோசமாகும்
உற்றறூச் சடக்கியுட் கருவைத்தொட்டு
அன்னைலெனுங் குருவோடு மூலந்தொட்டு
ஆச்சென்று தொட்டவிடம் பொன்றுமென்று
வன்னமுடன் குருசொன்னார் யானுஞ்சொன்னேன்
மண்டலத்தில் மற்றவர்க்கு விண்டிடாதே
விண்ணமிலா பூரணத்தின் கலைப்பாரு
மேலான வழிநட்ட வெட்டும்பாரே. (21)

வெட்டியே எட்டிரண்டால் விக்கைதக்கட்டு
விளங்கவே சால்றுல்சொற் கருவைப்பாரு
எட்டுதிரு வெழுமசைபை யெழுக்குள்ளே
ஈசனுடன் சத்தியிரண் டேகம்பாரு
வெட்டவெளி கண்டதொரு சித்தர்மெச்ச
விளம்புகிறேன் மறைப்புவித்தை நிர்க்கமாகத்
திட்டமுடன் மாதளம்பூ மலரும்பத்து
செப்பும்பூ வாதியேக போகந்தானே. (22)

தானான பூவும்பேய்ப் பிர்க்கன்மூலம்
தனிசித்த மனக்குரசம் காலுஞ்சேர்த்து
வேறான சமவிடையா யரைத்துவாங்கி
வையமதில் மனுளனுமே யிறந்தபோது
மானான மாதாழுங் கண்ணீரோடு
வகையுண்ணாப் பாலுடன்முற் கருவுஞ்சேர்த்து
கோனாக அதன்பின்பு மறைத்துவாங்கி
குளியானை யஞ்சபத்தும் வருத்துப்போடே.

போட்டுப்போ ரண்டவெண்ணெய் யெழுங்கூட்டிப்
புகலான யிருட்டறையிற் கலத்துத்தூரில்
நாட்டமுடன் மத்திக்கும் போதுசொல்வேன்
நான்முகத்தோன் சொன்னநால் வேதமொன்றாய்
தேட்டமுடன் கண்டறியா வெழுத்ததான
சிறந்தமொழி யேகமென்ப தானையூமை
வாட்டமில்லா துன்னியே மத்தித்தாக்கால்
வருகிறஞ்செம் மைப்பிரம வித்தையாமே. (24)

வித்தையாம் மாதுமா தளம்பூவாலை
வேண்டிமுன் மறைத்ததையும் வெளியாய்ச்சொன்னேன்
சித்தருக்குச் சகாயபல மிதிலேகாணும்
பிலேயாகக் கருமையைச் சிமிழில்வைத்துச்
சத்திபதம் தியானித்துச் சரீரத்துள்ளே
தானுமறைந் திருக்குறிய மொன்றாய்நின்ற
பத்தியாய் நந்திகுரு நாசிமூலம்
பார்த்தம்மா வென்றுபல விதமாய்ப்போற்றே. (25)

போற்றியே கருவிருந்த சிமிழைப்பாரு
புகழான சிமிழ்விழிக்குத் தோற்றதப்பா
சாற்றுவேன் சிமிழ்தோணைத் தியானந்தன்னைத்
தானேழு வெழுமசைப யிலங்கிநின்று
விற்றிருக்கும் கிரிமாவே லகிமாவென்று
வேண்டியகி மாமகிமா வாவாவென்றே
மாற்றமிலா கிரிகைசித்தி வாதசித்தி
வாவென்று யேழுதாஞ் சொல்லிப்பாரே. (26)

பார்த்திடவே சிமிழுனக்குத் தோணுமெய்யாய்ப்
பண்பான கடிகையே ழுக்குள்தானும்
நேர்த்தியுட னிதையறிந்து கருவாமையை
நீதிலதம் பணிவிடைதான் புருவமையம்
சேர்த்தியுடன் திலதமிடப் புவியிலுள்ளோர்
தேடியுனைப் பார்த்தாலும் யாருங்காணார்
பூர்த்தியாம் வெளிகண்டோ ருன்னைக்காண்பார்
புகழான குருவருளாற் பலித்ததானே. (27)

தானான திலதமிடப் பசாசபூதம்
தன்னிரவும் பகலுனக்குக் கண்ணிற்றோறாம்
வேறான பல்லோர்வாழ் கூட்டந்தன்னில்
வேணபடி சென்றுசத்த மிட்டானந்தான்
கோனான வுன்றனையு மொருவர்காணார்
குறிப்பறிவாய் நந்திகுரு மூலர்மைந்தா
வானான கருவூரார் செய்தவித்தை
மகிழ்வாய்ச்செய் யோகபடா சித்தனாமே. (28)

ஆமப்பா சிவயோகச் சிம்மைவேறாம்
அவனிதனில் மானிடர்க்கு மியங்கிடாதே
தேமப்பா சித்தர்க்குச் சித்ததாகும்
நீதமுள போகர்மனை மறிந்ததாகும்
தாமப்பா பூரணத்தை தெள்ளாந்தானைத்
தாரதலத்தில் மூவேழுந் தெரியலாகும்
நேமப்பா பிரகாசிக்குஞ் சத்திருபம்
நிலையான மூப்பாழுக் கப்பால்நீயே. (29)

நேயமிக்க நிற்குணத்தின் குறியைக்காண
நிராமயமே குருவாய்மூன் பாகத்தோன்றித்
தூயவெளி நிர்த்தனத்தைத் தோணச்செய்வார்
சுத்தபிர்ம சற்குணமும் நீயேயாவாய்
தாயகமா யட்டசித்தி மெய்யிற்காணும்
தானவனே நீயாகிச் சகிர்தனுவாய்
சேயனே யிந்நூல்தான் மெய்மையாகும்
சேகரமாய்க் கண்டறிவா யீதுமுற்றே. (30)

கௌசிகமுனிவர் ஞானசாஸ்திரம் 30

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த வத்திராயிருப்பு அ. மு. பாண்டியம் பிள்ளையவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

முருகன் துணை.

பதினைந்தாவது

மிருகண்ட மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

மெய்ஞ்ஞானம் 30.

ஆதிபரா மானகுரு பாதந்தன்னை
　　அனுதினமு மனதிருத்தி யருளைப்போற்றிச்
சோதியாம் மெய்ஞ்ஞான முணர்ந்துனக்குச்
　　சொல்லுமொரு காரணசற் குருவையண்டி
நீதியுட னென்னாளுங் காத்துநின்று
　　நினைவுகெட் டினைப்புகழ்ந்து மகிழ்ந்திடாமற்
சேதியொன்று செப்புமுனே பணிவாய்ச்செய்து
　　தேசிகற்குப் பத்துமிரண் டாண்டுதொண்டே. (1)

தொண்டுசெய் திடப்பின்னே காட்சாத்தின்
　　சயப்பொருளீ தென்றுசித்தி முத்தியோடு
பண்டெரி வாசியுமுன் றக்காத்திற்
　　பற்றியதோ ரெட்டிரண்டு தாகுமென்றும்
கண்டுகொள்நீ யென்றுகலை நாலுக்குந்தான்
　　கணக்கான வழிதுறையு முபதேசிப்பார்
அண்டமித மாயிரத்தெட் டானபீட
　　மானதிரு வாசிதனைப் போற்றிநில்லே. (2)

நில்லப்பா மானதமாய்ப் பூசைசெய்து
　　நிலைபுருவ மத்தியொளி யறிந்தால்ஞானம்
வெல்லப்பா ஆசையென்ற பாசந்தன்னை
　　விலக்கிடவே நின்மனதும் பாத்தைப்பற்றும்
அல்லப்பா வாசிதனை மூலந்தானு
　　அப்பவல்லோ பரவெளியைப் பற்றுமாசை
செல்லப்பா பலவழியும் பார்த்தாயானால்
　　சிலம்பொலியின் நாதமதுந் தோற்றலாச்சே. (3)

ஆச்சப்பா ரேசகத்தை முன்னையாக
ஆற்றுக்கொண்டு பூரகத்தைப் போற்றிநில்லு
பேச்சப்பா கும்பகத்தை யுணர்ந்துபாரு
புகழுறுதி யுண்மையிடந் தன்னைக்கேளு
நீச்சப்பா பழகுவது கடினமெத்த
நேர்மைசொன்னால் மூன்றினுட நிறைத்தைக்கேளு
வாச்சப்பா குணங்குறிமூன் றக்குஞ்சொன்னால்
வகையாகி யுடல்பொருளாந் தத்தஞ்செய்யே. (4)

செய்யவுட லுயிருமா மென்றுபாரு
சிறப்பாகும் பொருளுட லுற்றுருமாரு
பையவே நின்றதுரு பாத்தி தேறு
பகருமே நாதமென்ற வாறும்பாரு
வையத்தே விழிபொழியும் வெளியிலேறு
வீரான காலடங்கி டசைந்துசெய்யும்
தூய்யமணி யானதொரு கருணிபாரு
சுத்தசித் தாக்கவே தாந்தத்தானே. (5)

தானென்ற மூத்தர்களுக் கிரண்டுமொன்றே
தன்மையுடன் நாதவொளி கண்டாஸ்மைந்தா
நானென்ற வகம்போச்சு மாயைபோச்சு
நாதாந்தக் களஞ்சியமாம் வாமபூசை
வேனென்று கும்பித்து வுள்ளேநேசி
விளங்குமொளி கீதமொடு நாதங்கேட்கும்
பானென்று மூன்றறிய மனமடங்கும்
பார்த்திடவா யின்னமொரு சூட்சங்கேளே. (6)

கேளப்பா மனந்தானே புத்தியோடு
கெடியான வாங்காரஞ் சித்தமாச்சு
வாளப்பா கதிர்மதியு மண்டபிண்டம்
வகையாக மனந்தானீ சுரியுமீசன்
நீளப்பா மாயைமெய்ஞ் ஞானமாச்சு
நிலையான வாசியா பிர்மத்தோடு
கோளப்பா வன்றிமனம் விந்துநாதம்
குணமான ரூபத்தோ டரூபமென்னே. (7)

என்னவே யிலட்சித்தி காற்றுட்கின்றும்
இயல்பான முகிக்கொடிக்க மானவாறும்
இன்னவகை யென்றுகேள் குருவைத்தானும்
இதையறிந்து வங்கென்று முள்ளேயேகி
நன்னயமாய்ச் சிங்கென்று முள்ளேபூரி
நாடியே அங்கென்று முள்ளேகும்பி
சொன்னயமாய் அம்உம்ஓம் சிம்யம்மென்று
சிந்தைதனிற் றேதியானஞ் செய்குவாயே. (8)

செய்தநடு நாடிக்கண் பிரபையேற்றச்
சிறப்பாக அம்உம்சிம் வம்ஓம்மென்று
மையவே நம்ஐயுங் கிலியுஞ்சவ்வும்
பரவாசி வாலையாம் பரைசிவாவென்
றய்யவே ரேசகம் முப்பத்திரண்டு
சுயமான பூரகம்பதி னறுதாகும்
வைபவமாய்க் கும்பகமும் அறுபான்நாலு
வகையாகப் பிராணயங் குருவைக்கேளே. (9)

கேளப்பா பத்தென்ற நாடிதானும்
கெடியான தாரணையாய்ப் பிலமறிந்து
நாளப்பா யோகமென்ற நிலையைப்பற்றி
நன்மையுடன் கண்ணின்ற விடமறிந்து
வாளப்பா வாமமென்ற பூசைசெய்து
வஸ்தான கருவறிந்தால் யோகமாக்க
நீளப்பா அம்உம்ஓம் வங்யம்ஓமே
நெறியான யவசிமந வென்றுதானே. (10)

தானாக வைந்தெழுத்தை மாற்றவேணும்
தன்மையுட னிடகலையிற் சிவ்வங்யங்நங்
தானுமங் ஓம்நம யவசியென்று
சுத்தான சிகாரமதை யறியவேணும்
தானாகச் சுழிமுனைக்கு ஓம்மந்நங்யங்
சதாவங்சிங் ஓம்சிவய நமஓமென்று
தானாக நகாரமதை யறியவேணும்
சதானந்த சுழிமுனையி னுளிவைப்பாரே. (11)

பாரப்பா பவளபச்சை யிலைத்தோடு
    பசுமையுடன் வெண்மையென்ற மைந்திறோடு
சேரப்பா கதிரவன்ற னுதயம்போலச்
    சேகரமா வொளியென்னக் காந்திகாணும்
நேரப்பா பிறர்கையிற் கொடுத்தபொன்னை
    நினைவுடனே பன்முறையா யிட்டல்போலத்
தேறப்பா வைத்தாறுவொன் றனமூலம்
    தெரிசிக்கத் தீங்கில்லா தருளதாமே. (12)

அருளான வன்னிகதிர் மதியுங்கூடி
    அசையறவொன் றாய்நிற்கப் பூரணந்தான்
வெருளாம லறிபவனே முத்தனாவான்
    விதமுறைத்தேன் குருவென்னு மாசானுக்கும்
இருளகற்றுங் கிரணவொளி யுதிக்கும்பாரு
    இதமாயி ரகவெட்டின் மேலாங்கற்பம்
பொருளான தறிந்தவன்போன் யோகியாகும்
    புகழான காலறிந்தோன் சித்தனாமே. (13)

ஆமப்பா சாகாத காலினோடு
    அருளான வேகாத தலையறிந்து
நாமப்பா கூடியே புனலைக்கண்டு
    நன்றாக வுண்டுசற் குருவைப்போற்று
தாமப்பா மூன்றையுந்தான் றனக்குள்ளாகத்
    தானறிய லட்சியத்தைத் தெளிந்துபாரு
நேமப்பா வாகாத தொன்றுமில்லை
    நிகரில்லாச் சித்தான பொருளாம்பாரே. (14)

பாரப்பா சிறிதுபெரி தின்பமென்னப்
    பற்றிவரு கின்றதுமுக் காலமென்ன
சாரப்பா சத்தோடு சித்தானந்தம்
    சடமான பொருளதுவு முயிர்தானென்ன
வேரப்பா வித்துமர மானதென்ன
    வேண்டியதோர் பஞ்சலோ கந்தானென்ன
நேரப்பா வெட்டுடனே ரெண்டுமென்ன
    நிலையான ரகசியமாம் விந்தைக்கட்டே. (15)

கட்டியே கடுகொடி யொளியைப்பாரு
கண்ரேகை தன்னுடனே சுழியைப்பாரு
வட்டமென்ற வோங்காரந் தன்னைப்பாரு
மகிமையுள்ள பஞ்சவெழுத் ததனைப்பாரு
கெட்டிவித்தை விட்டிடாக் கட்டுகட்டு
கேசரமா யதோமுகத்தி லிருந்துநோக்கு
விட்டிடா தேவித்தை விட்டாற்போச்சு
மேவியதை நீகயிற்றாற் கட்டித்தானே. (16)

தானான மூன்றுடனே வைத்தைச்சேரு
தயங்காதே யெட்டுடனே யிரண்டைச்சேரு
வேனான பத்தோடு வொன்றைச்சேரு
வேறன்றிச் சேர்ந்துமே யேகமாகக்
கோனான துவாதசாந் தத்திற்சேர்ந்தால்
குணமான சுழிமுனைக்கா தாரந்தேனென்றும்
வானான தீட்சைபத்துந் தெளிதாய்க்கேளு
வழங்கொளியாம் பூரணத்தைக் கண்டுநோக்கே. (17)

நோக்கிடுவாய் கொங்கணர்சொற் கடைக்காண்டத்தை
நுண்ணறிவாய்க் கண்டுகொள்வாய் பூசைதீட்சை
பாக்கியம்பால் பழஞ்சீனி தேன்கற்கண்டு
பஞ்சசுவை யுண்டருசி போலக்காணும்
வாக்கியமாங் குருமந்திர மமுதந்தன்னில்
வகையாக யோகவிதம் யாவுஞ்சொன்னார்
தேக்கியதோர் கால்தலைபா ணியங்காணு
தேடிவிழி செவிநாசி யறிந்துகூடே. (18)

கூடியே கண்டம்பித் தரியைக்கண்டு
குலவுபுரு வத்திநடு வெளியைப்பாரு
நாடியண்ட வெளிதோணு மதிலிருந்து
நான்குதிசை யானதுவும் நன்றாய்ப்பாரு
ஓடிதுண்டத் தின்முனைகுண் டலியைப்பாரு
உத்தவொரு மூலவா தாரம்பாரு
தேடியே மூலவட்டக் கரத்தினோடு
தெளிவான சடாட்சரத்தின் மகிமைபாரே. (19)

மெய்மையா மரியயன்றன் னெழுத்தைக்கண்டால்
வழியான வோங்காரக் கம்பங்காணும்
ஆலயத்தில் மாண்பருக்கு வாசிதானும்
அறிந்திடுவாய் யங்வங்கென் றேதியாளி
பகிர்ந்திடுவாய் ஓம்அங் கென்றேயுனி
பதியிலே அங்கங்கட் சாத்தைச்சூட்டி
வகிர்ந்திடுவாய் பாழ்வெளியிற் பொன்னம்பச்சை
வாடிடாப் பிங்கலையின் சுழிமையச்சத்தே. (20)

சத்தியே சக்திகம்ப மதனேப்பாரு
சருக்கரக ஓங்காரஞ் சிம்மம்மென்று
சித்தனே யம்மம்மென் றேநினைத்து
சின்மலமா மூலமெனுந் தலத்தைநாட்டி
சத்தியே பஞ்சகோண மேலேவட்டம்
சாலிசுழிட் டக்கரத்தை யமைப்பாய்ப்போடு
புத்தியுடன் வாசியிரா றுபத்தெசைய
புகன்மூல கணேசனைவல் லமைபுக்காவே. (21)

காணப்பா அத்தியெனு மூலம்பார்க்க
காரியமாஞ் சித்தெல்லா மதின்மேலாகும்
தோணப்பா பிருதிவியுஞ் சுவாதிஷ்டானம்
சொல்லிறம்பொன் காற்கோண மிதழ்நாலாறு
வேணப்பா வாசிவைத்து ஓம்நம்மென்று
வினையமுடன் பிராணயஞ் செய்யநன்று
பூணப்பா சதுர்முகன்கா மகளின்தோற்றம்
புனிதமுடன் காடோறும் சித்தனாமே. (22)

ஆமப்பா நடனபாத பரியின்பூசை
அறுதினமு மந்திசந்தி யினைவாய்ச்செய்யே
தாமப்பா பிரமநிறம் பசமையாகும்
தாரணியில் மாந்தரிதை யறியார்காணே
ஓமப்பா மணியான பூரகத்தான்
உற்றபிறை வட்டமிதழ் பத்தேமாயன்
வாமப்பா மாலான பூரகத்தான்
மன்குறிறம் லட்சுமியும் மாலுமாச்சே. (23)

ஆச்சுமா கதமேனி யருணன் காந்தி
அமைப்பான புரிவட்டம் வாசிதேசி
நீச்சப்பா சுகதியா லம்பொசித்து
நிலையாக யம்வம்மம் உம்மென்றேதான்
பேச்சப்பா பிராணுப வரிசையாகும்
பிராணனை பதியாசன் முன்னேதோன்றி
மாச்சமிலா சகலசித்து முணர்த்திவைப்பார்
மகத்தான சித்தெல்லாம் வசமதாச்சே. (24)

வசமாக மலப்பத்தி சுத்திசெய்து
பசிப்பான தியானமது புரியவேணும்
வசமாக உரார்புபற்றி யதற்குப்பின்பு
வல்லசியன் திரிகோண வட்டமேலே
வசமாகப் பன்னிரண் டிதழ்தானிற்கும்
வரைகடந்த ருத்திரன்ருத் திரிதானுன்றன்
விசமாக அம்உம்ஓம் ஆம்மென்றேற்று
மஞ்சனே வாசியொடு ரேசியாதே. (25)

ஆதரவா யறிவிக்கும் ருத்திரன்றன்
அவனுருவுஞ் சரிகாமம் டசையமிலம்
நீதமுட னுகைதமாஞ் சமுத்திவிடு
நினைவான அறிவுக்குள் லிங்கபீடம்
போதமீ தன்றிவே றேதுமுண்டோ
புகல்பிரிக்க வொண்ணுச்சின் மயமதொன்று
காதலவன் செயலறிக்காற் சித்தன்முத்தன்
கன்மையுடன் ரிஷிமுனியென் றுரைக்கலாமே. (26)

உரைக்கலாம் விசுத்தியறு கோணமாகும்
உற்றநிறங் கறுப்புமேல் வட்டந்தன்னில்
உரைக்கலா மீரெட்டு யிதழேயாகும்
உண்மைமயேஸ் பரன்மயேஸ் பரிதாய்ரூபம்
உரைக்கலாம் அம்உம்ஓம் வம்யம்மென்ன
உத்தமனே காலடக்கி யோகஞ்செய்ய
உரைக்கலாம் தாய்க்கதிகந் தந்தைகாந்தி
உயர்வாகும் நம்பினோர்க் கருளுண்டாமே. (27)

உண்டாகும் சகலசித்தி காயசித்தி
யுகோடி காலங்கள் நிற்க [illegible] கிடைக்கும்
கண்டிடவே பிரமாண்ட காயசித்தி
கருணையுடன் [illegible] சக்ரவட்டம்
பண்டிரண்ட மிசைநாலும் [illegible]
பருதியா காயமாறுக் கிரகநோக்கம்
விண்டிடுக்கும் நாடும் மென்றுமேனி
விமலருடன் லட்சியத்தால் போகஞ்செய்யே. (28)

செய்யவே சதாசிவத்தின் தோற்றங்கண்டு
தெரிசிப்பாய் மனோன்மணியாள் மாத்திரசத்தி
வெய்யவன்ற னொளிபோல போலதோற்றம்
மிக்கிரண்டு மொன்றாய்ச்சேர் புருவமாரு
கையாறு மாய்விடக்கா ணுதிடம்
நலமான சதாசிவத்தி னொளியைக்காணப்
பையவப்பா கண்டதும் பார்க்கப் போகா
பானமுத்தி தவிர்ந்துவா கசமேதாமே. (29)

ஆமப்பா முத்தியுட னட்டசித்தும்
அடிமுடியென் றுரைப்பதற்கு வழியுமாகும்
காமப்பா விட்டெழுத்துந் தொட்டெழுத்தும்
நலமாக விடாதெழுத்துங் குருவைக்கேளு
தாமப்பா ஆதாரக் கருவைக்கேளு
தன்மனதி லுறுதியாக மானவெல்லாம்
தேமப்பா அம்பலத்தை முன்னோர்தானே
சிற்றம்ப லம்போற்ற அறிவுண்டாமே.

அறிதான தேசிகன்றன் வாசியான
அம்பலமாஞ் சித்தநிர்த்த னைகண்டசோதி
அறிவான அம்பரையும் உம்பரன்றன்
அருள்வடிவ மாகவல்லே உதயமாவார்
அறிவான அம்பலத்தின் புதுமைதோறும்
அடிமுடியாம் புருவமையத் தொளிவுங்காணும்
அறிவான அம்பலமு முயிருங்கண்டு
அறியாத முக்தனுமா யிருப்பாய்முற்றே.

மிருகண்டர் மெய்ஞ்ஞானம் 30 முற்றிற்று.



உ

குருவே துணை.

பதினாறுவது

குருராஜர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான ரத்தினாபரணம் 50.

அகரா வெனுமெழுத்தாய் நின்றதுவேபோற்றி
　　ஐபரெனு மெனையாண்ட ஐயனுக்கேபோற்றி
திரிபுரையாய்ச் சகலமுமாய் நின்றவற்கேபோற்றி
　　செகசால மெடுத்தாடு மத்தனுக்கேபோற்றி
ஒருபொருளாய் உலகமெலாம் நிறைந்தவற்கேபோற்றி
　　யோகமெனப் பலவிதமா யுணர்பவற்கேபோற்றி
கருவறிந்து தனையறிந்தோ மென்பவற்கேபோற்றி
　　காசினியி லெனைவருட கமலபதம்போற்றி. (1)

வேறு சந்தம்.

ஒன்றாகிப் பலவாகி உபயமாகி
　　உண்மையுமாய் வெளியாகி யுறவுமாகி
நன்றாகித் தீதாகித் துயரமாகி
　　நாதமெனும் யோகி நடுவுமாகி
பொன்றுவதாய் நிசமாகி நடுவுமாகிப்
　　புகலுவதாய்ப் புகலாத பொருளுமாகிக்
குன்றாத பேரின்ப வீடாய்நின்ற
　　குருவருளை யெவரானுங் குறிக்கலாமோ. (2)

சொல்லரி தெனச்சொன்ன ஆசானையா
　　துயரமெனும் விஷப்பாம்பைச் சுடுவதெப்போ
வல்லபமா மாணவங்கள் கெடுவதெப்போ
　　மகத்தான மனக்குரங்கு மடிவதெப்போ
எல்லையில்லாப் பெருவெளியி லிருப்பதெப்போ
　　இச்சையெனுங் கானல்வெள்ள மிறப்பதெப்போ
துல்லிதமாஞ் செகசாலந் தெரிவதெப்போ
　　சுகமான சுகத்திலின்பஞ் சொல்லுவீரே. (3)

அருள்பெறவே யனந்தநின்று கேட்டமைந்த
ஆதிதரு ஞானவழி யறிவதற்கும்
பெரிதெனவே தந்தஞானக் காணக்காட்டப்
பிரிவுசெய்து மெய்கதீது பெரியோராலும்
குருவருளா லப்பொருளைப் பக்குவமாய்க்காணக்
குணக்குறிப்பாம் பெரியோர்க்கே பாமையுகந்தெரியும்
தெரிபொருளைத் தெரியவென்று நாமுமுன்றுலக
செகத்திலே குருவருளாற் செப்பக்கேளே. (4)

பூசைவெகுங் கிரியையென்றும் பாதிநட்டப்பா
பொருந்துசித்தி மனப்பேயின் புலையாட்டாக்க
பாசையிலே பதினெட்டு வகைமையென்றும்
பகட்டல்லால் வேதாந்தம் பழகிடலாலேறும்
பேசையிலே பலகோடி நூல்கள் கற்றும்
பிறந்துபல சமயங்கள் பிணக்கதாக்க
ஆசையுள்ள தந்திரத்தை அனேகங் கோடி
அத்தனையும் நிசம்பார்க்க அகந்தைதானே. (5)

காயமதா யுலகமெல்லாம் மயக்கஞ்செய்யும்
சல்லியத்தின் மகிமையெத்தச் சாற்றப்போமோ
ஆயிமனங் கூர்ந்தறிவில் விழலாமப்பா
அறிந்தவர்க்கு மசகமப்பா யகிலைத்தி
நேயமுட னிவையெல்லாம் விறவியென்றே
இன்னையமா யஷ்டாங்க யோகந்தன்னுள்
வாயுவுட யோகமிது மொன்பத்தாறு
மனமடைந்த யோகமிது மொன்பத்தாறே. (6)

வீணான ஆசையெல்லாம் நீக்கிமேலாய்
மேலான யோகமிதந் தெரிந்துகாடிப்
பேறான குருவருளாற் பழக்கமாகிப்
பிணக்கறவே மனம்வாழப் பேச்சடக்கி
கூறாத பொருளதனைக் கூடலாகும்
குருவருளை யல்லாது கூடலாமோ
வாறான யோகமிதம் நூற்றெட்டுக்கும்
வகைதெரிய நாமுரைப்போம் மகிழ்ந்துகேளே. (7)

ஆதார மொன்றுக்கு விதமாறாக
ஐயாறு விண்ணாதனில் றூவெட்டப்பா
வாதான குண்டலிக்கு வெட்டுவிதமப்பா
வகையொன்றுக் கனந்தசித்தி மறிக்கலாகும்
தாதான இதயகுண் டலிப்பிரசாமன்
சகவகையொன் றிற்றனித்த சித்திசேரடி
ஆதான வாகாய குண்டலியுயோகம்
தலங்குவித மையாறுந் தனித்தப்பார்மகனே. (8)

அடக்கமுள்ள மூப்பதுக்கு வெட்டுவிதமைந்தா
ஐபவுட திருக்கூத்து அதிகதொனிகாணும்
ஒடுக்கமுள்ள அறுதமுன்றும் யோகவிதம்ரெண்டாம்
உத்தமர்க்கே யல்லாமல் அவத்தருக்கோகிடைக்கும்
திடத்துடனே அறுதமுன்று வெகுகோடிகாலம்
தேகமழி யாதிருந்து திரமறியலாகும்
மடக்கம்வரத் தெரியாமற் காயசித்தியென்பார்
மலைமருந்தோ வுசாடத்தை மதிக்குமவர்தானே. (9)

சித்தியென்றும் விரிபார்க்கி லகிலமெல்லாமுருகும்
சித்திமெத்த சித்திமெத்த நிலைகண்டன்பார்வை
புத்தியுள்ள சீமான்க ளறிந்ததிந்தப்பாதை
புலையறிந்த பாதையிற் புத்திகெட்டுமலைப்பார்
சுத்தியமாய் மனத்தையுன்னிப் பார்க்கும்வகையறியார்
தன்மாயை பின்தொடறச் சற்குருவென் றலைவார்
சித்திரையில் லாதவிடந் தானுமறுபாரார்
நினைவழிந்தாற் சித்திமெத்த நிர்க்குணமாம்பாரே. (10)

மேலான பரஞ்சுடரைப் பார்த்தவரேசித்தர்
விசித்திரமா மூலகமெல்லாஞ் சணைப்பொழுதிலப்பா
மாலான மனிதரெல்லாம் மாடுபலமிருகம்
மாக்கல்லாய்க் கெடுத்திடலாம் மரக்கல்லேயுயிராம்
காலிரண்டு சித்தியது நயந்தெரியலாகும்
நாடியின்று குருபாதம் நாமறியலாகும்
கால்மேலுத் தலைகீழும் நடப்பதுவுந்தெரியும்
காரணசற் குருவருளாற் காண்பவர்க்கேகிஷமே. (11)

யோகமென்றுந் திரிந்தலைவார் வகையறியாமாந்தர்
யுகங்கோடி தவஞ்செய்தோர் யோகநெறி சேர்வார்
போகத்திலேசிப் பழுதகற்றும் யோகமறியவரோ
புத்திகெட்ட மாந்தர்களும் யோகமறியவரோ
தேகமதி லடையோகத் துன்பமற்றதொழிலாம்
சிதையற்ற யோகமதாற் சித்திபெறத்தப்பெறலாம்
மோசமற்ற பெரியவரே ஆயவருந்தசித்தர்
மூடமற்ற ஆயவரே யோகிகளாஞ்சித்தர். (12)

வெளியாக யோகவிடம் விரித்துரைத்தோமானால்
மேலான பெரியோர்கள் சாபமெத்தப்பலிக்கும்
களிகூறச் செகசாலம் யோகவிதமறிந்
கருதாமல் துரைப்பவர்யாய கனவெழுத்தாளரும்
பழியாக புழுபட்டிம் நரகமதிலுழல்வார்
பந்தபர தகச்செனன பெருந்தொளியாய்ப்போவம்
தெளிவாக மூடருக்கு உண்மைதனைச் செப்பார்
திரமுடைய மாந்தருக்குச் செப்புவர்நல்லோரே. (13)

கற்பமுண்டு மருந்துமுண்டு சாதகமுமுண்டு
கருத்தொதுக்கத் தந்திரமு மந்திரமுமுண்டு
உப்புடனே புளிப்புவிட்டாற் காயமதுபலமாம்
உற்றநவ வனோதிரமாம் யோகமதுதிரமாம்
மெய்ப்புடனே மிக்கவகை நிற்கில்நெறியென்பார்
வீறான வுடம்பைநம்பி மெய்யுணர்வுண்டாமோ
சர்ப்பனையாய்க் குடிகெடுக்குங் குருக்கள்தனைநம்பி
சளக்கான பிறவியிலே சாலுவரோநல்லோர். (14)

ஏதப்பா ஆசைபெறும் பேய்கள்பிடித்தலைந்தால்
எவரப்பா யோகத்தி லின்பமுற்றுவுணர்வார்
வாதப்பா பெரிதாகிச் சாஸ்திரங்கள்கற்று
வழியான பேர்தனையும் மயக்கிவிப்பார்புல்லோர்
ஆதப்பா பெரிதாச்சு வாய்பகட்டுமாச்சு.
அருத்திதனை மினிக்கிநம்பும் ஆர்த்தகுருவாச்சு
ஏதப்பா யினியுலகில் வாய்பேசலாமோ
எல்லோரும் ஞானம்வந்து பிறந்துகெட்டவாறே. (15)

ஆசாரந் தொழிலாகி னோம்பிருந்துதெய்வம்
 ஆசரித்துப் பலமிருகம் அறுத்துப்பலியூட்டிக்
கூசாமல் நிர்வாணச் செபமுருவேசெபித்து
 குறியாய்த்தன் னுடற்கிறீந்து காபலியேகொடுத்து
மாசான அஷ்டகர்மம் விளையாடுஞ்சக்ரம்
 மாச்சலெனத் தனமனைத்தை பாய்த்துலயமாக்கிப்
பேசாமற் கணப்பொழுதி லுலகமெல்லாம்பேயாய்ப்
 பிதற்றிவிக்கும் மாயைசித்தி பேசவொருதொகையோ. (16)

சித்தியென்றால் மருத்துவமாய் மருகியலையாதே
 ஜெகத்தையெல்லாங் கெடுத்திடலாம்நொடிக்குமுன்னே
புத்தியுள்ள நல்லோர்க்குப் பூசைசெபம்வேண்டாம் [திரமாய்
 புவனமதிற் கடைப்பேயர பொய்யுறவுவேண்டாம்
சத்தியமாய்ப் பலகோடி சித்திகள்செய்திடலாம்
 சாதித்தாற் செகத்தோர்க்குச் சத்துருவாய்முடியும்
நித்தமுநீ பழிபாவங் கொடுமைபயம்வேண்டாம்
 நீதியுள்ள நல்லோர்க்கு நினைத்திடுஞ்சித்தியுமே. (17)

பேசரிது சித்திகள்தான் நான்மறைக்குமுடிவு
 பேராளி தவஞ்செய்தோர் சித்திகளைப்பெறுவார்
ஆசில்லா மனத்தவர்க்கே சித்திகள்வந்தெய்தும்
 அகந்தைப்பேய் பிடித்தவர்க்குச் சித்தியணுகிடுமோ
பாசமுள்ள மனத்தவரே சித்திகள்பெற்றதனால்
 பலபேர்க்குத் தீங்குசெய்து பவநரகில்வீழ்வார்
வேசையர்போல் தனைப்பகட்டிப் பெருமைசெய்யுங்கயவர்
 மேவியசித் தியுங்கொடிதாய் மேலோர்க்குந்தகையே.

சித்தியினால் மயங்கினவர் சீவன்முத்தியடையார்
 சீவன்முத்தி யடைந்தாலும் செடத்தின்முத்தியடையார்
புத்தியுடன் செடத்தின்முத்தி பெற்றவர்தானெனினும்
 பிறர்தனக்கு மெய்ஞ்ஞானம் போதனைசெய்தறியார்
சித்தியுடன் பிறர்தனக்குப் போதனையாலவரைச்
 சீவன்முத்தி கொடுத்துவைத்த திறமுடையாரெனினும்
எத்தனைசா தகமிருந்துஞ் செத்தவிடத்திருக்க
 எவராலும் முடியாது யிருப்பதுவுமெளிதே. (19)

கிட்டாத ஞானவெளி கிட்டிவைத்தபெருமை
கிடையாத மதுபானங் கிடைத்தவரேபெரியோர்
கட்டாத மதயானை கட்டினபேராசர்
கசப்பில்லாப் படைக்கலங்கள் கட்டினபேர் சூரர்
எட்டாத கனியதனைப் புசித்தவரே சித்தர்
எழுதாத மறைப்பொருளி னியல்பறிந்தோர் புலவர்
மட்டில்லாச் சிவலிங்க மறிந்தவர்பூசகரும்
வாய்ப்பேச்சி னாலேதானும் வருவதுண்டோ பலன்றான்.

பெருமையுள்ள நாற்றெட்டுக் கிரியைபுரிந்தனக்கும்
பிழைப்பறுத்த நாற்றெட்டு யோகம்புரிந்தனக்கும்
அருமையுள்ள தந்த்ரவித்தைச் சவ்வியங்கள் தனக்கும்
ஆதியாம் பரைபொருந்தி யாட்டுவள்மாய்மாலம்
தெரிபொருளாய்த் திரிபுரையை வணங்கியநல்லோரைத்
திரிலோகஞ் செயித்தவர்கள் செகசாலந்தெரிந்தோர்
குருவருளாற் பூசைவிதி தெரிந்துபராபரையைக்
கூசாமற் றெளிந்தவரே கூடுவர்மெய்ஞ்ஞானம். (21)

ஆத்தாளை யறியாத பூசையென்னபூசை
அம்பிகையைக் காணாத காட்சியென்னகாட்சி
பார்த்தாலும் பயனுண்டோ பாவிமகள்கோலம்
பாதகர்க்குக் கிடைத்திடுமோ பராபரையாள்சேவை
வாழ்த்தியென்ன பூசைசெய்யச் சக்கரத்தனென்ன
மனோமணியைப் பூசைசெய்ய மனோலயமேகோவில்
சாத்திரங்கள் கோடிகற்றும் சாம்பவியைக்காணார்
தாயையல்லாற் பூசையுண்டோ சண்டாளர்தனக்கே.

அகிலாண்டம் பலகோடி யவட்குமொருகோணம்
அப்படியே நாற்பத்தி முக்கோணமடைந்தாயி
புகழான மாயவனும் ருத்திரன்மாதவரும்
பூரணியை யல்லாமற் பூசையும்வேறறியார்
உகந்தவளைப் பூசைசெய்யத் திரிதேவர்முனிவோர்
ஓகோகோ பலகோடி யுகந்தோறும்பணிந்தார்
சகலமுமாய் நின்றவள்தன் கோலமெவரறிவார்
தன்னையறி யாதவனைத் தான்கெடுப்பாள்நீலி. (23)

வேறு.

பேசாதே மகனேநீ உலகந்தன்னிற்
பேசினாற் பேயருக்கும் பெரியபேய்கள்
ஆசைகொண்ட பேய்களுடன் பேசலாமோ
அவர்செயலை வினையெனவே யறிவாயப்பா
வாசனைக ளற்றுகெட்ட பேய்கள்கூடி
மாதங்கி திருவடியை வணங்கிப்போற்றார்
நேசமதில் திரிபுரையை வணங்கிக்காணா
நித்தம்வினைப் பத்தருக்காம் நிசமாய்ப்பாரே. (24)

பாரப்பா மனோலயமோங் காரமவள்பீடம்
பாதகத்தி குடியிருந்தாள் சிங்காசனத்திற்
காரப்பா வுன்னைவிட்டு நீங்காமற்காளி
கடந்துவிட்டா லவராலுங் காணவரிதாகும்
சேரப்பா அவள்பதத்தி லுன்னறிவுவந்தாற்
செகசாலந் தெரியாதோ சிவன்முத்திபுறம்போ
ஆரப்பா ஆத்தாள்தன் திருக்கூத்துக்காண்பார்
ஆச்சரிய மாச்சரிய மவருடைமாய்மாலம். (25)

சட்டையில்லாப் பாதகர்க்குக் கிட்டுவளோதாய்தான்
சாத்திரப்பேய் கற்றவர்க்குக் கிட்டுவளோசமர்த்தி
மட்டில்லாக் காமுகர்க்குக் கிட்டுவளோவம்பி
வல்லமைசெய் மூடரிடம் வருந்துவளோதிருடி
பட்டமரம் பால்சொரியும் பழிகாரிநினைந்தால்
பச்சைமரம் பாழாகும் பத்தினிதான்கெடுத்தால்
அட்டகண்டு குதித்திடுமே நீலியதிகாரம்
துரைமகளைக் காணாத துயரமெங்கேதீரும். (26)

கட்டளைகள் படியாதே வீம்புகள்பேசாதே
காசென்றுஞ் சுதந்தரங்கள் கனவில்நினையாதே
கிட்டநின்று பேசாதே சபைதனிற்செல்லாதே
கேடுகெட்ட வுடலைநம்பி கிடைபொருள்சொல்லாதே
தெட்டியுண்ணும் புசிப்பாலே வுண்மைகள்சொல்லாதே
தேசமதில் மருந்துவமாய்ச் சித்திகள்பண்ணாதே
எட்டிமரக் கனிதனைப்போல் உதவிகள்செய்யாதே
எத்தனைதா னறிந்தாலுஞ் செத்தவர்போற்றிரியே. (27)

நீயிழைத்த வகையறியாய் பிறர்தனக்கே துயரப்பாய்
நிலையாத பெருங்கடலில் நிலைப்பார்களோமடீ
வாய்ப்பகட்டிற் பொருள்பறிக்கச் சிவன்முத்தியாமோ
மனக்கட்டை அறியார்க்கு வாய்மைதங்காதாமோ
பேய்ப்பகட்டித் திரிந்தப்பார் திரிவதென்னஞாயம்
பேருலகில் ஞானமல்லால் பிழைக்கவகையிலையோ
தாய்பகட்டி யறியாமற் றனையறிந்தேதாமென்றால்
சதுரயுகம் வெகுகோடி சாருமோராகரில். (28)

வெள்ளோலை தனையெழுதிக் குவித்ததிறலென்ன
விகடமுள்ள சாஸ்திரங்கள் கற்றதிறலென்ன
உள்ளமனக் கசடறியார் ஞானியாராவரோ
வண்சடத்தைப் பகுத்தறியார் யோகிகளாவரோ
கள்ளருக்குத் திதந்தபார தன்மனதைதேகன்று
காமனிடன் ஞானநெறிக்கார் அன்னவேலைமன்று
ஆள்ளான மனக்குரங்கு அள்ளுறுமையறியார்
தொல்லுலகிற் சித்தரெனச் சொல்லவுமறியேயா. (29)

பாவென்பார் பரையென்பார் பாக்கறியாமாந்தர்
பாரேது பரையேது பரைநடனமேது
கோளான மனமல்லோ பாழாகிக்கெடுக்கும்
குறித்தமன மாயையதே கூர்த்தபரையாகும்
தான்தனிலே தாயுமவள் தானிருந்தாளானால்
தனிப்பாழாய் நின்றதிலே தாக்குமிடமேது
பாழ்தனிலே தயிருந்தால் தாயையெவரறிவார்
பாரேது விண்ணேது பகரவகையேதே. (30)

ஏகவெளி கோடிமதி யெத்தாய்க்கும்வீடு
எண்ணவொண்ணாச் சூரியன்போலெத்தாய்தன்கோலம்
மோகமுள்ள பாதகர்க்குப் பாழ்போலகாணும்
முத்தியில்லா அவத்தருக்கு மறைபவள்முழுநீலி
சோகமற்று ஆசையற்றுத் துயரமெல்லாந்தீர்த்து
தொல்லுலகிற் பிறவியெல்லாந் துன்பமெனப்பயந்து
தாகமுள்ள நல்லோர்க்கே தாயும்வெளிப்படுவாள்
சற்குருவா லறிபவர்க்கே தாயும்வெளிப்படுவாள். (31)

சாத்திரமை அறியார்க்கு விருப்பிடந்தானேது
சாந்தவிதஞ் சுகமறிவா ரெப்படிவீடறிவார்
தந்தாய்போல் வடிவெடுப்பாள் தாரமெனவருவாள்
சந்ததியுங் கிளைபொருளாய்ச் சத்துருவாய்வருவாள்
சொந்தமனைத் தானாவாள் நோக்கவலையாவாள்
நோக்கரிய செல்வமுடன் நோக்கியேவாழ்வோர்க்கு
வந்துமனைக் கசடதுவே காலனுமாய்விடுவாள்
பாபாவி செயலையெவர் மதிக்கவும்வல்லாரே. (32)

ஆசாரக் கள்ளியவ ளார்க்கும்வெளியாகாள்
ஆசையற்ற வன்பருக்கே அவளும்வெளியாவாள்
கூசாதே மகனேநீ உலகம்நகைப்பதற்குக்
கோகுலம்போல் மிருகமெல்லாங் கூடுமுறவாநீ
பேசாதே மவுனமென்றும் பெருமைகளெண்ணாதே
பெத்தவன்போல் பெண்களெல்லாம் பிணிப்பறவேவினை
ஆசையென்ற சங்கமெல்லாம் அறப்பகையாய்விடுத்தே (பாய்
அங்குருநீ மாத்திரமா யலைவதுவேகுறியே. (33)

வகையறியா மூடரெல்லா மனைவிசத்தியென்பார்
வகைக்காரர் சத்தியுடன் வாழ்வதுவுமென்பார்
இசையாமற் சிவனுடனே சத்தியுந்தான்கூடி
செகம்படைத்தார் நாமுமந்தத் திறமுடையோரென்பார்
தொகைப்படைத்தோல் நரம்புசதை படைத்தவுருவந்தோ
தோகையரைப் பராபரையைச் சொல்லவும்வாய்வருமோ
நகையாரோ பெரியோர்கள் மனமடியார்மாந்தர்
நாரியரைப் பொருளாக நாய்போலேயலைந்தால். (34)

பெண்ணாசை கொண்டவர்க்கு ஞானமெப்போதெரியும்
புத்திகெட்ட மூடருக்கோ புலையருக்கோதெரியும்
மண்ணாசை கொண்டிருந்த மாண்பருக்கோதெரியும்
மதிகெட்ட மாந்தருக்கோ வம்பருக்கோதெரியும்
கண்ணாரக் கண்டிருந்தாங் காணாதார்போலே
காதல்கொண்டு சிலேற்பனத்தி லீப்போலேகலங்கிப்
புண்ணாகி மனங்கரையப் புறவியிலேயுழல்வார்
புத்தியில்லா வீணரைப்போற் புலையருண்டோபுவியில்.()

ஓடவுமொட் டாதடி கொடிக்கவொட்டாது
ஒளியாது சாமப்பேய் உறுக்குருக்கேபிடித்தால்
வாடுவது மகிழ்ச்சிசெறுங் காமக்கோட்டாலே
மடிவதுவும் பிறப்பதுவுங் காமக்கோட்டாலே
பாடுமேதன் படிப்பதுவென் றாசையெல்லாமனதில்
பற்றாற்றல் விசாரியப் பாதையெல்லாங்கத்தித்
தேடுவதே னிருந்தவிடந் தானிசமாகாதோ
தேன்மொழியா ளாசைகொண்டு திரிந்தலைந்தம்பலனே

தன்றேலை யாகாது பென்றாசைமறக்கச்
சாத்திரங்கள் கோடிகற்று தலையறுத்தோமென்பார்
பொன்றாசை மண்றாசை நீங்கறியாமூடர்
புத்திசொல்லிப்பிறரிடத்திற் பொருள்தனையேபறிப்பார்
என்னசத்துப் பொருள்பறிக்கப் படித்தவித்தைதானே
இடைத்தமைந் தாயமெல்லாம்பொருள்பறிக்கத்தானே
தன்னையறி வோர்க்குமித்தப் பகட்டேதுக்கப்பா
தன்னுடனும் பகையானேற் சற்குருவும்வெளியாம். (37)

நிறுத்தப்பா ஆசையெல்லாம் நீயெனவென்றேதே
கெட்டுப் பெண்களுட னினைவையெல்லாந்தன்று
மறுத்தப்பா குரோதமெல்லாந் தானெனவென்றேத
மாய்யாலக் காரருடன் வாசனைசேராதே
பொறுத்தப்பா வாசனையைப் பொல்லாங்காய்நீக்கு
புத்தியில்லா தானல்லை புகுதுவர்வாசனையில்
நிறுத்தப்பா பாவினையைக் கனவிதுவென்றேதே
நீங்குவது கடினமது வெளிதுடனேநீக்கே. (38)

ஆசான்சொல் தன்னுறவு கூடுவதுங்கடினம்
அப்பவல்லோ விசக்தெரியும் அநுபவமுந்தெரியும்
பேசாதே தெரிந்தவர்போல் கலையசைத்தாலேயோ
வெத்துவிடம் அறியாதார் பேச்சுமெத்தப்படிப்பார்
வாசனையும் பாவனையும் மனத்தைவிட்டுநீங்கி
மாருத்த திரைமுகில்போல் மாய்வதல்லோஞாயம்
தேசமதில் மயக்கமற்றாற் றன்னுருவங்காணும்
நிஷ்டையில்லாப்பாதகர்தான் நிஷ்டையெங்கேயிருந்தார்

தன்னையத்த பெரியவர்க்கு நிஷ்டைவிதந்தெரியும்
சாந்தகுணம் பொறுத்தவர்க்கே சாந்திநிலைதெரியும்
பின்னுறவில் லாதவர்க்கே சாங்கிஷமுகதெரியும்
பேதங்கள் வெறுத்தவர்க்குப் பேருணர்வுந்தெரியும்
அன்னயமுஞ் சுந்தரமுங் கலந்தவிடம்பதியாம்
அப்பதியைப் பார்ப்பதற்கு ஆருரைப்பார்நிஷ்டை
உன்னிநின்ற பதங்காணப் பேதகஞ்சத்தாமோ
ஒப்பாது மனக்கசடு வுள்ளபொருள்காணே. (40)

வாளரவின் வாயிலுழல் மண்டூகம்போலும்
கருங்கருடன் வாயதனில் மருளரவம்போலும்
கேளான உலகாசை தனக்குமப்பாலாய்ந்து
குறிகள்சக்தந் தவறாமற் குருவருளைநாடி
பாளரை உலகிலுள்ளோர் நகைத்துமெத்தக்கேடாய்ப்
பழிப்பதற்கு வெட்காமற் பரம்பொருளேபெரிதாய்த்
தேளான இச்சையற்று மருளுமனந்தெளிந்து
சித்தமுரு கொன்றாகச் செகத்திருப்பார்நல்லோர். (41)

வைத்தையப்பா இரண்டெனுக் காணியாவதுபோல்
உள்ளமதி லெள்ளவும் உகந்திடுபாவனையால்
எத்தமுள்ள கற்பனையா யிச்சைபலவாகி
எண்ணமொடு துயராகி வெளிதுபெரிதாகி
பார்த்ததெல்லாந் தனதாகிப் பந்தமுங்கற்பனையாய்ப்
பாசமுமாய் ஆசையுமாய்ப் பண்டுபுதிதாகி
வார்த்தைபல போராகி யுலகமயல்நிசமாய்
மறந்தாலும் மறக்கவொண்ணா வல்விருளாய்நிலைக்கும். ()

சாந்தியென்ன வேறாமோ பேதமெல்லாநீங்கிற்
சத்துவமாங் குணமாகித் தன்னுருவைப்பார்த்தால்
மாந்தர்மனம் நயமாகும் மனோலயமேநிசமாம்
மறந்தாலும் பேரின்ப மார்க்கவழிதெரியும்
சேர்ந்தமனக் கசடறுக்குஞ் சிவத்தியானமாமோ
செகமெல்லாந் திரிந்தலைந்து சித்திசெய்தாலாமோ
காந்தமனத் துயரமற்ற பெரும்பதியைநோக்கிக்
கண்டாலு முரைப்பதுவுங் கடினவித்தைதானே. (43)

எத்தனைநூல் படித்தாலும் மனத்தனக்கே நன்மை
எதுசித்தி படித்தாலும் மனப்பேய்ப்போகுமாம்
கத்திவெடுத்தக் கிரியைகளெல்லாம் மனப்புலிக்கேபொசிப்பு
கருக்கரிய வாசாரஞ் செய்வதெத்தக்காலம்
பித்தாய மனத்தாசை மெள்ளமெள்ளநீக்கிப்
பிரியாத பேதமையைப் போதிவாற்றனித்துச்
சுத்தவெளி வெகுதூரஞ் சூட்சாவதுவாகித்
தோன்றாத புருவமையங் கண்டுபெறுவாரே. (44)

பாரப்பா எட்டிரண்டு டொன்றாய்நின்ற
பதியறிந்தாற் றாயோடு பாசமேது
வாரப்பா பேதமிலை பேதமிலை
உண்மையதாய் அப்புறமும் உருவிப்பார்த்தாற்
சேரப்பா வெளிகளைச் செத்தவிடங்களைத்தான்
திசைப்பேது பசிபேது சித்தமிசைபேது
சேரப்பா ஆயபேது சேயவினைபேது
நீங்காத காதலுண்டோ நினைத்திருந்தாற்பாரே. (45)

வகையேது சேர்க்கையென்ன விஷடையலேது
மனவருத்த முண்டானால் மசகப்பமாயை
அகையேது நெறியேது குருவருளைப்பெற்றால்
தோத்திரமெல் லாம்ஞானத் தடுமப்பாபாதை
புகையான காமமொடும் புகைகளைக்கூடிப்
புத்திமயக்கிருந்தவர்கள் பொருள்தனையேசோர்
பகையான மன்மதனை வெளிதாகப்பார்க்கிற்
பாம்பொருளும் வெளிதாகும் புத்தியதுபாரே. (46)

எட்டாத பொருளெனவே வெட்டிவெட்டிப்பார்த்தால்
எப்படியும் பொருளறியார் வெண்ணிறந்தகாலம்
தொட்டிலையும் பொருளெனவே வெளிதாகநெஞ்சிற்
றோற்றமெல்லாம் அறாத்தளித்துச்சொரூபமதிற்பார்க்கில்
ஓட்டாது பொருளெனவே ஓட்டியதோரெட்டும்
ஓமப்பா வறுமையெல்லாம் ஒன்றாயில்லாதவனைக்
கட்டாணி பணிமுத்தைக் கண்டவர்க்கேயின்பம்
காசினியிற் சரியுண்டோ கண்டதுபாரே. (47)

பொய்யாது போகின்ற சரீரமுதற்பொருளும்
பொருளையென்ற விசித்திரமா மூலகமுதல்யாவும்
பொய்யாகு மிதனினொன்றை நிசமெனவேயெண்ணிற்
பொருந்துமுடல் தனையறிந்து புத்திகள்கற்பதுவும்
செய்யவுல கினிற்பெரியோன் செல்வனெனவாழ்வும்
சேரவரும் பாழல்லாற் சேரும்பலனில்லை
ஐயமறக் குருவருளை நிசமெனவேயெண்ணில்
அவனிமுத லாசையெல்லா மகற்றுவதுபலனே. (48)

நிசமில்லா வுடலமெய்யோ மறைந்திடுமோதவறல்
நெடும்பிறவிதொறும்பொருளாம்பந்தமெல்லாம்பெருகும்
வசமாகப் பேசுதிவே கிடவொன்றைப்பலந்தான்
வறுமையை யென்னவெல்லாம் மாசறவேதள்ளி
ஆசையில்லாப் பரம்பொருளை யறிவர்நல்லோர்தெளிவாய்
ஆசையுள்ள மூடமூடர்க் காயிரஞ்சொன்னாலும்
நிசமான பொருளறிய மனம்வருத்திப்பாரார்
நீதியுள்ள நல்லோர்க்கே நினையமாம்பொருளே. (49)

அழியாத ஆனந்த வெள்ளமதுபெருகி
அருள்சிறந்த மனப்பொருளே அதிகருசிக்கனியே
தெளிவான குருராச ரத்தினாபரணம்
செப்பியநூ லைப்படிவே இப்படியோர்தழைக்கச்
சுழிமுனையா முச்சியினி லட்சரமாமொன்றிற்
சுழிசுழித்து முனைவாசல் வழிவருமாதேவி
விழிமுனையி லேநாட்டி விமலியருளாலே
விளக்கொளிபோ லிந்நூலை விளங்கவுரைத்தேனே. (5(

குருராஜர் ஞானரத்தினாபரணம் 50
முற்றிற்று.



சுந்தரபாண்டியம் புஸ்தக வியாபாரம் வை சிவகுருநாத மூப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பராபரி துணை.

பதினெண்முனிவர்

குருராஜர் திருவாய்மலர்ந்தருளிய

சிவயோக சிந்தாமணி 50

நந்திமுகன் பதம்போற்றி வேலர்பதம்போற்றி
நயமாக எனையீன்ற மாதாபிதாம்போற்றி
சற்குரு பதம்போற்றி மூலபதம்போற்றி
சாதுக்கள் பாடிவைத்த யோகந்தன்னைச்
சிந்தாத மணிரத்ன மாலைதனைப்போலே
செப்புகிறேன் மனதுக்குத் தெளிவாய்க்கேளு
கந்தன்முன்னு மாதத்திற் குருமையோகம்
காட்டுகிறேன் குருராஜ பண்டிதருக்காமே. (1)

பண்டிதனுன் பாடிவைத்த யோகநூற்குப்
பதினெண்பேர் மொருமொருத்துக் கூடியொன்றாய்க்
கண்டவன்போற் சொன்னதென்ன மறைவில்லாமற்
காசினியி லெல்லோருஞ் சித்தருக்குச்
சண்டாளர் கிறுக்கெழுதி இந்தநூலைத்
தாரணியிற் காட்டாதே சாபமேயாம்
உண்டான பொருளையெல்லாம் வெளியிற்போட்டால்
உலகமெல்லாம் ஞானிகளா யுயர்வார்தானே. (2)

உயர்ந்தாக்கா லெங்களுட னொப்புப்பேச்சு
ஓங்காரே சித்தரென்று சொல்லுவார்கள்
உயர்ந்தமறைத் தானிவையைப் படித்துக்கொண்டாற்
வையிலெங்கள் நூலதுபோல் படிக்கமாட்டார்
அயர்ந்தவன்கைப் பொருள்போல ரகசியயோகம்
ஆவதற்கோ சிவராஜ யோகஞ்சொன்னாய்
கயர்ந்தவனே என்றடித்தார் அத்தான்பார்த்துக்
கண்சிவந்து சித்தரையும் கோபித்தாரே. (3)

கோவித்து உங்களுக்கே னிந்தவாது
குவலயத்தி லெனைப்பணிந்த குழந்தைகட்குப்
பாவித்த சிவயோக வாழ்க்கைஞானம்
பாவிப்பாய் என்றுரைக்கப் பாடினேன்கேள்
நாவுத்த வுங்களைப்போ லவன்றனென்று
நயத்துடனும் பயத்துடனுஞ் சொன்னதாலே
சாவுத்த பேர்களுமே சித்தரானார்
தயாபரியே குருராஜ னிவன்றன்னாலே. (4)

தன்னாலே யேட்டிடனே சேர்க்கமாட்டார்
சவங்களுக்குத் தெரிந்திடவே தற்பரத்தை
உன்னாலே காட்டிவித்தாய் தம்பியென்று
உத்தமர்கள் மனச்சடவாய் ஒதுங்கிகொண்டார்
நின்னாலே மறைப்புவித்தை யோகமெல்லாம்
நிசங்கண்டோ மென்றெந்தன் செவிகள்மெச்சப்
பன்னாலே சொல்லுகிறேன் வாலையம்மாள்
பதம்போற்றி இடகலையைப் பரிவுற்றேனே. (5)

பரிவுற்ற இடகலையே மூலம்மூலம்
பதமாஞ்சந் திரனென்றும் உகாரமென்றும்
தெரிவுற்ற விந்துவென்றும் வழலையென்றும்
செயமான சேசீரின் வாதமென்றும்
அறிவுற்ற மனமென்றுஞ் சத்தியென்றும்
ஆகார பதினாறி லடக்கமென்றும்
குறிவுற்ற குண்டலியின் வட்டமென்றும்
கூறுவார் வல்லபைதா னிதழ்தானென்றே; (6)

இதமான பஞ்சகலை யிருக்குந்தானம்
இதுகாலம் எமனென்றும் இருளாம்மாயை
அதமான கள்ளென்றும் மயில்தானென்றும்
அனேகவிதஞ் சொல்லுவார் மதியமைந்தா
பதமாக இதைப்பிடித்துப் பிசகிடாமற்
பலகோடி யெண்ணத்தில் வீழ்ந்திடாமல்
நிதசரிதா னிரவுபகல் ரேசிரேசி
நினைவைவிட்டா லொன்றுமிலை நிசஞ்சொன்னேமே. (7)

சொன்னதொரு பிங்கலையின் மார்க்கங்கேளு
 சூரியன்றன் வட்டமென்றும் அகாரமென்றும்
வன்னியென்ற முக்கோண வாலையென்றும்
 மதியுண்ட விதியென்றும் அண்டமென்றும்
கன்னியுட காதமென்றும் வங்குவென்றும்
 கனமான திராவகமாங் குளிகையென்றும்
உன்னியே கயிலாச மேருவென்றும்
 ஓதிவாய் விளங்குகின்ற பிரமமென்றே. (8)

ஒன்றான பிரமத்தின் அமுதசாரம்
 உத்தமனே பூரித்து எப்போதுந்தான்
தன்றான பேதமில்லால் லாரையென்றும்
 காற்பத்தி முக்கோணத் தில்லையென்றும்
கன்றான வாசியென்றுங் கடுக்காயென்றும்
 கருஞ்சாரை வெண்சாரை கருத்தகெல்பு
நின்றிடுங் கஞ்சாவும் அமுதமென்றும்
 நிகழ்த்தினார் பானவென்றும் மதுவென்பாரே. (9)

மதுவென்றுஞ் சத்திருண் டயோமென்றும்
 வாலையென்றும் புவனைசிவ ரூபமென்றும்
இதுவென்றும் பெண்ணென்றும் ஆண்தானென்றும்
 இகாரமென்றும் மகாரமுண்ட வெறிநீரென்றும்
அதுவென்றும் அனந்தமென்றும் ஏகமென்றும்
 அம்பரமே அறிவில்லா வீடேயென்றும்
சதுர்முகனுஞ் சிருட்டிப்புப் போலேமைந்தா
 சாற்றுவார் வெகுகோடி பேர்கள்தானே. (10)

தானான பெருமையிங் கலையினூடே
 சந்திரனுடைகலையை யொன்றாய்ச்சேர்த்து
வேறான ரேசகபூ ரகமுங்கும்பம்
 விடுத்ததய மாகுமட்டுஞ் சலிப்பில்லாமல்
மானுர்கள் மயக்கத்தில் வீழ்ந்திடாமல்
 மைந்தனே முச்சுடராஞ் சுழினைபார்த்துக்
கோணான கத்திநெரி சனமுமாகும்
 கூடழிந்து போகாது கூடுகூடே. (11)

கூடுகிற இந்தமுறை தெரியாமலன்பர்
கூறுகெட்டு யோகதா ரணைகள்செய்து
மாடுபோற் பெருமூச்சை விட்டுவிட்டு
மைக்கினா மேலென்றுங் காலென்றுந்தான்
நாடுதொறும் ஓட்டமாய்க் களைத்திளைத்து
நாய்போலே அலைந் தலைந்து இரையுமாகி
வீடுதொறும் பேசிவிட்டு நோய்கொண்டிருந்து
விருதாவி லிறந்திட்டார் வெகுபேர்தானே. (12)

வெகுபேர்க ளொத்தவையோ மாண்டார்கோடி
விதவிதமாய் வாசியைத்தான் பெருக்கப்பேசி
ஆகுதமாய் அஞ்செழுத்தை மூக்கில்மாறி
அதற்கடுத்த ரெண்டெழுத்தைப் பின்னுமாறி
உசிதமாய் அகாரவுக ரம்ஓங்காரம்
உத்தமனே மந்திரயோ கங்கள்செய்து
விசிதமிடை பிங்கலையைக் காணுத்தோஷம்
விட்டுவிட்டார் சடத்தையுமே வீணர்தானே. (13)

வீணான காமிக்கும் ஆங்காரிக்கும்
வேகமுள்ள கோபன்மேலோ பிக்குஞ்சாக்தம்
காணாத புல்லனுக்குந் தர்க்கவாதி
காரியத்துக் காய்வணங்கும் கள்ளவாதி
கோணாத குருவைவஞ் சனைசெய்து
குறைசொல்லிச் சொத்தியாக் குருடருக்கும்
பூணான சிவசிந்தை யில்லானுக்கும்
புகட்டினாற் பலியாபூ ரணமென்றோதே. (14)

பூரணமே தெய்வமென்ற உறுதிவேணும்
புண்ணியமாந் தருமத்தின் புகழும்வேணும்
காரணமாங் குருவுக்குட லாதிபோலும்
கைக்குநீர் வார்த்தொன்றாய்க் கலந்தெப்போதும்
நாரணும் லக்ஷிமிபோல் வாழவேணும்
நயம்வேணும் பயம்வேணும் நட்புவேணும்
ஆரணமாங் கருவிடையந் தோணவேணும்
அன்புசிவ சிந்தையுத்தா னதிகமாமே. (15)

ஆதிமாம் புண்ணியர்க்கு இந்தயோகம்
அசாத்தியர்கள் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
நெறிபெற்ற [illegible] கொண்டால்
தேசிகர்கள் [illegible] (16)

பாவென்றும் [illegible]
பதிகாரி [illegible]
காவென்றும் [illegible]
[illegible] குருவென்றும்
நாவென்றும் [illegible]
[illegible]
கோவென்றும் [illegible]
கொண்டோரை [illegible] (17)

ஆமடா மிவ்வினைவிட்டு யோகம்பெற்றார்
அப்பனே கண்டதில்லை ஞானப்போக்கு
ஓமடா வாராது முத்தியில்லை
ஓவியாது காமப்பேய் ஒருநாளுந்தான்
நாமடா மிவ்வினைமுந்தி அர்ச்சித்தேத்தி
நலமான பனிரண்டு வரையுந்தாண்டி
காமடா வென்றுமனை வரையுந்தாண்டக்
கர்ப்பசித்தி யோகசித்தி கடாட்சித்தானே. (18)

கடாட்சித்த படியாலே மயக்கம்போச்சு
கருவிகர ணாதியெல்லா மாண்டுபோச்சு
உடாச்சித்த புரியட்ட [illegible]ம்போச்சு
ஒன்றுபொரு ளென்றெண்ணித் தெளிவதாச்சு
அடாச்சித்த பயங்கோபம் வீறும்போச்சு
அஷ்டமா சித்திபெற அறிவுமாச்சு
படாச்சித்த மாயையெல்லாம் பறந்துபோச்சு
பரம்பொருளே கதியென்று பணிந்திட்டோமே. (19)

ஓமென்ற அட்சரமும் வாலையாச்சு
    ஒருத்திவயித் துலகமெல்லா முதிக்கலாச்சு
ஆமென்ற பேருக்கு அருளுமாச்சு
    அறிவில்லை மூடருக்குக் காலனாச்சு
நாமென்ற அகங்கார மத்துப்போச்சு
    நழுவுகின்ற குணம்போச்சு உறுதியாச்சு
போமென்ற யெவர்களையும் மெய்க்கலாச்சு
    பூரணியும் என்வசமா யிருக்கலாச்சே. (20)

இருக்கமட்டும் நான்கேட்ட வரங்களெல்லாம்
    இறையளவு தப்பாமற் கொடுக்கலாச்சு
அறுக்கமட்டும் பாசத்தை யோகமார்க்கம்
    அடிக்கடியே அவள்வந்து சொல்லலாச்சு
பழுக்கமட்டுங் குஞ்சியைத்தான் சிறகால்கொண்டு
    மாதுகாத்த குக்குடம்போற் பேணலாச்சு
பொருக்குமட்டும் யிடைபின்னே வெளியிலேத்தி
    யோகாமற் பிங்கலையிற் புக்கினேனே. (21)

புக்கினேன் சுழிமுனையில் மனக்கண்ணாட்டிப்
    பொருந்துறைந்தே னேகாமல் வாசிகட்டி
சிக்கினே னென்றுமன மொன்றிநிற்கச்
    சிவசிவா அண்டவுச்சி யமுதமூறும்
நக்கினேன் அமுதத்தை யுண்டுதேறி
    நாட்டிலுள்ள கிரியைவிதம் நன்றாய்க்கண்டு
மொக்கினேன் பிரபஞ்சம் பொய்தானென்று
    முத்திபெற்றேன் சித்திபெற்றேன் மூச்சுள்ளாச்சே (22)

ஆச்சுதடா ஓராண்டில் வியாதிபோச்சு
    அப்பனே ரெண்டாண்டில் மோகம்போச்சு
வாச்சுதடா மூன்றாண்டிற் சாந்தியாச்சு
    வைதாலும் புகழ்ந்தாலும் நிதானமாச்சு
போச்சுதடா நாலாண்டில் விஷமேறாது
    பொய்யென்ற தேகமது மெய்யதாச்சு
காச்சுதடா பூகாயுங் கனியதாச்சு
    கருதிப்பா ரஞ்சினிலே பொரிவென்றேனே. (23)

பொரிவென்றேன் ஆறாண்டில் எமனுமாண்டான்
பூரணத்தாய் பதத்துக்கு ஆளுமானேன்
கரியென்று எனையெய்த்த மனதையேழில்
கன்றாக வென்றுவிட்டு அறிவைக்கண்டு
பரிகுருவாய்த் தங்கத்தின் மகிமைகண்டு
பதைப்பறவே அஷ்டாங்க யோகம்பார்த்து
வரிவரியாய் எட்டாண்டில் லிங்கத்தின்
மலரடியைப் போற்றிமனம் மகிழ்ந்திட்டேனே. (24)

மகிழ்ந்திட்டேன் சித்திக்க படிமுடித்தேன்
வாலைசியனுக் காரைப்பெண்ணாள் மகிமையாலே
புகழ்ந்திட்டேன் நிராமயத்தை யங்காளுக்குதான்
போக்குவரத் தொழில்தந்த நிலைபெறுமல்
இகழ்ந்திட்டேன் மயக்கமெல்லாங் கீழ தள்ளி
எனக்கொருவ ரிணையேது என்றுபேச்சி
அகழ்ந்திட்டேன் அண்டத்தைக் கண்டுதேறி
ஆரறிவா ளவளறிவா ளறிந்தாளே. (25)

அதீதமாம் ஒன்பதிலே நடந்தமார்க்கம்
அறைகிறேன் அழகுடைய மைந்தரேறு
நதிதமாங் காசியிலே நடக்குஞ்செய்கை
நான்தெரிந்து கெவுனசித்தர் தன்னைக்கண்டேன்
பதிதமாந் தூரதிஷ்டி யென்னைப்பெற்றார்
பகலவனுஞ் சொல்லிவந்த பண்புங்கண்டேன்
விதிதமாய் மனிதருட நிகழுந்தோன்றி
விதவிதமாய்ப் பாடியே விளக்கினேனே. (26)

விளக்கினேன் பத்தாண்டா யிரத்தெட்டண்டம்
விசாலமெல்லாம் ஒருநொடியில் மேவிப்பார்த்தேன்
துளங்கினேன் பிரமலோ கத்திற்சொன்ன
சுகமான சரசுவதி நிலையுங்கண்டேன்
வளங்கினேன் பொன்னுலகத் தேவரெல்லாம்
வணங்கவே வரம்பெற்றேன் மாயனூர்தன்
களங்கமில்லா வைகுண்டந் தன்னிற்சென்று
கயிலாசக் கரைகண்டு களிப்புற்றேனே. (27)

களிப்புற்றேன் சிவனை வணங்கியிந்தக்
கயிலாசந் தனைத்தாண்டி அப்பாலேக
விளிப்புற்ற குளிகையொன்று வேண்டிக்கேட்டேன்
விமலனார் எனைப்பார்த்து மெச்சிக்கொண்டு
ஒளிப்புற்ற கயிலாசந் தைக்கொண்டாயே
ஒருவருந்தா னினைப்போலே வருவார்காணேன்
அளிப்புற்ற பிரபஞ்ச மயக்கம்விட்டு
அறிவுண்மை பிரகாசமாயிரு மறிவுற்றாயே. (28)

ஆயிவல்ல பத்தாலில் வளவுங்கண்ட
அருமையுள்ள சப்தமண்டலம் நீயேயென்று
தாயிடத்தி லென்னமுங்கேள் நானுனக்குச்
சாத்துகிறேன் மூப்பதிலே சவுமியமோனம்
நீயிதற்கு அப்பாலே போசவென்றால்
திருவாணி கோவிப்பாள் திகிலென்றெண்ணி
நாயனார் புத்திசொல்லி சாங்கியயோகம்
நவின்றிருக்கேன் தாயிடத்திற் கேளென்றாரே. (29)

என்றவுடன் மறுபடியை வாசற்றனில்
எனையீன்ற புவனையுட பதத்தைப்போற்றி
நன்றியுள்ள மாதாவே பெருக்கப்பால்
நான்சேரக் குளிகையொன்று நக்கன்பக்கல்
வென்றியுடன் கேட்டதற்கு சாங்கியயோகம்
விபரமுற வறிந்தாக்கால் வெளிபாழ்தன்னிற்
பொன்றுமே னெறிடலா மிப்போதுன்றற்
பொறுகாது உறுதியில்லை யேயென்றாரே. (30)

உறுதியில்லாப் பிள்ளைகளை யேன்தான்பெற்றாய்
உத்தமியே பத்தினியே உமையேஅம்மா
விருதாவி லித்தனைநாள் பட்டபாடு
விதியெழுத்தின் படியோநா னுன்னைக்கண்டும்
கருதாமல் அரைகுறையாய்ப் போகநன்றோ
காரணியே பூரணியே கருணைபூண்டு
குருவருளாற் சாங்கியயோ கத்தைச்சொல்லும்
கும்பகமே தம்பமெனக் கும்பிட்டேனே. (31)

குட்டிட்ட மைந்தர்களின் குருராஜசிவ
கூறுகின்றவ ஞானநெறியோ வழியோ யோகம்
சுட்டிட்ட பின்னே கட்டுச் சொல்லுவோம்
சுட்டுக்கும் சமிலாமித் சாக்கியாபோகம்
கட்டிட்ட படியாலே உனக்குச் சொன்னேன்
கணிவில்லை முடிவில்லை அடியுமில்லை
தெட்டிட்டுப் பார்ப்பதற்குச் சற்றுமில்லை
சிலையோ மனமில்லை வெளிதீபமாயினமே. (32)

வெளிவெளியாம் அகண்டவொளி அந்த ஆம்
விசும்பதத்த மனவொளியாம் அல்லவாகில்
களிமுற்ற பூதவெளி அல்லவாகல
கண்ணுற்ற பின்டவழி அல்லவல்ல
அளிமுற்ற அகார நிராமயாகல
அகண்டமிச்ச பேரண்டமாம் சிவானியுமல்ல
மொழியாற்ற பவளமணி வருதயோகம்
முச்சுடரில் கண்டது கிறீத்தமே. (33)

அறிவான மூப்பாழும் கடந்த வெளிவெளியாய்
அந்தொழிற்கும் கடக்கின்ற அருளொளியாமுண்மை
பெருவெளியாம் அறிவற்ற வெளிகடந்தபாலே
பெரியோர்க்கும் பஞ்சகர்த்தர் ஐவருமேயறியாக்
குருவெளியாம் கைலாசத் தப்புரமாமடக்கே
கூறுத மோனவெளி சாக்கியமாமதனைப்
பருவங்கொண் ஞானக்கரைப் பழிப்பார்க்குவங்கால்
பகர்மோட்ச மூர்த்தியுமுன் பாரினுள்ளன்பாமே. (34)

பரமான உங்களையார் எனக்குரைப்பர்
பகர்ந்திட்ட சாங்கியமோ கத்திறமே
அறமான முப்பத்தி ரெண்டுஞ்செப்ப
ஆறுமுகன் உமையாளுக்குச் சாங்கியஞ்சொல்லி
வருமான பொருளியக்கு அசார்களை வெல்ல
வடிவேலைக் குகனிடத்தில் மனதோடிப்பேன்
தாமான கிரவுஞ்ச கிரியைவென்று
தானவரைக் கன்றவிப்பத்தான் சத்தியமாய்த்தானே.(35)

சத்தியமா யிருந்தவர்க்கு இந்தயோகம்
தவறாது சாக்கியந்தான் வருந்தன்றாலே
முத்திபெற வேணுமென்றால் என்னைப்போற்று
முழுமுதலாம் உங்களையர் தன்னைப்போற்று
சித்திபெற வேணுமென்றால் பொய்யாகாது
செடமிருக்க வேணுமென்றால் சஞ்சலமாகாது
பத்தியுள்ள என்மகனே என்றுஅம்பாள்
பசர்க்கிட்டம் பரவெளியிற் பாய்ந்திட்டாளே. (86)

இட்டாளே இவ்வண்ணம் யோகமென்று
என்றனக்குப் பிள்ளைதொண் ணூற் றாறுபேர்க்குந்
திட்டமுடன் சொல்லிவைத்து அவரவர்க்குச்
சிவசுவர்க்கம் வெகுகோடி கண்டோரில்லை
அட்டதிசை யெங்கிலும்போய் அண்டமெல்லாம்
அவர்கூடி விளையாடி அறிவைப்பெற்று
பட்டமிடுங் கயிறதுபோற் கெவுனத்தாடி
பகிரண்டங் கடந்துவெளி பாக்கண்டாரே. (87)

பாக்கண்டு புசண்டரையுங் கண்டுபேசி
பண்புள்ள கொங்கணரும் நந்திமூலர்
திரங்கண்ட சேய்க்குகுரு ராஜன்பிள்ளை
இடமெத்தத் தாடிமெத்தச் சிவமுமெத்த
உரமெத்த இவர்களுக்கோ குளிகையில்லை
உண்மையினால் ரசமணியின் வேகத்தாலே
வரம்பெற்றார் பதினெண்பேர் மார்க்கமெல்லாம்
மாயையென்று எந்தனையும் மெச்சினாரே. (88)

மெச்சினார் நவகோடி சித்தரெல்லாம்
மேனுலகுங் கீழுலகும் நடுக்கண்டத்தும்
நச்சினார் குருராஜ னெங்கேயென்று
நாளவர்க்கு யேழையைப்போல் நயந்துகொண்டு
அச்சமுள்ள சித்தருக்குப் பிடிகொடாமற்
சோதிதனை நம்புண்மை யுணருவோர்க்கு
அச்சங்கள் தனைத்தீர்த்தம் பரத்தைக்காட்டி
அரகார தொண்ணூறு யுகங்கண்டேனே. (89)

கண்டேன்நான் வெகுகோடி காலம்வாழ்ந்து
 கண்மணியாம் நாம்பெற்ற பிள்ளைக்கெல்லாம்
விண்டேன்நான் இந்தமுறை யோகமெல்லாம்
 விளம்போர்க்குச் சூரியன்றன் வெளிச்சம்போல
பண்டேன்நான் பதினெண்பேர் வாதைவென்று
 பகர்ந்தசிவ யோகசித்தா மணியையப்பா
கொண்டேன்நான் சதுரகிரி சார்புசித்தர்
 கொடுவென்று கேட்டார்கள் கொடுத்திட்டேனே. (40)

கொடுத்திட்டேன் கலியுகத்திற் போதனீமை
 குணமாக ஆருகிற நாலாமாண்டில்
விடுத்திட்டேன் காசியிலே சமாதிகூடி
 யேமினேன் மூவாயி ரத்துச்சொச்சம்
அடுத்திட்டேன் பரவெளியே நாமேயென்று
 அலைச்சலற்று வெகுகாலஞ் சென்றபின்பு
படுத்திட்டேன் பாவநாசந் தெற்குமூலை
 பார்பொதிகை சார்புதனிற் பண்புற்றேனே. (41)

பண்புற்றேன் சாதியிலே வசியன்சூத்திரன்
 பகருவா ரெக்குலப்பன் நந்திபாட்டர்
நண்புற்ற என்தாயோ சிவகாமியாயி
 நாங்களுமே உடன்பிறந்தோர் பத்துப்பேர்கள்
தென்புற்ற என்தாயார் கிருபையாலே
 தீவினைகள் தானகற்றித் திறமையானோம்
அன்புற்ற என்பேரோ வேதமூர்த்தி
 அஷ்டாங்க சாங்கியமும் பார்த்தபின்பே. (42,

பின்பல்லோ குருராஜ னெனப்பேர்பெற்றுப்
 பெரியோர்கள் தங்களுக்கும் பிரியனாகி
அன்பல்லோ வாலைபெற்ற மைந்தனாகி
 அருளாலே முன்னைம்பத் தொன்றுபாடி
நன்பல்லோ ரத்தினமு பாணமென்று
 காட்டினேன் அதன்பிறகு இந்தநூலை
ஒன்பதுபேர் பிள்ளைகட்கு அன்போடின்று
 உருக்கமுடன் பாடிவைத்த துண்மையாமே. (43)

ஆமப்பா முன்பட்ட பாட்டைக்கேளு
    ஆதிகுரு வம்பலவ ரிடத்தில்நாளும்
தாமப்பா மந்திரத்தி லாறுகோடி
    சாதித்தேன் பலதகையாம் யோகமார்க்கம்
நாமப்பா வெல்குரு பரமானந்தர்
    நாதரிடஞ் சாசாத்ரம் நன்றாய்க்கற்று
ஓமப்பா சிவயோக வாழ்க்கைதன்னில்
    ஒருத்திவந்து சொல்லஅதைச் சொல்லினேனே. (44)

சொல்லாமற் சொன்னகுரு வாக்கியம்வேணும்
    கருதிநிலை வேதாந்தம் பார்க்கவேணும்
கல்லாமற் கற்றுணர்ந்து கொள்ளவேணும்
    கால்கண்டு கண்கொண்டு நடக்கவேணும்
வெல்லாமல் வெல்வதற்கு வேலும்வேணும்
    விகற்பமுள்ள மனதைலயம் பண்ணவேணும்
அல்லாமற் பொய்தள்ளிப் பழகவேணும்
    அறிவுகுரு வாய்ப்பதுவும் அருமைதானே. (45)

அருமையென்ன பெரியோரை அடுக்கவேணும்
    அடிபணிந்து கேட்டதெல்லாங் கொடுக்கவேணும்
பொருமையென்ன அளவில்லாச் சாந்தம்வேணும்
    புத்திமதி புண்ணியமுங் காணவேணும்
வெறுமையொன்று மில்லாம லிருக்கவேணும்
    விசாரமொடு கோபத்தைத் தள்ளவேணும்
சிறுமையென்ற கொலைகளவு காமம்போனாற்
    சிவயோக மானதுவுஞ் சித்திதானே. (46)

சித்தியுண்டாம் இந்நூலைப் பார்ப்போர்க்கையா
    சிவசிவா திருவுளமே கெதியென்றாக்கால்
முத்தியுண்டாம் மயக்கமற்ற பேர்க்குமோட்சம்
    முச்சுடரின் னுச்சிவெளி திறக்கும்மூலம்
பத்தியுண்டாம் பரம்பொருளுங் கிருபைசெய்வார்
    புலகாலம் பார்வதியைப் பணிந்ததாலே
வித்தையுண்டாஞ் செல்வமுண்டாம் அருளுமுண்டாம்
    வேணபடி யிருந்துவிளை யாடலாமே. (47)

ஆடலாம் [illegible] காயசித்தி
[illegible] தெல்லாம்
[illegible]
[illegible]
காடெலாம் [illegible] பாவியோன் றாம்
கைக்குள் சருக்கரைங் தங்காதாகும்
காடெல்லாம் வழித்திரியன் றன் சொன்ன சொன்ன
கருவெல்லாம் குருவாகக் காணுந்தானே. (48)

நானென்ற குருபாத வாலோபதம்
தஞ்சமென்று கைப்பிடியேல தவறவொட்டான்
கோனெனி நீயாதித சாதகத்தால்
எடுவிரு வில்சகலம் போக்காமற்றான்
காலேதி யாயிருந்த யோகம்பாரு
நாளதனு ஞானம்டாரும் கண்ணைகண்ணை
வேறுன பூதலை யாத்திரையையாய்
விட்டுவிடு பட்டமாம் வெற்றிக்காமே. (49)

வெற்றியோ சத்தியோ தத்தியோதான்
விருதாமோ சாசோதி விமலத்தாலோ
செத்தியோ உத்தியோ கண்டதில்லை
சிவமயமாய் நின்றதிரு சின்மயந்தான்
வத்தியோ என்றழைத்து எல்லோரவண்ட
மனேறும்சியுங் குருபாதம் வாழியாகச்
சத்தியிலே முச்சத்தி தன்னிற்போட
நமிழுக்குக் குருபாதமாங் காக்குமுற்றே. (50)

குருநாதர் சிவயோக சித்தமணி 50
முற்றிற்று.



சுந்தரபாண்டியம் புஸ்தக வியாபாரம் வை. சிவகுருநாத மூப்பனாரிடம் வாங்கிய எட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

முருகன் துணை.

பதினெட்டாவது

இராமரிஷி திருவாய் மலர்ந்தருளிய

சிவ யோக ஞானம் 18.

ஆதியாய் நின்றபரனே கணிலையைப்போற்றி
அண்டமுடி வானபொரு ளதனைப்போற்றி
சோதியாய் நின்றபூ ரணத்தைப்போற்றி
சொல்லுகிறேன் நாதாக்கள் பாதம்போற்றி
நீதியாய் நின்றசித்தர் பாதம்போற்றி
நிறைந்திருந்த மறைமுனிவர் பாதம்போற்றி
வீதியாம் கவிநீதி யமைத்துவேனே
வீற்றிருந்த சற்குரு கணேசன்காப்பு (1)

உத்தமனே மனப்பூரவி யென்றநேரம்
உரிமையுள்ள வாசியெனும் யோகந்தன்னை
சித்தியென்ற பூரணத்தி லிலங்குந்தீபம்
தெரிசித்து மயக்கமென்ற லகிரிகொண்டு
வெற்றிபெறக் காயாதி கற்பஞ்சேரு
வீரப்பா அடிமுடியு முகத்துபாரு
புத்தியுட னித்தநா லதனைப்பார்க்கப்
புகழாகும் அறுசமயம் ஒன்றாய்க்காணே. (2)

காணவே மேருவதிற் றீபந்தோற்றும்
கலையான மதியவனுந் தேய்க்கேற்று
தோணவே கதிரவனுஞ் சேவையாகும்
சுகிர்தமதி குறைந்துஅரியனைக்காணப்
பூணவே மதிமறைந்த செயலைக்கண்டு
பொருமையுடன் வாக்குமனை தொன்றதாகி
ஊணவே மதிமுழுதுந் தன்மைதன்னை
உற்றுணர்ந்து பார்த்திடவே சிரதாமே. (3)

சீரப்பா சூரியசந் திரனைக்காணச்
    சேருமடா சிவயோகம் உண்மையாகப்
போரப்பா சமப்பால் காணற்பானும்
    பிரியமுடன் சித்தர்களுக் குகந்தவா றாம்
வேரப்பா ராமெனுமோர் மந்திரத்திலே
    வீரான வாசியென்ற அம்பர்தன்னை
கோரப்பா அறிந்துகனை சேர்க்கவாளுநில்
    நிலையான வாசிதனைச் சேரலாமே. (4)

ஆமப்பா வெந்தவித மாறுதற்கான்
    ஆனந்த மானபர வெளியிற்சார்ந்து
காமப்பா கலையானந் தனையுணர்ந்து
    நலமான வாசிதனைக் கூர்ந்துநோக்கித்
தாமப்பா மதியைமதி ரவியிலேற்றித்
    தன்மையுள்ள பரவிசெனுவம் வாசிதன்னை
நேமப்பார் சுற்றிவரச் சரிசெய்து
    நிலையான விடமெங்குஞ் செல்லலாமே. (5)

செல்லலா மெய்பதியும் வாசிபூட்டித்
    திரமாக ரேசகபூ ரகமுஞ்செய்து
வல்லதிட மாகக்கும் பகந்தேநின்று
    வழித்தோட்ட மாகமேல் சோதிகண்டு
சொல்லந்த மானசத்த மண்டத்தன்னிற்
    சுடரொளியாய் நின்றதொரு பாதம்போற்றி
கல்லாகத் தேகத்தின் கசடையெல்லாம்
    கனற்கொளுத்திக் கோலாலே சுட்டுப்போடே. (6)

போடப்பா சுடற்றுற் சுத்தமாகும்
    பூமிதனிற் பயிர்களுருஞ் செயலைக்கண்டு
நாடப்பா சாகாத கல்விதன்னை
    நலமாகக் கற்பதற்கு வுன்னைத்தேற்று
தேடப்பா வழுதகலை தன்னிலேறித்
    தீயாறு மயிர்ப்பாலத் தின்மேலாகச்
சாடப்பா ஆசையைநீ விட்டுவிட்டால்
    தணல்பற்று மயிர்பாலஞ் செயமதாமே. (7)

செயமான பாலமதின் மீதிலேறிச்
சித்தான வீட்டைவெகு வாகத்தாண்டி
வயமான வீதியாலே மதியைப்போக்கி
வருமந்த ரவிதனிலே பதியாய்நின்று
அயமான மூந்திமத்தி சோதிவிட்டுத்
சயமான மூலமிருந்து விழிந்தப்பாரு
நயமாக வியாபிக்குஞ் சொருபச்சோதி
நன்றான தீபமதைப் போற்றிப்பாரே. (8)

போற்றிடுவாய் நிஷ்களங்க மாசகற்றுப்
பூரணமாய்ச் சுயஞ்சோதி யானதீபம்
சாற்றிடுவாய் மேருவின்மே லானதீபம்
சார்ந்திடும் மேலாக விளங்குந்தீபம்
ஏற்றிடுவாய் வாலையபி ராமிபாதம்
இணங்கிறு லட்டசித்தி யெல்லாமாடும்
காற்றினையு முனைபோல்மற் றொருவருண்டோ
கலமான அறிவுல்லா தீபந்தானே. (9)

தானான அகாரமடா தீபமாகும
தன்மயமாய் நின்றதுவும் வாடதீபம்
கோனான சோதிரூபி யாகக்கண்டாற்
கூச்சமில்லை நீச்சமில்லை பேச்சமில்லை
தேனான குறியோடே காலாலேறித்
தேறிகுடி யிருந்திறந்த யிடத்தைப்பாரு
வேனான மூலமுழுப் பாழதாகும்
விசனமற்ற இடமன்னே வீடதாச்சே. (10)

ஆச்சப்பா மூலத்தாய் உகாரரூபி
அளவில்லாக் கந்தமொடு செல்வாக்குள்ள
மாச்சரியம் மாயையென்ற மாயாரூபி
வளமாக மயக்கமென்ற லகிரியுள்ளாள்
பேச்சறியாள் மூச்சறியாள் மதிமயக்கம்
பேயாகிப் பேசவறி யாமல்நிற்பாள்
வாச்சமதி வழுதுண்ணு ளந்தப்போதை
வல்லமைசேர் பூரணியை வணக்கஞ்செய்யே. (11)

செய்தடிமை யாமெனை மகிழ்ந்துநின்றுஞ்
சித்துடைய சத்தியவ ருக்கீறே
வையமெலாம் வினையாடி யுருவாய்நிற்பாள்
மகத்தாமீ ரெழுத்துமோ ரெழுத்துஞ்சொல்வாள்
வையகத்திற் றுணைநல்மாய்க் குருவைப் போற்றி
வாழ்வதற்குக் கூறுடனே குறிப்பைக்கண்டு
மெய்யசனைக் கலைப்போலே திரிக்கரவென்னை
பாருகபூரீ முனையுப்வழி துறையாய்த்தானே. (12)

ஆய்க்கறியார் சடமென்ற அருளாத்தானும்
அருளான பூரணத்தி னடிமைக்காளர்
தோய்க்கறிவாய் சதுரகிரி முடியிற்றாயும்
அகமாய்ச்சென் றக்கிரியின் முடியைக்கண்டால்
வாய்த்தமுடி மீதினிலே குகைதானுண்டு
வளமாய்க் குகைதனிலே வாசிதேவர்
பாய்க்குதவுஞ் செய்திடுவார் வாசியென்று
பண்பாக அவர்பதத்தைப் பூசிப்பாயே. (13)

பூசிப்பாய் நவக்கிரக மதித்தேனைத்தப்
புலனறிய வனுக்கிரக மெங்கேயென்று
நேசிப்பாய் சிவமகிமை தன்றுற்றாலும்
நிலைபெறவே அனுக்கிரகம் நேரொருகும்
போசிப்பாய் சத்தியொளி தன்னில்நின்று
போற்றிவா யனுக்கிரகப் பதிவைத்தானும்
வாசிப்பாய் பதியறிந்து பதியிற்செல்ல
வாசியென்ற பாவாசி பற்றிமேலே. (14)

ஏறிடவே யோனமெனச் சொன்னேனைத்த
இயல்பான கேசரத்தின் கிரியையாலே
மீறிடவே பிரமையொளி தன்னிலேறி
வினையமுடன் ரவியொளியி லமுதக்காலு
ஆறிடவே மதியம்பூ ரணமேயென்று
அரிதமாய்க் கண்டேநீ யிருந்துபார்த்துத்
தேறிடவே பதியறிந்து அந்தலத்தில்
தென்பாக நிற்கையிலே வாசிதேவர். (15)

தேவேரீ யானல்கின் பெருமைதன்னைச்
செப்பமுடி யாதவரம் பலத்தைக்கண்டால்
பாவவினை யண்டாது சமாதிநிஷ்டை
பண்பான வெட்டிரண்டும் பத்ததாகும்
தேகையுடன் பத்தையுமே பற்றியேறிச்
செயலறிந்த பதியுடனே பத்தைக்கண்டு
சேவைசெய்து பூரணத்தைச் சிமிழில்வாங்கிச்
சிவமான பூரணத்தைக் கையிலேந்தே. (16)

ஏந்தியே யித்திரண்டு மொன்றாய்க்கூடும்
இயல்பான சோமதி யொளியென்சொல்வேன்
பூந்தகொரு பூரணத்தைக் கண்டதாலே
பூரணமாய் முத்தனென்று பேரேவாய்க்கும்
சாந்தமுடன் பூரணச ஜலம்வாங்கித்
தன்மையுள்ள ரவிபீசங் கூடச்சேர்த்துக்
காந்தியாய்க் காயாதி கற்பமென்று
கண்மணியே சிமிழதனிற் பதனம்பண்ணே. (17

பண்ணவே குருபதத்தைப் போற்றிசெய்து
பண்பாக வமுதமெனக் கொண்டேனங்கு
உண்ணவே சிவயோக ஞானமார்க்கம்
உரைத்தேனே மக்களுக்கே யுலகமீதில்
எண்ணவே சின்மயத்தைச் சார்ந்துமேயும்
இயலறிவோ டெங்குபர வெளியைச்சேர்ந்து
வண்ணமுடன் சிவரூப மாகநின்று
மகத்தான நிலையறிவா யீதுமுற்றே. (18

இராமரிஷி சிவயோக ஞானம் 18

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் மம்மதுசாயபுபுரம் எட்மாஸ்டர் அன்பிரான் போஸ்ட்டு மாஸ்டர் M. R. இராக்கப்பபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பராபரி துணை.

பத்தொன்பதாவது

அத்திரிமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

உண்மை ஞான போதகம்.

அரியென்ற அட்சரத்திற் காதியாகி
அண்டபிண்டத் தப்பாலும் அப்பாலாகி
அரியாகி அயனாகி அரனுமாகி
அருளாகி இருளாகி யொளியுமாகி
அரிதாகிச் சிறிதாகிப் பெரிதுமாகி
அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
அரியவனையே வேதாங்க பீடமேவும்
அம்பரத்தின் செம்மலர்த்தா ளுமைக்காப்பாமே. (1)

ஆமப்பா சரியையதே உரியதென்ன
அமர்ந்தசடா தரன்றனது வரையைக்கட்டி
நாமப்பா மூலமெனும் பரையைப்போற்ற
நலமச்ச சகலசித் தியுமுண்டாச்சு
வாமப்பா வாலைதனைக் கண்டதென்றால்
வழியறிந்தோர்க் கன்றிமற்றோர்க் கெய்திடாது
தேமப்பா வெட்டிரண்டு வயதாகித்
திகழ்கின்ற சோதியுரு வானாள்பாரே. (2)

பார்க்கவென்று நெருப்பாறு கடந்துசென்றால்
பரையவளுந் தனித்திருப்பா ளொருவரின்றிச்
சேர்க்கவே யிவ்வழியைச் சித்தரெல்லாம்
தெரியவொண்ணு தேமறைத்துத் தியங்கச்செய்தார்
நீர்க்குமிட னுயிர்க்கும் போதிற்றானும்
சிறந்திருந்த வைம்பூதம் பிரிவதாகி
ஆர்க்கவே வினைத்தோடு வினைமதாக
அடையுமென்று கூறிடுவார் மடையர்தானே

தானாகப் போவதற்கு வழியொன் றில்லை
    சடந்தனிலே யுறங்கும்போ தொளிந்துதோன் றும்
கோனான மிருதிவியே மலமதாச்சு
    கூறுகின்ற அப்புவிலே ஜலமதாச்சு
வானான தேயுவதே விந்துமாச்சு
    வளையாக வாய்வதுதான் சுழியலாச்சு
தேனான வாகாயம் மூச்சுமாச்சு
    தினந்தோறுங் கழி லென்னபாரே. (4)

பாரப்பா சடலமது தளர்ந்துபோச்சு
    பகரிது பரவான்மா சிவான்மாவும்
ஓரப்பா சத்திசிவ மென்பதாச்சு
    உண்மையிவர்க் கொருபோதுஞ் சாவதில்லை
சேரப்பா கணைமங்கை வீடாய்க்கட்டி
    நிலைகலை போன்றவித்த சடலத்துள்ளே
சீரப்பா ஜீவனுயி ரிரண்டதாச்சு
    சித்தறிந்தால் நான்முகன்ற னுண்மைபோச்சே. (5)

போச்சப்பா பூதமது கழிந்தபோது
    புகழான சடமது நிலைதளர்ந்து
நீச்சப்பா ஜீவான்மா தேகமாகி
    நின்றபரா வான்மாவு மூட்கலந்து
மூச்சப்பா சூக்குமமாந் தேகமாகி
    ஊற்றுகெற்பம் பூகாயமாய்க் கனியதாகி
காச்சப்பா பழுத்துவிழுந் தன்மைபோலக்
    கனிந்தபின் பதுபிறக்கும் பூதக்கூடே. (6)

கூடியே தரிக்கிற சுத்தின்வேளை
    குறிப்பாயு முண்டாச்சு அந்தக்கூட்டில்
நாடியிரு வருஞ்சென்று வெவ்வேறாக
    நயந்திருப்பா ரவர்களைநீ புத்தியாலே
தேடியொன்றாய்ச் சேர்த்துயிரைப் பற்றிக்கொண்டால்
    சித்தறிந்தாய் சடலம்விட்டு வெளிகிளம்பி
ஓடிவேற் றொருகூட்டிற் புக்கலாகும்
    உண்மையடா தேவனும்நீ யாவாய்காணே. (7)

காணவே கடிகைதனி லண்டமெல்லாம்
கண்டிருந்தி லந்திரியப் பேருந்தானை
தோணவுனை யென்செய்வாள் விதிவென்செய்யும்
சத்தவித்தத் தயிரடக்கு மென்றோராது
காணயில்லா தொழுதாத காலபாதன்
காடியுயிர் கவர்வனென் பாரய்வாறத்தை
பூணவே விண்ணின்றான் காலனச்சு
புகழான கோட்டகுத்தா மேமனென்வே. (8)

என்னப்பா ராசியல்லோ தாதனாகும்
இயலான தேகங்வா கனமுமாச்சு
நன்னயமாய்ச் செனிக்கும்போ திருக்குங்கோட்கள்
கடுமையாய்த் தரும்வமது சென்றுதனுல்
வின்னமதாய்த் தேகமது அழிந்துபோகும்
விந்தையென்ற இருவனைப மொன்றுசேர்ந்தால்
உன்னியுன்னைக் கொல்லுகின்ற வையுதங்க
மொன்றுமில்லை யெனக்கன்று புணர்ந்துகொள்வே

கொள்ளப்பா பிடிப்பதற்கு வுமனைது
குவலயத்திற் பிறப்பிக்கப் பிரமனுக்கு
விள்ளப்பா ஆண்மையே தண்டத்தன்னை
விற்பனமாய் இருஞ்டிகர்த்தன் பிண்டத்திற்குள்
கள்ளப்பா ஒன்றுமிலா இருவராகிக்
கனிந்திருந்த நிதனையார் கோவிசென்பார்
தள்ளப்பா விதனுலே யொன்றுமில்லை
சடலத்துட் சத்திசிவந் தனைக்கண்டோரே. (10)

கண்டவர்க்கே அவமாச்ச பிறப்பும்போச்சு
கலந்தொன்றாய்ப் பிரமத்தோ டிருக்கலாச்சு
உண்டப்பா கைலைசொர்க்க மண்டாண்டம்
உற்றுப்பார் பிரமத்துள் ளயிக்கமாச்சு
விண்டார்கள் சடலமது வாகும்போது
விகற்பமிரு கிரகமொன் றாகச்சேர்ந்தார்
தொண்டப்பா அதிலொருவன் சகமொடுப்பான்
தூற்றியதை மற்றொருவன் தெடுப்பான் பாரே. (11)

பாரப்பா விவ்விதமாய்ச் சேர்ந்ததாலே
ஆண்டான் வாயுள்நிறை வொருவனிய
வீரப்பா னொன்றொருவன் பாலைச்செய்வான்
விதிதவறி மாண்டவன்றான் விரகந்தந்த
சீரப்பா வயதாவரை யாக்குமேத்தகத்
திடம்பெற்றாய் பசாசனெனத் திரிவார்பின்பும்
கோப்பா சடலத்தாட் புகுதவென்றால்
கெட்டிதள்ளிக் குட்டிவோன் புகுதொட்டானே.

ஓட்டானே வுயிரெழுத்தைக் கண்டோனானால்
உண்மையாய்ப் புரணியுடனே தேவனாவான்
நிட்டையிலே மோகமுடன் தியானஞ்செய்தோன்
தெரிமையார் தங்களையும் பற்றிக்கொள்வான்
சட்டமுள்ள வுயிரெழுத்தின் தன்மையாலே
சகமெந்திரங்களுக்கு மடங்கானப்பா
இட்டமுள்ள தெய்வங்களும் மாந்தராவார்
செகமனிதர் தேவர்களு மானார்செய்பே.

செப்பினைப் பிரகடைத்தட் சரமேயாகும்
இருந்தின்ற ககாரமல்லோ ஆதிவாரம்
ஒப்பிலாய் மகாரந்தான் இங்காளாகும்
உறுதியுள்ள சிகாரமடா சேயனாகும்
... வெள்ளி வகாரமாகும்
... யகாரமது பொன்னாகும்
... தா சிவமாவார்
... சனியாகு முற்றுப்பாரே.

உற்றுமுன்னே யைப்புருவச் சுழிபுதன்றான்
உகந்துவா ரமதானை வெழுவருந்தான்
சுற்றவுஞ்சே ரக்காரத்தின் ரூபமாவார்
காடியவோன் காரபிரண் டக்காந்தான்
பெற்றிரண்டு பாட்பாச்சோன் காரத்தோரம்
பேணிதனு வுயிருடனே பேருமாச்ச
சற்றவர்க்கு அட்சாந்தான் றேஜுமன்றிச்
சடரினைக் கண்டுபிரிந்து வெல்லொண்ணாதே.

வெல்லமற்றே சிக்கலித்தே தேகமாச்சு
வேண்டுமென முடிப்பதற்கு பலர் ...
சொல்லடா சாருடனே தேகநாடி
சடமான கதிரவனும் மதியென் றேறு
நில்லடா வாசமே முனைமாச்சு
நிலைகருவா பிராணனென்றும் மேவையாலே
வல்லதொரு வாரமடா தேகமாச்சு
வத்திருபாம் படிமுடியுஞ் சுற்றும்பாரே.

பாத்திரைவாய் பிஜுகிலை பயிக்கெதாவில்லை
பண்பதனிற் சுழன்றெழுந்து வைமாச்சுமுடி
சேர்த்தியா பண்டையிண்ட சுபாலயுட்டி
பிபிடமதில் வெளியினிமேல வைத்தவே பாமி
சீர்த்திவலப் புறமண்டத் தேயுறைந்து
செனித்திடவு பக்கமார் பலனிற் றுக்குவ
பூர்த்தியிரு பாப்பிரண்டு கலையுமாகுந்
புகழ்பற்றி படக்குதிர் மதியமத்தேரே.

ஆதபாம் படக்குவெட்டி சுபாலையதும்
உற்றடக்க விட்டாக்கால் தேகமாறும்
சீதசர்ப்ப மடங்கிற்தேய் வதிற்சுழன்று
நின்றுபார தானமெனும் வாயுவாலே
சேதமுடன் சிறிதுசிறி தாய்க்குறைந்து
திபனத்தி லேமுதுவும் பற்றியபின்பு
பேதமிலைப் பிறமுடன் கலைச்சுற்றப்
பேணியுந்தி தேமாக நதியுண்டாச்சே. (18)

உண்டாகச் சிவமாமக் கினியேசொல்லும்
உமையான வாயுவடா வேந்திக்களும்
விண்டாலி மதியனுவும் லோகத்தன்னில்
விதமாகச் சுருணைதப்போற் சுற்றும்பாரு
கண்டதப்பா கன்னிவல மார்பிற்சுற்றி
கதித்தண்ட பிண்டமதா லத்திக்கூட்டிப்
பண்டுவெத திடமார்பிற் சுழன்றுநின்று
பற்றியெழுந் தேன்வைசுற்றி யகன்றுபோமே. (19)

அருகன்றதடா மார்பதனிற் சுழன்றதாலே
அதுபவிப்பி டமதாகித் திருட்டிப்பாச்சு
சகலஸ்ல முட்டிவிட்ட கோலந்தன்னிற்
செந்திருக்க விந்தாம்பாற் சுழன்றதாலே
தகமையுள்ள சுரோணிதப்பி டத்தாள்வாச்சு
தாகது விட் டாக்ஷூர்த்த ருபமாச்சு
உகந்துசிவ சுழிநுனிக் கிலந்தானிற்கும்
உற்றசக்ரா ணிதஞ்சுழுந்தி நிற்குந்தானே.

தானெழுகாற் றுற்றேறச் சுரைதான்பூட்டி
சுத்தியங் கடைந்துபொழி பூரணத்தின்
வேனென்ற தினம்பார்த்துக் கபாலந்தன்னில்
மேவியுநின் றிரங்கியான் புறத்தடங்கும்
கோவென்ற வளர்பிறையில் விந்ததூறிக்
கூடியே பூரணத்தில் நிறைந்துநின்று
தேனென்ற தேய்பிறையி லழிந்துபோகும்
செயலறியா விட்டாற்குத் தவழும்போச்சே

போச்சென்ற சக்லசோ ணிதமுங்கூடிப்
பொருந்திநின்ற சத்திசிவ மாகுமென்பார்
ஆச்சிவிட்டுச் சிவன்றானே வெளியிற்சென்றால்
அமர்ந்திருப்ப தில்லையுயிர் விந்தாக்குந்தான்
பேச்சென்ன விந்துதற்றுப் போனேகம்
பிறங்குநா தங்கருவாஞ் சிவன்றானென்றும்
நீச்சென்ன பொருளோடு சித்தனென்றும்
நிகழ்ந்துவா ராதிவஸ்து தேகமென்னே.

என்னவே ஆதிவஸ்து உயிருமாச்சு
சதிரண்டும் நிலைப்பதற்கு மார்க்கங்கேளு
தன்னையமாய்ப் பூரணதா னாதிவஸ்து
நாடியே பாரபரையைப் பூசைசெய்து
தின்னமிலா சக்லவர்ணப் பாத்திரத்தில்
தேறியே யாதிவஸ்தை வாங்கிக்கொண்டால்
இன்னமென்ன குறையுனக்குத் தேகத்தோடு
இயல்பான வுயிர்நிலைத்துச் சத்தாம்பாரே.

சத்தாக்க சிவயோகயுக்தா னறியவர்க்க
　　சன்மையில்லா வெளிதனிலே யொளியைப்பார்த்து
சித்தறிய வென்றாலே சல்லவர்பா
　　திசமாகச் சரியையிலே கூடிநின்று
வெத்தியா விரத்தெட்டுப் பிறைபூசிக்க
　　வீரமுடன் தேகம்விட்டுச் சென்றுதானால்
பத்தியுடன் கிரியைசெய்யப் பிறையாற்றேறும்
　　புகழான கிரியையிலப் படியேசெய்யே. (24)

செய்யவது கலந்தாசட லத்தின் பூசை
　　செபபொட்டி ரெட்டிமூ விரட்டியாக
வையமாய் மூலத்திற் பூசைசெய்ய
　　வருந்தெனை ஞானக்கா ணுமற்போனல்
எய்திவே மறுசெனன மாவான்பாரு
　　இயலான அறிவோடே நான்கிரட்டி
பையவே போற்றிப்பின் ஞானங்காண்பான்
　　பரவெளியி லொளியறிந்து புக்குவானே. (25)

புக்குவான் சிவந்தேடிப் பூசித்தாக்கால்
　　புகழான ஆறுவகை யாறுந்தாண்டி
சிக்கென்ற நீடவெளியோ டொளியுமாவான்
　　சென்றிருந்து ஆசையுற்றுற் கீழ்வீழ்வான்
பக்குவமா யாசையற்றுச் சிவத்தைச்சார்ந்தால்
　　பகிர்ந்துசடந் தனைத்தின்ற வுயிர்போலாகும்
திக்குவெளி சேர்ந்திருந்த வொளிதானப்பா
　　திகழ்ரூப மரூபமென் றலர்காணோ. (26)

காணர்கள் வெளியுடனே யொளிபோச்சென்பார்
　　கணமாகச் சற்றியண்ட மட்டுஞ்செல்லும்
வேளுனை பிரமசத்திக் கிருளொமெத்த
　　வெளியான சிவன்சேர வொளிவுண்டாச்ச
தானுவென்ற சிவனுக்கு முகமைந்து
　　கண்விழிகள் மூன்றுடனே சுழியுமூன்று
ஆணவமாங் கதிர்மதியக் கினியுங்கண்கள்
　　ஆகும்பார் முகமைந்தி னிறத்தைக்கேளே. (27)

கேளப்பா பச்சைசிகப் போடுவெள்ளை
    கொடியான மஞ்சளோடு கருப்புமாகும்
நாளப்பா மும்மூர்த்தி யாதியாகி
    நலமாக அண்டமெங்கும் நிறைந்துநிற்பார்
ஆளப்பா முகமைந்துங் கண்மூன்றெட்டும்
    அட்டாங்கம் பொருந்துகின்ற தேகமாகும்
நீளப்பிர யாவர்களு மேகமாவார்
    நிலையான எட்டுப்பேர் பிரிவும்பாரே. (௨௦)

பார்த்திடவே யயன்றனே பூமியாகும்
    பண்டரியின் கதிருருத்தி ரன்சோமன்றான்
சேர்த்திடுவாய் சதாசிவனு மேல்மகேசன்
    திடமான மகேசனுக்கு நீலமாகும்
ஆர்த்திடுவாய் வெளியுடனே யொளியோச்சென்பார்
    அருளான மகேசனல்லோ தேவனாகும்
பூர்த்தியாய்ச் சோதிதனித் தனியேநின்று
    புகழான விந்துபல பேதமாச்சே. (29)

ஆச்சடா முகிலேழு வானமேழு
    அதனுடனே மின்கூட வெட்டுமாச்சு
பாச்சடா அட்டபா லகருமாகும்
    பகரிதற்கு மகேஸ்பரனே தேவனாகி
நீச்சடா வாய்வாகி யண்டபிண்டம்
    நிறைந்துநிற்பார் சகலருமின் னவர்க்குளாவார்
பேச்சடா பேசாமற் பாதம்பற்று
    பிரளாதே சாகாக்கால் வலையைக்காணே. (30)

காணவே சித்தனென்ற பேருமாச்சு
    கண்டசதா சிவன்பிடித்த காலுமாகும்
பூணவே யறிந்தாலே கர்த்தாவாச்சு
    புகழ்வாசி ஜீவனுந்தா னவனலாச்சு
பேணவே சிவனெழுத்தே யதுதானப்பா
    பேணியறிந் தாய்திடவா யாசானாகும்
தோணவே கண்டறிவாய் மூத்தனுவாய்
    சொன்னமொழி தவறுதின் னாலதாமே. (31)

ஆமப்பா பூவுதிர்ந்த மாங்கருக்கு
　　அரியகரு வெண்குட்டம் பெருவியாதி
தாமப்பா கிரந்தி வெட்டுமுக்குந்
　　தானகன்றுக் கில்கெந்த சுத்திறேடு
வாமப்பா செங்கொட்டை பலமொன்றாக
　　வகைக்குகிறுத் தெடுத்தப்பின் சிவனார்வேம்பு
வேமப்பா வெள்ளறுகு சங்கங்குப்பி
　　வேருடனே நல்லவிளாம் பட்டைதானே. (32)

பட்டையுடன் நிலவாகை வெய்வேறொட்டிப்
　　பலஞ்சேரு காலென்றுப் படிகாலாகத்
இட்டதாற் பலந்தேங்காய் சிரட்டைகட்டித்
　　தியங்காம லெடுத்தப்பாண் டத்திலிட்டுக்
சட்டமுடன் குளித்தயில மிறக்கிக்கொண்டு
　　சாமைபொறி மாவில்வெரு கடிப்ப மானம்
இட்டதிலே தயிலமிரு பணவிடைதான்
　　ஈய்ந்திடுவாய் தினமுமோர் போதென்றேறே. (33)

ஓதிடுவா யேழுநாட் கொடுக்கும்போது
　　உணவுடனே ரணத்தின்மேற் றயிலந்தன்னை
நீதியுட னேபூசி மூன்றாம்நாளில்
　　நீயிலுப்பைப் பிண்ணாக்கை யரைத்துத்தேய்த்து
சேதியென்ன வெண்ணீர்விட் டலம்பத்தானும்
　　தீருமடா பதினெட்டுக் குட்டமெல்லாம்
ஆதிபோற் றேகமாங் காணக்கடியு
　　மகன்றுவிடு மிச்சாபத் தியந்தானன்றே. (34)

அத்திரிமகாரிஷி உண்மைஞான போதகம் 30

முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதின ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது பட்டம் ஸ்ரீதெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய எட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

திருச்சிற்றம்பலம்.

இருபதாவது

புசுண்டமகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய

மெய்ஞ்ஞானவிளக்கம் 80

சிறந்தபரா பரமாகி யெங்குந்தானாய்த்
　　திர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிப்
பறந்தருளு மைம்பூத மாயைதோன்றிப்
　　பல்லாயி ரத்தண்டம் படைத்தபோதம்
வரம்பெருகு மானந்த வுயிருமாகி
　　மதபேத மாகவுமே வடிவைக்காட்டிச்
சரமாகி யண்டத்தி லெழுந்துநின்ற
　　சச்சிதா னந்தமதைப் பணிகுவோமே. (1)

ஓமென்ற அழிவில்லா வண்டவுச்சி
　　ஓமுடிந்த பட்டணத்துக் கப்பாற்சென்று
நாமென்ற சொல்லற்று யோகஞானம்
　　காட்டுகிறே னஞ்சனமுந் திலதப்போக்கும்
வாமென்ற வைத்தியமும் அஷ்டகர்மம்
　　வாதமென்ற வித்தையெல்லாந் தெளிவதாகச்
ஆமென்ற பீடமதிற் கண்டுதேறிக்
　　காட்டுகிறேன் மெய்ஞ்ஞானக் கருவைப்பாரே, (2)

பாரோநீ யோகமென்ற வழியைச்சொல்வேன்
　　பத்தடா வைம்புலனைப் பார்க்கிறாலே
சீரொருவர் தெரியாமல் மதங்கள்பேசித்
　　திருவான வுச்சியிலே சேராமற்றான்
ஆரொருவ ராதாரம் வெவ்வேறாக
　　அடுக்கடுக்காய்ப் பனிரெண்டு தலங்களென்றும்
வீரேதான் பேசியுமே மெலிந்துபோவார்
　　விடமுண்ட வண்டமதை விரும்பிக்காணே. (3)

காணப்பா தன்னிமல்லா மண்டவுச்சி
கடினமடா பதினெட்டாங் கோட்டிற்சென்று
பூணப்பா மனதையுந்தான் பிசகொட்டாமற்
பூட்டடா பிராணாயம் புகுந்தென்றாகும்
வீணப்பா மந்திரங்க ளொன்றுமில்லை
விதியுமில்லை மதியுமில்லை கெதியுமில்லை
தோணப்பா தோன்றுமடா மனதொன்றாகச்
சந்தமுடன் நீயிருக்க நலஞ்செய்வாயே. (4)

செய்யப்பா வாசிநுனி மகனேகேளு
நிர்க்குருடன் முன்னுரைத்த ஆயிரத்தில்
மெய்யப்பா சாக்குவகை விதமாய்நீத்து
மேன்மையுடன் கட்டினர்க ளுறுக்கினைக்கள்
பொய்யப்பா சொல்லவில்லை சத்தியப்போக்கு
புனிதமுடன் வெளியாகச் சொல்லிப்போட்டோம்
வையப்பா விந்தாவின் மௌனமெல்லாம்
வகையாகச் சொல்லுகிறேன் வணங்கிக்கேளே. (5)

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
கெட்டியாய்க் கண்டவர்க்கே மௌனமாகும்
ஆளப்பா பரப்பிரம யோகமென்று
அடுக்கையிலே போதமுந்தா னுயர்த்தாக்கும்
வாளப்பா கெவுனமணி விந்நாதம்
வகுத்துநடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
காளப்பா வண்டமெல்லாஞ் சத்திபோமிம்
கடனமிகுஞ் சிலம்பொலியுங் காணலாமே. (6)

காணலாம் பிரமத்தின் நிர்ணயந்தான்
காட்டுகிறேன் வாசிநுனி கருவாய்க்கேளு
பூணலாம் அண்டவுச்சி தன்னில்நின்று
பொறிகளையு முண்டாக்கிப் புவனந்தன்னில்
தோணலா முயிர்ப்பயிரைப் படைத்திருக்காளுங்
தொக்கமெனு மேழுவகைத் தோற்றமாகி
ஆளலாம் நாலுவகை யோனியாகி
யண்டமடா அனந்தமானவாறே. (7)

வாரான பிரமத்தின் நடுவேவைமைந்தா
வந்ததடா ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிப்
கூறுகப் பின்னியடா விதேதுபாயும்
கூறுகிறேன் கண்ணினிடை வெளிநிலைவக்கேளு
வீரான அண்டவுச்சி முனைக்கப்பாலே
வெத்தியுடன் நரம்பதுதான் விழுதுபோலே
நேரான விருகண்ணிற் பின்னலாகி
நிச்சயமா யொளிவாகி நிறைந்தார்பாரே.

பாரப்பா பரப்பிரமம் ஒளிவினாலே
பத்தியே நரம்புவழி பாயும்போது
ஆரப்பா விருகண்ணில் ஒளிவதாகி
அண்டமெல்லாம் ஏகமாய்த் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுதுவட்டம்
கபாலத்தில் மூக்கூறுஞ் சுழினைபோலே
வீரப்பா காதுக்கும் நாக்குக்குந்தான்
வெத்திபெற வேயின்னம் விளம்பக்கேளே.

கேளப்பா மூலமடா லிங்கந்தன்னிற்
கிருபையுடன் தண்டுக்குங் கீழ்மேலாக
நாளப்பா தமர்போலே பிடரிமார்க்கம்
நன்றாக வோடுமடா நரம்பினூடே
வாளப்பா அண்டமூட்டி யுபாரமைந்தா
வஞ்சுவாக முன்சொன்ன நரம்பினூடே
தேளப்பா சேர்ந்துமிகப் பின்னலாகிச்
சிறந்திடவே புருவமத்தி யாகும்பாரே.

பாரடா புருவமத்தி யெதென்றுக்கால்
பரப்பிரம மானதொரு வண்டவுச்சி
[illegible]டா முன்சொன்ன நரம்புமத்தி
[illegible]துதடா சுழினையென்று நினைவாய்ப்பாரு
[illegible]ன்றுக்குள் கேசரமைந்தா
மவடா மனந்தனையுஞ் செலுத்தும்போது
காரடா சுழினையிலே மனந்தான்பாய்ந்து
கலந்ததைந்து பூதமுந்தா னொன்றாய்ப்போமே.

போமடா முன்சொன்ன காப்பிதானே
　　பூரித்து ரவிமதியுஞ் சுடர்தான்றன்றும்
ஆமடா மின்னியுந்தான் இதுபாயும்
　　அந்தரங்கந் தனைப்பார்க்க அடங்கிப்போகும்
காமடா வெளிதிறந்து சொல்லிவிட்டேன்
　　நாதாந்தப் பரப்பிரம கட்டந்தன்னை
ஓமடா விந்துவுந்தா னண்டவுச்சி
　　உறுதியுடன் சித்தமதை யூன்றிப்பாரே. (12)

பாரான சாகரமே அண்டவுச்சி
　　பதினாலு லோகமெல்லாம் பார்த்திதானே.
சீராகத் தெரியுமடா மவுனமார்க்கஞ்
　　சித்தான சித்துவிளை யாடிநிற்கும்
வீரான மந்திரங்கள் பிறந்ததப்பா
　　விஷ்ணுவென்றும் பிரமனென்றும் வந்ததப்பா
கூரான முக்குணமு முதித்ததப்பா
　　கூறுதற்கு அட்சரத்தின் குறியைக்காணே. (13)

காணுவர்கள் பிரமந்தா னுதிக்குமுன்னே
　　கருணையுள்ள மந்திரங்கள் பிறந்ததுண்டோ
தோணாமல் மந்திரங்க ளெங்குங்கற்று
　　சுழினையென்ற மூக்குநுனி தன்னைப்பார்த்து
வீணாகத் திரிந்துமிகப் பார்த்ததாலே
　　வேறேதோ கெட்டுழல்வான் விருதாமாடு
கோணாம லண்ணாக்கின் மேலேமைந்தா
　　குறிப்பறிந்து பார்த்தவர்க்கு முத்திதானே.

முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
　　மோசமடா மனந்தானும் வெண்டாய்ப்போகும்
சத்தியடா மனந்தானே யேகமாகத்
　　தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரமத்திற் புகுந்துகொண்டால்
　　பூலோக மெல்லாந்தான் பணிவாருன்னை
எத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
　　ஏறுகின்ற வாசியுன்னைக் காப்பாந்தானே. (15)

தானென்ற கற்பமெனும் மருவுண்டாக்காற்
　　சஞ்சாரச் சமாதியென்றே யிதற்குப்பேரு
ஊனென்ற பசிதீருங் கோபம்போகும்
　　உதடகிரி தனிற்சென்றா டுருவிப்பார்க்கத்
தேனென்ற நரையேறுந் தேய்ந்துபோகும்
　　திருவான வச்சிரமேச் சென்றபோது
கோனென்ற கருவியெல்லா மொடுங்கிப்போகும்
　　கூத்துவரு நாட்டமதைப் பார்க்கலாமே. (16)

பார்க்கலா மொருகாலை யுயரத்தூக்கிப்
　　பாதிவல னொருகாலைத் தாழவிட்டு
ஏர்க்கையிலே மேல்நோக்குங் காலைச்சேரு
　　என்மகனே மதியென்று மதற்குப்பேரு
காக்கையிலே கீழ்நோக்குங் காலைமைந்தா
　　கண்டுபா ரிரவியென்று கருதலாகும்
மார்க்கமுட னண்டவுச்சி மேலேதானும்
　　மகத்தான வன்னியிருப் பிடந்தான்பாரே. (17)

பாரப்பா விதையறியாச் சித்தர்கோடி
　　பார்தனிலே யறுபத்து நாலுயோகம்
ஆரப்பா விருக்குதென்று வெவ்வேறாக
　　அலைந்தலைந்து கெட்டவர்க ளனந்தங்கோடி
நேரப்பா ராஜாங்க யோகந்தன்னை
　　நிலையறிந்து கண்டவனே கோடிக்கொன்று
சீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
　　விண்டவடா பார்த்தவும் வெளியாய்க்காணே; (18)

காணாத காட்சியெல்லாங் கண்ணிற்கண்டு
　　காகவுருப் புசண்டனென்று பேரும்பெற்றேன்
தோணாமல் நானிலந்து நிலவுகாலம்
　　அருவமென்ற பிரமத்தை யடுத்துக்கேட்க
நாணாமல் அண்டவுச்சி தன்னிலேதான்
　　நாடியே மனதாலே நாட்டமாகக்
கோணாமற் பாருமென் றெனக்குச்சொல்லக்
　　கூசாமல் மனதொன்றாய் நிறுத்தினேனே. (19)

திருத்தியே யொருகோடி காலமட்டும்
 திருவிகற்ப சமாதியிலே நிறைந்தென்றாலும்
பொருத்தியே லாடக்கண் டிறந்துபார்க்கப்
 பூலோக மெங்குமொன்றாய் நிறைந்தேதன் மயமதா
திருத்தியாய்ச் சின்மயத்தைக் காண்பதற்குச்
 சிவசிவா வென்றபய றுறையேகூறிக்
கருத்தொன்றாய் நிருத்தியடா கலாமடீக்கிக்
 கதிர்வைதக் கண்டேவிழிலோ யாடவாமே. (20)

விளையாடிப் போதமய மாகவுந்தான்
 வெட்டாத சக்கரத்தின் வெளிச்சம்பார்த்து
நிலையான அண்டமதில் நெற்றிக்கண்ணை
 நேர்திறந்து அரவிடந் தவிளைப்போக்கி
அலையாம லொருவு குறவுமற்று
 ஆயிழையாள் போகமதை யதட்டித்தள்ளி
மலையாமற் பிரமமே அலையாயெண்ணி
 மௌனமென்ற மனக்குலையு மடக்கிவில்லை. (21)

இல்லென்றால் லோகத்தின் மனிதர்தாமும்
 இவ்விடையுடன் சமாதியுமே பொருந்தாமற்றான்
வல்லவர்போல் வேதசா ஸ்திரபுராணம்
 மந்திரங்கள் கோடாது கோடியென்றும்
செல்லுவார் கோவிலென்றும் தீர்த்தமென்றும்
 திருடர்கள்போ லலைந்தலைந்து திரிவான்மட்டை
வெல்லவொரு பிரமநிலை யறியாமற்றான்
 வேர்ற மரம்போலே விழுவான்பாரே. (23)

பாரப்பா மலமெடுத்து லிங்கம்வைத்துப்
 பார்த்திட லிங்கமதைப் பணியாமற்றான்
வீரப்பா பணியாட்டிப் பூசைசெய்து
 விணார்களுங் கந்தபம்போற் கதறுவார்கள்
தேரப்பா மலர்த்தினையே இன்றும்போது
 செத்தசவம் போலாக்க தெளிந்துபாரு
காரப்பா மனங்கொண்டு பரத்தினாடே
 கண்டவர்கள் கயிலாசத் தேகந்தானே. (23)

தானென்ற பிரமமதை யடுத்திடாமற்
  ஞானியி லனந்தமடா தெய்வமென்றும்
வானென்ற குருவென்றுஞ் சீடனென்றும்
  உதயகிரி பாராத வுலுத்தமாடு
வேனென்ற பொய்களவு கொலைகள்செய்து
  வேசையர்மே லாசையுந்தான் விருப்பமாகக்
கோனென்ற குருபாத மடுக்காமற்றான்
  கூடுவான் நரகமதில் விழுவான்பாரே. (24)

பாரப்பா நாக்கையுந்தா னண்ணாக்கேத்தப
  பார்தனிலே பார்த்தவர்க்குப் பலிதமில்லை
ஆரப்பா கண்வெடிக்குந் தேகம்போகும்
  அடையோக மென்பார்க ளாகாதப்பா
சாரப்பா மனந்தனையு மண்ணாக்கேத்திச்
  சார்ந்துமிகப் பார்க்கையிலே வாசிதானும்
வீரப்பா மேலடங்குங் கீழ்நோக்காது
  வெட்டாத சக்கரத்தை யறியலாமே. (25)

அறியலாம் மனந்தானே உயிர்தானாகும்
  அண்டத்திற் சேர்ந்திடவே யாகும்முத்தி
பரிபேறிச் சாரியுமே நடத்தலாகும்
  பஞ்சமா பாதகங்கள் பறந்துபோகும்
விரிவான மனந்தனையும் அறுவதாக்கி
  விட்டகுறை தொட்டகுறை விதியைப்பார்த்துக்
குறியான குண்டலியா மண்டவுச்சி
  கூறுகிறேன் முக்கோண நிலையதாமே. (26)

தாமென்ற வுலகத்தில் மனிதரோடே
  சஞ்சாரஞ் செய்யாதே தவர்செய்யாதே
ஊமென்ற வூண்மிகுந்து வுண்டிடாதே
  ஊரமாய் வழக்குகளை யுரைத்திடாதே
ஆமென்ற அட்சரத்தை மறந்திடாதே
  ஆயாச மாகவுந்தான் திரிந்திடாதே
காமப்பேய் கொண்டவரோ டிணங்கிடாதே
  காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே. (27)

விளையாடிக் கருநெல்லி பறித்துவுண்ணு
வேகாத தலையாரும் விரும்பிப்பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்துவுண்ணு
மைந்தனே சாகாக்கா லிதுவேயாகும்
அலையாமற் சோதியுட பாலையுண்ணு
அக்கினியாங் கம்பமடா சுழினையாச்சு
கலைநாலு போதையு மெட்டிற்சேரு
கபடற்ற தேகமடா கண்டுபாரே. (28)

கண்டுகண்டு மனந்தானே யண்டஞ்செல்லக்
கலைநாலும் எட்டிலையுஞ் சேர்ந்துபோகும்
தண்டுமுண்டு செய்யாதே மனம்வேறாகத்
தற்பரத்தை யெப்போதும் அறியமாட்டாய்
தொண்டுசெய்து பெரியோரை யடுத்துமைந்தா
தொழுதாரீ யென்றாலின் பயனைக்கேளு
விண்டுமவர் சொல்லாட்டா லின்றாலிற்சொல்லும்
வெற்றிபெற மனதடக்கம் வைத்துப்பாரே. (29)

பாரப்பா விஞ்சைமந்த்ர மென்பார்வீணர்
பாயடா விஞ்சைகிரி தன்னில்மைந்தா
ஆரப்பா சென்றேறிப் பார்க்கும்போது
அதீதமுள்ள விஞ்சைமந்த்ர மனந்தாங்காட்டும்
நேரப்பா சிருஷ்டிப்புச் சங்காரங்கள்
நிமிடத்திற் செய்திடுவாய் நிலையைக்கண்டால்
வீரப்பா அமுதமுந்தான் குமிழிபாயும்
வேறில்லாக் கனிகளையு முண்கலாமே. (30)

உங்கலாம் பிரமமுந்தா னடங்கும்போது
டறுதியுள்ள அண்டத்தி லுருவிப்பாயும்
இங்கலாம் அமுதமடா தேனுஞ்சீனி
தித்திப்புப் பாலுடனே திடமாம்மைந்தா
தங்கலாந் தேகமது அழியாமற்றான்
சட்டையுமே கழன்றமிகத் தங்கம்போலே
பொங்கலாம் மெய்ஞ்ஞான தீபம்போலே
பூரித்துப் பார்த்திடவே புவனமொன்றே. (31)

ஒன்றாச்சு பிரமமே யென்பேருக
உலகத்தி லனந்தபேத கூத்துமாச்சு
[illegible]ன்றாச்சு நீதாச்சு காருமாச்சு
ஞாயிறுந் திங்களென்று பேருமாச்சு
மூன்றாச்சு மூர்வனங்க ளனந்தமாச்சு
குருக்களென்றுஞ் சீடரென்றுங் குறிகளாச்சு
[illegible]ாச்சு நாதவிந்தும் அடங்கிநின்ற
நாதனையு மோர்மனதாய் நாட்டுவாயே. (32)

நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலே சாஸ்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியே மனிதரெல்லாம் அலைப்பார்த்துப்
பூரணமா யண்டமதைப் பாராமற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே யடைத்திருக்குங் குயிலைப்பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப்பாரே. (33)

குறியென்ற வுலகத்திற் குருக்கள்தானும்
கோடிமறை வேதமெல்லாங் கூர்ந்துபார்த்து
அறியாமற் பிரமமதைப் பாராமற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை யழிம்புபேசி
விரிவான வேடமிட்டுக் காவிபூண்டு
வெறும்பிலுக்கா யலைந்திடுவார் நாயைப்போலே
பரியாச மாகவுந்தான் தெண்டமேந்திப்
பார்தனிலே குறடிட்டு நடப்பான்பாரே. (34)

பாரப்பா சீடர்களை யழைப்பான்பாவி
பணம்பறிக்க வுபதேசம் பகர்வோமென்பான்
ஆரப்பா பிரமமிலே காட்டாமற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்றான்சொல்வான்
நேரப்பா சீடனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்கிநின்ற விடத்தைப்பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே. (35)

வானென்ற அண்டத்திற் சென்றுபுக்கி
வடவரையி லுச்சிநடு நீபங்கண்டு
தேனென்ற அத்தசிவ கெங்கைதன்னிற்
றீர்த்தங்க ளாடிவெகு நாமமிட்டு
கோனென்ற மனதன்பால் மலராஞ்சாத்திக்
கோடிமறை வேதமூர்த்தா னண்டங்கண்டு
தேனென்ற சித்தமுமே புத்தியாகத்
தெரிந்தவரே மெய்ஞ்ஞானி யாகும்பாரே. (36)

பாரண்ட மதையொன்றாய்ப் பார்க்கும்போது
பலபேத மானவெல்லாம் பறந்தேபோகும்
சீரண்ட மகிலாண்ட பிரமாண்டங்கள்
ஜெனித்தவகை யுயிர்தோறும் நியாயமிற்பாய்
காரண்ட லாடக்கண் டிறந்தபோது
கண்கொள்ளாக் காட்சியெல்லாங் கலந்தேகாட்டும்
வீரண்ட மேல்வட்டம் விரிந்தசக்ரம்
மெய்ஞ்ஞான வெளியதனிற் றொடர்ந்தகூடே. (37)

கூடுவதே குணமறிந்து மனதொன்றாகக்
கூத்தாடித் திரியாமற் சைவுணரைப்
பாடுவதே பலநூலைப் படித்திடாமற்
பராபரத்தின் உச்சிநடு வெளியிற்சென்று
ஆடுவதே தொந்தோமென் றாட்டைப்பார்த்து
அடுக்கடுக்கா யாயிரத்தெட் டிதழுங்கண்டு
வாடுகிற பயிர்களுக்கு மழைபெய்தாப்போல்
வாடாத தீபத்தை யறிந்துபாரே. (38)

பாரென்று மெய்ஞ்ஞானம் பகர்ந்துசொன்னீர்
பராபரத்தின் நிலையினுட பாதஞ்சொன்னீர்
வீரென்ற அண்டமெல்லாம் பாழதாகி
விராட்பிரம மொண்டியா யிருக்கும்போது
சீரென்ற வுயிர்களெல்லா மிருப்பதெங்கே
சித்தருடன் திரிமூர்த்தி யிருப்பதெங்கே
கூரென்ற நீர்தங்கு மிடந்தானெங்கே
குருபரனே யிந்தவகை கூறுவீரே. (39)

கூறுகிறே னென்மகனே வசிஷ்டா
குணமான ரிஷிமாருஞ் சபையிற்கூடி
தேறுகின்ற பிரளயமாங் காலந்தன்னிற்
சிவனெழுந்து சித்தருடன் முனிவர்தாமும்
வீறுடனே யெங்கேதா னிருப்பாரென்று
விமலனுந்தான் விஷ்ணுவையும் விபரங்கேட்க
காதிலவர் நெடுமாலுங் கடவுளாரைக்
கண்டுமிகப் பணிந்துமினி கருதுவாரே. (40)

கருதுவான் ஆலிலைமேற் றுயில்வோன்றானும்
கனமான ஜீவனெழுந்து மனந்தஞ்சித்தர்
உறுதியா யெந்தனுட கமலந்தன்னில்
ஒடுங்குவா ராதரித்து மிகவேயிற்பேன்
வருந்தியே புசண்டருந்தான் வருவாரென்று
வல்லவிடம் மால்தானு முரைக்கும்போது
சுருதியா யெனையழைத்துச் சிவன்றான்கேட்கச்
சூத்திரமாய் நல்வசன மொழிந்தேன்பாரே. (41)

பாரென்று சிவனுடைய முகத்தைப்பார்த்துப்
பல்லாயி ரங்கோடி யுயிர்கட்கெல்லாம்
சீரென்ற சித்தருடன் முனிவர்தானும்
திருமாலும் ஆலிலைமேற் றுயிலும்போது
கூரென்ற வுந்தியுட கமலந்தன்னிற்
கூடியே யடைந்திருக்குங் குணமதாக
வீரென்ற ஐவரையுந் தாண்டியப்பால்
வெகுசுருக்காய் வீதிவழி வந்தேன்பாரே. (42)

பாரப்பா ஆகாசஞ் செல்லும்போது
பாலகனே சக்கரந்தா னத்தியாட
ஆரப்பா சக்கரத்தைப் பிசகொட்டாமற்
அதன்பேரி லேறியுந்தா னப்பாற்சென்றனை
நேரப்பா நெடுந்தூர மேறும்போது
நிட்சயமாய்க் கம்பத்தின் னிலையைக்கண்டு
வீரப்பா அக்கினிபோற் படர்ந்திருக்கும்
வெளியொன்றுந் தெரியாம லிருக்குந்தானே. (43)

இருக்குமிடங் கொன்றாயக் கினியின் கம்பம்
    என்மகனே சம்பத்தின் கடுவெளைமைந்தா
உருக்கமுடன் பெண்ணாகி யொன்றிநிற்பாள்
    ஒகோகோ அவன்முகத்தைப் பார்க்கும்போது
பெருக்கமுடன் முன்பார்த்தாற் புருடரூபம்
    புத்திரனை பின்பார்த்தாற் பெண்போல்ரூபம்
வருக்கமுடன் யான்றானுங் கம்பத்தூடே
    வஸ்தோடே வஸ்தாக விருந்தேன்பாரே. (44)

பாரப்பா விப்படியே அனந்தகாலம்
    பராபரத்தி னூடேதா னிருந்துவாழ்ந்தேன்
ஆரப்பா பிரமருந்தான் மனதிரங்கி
    அண்டமதைப் படைப்பதற்கு அருளும்போது
சீரப்பா சம்பத்தி யிருந்தபெண்ணும்
    விமலையென்றும் உமையென்றும் மிகவேதோன்றி
சேரப்பா சக்கரத்தி லிருந்துகொண்டு
    திருமாலைத் தானமைக்கத் திரக்கம்பாரே. (45)

பாரப்பா திருமாலுங் கமலத்தன்னிற்
    பல்லுயி ரங்கோடி யுயிர்கட்கெல்லாம்
நேரப்பா அழைத்துமுக் குணத்தைக்காட்டி
    நிலையான சமுத்திரங்கள் பூமிதானும்
சேரப்பா ரவியோடு திங்கள்தானும்
    சிறந்தெழுந்த மலைகளொடு சீவஜந்து
வீரப்பா கிரகட் சேத்திரங்கள்
    வெற்றியுடன் நால்வேதம் வகுத்தவாறே. (46)

வாறாகத் தேகமென்றும் பூதமென்றும்
    வையகத்தில் வானமென்றும் பூமியென்றும்
கூறாக மகாமேரு கிரிகளென்றும்
    கோவிலென்றுந் தீர்த்தமென்றுங் குளமுண்டாக்கி
நேறாகப் பரப்பிரமஞ் சாட்சியாக
    நிலைத்ததெங்கு முயிர்தோறும் நிறைந்தாரையா
வீறாகத் திரியாமல் மௌனம்பார்த்து
    வெற்றிபெற வின்னமுந்தா னுரைக்கக்கேளே. (47)

கேளப்பா யிப்படியே பிரளயந்தான்
திருமையுடன் ஏழுலட்சங் கோடியாகும்
ஆளப்பா அரியனுஞ் சிவனுந்தாம்
அகண்டமென்ற பிரமத்தி லடங்குவார்கள்
நாளப்பா நானுமந்தப் படியேசெல்வேன்
நலமாக வின்னமுந்தான் அகண்டமாகும்
வாளப்பா காகமென்ற ரூபமாகி
வடவரையிற் கூடுகட்டி யிருந்தேன்பாரே. (48)

பாரடா விப்படியே யுகங்கள்தோறும்
பார்தனில்நா னிருந்தெத் தனையோகோடி
ஆரடா வென்னைப்போலே அறிவாருண்டோ
ஆதியென்ற சித்தருக்கு மாதியானேன்
வீரடா விமலனிடஞ் செல்லும்போது
வெற்றியுட னென்னையெடுத்து ழுத்தயிட்டார்
காரடா கயிலையின்மே லிருக்கச்சொன்னார்
காகமென்ற ரூபமா யிருந்தேன்பாரே. (49)

காகமென்ற ரூபமா யிருந்துகொண்டு
காரணங்க ளனைத்தையுங் கருவைப்பார்த்து
வேகமுடன் வெளியோடு நிலையைப்பார்த்து
வெகுதூரஞ் சத்தியின்மை விபரங்காணேன்
மோகமுடன் பறந்துமனம் அருவதாக்கி
மூர்க்கமுடன் பாவெளியை வெளியதாக்கி
நாகரிக மாகவுந்தா னண்டமேவி
நடுவணையா முச்சிகடு மத்திதானே. (50)

மத்தியதி லானதிலே முளைத்தலிங்கம்
மகாமேரு முச்சியிலே வளர்ந்தலிங்கம்
சத்தியுட னாவிடையு மானலிங்கம்
சஞ்சாரச் சமாதியிலே நிறைந்தலிங்கம்
புத்தியாய் மனதொன்றாய்ப் புகழ்ந்தலிங்கம்
பூருவத் தன்னிலேதான் முளைத்தலிங்கம்
எத்திசையும் புகழ்ந்திடவே வந்தலிங்கம்
ஏகபர மானதொரு லிங்கந்தானே. (51)

தானென்ற சிறுவீட்டுக் குள்ளேசென்று
　　தலைமாறிப் போவதொரு வாசியைத்தான்
கோனென்ற பிரமத்தி லடக்கமாகும்
　　குறித்திடுவாய் மனதடங்குங் கூர்ந்துபாரு
வானென்று பொழியுமடா பானம்பானம்
　　மைந்தனே உண்டிடவே பசிதான்தீரும்
தேனென்ற சட்டைகளுங் கழன்றுபோகும்
　　தேவனுக்குந் தேவனு யிருக்கலாமே. (52)

இருக்கலா மெந்தந்த யுகங்களுக்கும்
　　யேகாந்த மானதொரு பிரமந்தன்னிற்
பெருக்கவே மனதடங்கி மௌனம்பெத்து
　　பேராசை யாகவுந்தான் பிரமந்தன்னிற்
குருக்களைப்போ லாசானைப்போல் வலாரியைப்போற்
　　குண்மான மூவரைப்போற் சிவனைப்போல்
திருக்கெடுத்து வெந்தெந்த வவதாரங்கள்
　　செய்திடலாம் நிலையறிந்த பெரியோர்தானே. (53)

தானவனே யென்குருவே புசுண்டநாதா
　　தாரணியி லுயிர்களுட னண்டமெல்லாம்
தோணவே மும்மூர்த்தி தோற்றுமென்றீர்
　　அடியான பிரமத்தி லடங்குமென்றீர்
கோனவனே பின்னுந்தா னண்டமெல்லாம்
　　குறிப்புடனே படைக்கும்வகை குறிப்புச்சொன்னீர்
தானவனே மதுவுண்கச் சொன்னீரையா
　　தலந்தனிலே வாசியது சாற்றுவீரே. (54)

சாற்றுகிறே னென்மகனே வாசிநாதா
　　சத்தியமா யண்டமதிற் செல்லும்போது
போற்றுகிற வக்கினியும் பிரவேசித்துப்
　　புலன்களைந்துஞ் சேர்ந்ததினாற் போதமாகும்
மாற்றிலையு மதிகமடா வுன்றன்தேகம்
　　மைந்தனே யபுரூப மாகுமப்பா
வாற்றியே நிழல்சாயை யற்றுப்போகும்
　　வலுத்ததடா காயசித்தி யாச்சுபாரே. (55)

ஆச்சென்ற வரூபமய மானபோது
அஷ்டமா சித்திவகை யெட்டுமாடும்
மூச்சொன்றி லடங்கிப்போம் பிரமத்தாடே
முன்னணியும் பின்னணியு மொன்றாய்ப்போகும்
காச்சென்று காச்சிவிடு மௌனங்கண்டு
கலைமாறி நின்றிடுமே கனகபீடம்
நீச்சொன்று மில்லையடா வுன்னைக்கண்டால்
நிலைத்ததடா சமாதியென்ற மார்க்கந்தானே. (56)

மார்க்கமுடன் தவசநிலை யறியாமற்றான்
மனந்தளர்ந்து திரிவார்கள் லோகத்தோர்கள்
ஏர்க்கமுடன் முப்பதுக்குள் மௌனங்கண்டு
இளவயதா யிருப்பார்கள் பெரியோர்மைந்தா
காக்கவே சற்குருவின் பாதங்கண்டு
கருணையுட னவர்பதத்தை வணங்கிப்போற்றி
தீர்க்கமுடன் பிரமத்தில் மனந்தான்செல்லச்
சிஷனுக்குஞ் சிவனா யிருக்கலாமே. (57)

இருக்கலாஞ் செடிபூடு கற்பமில்லை
ஏகாந்த மானதொரு பிரமந்தன்னில்
உருக்கியே மனதடக்கிப் பார்க்கும்போது
உத்தமனே கர்ப்பத்துக் குறுதியாச்சு
மருக்கியே திரியாமல் மதம்பேசாமல்
வண்டரோ டிணங்கியடா மருவிடாமல்
குருக்கியே கோளரிடஞ் சேர்ந்திடாமற்
குருபாதங் கண்டுமிகப் பணிந்துபாரே. (58)

பாரென்று சொன்னமெய்ஞ் ஞானமூர்த்தி
பாத்தினுட வடிமுடியும் பகர்ந்துசொல்லும்
சீரென்று சொற்பனங்கள் பேதமாகத்
திடப்படவே காணுமிடந் தீர்க்கஞ்சொல்லும்
காரென்று மனம்பிறந்த இடந்தான்சொல்லும்
கதிர்மதியுஞ் சுத்திவரு மார்க்கஞ்சொல்லும்
ஊரென்றும் பிறந்தவிடந் தலந்தான்சொல்லும்
உத்தமனே பிறந்தவகை யியம்புவாயே. (59)

வாயாலே சொல்லுகிறேன் மகனே கேளு
மகத்தான பிரமத்தின் பாதந்தன்னில்
ஓயாமல் முன்சொன்ன காம்புமின்றி
உத்தமனே ரவிமதியுஞ் சத்தியாடும்
மாயமடா வாசியுந்தான் நடுவேநின்று
மார்க்கமுடன் சுழுத்தியுள்ளே மனந்தான்சென்றால்
காயமே சுழுத்தியென் றிதற்குப்பேரு
கண்டோர் கண்கொள்ளாப் போதந்தானே. (60)

தானென்ற பலரூப மதிகங்களாலும்
தன்னுடைய தேவதைபோற் பின்னுங்காட்டும்
ஊனென்ற பெண்ணைப்போ லுன்னைக்கட்டி
உத்தமனே சையோகஞ் செய்தாற்போலே
தேனென்று மயக்கிவைக்குஞ் சுழுத்தியாலே
தித்திப்புப் போலேயும் ருசிகாட்டும்
கோனென்ற குருவருளைப் பணிந்துகொண்டு
குறிப்பறிந்து பூரணத்தின் நிலையைப்பாரே. (61)

நிலையாத சமுத்திரமே சுழுத்தியாக
நின்றிலங்கும் வாசியைத்தான் வெளியிற்சேரு,
நிலையாமக் கினியைவப் படியேசேரு
சத்தியமாய் ரவிமதியைக் கூடச்சேர்த்து.
மலையாம லேகபரா பரனையென்று
மனதடங்கி யண்டவுச்சி தன்னைப்பார்க்க
அலையாது மனந்தானும் பாதத்திற்சென்று
ஆகாச வீதிவெளி யாட்டும்பாரே. (62)

ஆட்டமடா ஆசையற்று ரோசமற்று
அன்னைசுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
நாட்டமடா நவத்துவா ரங்கள்தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாகக்
காட்டிலென்ன நாட்டிலென்ன மௌனங்கண்டாற்
காமதேனுங் கற்பகமு முனக்கேசித்திப்
வீட்டிலையுந் தீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி னுற்றீபம் விழலாய்ப்போமே. (63)

போகுமடா புத்திசித்த மொன்றதாக்கிப்
 புகண்டனென்று பேரெடுத்துப் புவனந்தன்னில்
ஆகுமடா வடகாளி மைந்தனென்றும்
 அருமையாங் கன்னியுட புதல்வனென்றும்
காகுமடா வைந்துபேர் தன்னிலேதான்
 காட்டமுடன் முன்பிறந்தேன் கன்றான்மைந்தா
வாகுமடா சாண்முழுத்திற் காட்சிபார்க்க
 வஸ்துவுந்தான் யீஸ்பானு ரென்றார்பாரே. (64)

பாரப்பா வென்குலந்தான் சொல்லக்கேளு
 பார்தனிலே பாமனுட விந்துவாலே
ஆரப்பா பிறந்துவிட்டோ மைந்துபேரும்
 ஆகாச வண்டமதை யடுத்தேசென்றேன்
நேரப்பா வெகுகோடி காலம்வாழ்ந்தேன்
 நிஷ்டையிலே மனந்தளரா திருந்துகொண்டேன்
வீரப்பா பேசுவார்கள் லோகத்தோர்கள்
 விட்டவிடந் தொட்டவிடம் விரும்பிக்காணே. (65)

காணப்பா சாதிகுல மெங்கட்கில்லை
 கருத்துடனே யென்குலஞ்சுக் கிலமேயாகும்
தோணப்பா தோணுமற் சாதிபேதஞ்
 சொல்லுவான் புத்திகெட்டு முருண்டுபோவான்
வீணப்பா பிர்மத்தி லாதிகாலம்
 வீரமுடன் பிறந்துதடா வுயிர்களெல்லாம்
காணப்பா அப்படியே யுதித்தேன்முன்னே
 நன்றாக வுதித்தவிடம் நாடினேனே. (66)

நாடியே வுதித்தவிட மறியாத்தோடம்
 நடுவாக வந்தவிட மறியாத்தோடம்
கூடியே பிறந்தவிடங் காணாத்தோடம்
 குருபாரை நிந்தனைகள் செய்ததோடம்
வாடியே வஸ்தோடே சேராத்தோடம்
 வம்பரோ டிணங்கியே திரிந்ததோடம்
கூடியே யுறவற்று யிருந்ததோடம்
 குப்பிடெக்கற் சிப்பியையும் அறியான்பாவி. (67)

அறியாத பாவிகட்கு ஞானமேது
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
பராக்கிரமர் தன்னுடைய நூலைப்பாரு
விரிவாகச் சித்தர்சொன்ன நூல்களெல்லாம்
வீணாக மறைப்பாகச் சொன்னாரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினார் வெவ்வேறாய்க் குற்றந்தானே. (68)

குத்தமது வையாம லண்டத்தேகிக்
கூறாத மந்திரங்கள் குறியைப்பார்த்துச்
சித்தம்வைத்து அந்திசந்தி யுச்சிக்காலம்
தேவனுக்குப் பூசைசெய்து தெளிவுபெற்றுக்
குத்தமது வையாமற் றனதன்பாலே
குருபாலை நோக்கியடா தவமேசெய்து
பத்தாசை வைத்துமிகப் பார்க்கும்போது
பாராபரையுங் கைவசமா யாகுவாளே. (69)

ஆகுமே அந்திசந்தி யுச்சியென்றால்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன்றாகும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி;
இருந்திடவே பிரமத்தின் நிலையதாகும்
போகுமே நீசெய்த கர்மமெல்லாம்
புவனதிரி சூலியுட கிருபையாலே
வாகுமே வழியோடே நடந்தாயானால்
வாணியுந்தான் நாவில்நடஞ் செய்வாள்பாரே.

பாரப்பா வாணியுந்தா னிருந்தவீடு
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரடா அண்ணாக்கின் கொடியினூடே
அண்டத்தைப் பத்தியடா விழுதுபோல.
நேரடா நரம்பதுதான் பொருந்திநிற்கும்
நிலையான வக்கினியின் மத்திதன்னில்
வீரடா அதுவழியே அருள்தான்பாய்ந்து
விண்ணுலகி லென்றமிழைச் சொல்லுவாளே.

சொல்லுவா ரனந்தமறை வேதமெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிரமத்தாலே
வெல்லுவான் தனையறிந்த பெரியோரெல்லாம்
வீராண்மை பேசார்கள் மௌனமாக
நல்லுபக லற்றதொரு பிரமந்தன்னை
யாரறிவா ருலகத்தி லறியமாட்டார்
சொல்லடங்கு மிடந்தனையுங் கண்டுபோற்றிச்
சூத்திரமாய்க் கல்லுப்பு வாங்குவாங்கே. (72)

வாங்கியே அண்டத்தின் மூலைசேர்த்து
வளமாக வுப்பிலையும் பிசறிமைந்தா
தாங்கியே திருகுகள்ளிக் குள்ளேவைத்துத்
தமர்வாயைத் தான்மூடிச் சாயந்தீர்த்து
ஓங்கியே திங்களுந்தான் மூன்றுசென்றால்
உத்தமனே கள்ளியைத்தான் றரித்துக்கொண்டு
சாங்கமினிச் செய்யாமற் சீலமண்ணுஞ்
சத்தியமாய்ச் செய்தபின்பு உலர்த்திப்பாரே. (73)

பாரப்பா வுலர்ந்தபின்பு யெடுத்துமைந்தா
பத்தியுடன் கெஜபுடத்திற் போட்டுப்பாரு
ஆரப்பா ஆறவைத்து யெடுக்கும்போது
அருணனிற மாயிருக்குஞ் செந்தூரந்தான்
கோப்பா அனுப்போலே சரக்குக்கெல்லாம்
நிட்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற்போடு
வீரப்பா நீறுமடா நவலோகந்தான்
வேதையென்ற வித்தையது கைக்குள்ளாச்சே. (74)

ஆச்சப்பா வுடம்பிலுள்ள வியாதியெல்லாம்
அனுப்போலே யுண்டிடவே பறந்துபோகும்
வாச்சப்பா தேகசித்தி யதிகமாச்சு
வஸ்துவுடன் கூடியுந்தான் வாழலாச்சு
மூச்சப்பா தலையிண்டங் கொடியுமாவும்
முக்கியமாய் வாங்கியதைத் தயிலம்வாங்கு
ஏச்சப்பா திரியாதே குடன்சேர்த்து
இன்பமுடன் வஸ்துவையும் பூசைசெய்யே. (75)

பூசையடா செய்தபின்பு பதனப்பண்ணு
 புத்திரனே பேய்ப்பீர்க்கின் தயிலம்வாங்கு
ஆசைபுல்லா மணக்கனவு மதுபோல்வாங்கி
 அப்பனே கேசரியின் நெய்யுஞ்சேர்த்து
ஓசையுடன் தேவாங்குப் பித்துஞ்சேர்த்து
 உத்தமனே தலையிண்டத் தயிலஞ்சேர்த்து
பாசையடா பேசாம லரைத்துமைந்தா
 பாலகனே சவாதோடு புனுகுஞ்சேரே. (76)


சேரடா அதுபோலே புருவத்திட்டு
 தீர்க்கமுடன் நீதானுஞ் செல்லும்போது
ஆரடா உனைத்தானும் யார்தான்காண்பார்
 அண்டமெனும் பிரமத்தி னருளினாலே
கோடா திசைப்பூடு கொண்டுவந்து
 நிட்சயமாய் முன்சொன்ன தயிலம்விட்டு
வீரடா அரைத்தபின்பு புருவத்திட்டால்
 வேசையர்கள் வெகுபேர்கள் மயங்குவாரே. (77)

வாராணை இல்லைப்பால் கருந்துளசி
 வெளவாலின் பித்துகரு மந்திப்பித்தும்
சீராக முன்சொன்ன கருவைவிட்டுத்
 திடமாக வரைத்திடுவாய் சாமமொன்று
நேராக அரைத்ததையு மெடுத்துமைந்தா
 நிட்சயமாய்ப் புருவத்தி லிட்டுப்பார்க்க
வீராகப் பாதாளம் பிளந்தேயோடும்
 வேதாந்த விசாரணையை விரும்பிப்பாரே. (78)

பாரடா பரப்பிரமத் தூடேசென்று
 பரிதிமதி யக்கினியும் மூன்றுமொன்றாய்
நேரடா ஆதியந்தா னதிரிதன்னை
 நிட்சயமாய்ப் பார்த்திடவே நீறிப்போவான்
கூடடா ஓடாது கோடிசித்து
 குறித்திடவே யாமடா பிரமத்தாலே
வீரடா பிந்நூலைக் கொடுத்திடாதே
 வெத்தியுட னென்பதுமே விளங்கமுற்றே. (79)

ஊரிலும்நீ சொல்லையிலே தொட்டுக்காட்டு
ஆமடா காட்டையிலே தெரியாவிட்டால்
குரியாகக் கூட்டிப்போய்க் கையைக்கொண்டு
குறிப்பாகத் தீர்த்தத்தாற் குணமாய்ச்சொல்லு
அரிலும்தா னப்படியே தெரியாவிட்டால்
அப்பனே யினிமேற்றான் சொல்லக்கேளு
விரிவான நசேனாற்றி யம்மைப்பூட்டி
விதமாக வவன்பார்க்க வெய்துநாட்டே. (80)

புசண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் 80
முற்றிற்று.



மதுரை சிவஞானதீபச்சபை காரியதரிசி ம. அழகர்சாமிபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.



உ

பரமபதி துணை.

இருபத்தோராவது

புசுண்ட மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞான காவியம் 33.

கணபதியே அடியாகி யகிலமாகிக்
காரணத்தின் குருவாகிக் காட்சியாகிக்
குணபதியே கொங்கையின்றாள் வெள்ளைஞானக்
குருநிலையா யருள்விளங்குங் கொம்பேஞானக்
கனவிலையும் நினைவிலையும் ஒளியாய்நின்ற
காரணத்தின் வடிவாகிக் கருத்துள்ளாகிப்
பணியரவம் பூண்டசிவ வாசிகோர்மை
பாடுகிறேன் காவியந்தா னெண்ணிப்பாரே.

நூல்.

எண்ணியெண்ணிக் காவியத்தை யெடுத்துப்பாரு
எங்கோன் காமசித்தை யிதுவேநோக்கும்
பண்ணிபண்ணி பலகுட்டி போட்டாலென்ன
பதியானைக் குட்டியொரு குட்டியாமோ
சண்ணிசண்ணி யிந்நூலை நன்றாய்ப்பாரு
சக்கரமு மக்கரமுங் கூணத்திற்றோன்றும்
தண்ணிதண்ணி யென்றலைந்தாற் றாகம்போமோ
சாஸ்திரத்தி லேபுகட்டித் தள்ளியேறே.

புகட்டினான் தசதீட்சை மகிமைதன்னைப்
பூரணப்பா லெனக்களித்து அகண்டந்தோறும்
சகட்டினான் சகலசித்து பாடச்சொன்னான்
சந்திரபுஷ்க ரணிதனில் தானைந்துசொன்னான்
பகட்டினா னுலகமெல்லாம் முக்கோணத்திற்
பரஞான சிவபோதம் பணையாய்ச்சொன்னான்
அகட்டினா னவர்களை யின்றாளம்மன்
அந்தருமை சொல்லுகினி யடிதான்கேளே.

கேளப்பா பீசனொரு காலந்தன்னிற்
கிருபையுடன் சபைகூடி யிருக்கும்போது
வாளப்பா மாலயன்றன் முகத்தைநோக்கி
வந்தவா றெவ்வகையோ சென்றதேதோ
கோளப்பா ஜெயகால லயந்தானெங்கே
குருகமனி வாயமெங்கே நீங்கலெங்கே
ஆளப்பா ஐவர்களு மொடுக்கமெங்கே
அறிந்தெமக்கு மில்லையென யுரைசெய்வீரே. (3)

இன்னவகை யீசரவர் கேட்கும்போது
எல்லோரும் வாய்மூடி யிருந்தாரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண்டேயன்
சொல்லுவான் குழந்தையவன் கலகலென்ன
அன்னைதனை முகம்பார்த்து மாலைநோக்கி
அரிகரி யீசர்மொழிக் குரைநீர்சொல்வீர்
பின்னைவகை யாருரைப்பார் மாயமூர்த்தி
பேசாம லிருந்துவிட்டா லொழிவாரெங்கே (4)

எங்கையென்று மார்க்கண்ட னெடுத்துச்சொல்ல
எவ்வாசொல்வா ரேகவெளிச் சிவனைநோக்கி
கங்கைதனைப் பூண்டோனே கடவுளோனே
காரணமே பூரணமே கண்ணேமின்னே
சங்கையினி யேதறிவேன் மகுடச்சோதி
சந்திரனைப் பூண்டிருந்து தவம்பெற்றோனே
மங்கையிடப் பாகத்தைவைத்த மகுடத்தோனே
மகாமுனிகள் ரிஷிகள்சித்தர் அறிவார்காணே. (5)

அறிவார்கள் ரிஷிகள்சித்தர் முனிவோரையா
அரகரா அதுக்குக்கோ ளாரென்றக்கால்
பொறியாகப் புசண்டமுனி சொல்வாரையா
போயழைக்கக் கோளாறு வசிஷ்டராகும்
நெறியாக இவ்வகைநா னறிவேனையா
நிலைத்தமொழி புசண்டரல்லால் மற்றோர்சொல்லார்
புரிவாரு மிவ்வளவென் றுரைத்தார்மாயன்
பொருள்ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சிபூண்டார். (6)

மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய்கண்ணே
 வரலாறு நீயெனமா யறிவாய்சொல்லாய்
சுகட்சியுடன் கருதிப்பார் யுகங்கள்தோறும்
 சூட்சமித்த மாலோன்றன் வயிற்றிற்சேர்வேன்
அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பாரையா
 அப்போது இவரிடத்தி லெல்லாஞாயம்
இகழ்ச்சியுட னிவற்குப்பின் னெவரோகாணேன்
 இவ்வார்த்தை நானறிவே னவரைக்கேளீர். (7)

கேளுமென்றான் மார்க்கண்டன் சிவன்தானப்போ
 கிருபையுட னிவ்வளவு மறிவாயோடா
ஆளுகின்ற யீசனுநா மறியோமித்த
 அருமைதனை நீயறிந்தா யருமைப்பிள்ளாய்
காளகண்டர் மாயோனைச் சொல்லினொன்றார்
 கருவேது நீயறிந்த வாறுமேது
பாருகின்ற முப்பாழுந் தாண்டிநின்ற
 பாஞான சின்மயமின் பகர்ந்திடோ. (8)

பாமான பரமகவி லாசவாசா
 பார்த்திருப்போ மாலிலைமேற் பள்ளியாகி
தாமான புசுண்டமுனி யந்தவேளை
 சக்கரத்தைப் பிரளொட்டார் தவத்திறுவே
தாமாக வெவ்வாறோ திரும்பப்போவார்
 சூட்சமதை நாமறிவோம் பின்னேதோதான்
வாமான வரமளித்த ஞானவாழ்வே
 வசிஷ்டர்போ யழைத்துவாத் தருமென்றாரே. (9)

தருமென்ற வார்த்தைதனை யறிந்துயீசர்
 தவமான வசிஷ்டரேநீர் புசுண்டர்ஜாகை
அகமகிழ வங்கேகி யவற்குரைத்து
 அவரையிங்கு சபைக்கழைத்து வருவாயென்ன
ஜெகமான ஜெகமுழுது மாண்டஜோதி
 திருவடிக்கே நமஸ்கரித்துத் திரும்பினார்பின்
உகமானத் தனையறிந்தும் ஆரூர்சொன்ன
 உளவுநண்டார் புசுண்டரெனுங் காகந்தானே. (10)

காகமென்ற வேஷமதாய் விருட்சமீதிற்
காத்திருந்தார் வசிஷ்டர்வரக் கண்டார்நாதன்
ஏகமதா யொட்டான வசிஷ்டரேநீர்
எங்குவந்தீர் வாருமென்று இடமுமீயத்
தாகமுடன் யீசனும்மை யழைக்கச்சொன்னார்
சங்கதியைத் தங்களிடஞ் சாற்றவந்தேன்
பாகமுடன் எட்டான விபரந்தன்னைப்
பார்த்துமெய்ஞ் ஞானபொரு ளருள்பெற்றாரே. (11)

பெற்றாரே யென்றுரைத்தீர் வசிஷ்டரேநீர்
பிறந்திறந்து எட்டேழுங்காற் பிறந்துவந்தீர்
சத்தான சத்துகளு மடங்குங்காலம்
சக்கரமுந் திரும்பிவிட்டாற் சமையம்வேறும்
சித்தான பஞ்சவர்க ளொடுங்கும்போது
சேரவே ரிஷிமுனிவர் சித்தரோடு
முத்தாகப் பஞ்செழுத்தி லொடுக்கமாவார்
முத்துமணிக் கொடியீன்றாள் முளைத்திட்டாரே. (12)

முளைத்திட்டீ ரித்தோடே யெட்டுவிசைவந்தீர்
முறையிட்டீ ரிவ்வண்ணம் பெருமைபெற்றீர்
களைத்திட்டுப் போகாதீர் சொல்லக்கேளும்
கண்டமதில் விஷம்பூண்டார்க் கனுவலென்ன
இளைத்திட்டுப் போனாக்கால் மறந்துபோவார்
இளர்நான்கு யுகந்தோறு மிந்தச்செய்கை
பிழைத்திட்டுப் போவமென்று லங்கேபோவோம்
பேய்பிடித்தோர் வார்த்தைசொல நீர்வந்தீரே. (13)

வந்தீரே வசிஷ்டரேநீ ரின்னங்கேளு
வளமைநான் சொல்லிவந்தேன் வேஷந்நீங்கி
இந்தமா மரக்கொப்பி லிருந்தேனிப்போ
இதுவேளை யெவ்வளவோ ஜனமோகாணும்
அந்தமோ ஆதியோ யிரண்டுங்காணு
மவர்களெல்லாம் ரிஷியோகி சித்தரானார்
சந்தேக முமக்குரைக்கப் போகாதையா
சாமிக்கே சொல்லுமையா யிதோவந்தேனே. (14)

வந்தேனே யென்றுரைத்த வாறுகொண்டு
　　வசிஷ்டருமே வாயுலர்ந்து காலும்பின்னி
இந்தேனே முனிநாதா சரணங்காரும்
　　எழுந்துசிவன் சபைநாடி முனிவர்வந்தார்
மைந்தனையே யின்றருளுங் கடவுள்நாதா
　　மாமுனிவன் வாயெடுக்கப் புசண்டர்சொல்வார்
சிந்தனைசெய் யீஸ்பரனே வந்தேனையா
　　சிவசிவா யின்னதென்று செப்பிடீரே. (15)

செப்புமென்ற புசண்டமுனி முகத்தைநோக்கிச்
　　சிவன்மகிழ்ந்து யேதுமொழி செப்புவார்கேள்
கொப்புமென்ற யுகமாறிப் பிறளுங்காலம்
　　குருநமசி வர்யமெங்கே பார்த்தானெங்கே
அப்புமென்ற பஞ்சகனத் தேவரெங்கே
　　அயன்மாலும் சிவன்மூவ ரடக்கமெங்கே
ஒப்புமிந்த யுகமாறிப் பிறந்ததெங்கே
　　ஓகோகோ முனிநாதா வுரைசெய்வீரே. (16)

உரையென்றீ ருன்றனுக்குப் புத்திபோச்சு
　　உம்மோடே சேர்ந்தவர்க்கும் மதிகள்போச்சு
பரையென்றால் பரைநாடி நிலைக்கமாட்டீர்
　　பரமசிவன் தானுமென்றும் பேரும்பெற்றீர்
இரையென்றால் வாய்திறந்த பட்சிபோலே
　　எல்லோரு மப்படிக்கே இறந்திட்டார்கள்
நிரையென்ற வார்த்தைதனைச் சொன்னேனானால்
　　நிசங்கொள்ளா தந்தரங்கம் நிசங்கொள்ளாதே. (17)

கொள்ளாமற் போவதுண்டோ மவுனயோகி
　　கோடியிலே உனைப்போலே ரிஷியோகானேன்
உள்ளாக ரிஷியொருவ ரில்லாவிட்டால்
　　யுகவார்த்தை யாருரைப்பார் யானுங்கானேன்
விள்ளாமற் றீராது முனியவரேகேள்
　　மெய்ஞ்ஞானப் பரம்புருக்க அருள்மெய்ஞ்ஞானி
தள்ளாமற் சபையிலுள்ளோ ரெல்லோர்கேட்கச்
　　சாற்றிடீர் முனிநாதா சாற்றீடீரே. (18)

சாற்றுகிறே னுன்னபடி யுகங்கள்தோறும்
தமக்குவந்த சொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன் ஜகன்நின்முன் னுரைத்துப்போனேன்
வாதாட்ட மெனக்காச்சு இனிமேன் சொல்வேன்
சேற்றிலே நாட்டியதோர் கம்பம்போலத்
திரும்பினது ஜோலாச்ச யுகங்கள்தோறும்
ஆற்றுகிறே னித்தமது ஆகும்போது
ஆரகயா அந்தரம் நடக்கைகேளே. (19)

கேளப்பா கடந்தகதை சிவமேயுண்மை
கெடியாகச் சக்கரங்கள் திரும்பும்போது
பாளப்பா தசநாதம் பவுனம்பாயும்
பரமான பவுனமது பரத்திற்சாடும்
ஏளப்பா அடிக்குகளுக் கிடிந்துவீழும்
இருந்தசதா சிவமோடி மணியில்மீளும்
ஊளப்பா யிதுகோளு மெவருஞ்சொல்வார்
ஓகோகோ வண்டமெல்லாங் கவிழ்ந்துபோமே. (20)

கவிழ்ந்துபோ மப்போது அடியேனங்கே
கருத்துவைத்துத் தியானமொரு தியானமுண்டு
தவிழ்ந்துபோங் காலமப்போ நிறுத்துவேன்யான்
சமையமதி லக்கினிபோல் ஸ்தம்பங்காணும்
சிவந்தவர்ணம் நீலவுரு சுடர்விட்டேகும்
சிவசிவா அக்கினிபோற் கொழுந்துவீசும்
நவந்துஅதி னருகேதான் சென்றுநிற்பேன்
நகாரமுத லஞ்செழுத்து வரக்காண்பேனே. (21)

காண்பேனே நகாரமது மகாரம்புக்கும்
கருத்தான மகாரமது சிகாரம்புக்கும்
தேண்பேனே சிகாரமது வகாரம்புக்கும்
சிவசிவா வகாரமது யகாரம்புக்கும்
கோண்பேனே யகாரமது சுடரிற்புக்குங்
குருவான சுடரோடி மணியிற்புக்கும்
நாண்பான பணியோடி பரத்திற்புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக்கேளே. (22)

கேளப்பா சிவமோடி அண்டம்பாயும்
கிருபையா யண்டமது திரும்பிப்பாயும்
கோளப்பா அண்டமது கம்பத்தான் தான்
குருவான தசதீட்சை பொன்றுமாச்சு
மீளப்பா ஸ்தம்பமது விளங்குஞ்செய்கை
மேலுமில்லை கீழுமில்லை யாலுங்காணேன்
ஆளப்பா கரைத்துமா டேறுவோனே
அன்னரோவா யின்னாளவோ அறிந்திலேனே. (23)

அறிந்திலே னென்றுரைத்த புசுண்டமூர்த்தி
அரகரா உன்போலே முனியார்காணேன்
தெரிந்திலே னென்றுரைத்தால் மனங்கேளாது
சிவனயந்து கேட்கவுந்நீ யொளிக்கவேண்டாம்
பொருந்திலேன் பூருவத்தில் நடந்தசெய்கை
பூரணத்தா லுள்ளபடி புகழ்ந்துசொல்லும்
பரிந்திலேன் மிகப்பரிந்து கேட்டேனையா
பழமுனியே கிழமுனியே பயன்சொல்லீரே. (24)

பழமுனிவ னென்றுரைத்தீர் கடவுளாரே
பருந்தீபஸ் தம்பத்தைப் பலுக்கக்கேளும்
குழவுடனே ஸ்தம்பத்தில் யானும்போவேன்
கோகோகோ சக்கரமும் பிரண்டுபோகும்
தழும்பணியச் சாகரங்க ளெங்குந்தானாய்ச்
சத்தசா கரம்பிரண்டு பெருகும்பாராய்
அழகுடைய மாதொருத்தி ஸ்தம்பத்துள்ளாய்
அரகரா கண்ணொடி லீலைதானே. (25)

லீலைபோற் காலுமுகம் போலேகாணும்
நிலைபார்த்தால் புருடனைப்போற் றிருப்பிக்காணும்
ஆலைபோற் சுழன்றுநின் கம்பத்துள்ளே
அரகரா சக்கரங்க ளாறுங்காணும்
வாலைபோற் காணுமையா பின்னேபார்த்தால்
மகத்தான அண்டமது கோர்வைகாணுஞ்
சேலைபோ லண்டமதிற் சிவந்தான்வீசம்
சிவத்திலே அரகரா பாழுங்காணே. (26)

பாத்தியிலே மணிபிறக்கும் மணியினுள்ளே
பரம்நிற்குஞ் சுடர்வீசும் யிப்பாத்தேரு
நிரத்திலே சடமதனில் யகாரங்காணும்
நிச்சயமாம் யகாரமதில் வகாரங்காணும்
வாத்திலே வாகாரமதிற் சிகாரங்காணும்
வரும்போலே சிகாரத்தில் மகாரங்காணும்
காத்திலே மகாரத்தில் நகாரங்காணும்
நன்றாகப் பூமியப்போ பிறந்ததன்றே. (27)

பிறந்ததையா யிவ்வளவு மெங்கேயென்றாற்
பெண்ணொருத்தி தானதிலே நின்றகோலம்
சிறந்ததையா யிவ்வளவும் அந்தமாது
சூட்சமதே அல்லாது வேறொன்றில்லை
கறந்ததையா உலகமெல்லாம் காமப்பாலைக்
காலடியிற் காக்கவைத்து சகலஜெந்தும்
இருந்ததையா யிவ்வளவுஞ் செய்தமாது
எங்கையென்று னுன்னிடத்தி லிருந்தாள்கன்னி. (28)

இடப்பாக மிருந்தவளு மிவளேமூலம்
இருவருக்கும் நடுவான திவளேமூலம்
தொடக்காக நின்றவளு மிவளேமூலம்
சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளேமூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளேமூலம்
ஐவருக்கும் குருமூல மாதிமூலம்
அடக்கோடிக் கொப்பதனில் நின்றமூலம்
கன்னியவள் சிறுவாலை கன்னிதானே. (29)

கன்னியிவ ளென்றுரைத்தார் புசுண்டமூர்த்தி
அர்த்தனப்போ மனதுசற்றே கசங்கினார்பின்
மண்ணுள்ள தேவர்களும் பிறப்பித்திந்த
மார்க்கத்தி லிருப்பதுவோ மவுனப்பெண்ணே
உன்னிதமா யுன்கருணை யெங்கேகாண்போம்
ஓகோகோ ஐவருந்தான் வணங்கினார்கள்
கொன்னியவள் வாக்குரைக்காள் சிவமேகன்னி
கொலுமுகத்தில் நால்வரும்போய் வணங்கினாரே. (30)

வணங்கியவர் வாய்புதைத்து நின்றார் பின்னே
மாதுகலி யாணியென வசனித்தார்கள்
வணங்கினார் தேவரொடு முனிவர்தாமும்
மற்றுமுள்ள தேவர்களும் ரிஷிகள்தாமும்
வணங்கினா ரஷ்டகெஜங் கிரியெட்டும்
வாரிதியுஞ் சேடனுமா லயனும்மூவர்
வணங்கினார் மிகவணங்கித் தொழுதாரப்போ
வாலையவள் மெய்ஞ்ஞானம் அருளீய்வாளே. (31)

அருளீய்வாள் கம்பமணியை மாலைபூண்டாள்
அரகரா சின்மயத்தின் நீறுபூசி
பொருளீவா ளவரவர்க்கு ஏவல்சொல்லிப்
பொன்றாத பல்வுயிர்க்கைக் கிடங்கள் வேறாய்த்
தெருளீவாள் சிவயோகந் தெளிவதற்குச்
செயனுறுதி யாகவல்லோ தெரியவேண்டித்
இருளீவாள் தாயான சிறியவாலை
சிவசிவா சூட்சம்பூ ருவந்தான்பாரே. (32)

பூருவத்தில் நடந்தகதை இதுதானென்று
புகன்றுவிட்டுப் புசுண்டருந்தான் பதிக்குச்சென்றார்
காரணத்தி லேவகுத்தே னித்தஞானங்
கம்பமணி வாலைகொலுக் கூட்டமப்பா
நாரணத்தில் நின்றிலங்கும் மவுனவாலை
காட்டினாள் சிவராஜ யோகங்கேளு
ஆரணத்தி பூரணத்தி யருள்மெய்ஞ்ஞானி
ஆதிசத்தி வேதமுத்தி யருள்சொல்வாளே. (33)

புசுண்டர் ஞான காவியம் 33

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி கோத்திரம் குருவைமூப்பனார் மகன் வைகுண்டமூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

திருச்சிற்றம்பலம்.

இருபத்திரண்டாவது

புசுண்டமகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய

ஞானோபநிடதம் 32.

ஆதியெனை யீன்றகுரு பாதங்காப்பு
        அத்துவிதப் பிரணவத்தி னருளேகாப்பு
நீதியா மாரூட ஞானம்பெற்ற
        நிர்மலமாஞ் சித்தருட பாதங்காப்பு
சோதியெனப் பாடிவைத்தேன் முப்பான்ரெண்டில்
        துரியாதீதப்பொருளைத் துலக்கமாகத்
தீதில்லாக் குணமுடைய பிள்ளையானால்
        சீவேச வைக்கியமது தெரியுந்தானே. (1)

தானென்ற குருவினுப தேசத்தாலே
        தனுகரண வவித்தையெல்லாந் தவறுண்டேபோம்
வானென்ற சுவானுபவ ஞானமுண்டாம்
        மவுனாதி யோகத்தின் வாழ்க்கையெய்தும்
நானென்ற பிரபஞ்ச வுற்பத்திக்கு
        நாதாதீ தத்யானம் நன்றாயெய்தும்
கோனென்ற கொங்கணவர் தனக்குச்சொன்ன
        குறிப்பான யோகமிதைக் கூர்ந்துபாரே. (2)

பாருநீ பிரமமிலை யார்தான்சொல்வார்
        பதமில்லை யாதெனினும் பவ்யமில்லை
சேருமிந்தப் பிரமாணந் தானுணர்ந்து
        தெரிவிக்கப் படாதருளிற் சிவசொரூபம்
ஊருகின்ற காலத்திர யங்களாலே
        உபாதிக்கப் பாதத்துவ முற்பத்திக்கும்
சாருமிந்த வுபாதான காரணத்தின்
        சம்பந்த மில்லாத சாட்சிதானே. (3)

சாட்சிசுத்தா யநிதருணா நித்தமாகிச்
சட்சுமனத் தாலறியத் தகாதாயாறும்
சாட்சியதே யேதுசா தனமுந்தள்ளிச்
சகலவிந்திரி யாமியதாய்ச் சர்வபூத
சாட்சியினை யிவ்வளவவ் வளவாமென்று
தனைக்குறித்து நிர்ணயிக்கத் தகாதுயோகம்
சாட்சியதே ஞாதுர்ஞான ஞேயமுடஞ்
சத்தாதிபிர மாதிகளைத் தானேசொல்வாம். (4)

சொல்லுமெனக் கேட்டுகந்த மாணாக்காவுன்
தூலகா ரணப்பிரமந் துரியாதீதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
ஹம்சோகம் அசபாமந் திரத்தியானம்
செல்லுமவ னேநானென் றபிமானிக்கும்
சித்தவிர்த்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலபோக விர்த்தியோகி
விவேகதியா னாதிகளே மேலாம்பிர்மம். (5)

பிர்மசோத் ராதிஞானேந் திரியமைந்தும்
பேசுகர்ம வாக்காதியிந் திரியமைந்தும்
அர்மமெனுஞ் சத்தாதி விடயமைந்தும்
கரணாதி நானருபிரா ணாதியைந்தும்
வர்மமிவை யிருபத்தி னொன்றுங்கூடி
வருந்தூல சரீரவிராட் டெனவேசொல்லும்
தர்மவத்தை சாக்கிராபி மானிவிஸ்வன்
தனக்குவமை யாங்கிரியா சத்திதானே. (6)

சத்தியுடன் ரசோகுணந்தான் நேத்திரத்தானம்
தனிப்போக மிதனோடே சார்ந்தவான்மா
வெற்றிபெறும் ஜீவாத்மா அகாரமாச்சு
விவகார ஜீவனிதை விராட்டென்பார்கள்
வித்தையெனு மவித்தையிலே பிரதிவிம்பம்
விசாலமிந்தத் தூலசூக்ம விருத்தியாச்சு
தத்துவமசி வாக்கியசோ தனையினாலே
தான்கடந்து சூட்சமத்திற் சார்ந்துகொள்ளே.

கொள்ளடா ஞானேந்திரி யங்களைந்து
கூடினது கர்மேந்திரி யங்களைந்து
தள்ளடா பிராணாதி வாயுவைந்து
சார்வான மனப்புத்தி தானிரண்டு
விள்ளடா பதினேழு தத்துவங்கள்
விர்த்தியெனுஞ் சூட்சுமமா யிரண்யகர்ப்பத்
துள்ளவழி மானிசை தன்யனுக்கும்
சொற்பனா வத்தையெனச் சொல்லுநாலே. (8)

ஆலான சாத்விகமா மகங்காரத்துள்
றழுந்தவிச்சா சத்தியல்லோ நுணுக்கமாச்சு
காலான கண்டமெனுந் தானத்துள்ளே
கலந்திருக்கும் போகமல்லோ யிச்சாபோகம்
நாலான ஆன்மாவே அந்திரான்மா
ஞாயமிந்தப் படியறிந்தா லுகாரமாச்சு
ஆலமெனுஞ் சூட்சுமத்தைக் கடந்துநின்று
சொல்லுகிறேன் காரணத்தின் சயம்புதானே. (9)

தானவ்யாக் கிருதமெனுஞ் சரீரத்துக்குத்
தானமதே இருதயமா ஞானசத்தி
வானமதே அகங்காரம் வித்தையாகிய்
வருஞ்சுழுத்தி யபிமானி பிராக்யனுக்கும்
கோனிதற்கு ஆனந்த போகமாகுங்
கூடுகின்ற ஆன்மாவே பரமான்மாவாம்
கானிதற்கு பரமான்மா ஜீவனிந்தக்
காரணமே மகாரமெனக் கண்டுகொள்ளே. (10)

கொள்ளுமந்தப் பொருள்தானே சத்துமல்ல
கூறான வசத்துமல்ல கூர்மையல்ல
உள்ளநிரா மயமல்ல சர்வமயமல்ல
உற்றுப்பார் மூன்றெழுத்தும் ஏகமாச்சு
தன்னுநின்ற பொருளல்லை தள்ளாதல்ல
தானப்பிர மயிக்யஞ்சத் தானமுத்தி
வின்னுமிந்தப் படிதானே வேதபாடம்
விசாரணையாற் சமாதிசெய்ய விட்டுப்போமே. (11)

விட்டுப்போம் சமுசார வியாபாரங்கள்
　　விடயசுக இச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
　　துரியநிலை நன்றாகத் தோன்றுமட்டும்
எட்டுகின்ற பரியந்தம் சுருதிலாக்கியத்
　　தெண்ணமெனுந் தியானத்தா லெய்துமுத்தி
தட்டுகின்ற ஜீவாத்வமா தனைக்கில்லாமற்
　　சமாதியுற்றால் நாமதுவே சாக்ஷாத்காரம். (12)

சாக்ஷாதி பிரமத்தால் பூர்வகர்மம்
　　தத்வாதி வாசனைகள் தானேபோகும்
ருக்ஷாதி பிராந்தியெனும் மாயாசத்தி
　　தொடராமற் சேர்வதுவே சொரூபஞானம்
இக்ஷையிறைற் பிரமாண்டம் பிண்டண்டங்கள்
　　சிருஷ்டிமுதல் யாவற்றுந் தெரியுநன்றாய்
காக்ஷியென்ன ஏகவஸ்து வொன்றல்லாமற்
　　காண்பதெல்லாம் வியர்த்தமெனக் கண்டுகொள்ளே. ()

கண்டபார் மூடமெனு மஞ்ஞானிக்குக்
　　காணாது ஜீவான்மா பரமான்மாவும்
தொண்டபண்ணி குருமுகத்தில் விசேடமாகச்
　　சுருதியெனும் வேதாந்த மப்பியாசித்து
உண்டெனு பவஞானங் கிர்த்தியாகிர்த்தியம்
　　யோகிதனக் கேதேனுந் தேவையில்லை
விண்டுசொல்வோம் நதிகடக்க வோடமல்லால்
　　விஷயத்தாற் சாதனங்கள் வீணுமென்றே. (14)

வீணல்லோ சாதனப்பிர யோஜனங்கள்
　　மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்திலிச்சை
　　வியோமபரி பூரணத்தில் யேவிநின்றால்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
　　விளக்கதனை மறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானதா ரணைகளெல்லாம்
　　மெய்ப்பிரகா சிக்கும்வரை வேணுந்தானே. (15)

வேறுமென்றா லெள்ளுக்கு ளெண்ணெய்போலும்
வித்தினிடத் தடங்கின்ற விருட்சம்போலும்
காணுகின்ற பூவினுறை வாசம்போலும்
கன்றாவின் பாலினுள்ள நெய்யைப்போலும்
தோனுமயில் முட்டையின்மேல் வர்ணம்போலும்
ஞாலமதிற் சூட்சமந்தான் றுலங்கிநிற்கும்
ஆறுவத்தாற் சாதனத்தை மறந்தாயானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிதுதானே. (16)

அரிதில்லை பிர்மவியா கிருதஜீவ
னயிக்கியமெனுஞ் சந்த்யான மப்யாசித்துச்
சுருதிகயிற் றால்மனமாம் யானைதன்னைச்
சுருக்கிட்டுச் சிக்கெனவே துறையிற்கட்டிக்
குருவுரைத்த சிரவணத்தின் படியேநின்றால்
குதியாறு பிரபஞ்ச கோட்டிற்றுயும்
திரிவதில்லை திரிந்தாலும் மதமேறாது
ஜீவவை ராக்யமெனுந் திரமிதாமே. (17)

திரமென்ன ஹம்சோகம் மந்த்ராதீதம்
திருசியருள் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்ரசத்தா வஸித்தைதுன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விர்த்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே. (18)

என்னவே அஞ்ஞானி யுலகாசாரத்
திச்சையினுற் றர்மார்த்த வியாபாரங்கள்
முன்னமே செய்ததின்பின் மரணமானால்
மோட்சமதற் கனுபவத்தின் மொழிகேட்பீரால்
வின்னமதா யங்கார பஞ்சபூத
விடயவுபா திகளாலே மேவிக்கொண்டு
தன்னிமையா யிலிங்கசரீ ரத்தோடொத்துச்
சதாகாலம் போக்குவரத் தாகுந்தானே. (19)

தானிந்தப் படியாகச் சிவரெல்லாம்
சகசபிரா ரத்வசத் தாகிறார்கள்
ஏனிந்தக் கூரபீமா ணத்தினாலே
இத்தியாதி குணங்களெல்லாம் வியாபிக்கும்பார்
வானிந்த போன்மெலிந்து வளர்ந்துபோகும்
வர்த்திக்கு மஞ்ஞானம் மாற்றவேண்டி
நானிந்தப் பிரமவுபா சனையைப்பற்றி
நாட்டம்வைத்தோ மவித்தையெலாம் நாசமாச்சே. (20)

ஆச்சப்பா எத்தனையோ கோடிகாலம்
அந்தந்தப் பிரளயத்துக் கதுவாய்நின்றேன்
மூச்சப்பா வோடவில்லை பிரமாதீத
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற்சென்றேன்
கூச்சப்பா வற்றபிர்ம சாக்ஷாத்காரம்
குருபாத மாகியபோ தாமாய்நின்றேன்
பேச்சப்பா சராசரங்க ளழிக்கும்போது
பின்னுமந்தப் புசண்டனெனப் பேர்கொண்டேனே.(21)

பேர்கொண்டேன் சொரூபசித்தி யனேகம்பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்குப் பிரீதியானேன்
மேர்கண்டே னாயிரத்தெட் டண்டங்கூட
வீதியெல்லா மோர்நொடிக்குள் விரைந்துசென்றேன்
தார்கண்டேன் பிருதிவியின் கூறுகண்டேன்
சாத்திரவே தங்கள்வெகு சார்புகண்டேன்
ஊர்கண்டேன் மூவர்பிறப் பேழுங்கண்டேன்
ஓகோகோ விதுவெல்லாம் யோகத்தாட்டே. (22)

யோகத்தின் சாலம்ப நிராலம்பந்தான்
உரைத்தாரே பெரியோர்க ளிரண்டாமென்று
ஆகமத்தின் படியாலே சாலம்பந்தான்
அநித்தியமல்ல நித்தியமென் றறையலாகும்
சோகத்தைப் போக்கிவிடும் நிராலம்பந்தான்
சூன்யவழிப் பிராயமதே சொரூபமுத்தி
மோகசித்த விருத்திகளைச் சுத்தம்பண்ணி
மும்மூட்ச பிர்ம்மயிக்கிய மோட்சமென்னே. (23)

மோட்சசாம்பி ராச்சியத்தில் மனஞ்செல்லாத
மூடர்களுக் கபரோட்சம் மொழியலாகா
சூட்சமதிக் காலவனுக் கனுசந்தானம்
சொரூபலட்ச ணந்தெரியச் சொல்லலாகும்
காட்சியில்லை சாதனா சதுட்டயத்திற்
சட்சேந்திரி யாகாதா தீதமாகும்
மூச்சலையப் படுவதல்லை பிரமநிட்டை
மூலவிந்து களாதீத மொழியலாமே. (24)

மொழிவதிலே அகாரமெனும் பிரணவத்தின்
மோனபிரா ணுதியபே தாதமாச்சு
தெளியுமிந்த ஓங்காரத் தொனிவிடாமற்
சிற்கனத் தேலயமாய்ச் சேர்க்கவேணும்
ஒளிதானே நிராலம்பம் நிர்விசேடம்
உத்கிருஷ்ட பரமபத வுபகாரஸ்தன்
வெளியோடே வெளிசேர்ந்தால் வஸ்துமாச்சு
விரோதசத்தி ராதியெலாம் விருத்தமாச்சே. (25)

விருத்தமா மறுதியெனும் பிரார்த்வகர்மம்
விஷயாதி பிரபஞ்ச வீஷ்மமெல்லாம்
ஒருத்தனே யோகியென்பா னவனுடன்
உலகமெலாந் தானுவ துண்மையாகும்
நிறுத்தவென்றால் நாசிகாக் கிரகவான்மா
நிலைபுருவ மத்தியிலே நிஷ்டனாகிக்
கருத்தழிந்து நின்றவிடம் சாக்ஷாதகாரம்
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரே. (26)

பார்ப்பதற்கு நீண்டதுவாய் குறுகிவட்டம்
பரிதிமதி யுதயமெனப் பளிங்காகாசம்
தாப்பதற்கு மூன்றுசுழி பின்னாய்நிற்கும்
சாக்கிரத்தி னடையாளந் தாக்கிப்பாரு
சேர்ப்பதற்குச் சுழிமுனையென் றிதற்குநாமம்
திரிகோணக் குண்டலியே சிவசொரூபம்
காப்பதற்கு நாடி யூடேசென்று
கால்நிறுத்திப் பிடரிவழி கண்ணைப்பாரே. (27)

கண்ணான பிடரிமுது கோரேந்திரம்
காலகூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு ளிணங்கிற்றான்
விமோசனமாம் நிராலம்ப மெனத்தான் சொல்லும்
நண்ணான யோகமல்லோ இந்தநிஷ்டை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோ ஞானம்
அசபாமந் திரத்யானம் அறைகிறேனே. (28)

அறைகிறேன் அசபையெனும் பிராணன்மாவை
அகண்டபரா பரத்திலுள்ளே ஐக்கியஞ்செய்ய
குறைவில்லை ஓங்கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குறுகிநந்தான்
நிறைகிறேன் நாசிகா ரந்த்ரவாயு
நீக்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னட்சரசா தனமுந்தள்ளிப்
பந்தமற்ற மகாமோட்சப் பதிபெற்றேனே. (29)

பதிபுருவத் தடுமுனைக்கீ ழன்றுக்கென்னும்!
பவளநிறம் போன்றிருக்குந் திரிகோணத்தான்
சதிபெறுமின் குவையுபஸ்த சுகந்தியாகி
சுபாவசா தனையினால் மவுனமாச்சு
விதிவிஹித பிராரத்துவ கர்மமேபோச்சு
விடயபோ கத்திளிச்சை விட்டுப்போச்சு
மதியெனுமோர் வாயுவது அமிர்தமாச்சு
வஸ்துவதே காரணமா மகிமையாச்சே. (30)

மகிமையென்று யோகசா தனையினாலே
மகாகாச நிருவிகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றுணவத்தை நீக்கலாச்சு
அத்துவித பிரமசித்தா னந்தகாரம்
சகளாதி தங்கடந்து களாதீதத்தில்
சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு
பந்தமற்ற மகாமோக்ஷ பதம்பெற்றேனே. (31)

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத் திரண்டினிலே பிரமஞானம்
சித்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானால்
சாதனைசெய் வானறிவான் சைதன்னியத்தில்
முத்தியடை வானதிலே நிர்த்தஞ்செய்வான்
முப்பூட்சத் துவமறிந்த மூர்த்தியாவான்
நித்யமெனு முப்பதிட்டைப் பொருள்தான் சொல்லும்
நிலவரத்தால் யோகநிஷ்டை நிறைந்துமுற்றே. (32)

புசுண்டர் ஞானோபதேசம் 32
முற்றிற்று.



ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி கோத்திரம் குருவமுப்பனார் குமாரர் மாமுண்டிமுப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

இருபத்திமூன்றாவது

புசண்ட மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞானசூஸ்திரம் 19

பன்னுமே உப்புக் கட்டின் பருவத்தைச் சொல்லக் கேளு
மன்னுமே கர்ப்பா மின்ற மலமது தேங்காய் மட்டும்
தென்னுமே அமுரி தானும் சிறந்தொரு படியே வார்த்து
உன்னுமே கலக்கிக் கிண்டி உருகவே ரவியில் வையே, (1)

வைத்ததோர் குளம்புக் குள்ளே மாட்டிற மருந்து கேளு
கைத்ததோர் உப்பு ரெண்டு கடியதோர் காரம் ரெண்டு
பைத்ததோர் காரத் தின்பின் பரிவுடன் கூட ஒன்று
ஐத்ததோர் வகையொன் றுக்கு அரைப்பலம் பொடித்துப் போடே

போட்டதை யொன்றாய்க் கிண்டி புகழ்பெற ரவியில் வைத்து
மாட்டது அமுரி தானும் வளமதாய்ப் படிய தொன்று
ஈட்டது வுலர்ந்த பின்பு யீரஞ்சு தரமே வார்த்து
கூட்டது மெழுகு போலே கொடுஞ் சில்லும் ரெண்டாய்ச் செய்யே,

செய்திடுஞ் சில்லுக் கொன்று சிறந்தொரு வோட்டில் வைத்துக்
கைத்திடுங் கட்டி யாறுக் கல்லுப்புப் பதிப்பா யப்பா
வைத்திடு மேலே நீயும் மறுசில்லுப் போட்டு மூடி
தைத்திடும் சீலை சுத்தி தனிப்புடம் போட்டி டாயே. (4)

போட்டபின் உப்பை வாங்கிப் புகழ்பெற வுருக்கிப் பாரு
ஆட்டபின் தெரித்து தானால் அப்பனே நீதான் கேளு
நீட்டிபின் வில்லை ரெண்டும் நேரே அமுரி யாலே
தாட்டிபின் வில்லை செய்து தனியுப்பு வைத்துப் போடே. (5)

போடுநீ உப்புக் கட்டு போகாது இய்க்கே அப்பா
நீடுநீ உறுகும் உப்பு நீட்டின தெல்லாங் கொல்லும்

ஆடுநீ வாத வித்தை அறுபத்து நாலுங் கட்டும்
தேடுநீ யல்ல வென்றாற் சேர்ந்துடன் தேறி யேறே. (6)

ஏறலாம் உப்பைத் தொட்டு எளிதாக வெவர்க்கு மப்பா
கூறலா மென்றான் தாயுங் கூறாதே யென்றா னீசன்
மாறலாம் பொன்னே யாகும் பகாசித்தி காய மாகும்
தேறலாம் போதங் கண்டு செயமாகுங் காணுங் காணே. (7)

காணிந்த உப்பு வேதைக் கடியதோர் பலம தொன்று
பூணிந்த சாரங் கால்தான் புசமூறு காரங் கால்தான்
தோணிந்த வெண்டுக் கொக்கச் சுகம்படக் கெந்தி கூட்டி
ஆணிந்த மூன்றைத் தானும் அமூரியா லரைத்து வையே. (8)

வைத்திட்ட வுப்பை மூசை வைத்துநீ யுருக்கும் போது
கைத்திட்ட அரைத்த மூன்று காட்டிநீ வாங்கு வாங்கு
தைத்திட்ட காரம் போகு தன்மையா மட்டுந் தானே
ஐத்திட்ட உப்புத் தானும் அடுத்திட மயன மாமே. (9)

மயனமா முப்புத் தன்னை வளைந்திடு மால்தே விக்கு
மயனமா முப்புத் தன்னை வளைத்திடும் வீரத் தாக்கு
மயனமா முப்புத் தன்னை வளைந்திடு கெவுரி மேலே
மயனமா முப்புத் தன்னை வளைந்துநீ சிலைக்குக் கட்டே. (10)

கட்டிய நாலை யுக்தான் கனலிலே வாட்டி வாட்டி
அட்டியா யுருகி யுள்ளே அப்பனே மணியாய் நிற்கும்
இட்டியே வரைந்த பற்ற யிசைக்கறு பத்துஞ் சாகும்
மட்டியே கெவுரி மாட்ட வளமிது சத்துக் காணே. (11)

காணென்ற உப்பு வென்ன கவளிக்க நாகஞ் சாகும்
காணென்ற உப்பு வென்ன கவளிக்க யீயஞ் சாகும்
காணென்ற உப்பு வென்ன கவளிக்க மைந்தா கேளு
காணென்ற உப்பு வென்ன கவளிக்கச் சுண்ணாந் தானே. (12)

தானென்ற உப்பாகுங் குருவாற் கேளு
சாற்றுகிறேன் சூதத்தைத் தலைதூக்காமற்
தானென்ற உப்புஒன்று சூதம்நாலும்
கட்டியப்பா முலைப்பாலிற் கலந்தாட்டி

ஊனென்று வுருட்டியதை யுண்டைபண்ணி
உறவான காரத்தை மேலேபூசி
வானென்ற வுமியிலே புடத்தைப்போட்டு
வாங்கிய குகைக்குள்ளே வைத்தூதே. (13)

ஊதையிலே யிடைபோகா பணிபோகாது
ஓடாத்த தொங்கிச்சி வொருநூறென்று
வேதையிலே வெகுசாருக்கு மேலாஞ்சுண்ணம்
வெண்கலமும் பித்தளையும் ரசிதமாகும்
பாதையிலே பொருகோடி வித்தையாகும்
பாரப்பா வெள்ளியிட்டால் வெள்ளியாகும்
போதையிலே பொன்னிட்டாற் பொன்னையாகும்
பொற்கொடிக்கு யீசனிது புகன்றவாறே. (14)

வேறு.

உப்பையே கட்ட வென்றால் ஒன்றினு மாகா தப்பா
உப்பையே புளியு முப்பும் உடனஞ்சு கூடிக் கொல்லும
உப்பையே கொண்டு தானும் ஓடலா மாட லாகும்
உப்பையே மூல மூர்த்தி யுரைத்தவைந் நூறும் பாரே. (15)

பாரேநீ உப்பைக் கட்டப் பகருவேன் பாருள் ளோர்க்காய்
சேரேநீ யிணக்கள் சுண்ணம் சேராக வெள்ளை கூட்டித்
தாரேநீ வெள்ளை வார்த்துத் தாக்கியே அரைத்துக் கட்டி
கோரேநீ பூதிப் போடு கொடுவெள்ளைச் சுண்ண மாமே. (16)

சுண்ணத்திற் பாதி தண்ணீர் கூட்டியே சூதந் தன்னை
மண்ணுமே அரைத்துக் கொண்டு வகையான உப்புக் குள்ளே
பண்ணிட்டுப் பிரட்டிக் காச்சி பாச்சியே குகையில் வைத்தே
கண்ணிட்டு ஊது ஊது கண்விட்டு ஆடும் பாரே. (17)

வைத்துநீ யெரிக்குங் குப்பி வாய்தனைத் திறந்து பின்னை
பத்தியே சலாகை போடும் பருவமாம் பாரு பாரு
கைத்துநீ சிகப்ப தானாற் கடுந்தீயை அவித்துப் போடு
பொத்திய செந்தூ ரத்தாற் புகட்டிய முறையைக் கேளே. (18)

கேளுநீ கவலோ கத்திற் கெடிசகஸ் திரமே போடு
வாழுநீ உபர சத்தில் மாட்டுவைந் நூற்றுக் கொன்று
தேளுநீ கல்லும் செங்கல் துடர்ந்திடப் பொன்னே யாகும்
வேளுநீ யினியென் சொல்வேன் வேதையுங் காட்டிட் டேனே.

புசுண்டர் ஞான சூஸ்திரம் 19 முற்றிற்று.



உ

குமரன் றுணை.

இருபத்திநான்காவது

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞானக்குறள் 16.

சின்மயத்தைப் போற்றிச் சிவராஜ யோகத்தில்
நன்மை பராபரத்தை நாடு. (1)

அண்ட முடிமீதி லங்கி ரவிமதியைக்
கண்டுதரி சித்தாற் கதி. (2)

வலமிடமாய் நின்ற மதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு. (3)

அறுபத்து நால்யோக மவ்வளவுந் தள்ளி
யொருபொழுது முண்டுநிலை யோர். (4)

உலகமே மாயமென வுண்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நட்பு. (5)

சித்தர் பதினெண்மர் செய்கையிற் றோன்றூஉ
அத்தனரு ளும்புசுண்டன் யான். (6)

சொன்னே னறிந்து சுகமா யுலகோருந்
தெக்காளும் வாழ்கவென்றே யான். (7)

கண்ணுண் மணியாகிக் காரணமாய் நின்றான்
மண்ணு முயிர்பதியு மாறு. (8)

விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். (9)

நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாய் நிற்க
ஆத்துமத்தி லானந்த மாம். (10)

உலகி லறிந்தோ ரொருவரு மானார்
பலநினைவை விட்டுநீ பார். (11)

கண்டோரும் சொல்லார் கருத்தாற் பெரியோரைத்
தொண்டுசெய்து பெற்ற சுகம். (12)

ஆதியிற் சொன்னவுயி ரண்ட மதையெடுத்து
மாதுசிவன் பூசைசெய்து வை. (18)

மூப்பொருளைச் சுட்டு முழுதுமே நீறுக்கித்
தப்பாம லுண்டுநிலை சார். (14)

யோகமுடன் கற்ப முறைத்தேனீ ரெட்டில்
வேகமுடன் கண்டுணரு வீர். (15)

வாசிமூலை மைந்தா மருவு பிரமத்தில்
மோசம்வரா தென்குறள் முற்றும். (16)


புசுண்டர் ஞானக்குறள் 16

முற்றிற்று.

புசுண்டமகாரிஷி ஞான சாஸ்திரங்கள் கட்டிடம் அனேகம் ஓலை ஏட்டுப்பிரதிகளிருக்கிறது அவைகளை அடுத்த பதிப்பில் அச்சிட்டு வெளியிடக்கூடும்.



சதுரகிரி மாவூற்று இராமகிரி சாமியாரிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

கடவுள் துணை.

இருபத்தைந்தாவது
வகுளிநாதரென்னும்
மௌனச்சித்தர்ஞானம் 8

சொல்லவொண்ணா விராட்பிரம வஸ்துவாகி
　　சுத்தநின் மயமாகிச் சோதியாகி
அல்லவிலா அடியாகி நடுவுமாகி
　　அந்தமுமாய் அறுதியுமாய் அகிலமாகி
வெல்லுதற்கு மரிதாகி விண்ணுமாகி
　　விண்வெளி யப்புவுமாய் விளங்குகின்ற
நல்லதொரு மவுனசித்தாய் நாடிநின்ற
　　நாதாந்த மனோன்மணியாள் பாதங்காப்பே.

வணங்குதற்கு எட்டெண்ணும் அறியவேணும்
　　மகத்தான வித்தையிது சிவயோகிக்காம்
இணங்குதற்குக் குருவேணும் இல்லாவிட்டால்
　　என்னால்தா மின்னாலா மெட்டக்குள்ளே
குணங்காமற் சொல்லிவைத்தேன் அகாரபீசம்
　　கூடிநின்ற உகாரமல்லோ சத்திபீசம்
அணங்கினுக்குத் தானுமைத்தா ரீசனன்றா
　　ஆச்சரியம் அகாரத்தி லடங்கிப்போச்சே. (1)

அடங்கிநின்ற மகாரமல்லோ மவுனதிட்சை
　　ஆதாரங் கடந்துநின்ற தனுவுந்தக்கில்
சடந்தனைக்கொண் டாகாசங் கலந்துபோச்சு
　　தாரகப்பிர மக்கியானம் சார்வதாச்சு
முடக்கேறிப் பார்த்தாக்கா லிதுவேமுத்தி
　　மூலமதைப் பார்ப்பவர்க்குச் சொரூபமில்லை
குடந்தனக்கு வாகாசம் நிராகாசத்தைக்
　　கூட்டுகின்ற தன்மையல்லோ கொழுகிப்பாரே. (2)

பாரப்பா என்மகனே மகாரசூட்சம்
பலித்தாக்கால் யோகியென்றே பகரலாகும்
சேரப்பா அகாரத்தில் உகாரங்கூட்டு
சிகாரத்தில் வகாரத்தைச் சேர்த்துப்போடு
நேரப்பா அரியெழுத்துக் குயிர்தான் சிவன்
நின்றவிடம் நகாரத்தில் மூலங்காணும்
பேரப்பா உகாரமென்ற பிரணவத்தாற்
பேச்சான சிவகலை பிறக்குந்தானே. (3)

நாவென்ற மூலத்தில் வாசியாட்டம்
சதாசிவனார் பீடமதிற் புக்கித்தானால்
ஊவென்ற சடப்போச்சு கற்பூரதேகம்
உந்தனுக்கு வாச்சுதடா பீசன்வாழ்க்கை
காவென்ற ஆறுவத்தை நீக்கவென்றால்
நகாரமென்ற பூரணி யேவரைத்தள்ளு
பாவென்ற அகாரமுனை யூடுதாக்கு
பனிரண்டுக் குள்ளடங்கிப் பதிவுள்ளாச்சே. (4)

உள்ளாகச் சிகாரவன்னி பத்திற்கொண்டால்
ஓடாமற் பிரணவம்வந் தொட்டிக்கொள்ளும்
தள்ளாமல் ஓரெழுத்து மகாரமப்பா
சகஸ்திரத்தெண் மலர்க்குள்ளாய்ச் சார்ந்துகொள்ளும்
விள்ளாதே மேற்கொண்டால் துவாதசாந்தம்
வெட்டவெளிக் குள்ளான ஞானமாச்சு
துள்ளாட்டம் ஏதுமில்லை புருவமையச்
சுழிக்குள்ளோ ரெழுத்தறிந்தாற் துரியமாச்சே. (5)

துரியமென்ற வகாரத்தை மாறியேற்றச்
சுடரான சிகாரமதே சோதியாகும்
அரியெழுத்துக் குள்ளாக உருத்தாநிற்கும்
ஐந்தெழுத்தும் ஆறெழுத்தி லடங்கிநிற்கும்
எரியெழுத்தைப் பற்றிநின்றால் ஈரேழும்
எட்டெழுத்தும் விட்டெழுத்துக் கேறுதையா
குரியிருக்கும் இடத்திலொரு வகையதாகக்
குற்றெழுத்தைப் போற்றிவிட்டாற் குருவிதாச்சே. (6)


குருவிருக்கும் இடந்தானே புருவமையம்
கூடும்வலக் கண்தானே சிவமதாச்சு
திருவிருக்கும் மவுனத்தி லிருந்தமார்க்கம்
செயல்காட்டிச் சொல்வதற்கே அறிவேஆசான்
குருவிருக்குஞ் சொற்படிநீ நடந்துகொண்டால்
தானவனே தானாகித் தனியனாவான்
வுருவெடுத்தா லாவதென்ன பலனேவிந்து
ஒன்பதுநெற் பிரமாணம் ஊடுதாக்கே, (7)

தாக்கப்பா யிடக்கண்வலக் கண்ணுஞ்சேரும்
சச்சிதா னந்தவன்னி தானேயாகும்
மூக்கிலே ஓடாது சுத்தம்பாரார்
மூத்தியென்ன் நெற்றிக்கண் உள்ளேநிற்கும்
நாக்கிலே பூரியரி யாததுண்டோ
காலில்ரெண்டு மூவில்ரெண்டு ஞானயோகம்
பாக்கியங்கள் செய்வதற்கு மகாராதீட்சை
பலிக்குமடா யிருநான்கு பாடல்முற்றே. (8)

மௌனச்சித்தர் ஞானம் 8

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வாழைக்குளம் ஒத்தத்தெரு வெங்கடாசலம் ஐயரவர்களிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பராசக்தி துணை.

இருபத்தியாறுவது

வகுளிநாதரென்னும்

மௌனச் சித்தர் பாடல்.

குறவஞ்சிப்பா.

ஆதிபெருஞ் சோதிதனை யனுதினமும்நாடி
    ஐயர்பதந் தேடிக்கொண் டருள்பெறவேபாடி
சோதியெனும் மனோன்மணியா ளருளதனைப்பெற்றுச்
    சுகருடைய பாதமதை மனத்தனிலேயுற்று. (1)

ஆங்காரந் தனையடக்கி யருள்நிலையைநோக்கி
    அரியபுவ னங்களெல்லாம் அறிபமனதாக்கி
பாங்காகப் பெரியோர்கள் பாதமதுபணிவோம்
    பத்தியொடு யோகநிஷ்டை நித்தியமும்புரிவோம். (2)

பேய்க்குணத்தைச் சுட்டலவோ பிர்மநிலைகண்டோம்
    பிரமபதி தான்கடந்து சுழிமுனையுட்கொண்டோம்
நாய்போலே அலையாமல் நாமிருந்தோம்தவசில்
    நல்லதொரு ஆங்காரம் மடக்கியிகப்பவுசாய். (3)

வஞ்சகமாம் வாழ்வைநம்பிச் சஞ்சலங்களடையோம்
    மகத்தான மகரிஷிகள் பதங்காணச்சடையோம்
பஞ்சமா பாதகரை யொருநாளும்பாரோம்
    பாவவினை பற்றறுத்தோர் சிநேகிதங்கள்மறவோம். (4)

ஆயிரம்பேர் சித்தருடன் அநுதினமும்பாடி
    ஆனந்தத் திருநடன மாடிவமேகூடி
தாயியுமை மனோன்மணியாள் எனக்குசொன்னசித்தைத்
    தானறிந்து நடந்துகொள்வோம் பெரியோரையடுத்தே.

நிலையைக்கண்டு கொள்வதற்கு நினைந்துருகிவாடி.
    நிர்மலமா னையன்பதம் நினைந்தினமுந்தேடி.

கலையறிந்து வாசியையுங் கட்டுடனேபிடித்தோம்
கனலெழுப்பி மூலமதைச் சுகமுடனேபடித்தோம். (6)

ஊணுறக்கம் நீக்கியல்லோ யோகநிஷ்டைபுரிந்தோம்
உற்றாரைப் பற்றறுத்து மலைகுகையிலிருந்தோம்
காணுதற்கு மெட்டாத பரவெளியைக்கண்டோம்
கற்பமது சாப்பிட்டு உடல்வளர்த்துக்கொண்டோம். (7)

தந்தைதாயர் சுற்றமொடு தளர்ந்துவுறவாடோம்
தவநிலையைப் பெற்றுணராச் செய்கைதனைத்தேடோம்
சிந்தையுடன் ஞானமதை மேன்பாடாய்த்தெரிந்தோம்
மேலான பரவெளியி னருளதனையறிந்தோம். (8)

நாசிநுனி வழியதனில் நாட்டமதைத்தெரிந்தோம்
நல்லதொரு மூலவட்டம் சுழிமுனையதையறிந்தோம்
வாசியேற்ற வகையறிந்து ஆசைகளையறுப்போம்
வையகத்தின் செய்கைதன்னை வழுவாமல்மறுப்போம்.

சத்திசக்ர பீடமேறிச் சுத்தவெளியைக்கண்டோம்
சகலமும்பரவெளியென் றெண்ணிமனமதனிற்கொண்டோம்
சித்திபெற்ற முத்தர்களை யெத்தினமுமறிவோம்
சிவகலை யின்னதென்று நாட்டமுடன்தெரிவோம். (10)

தொண்ணூற்றாறுதத்துவத்து ரைத்தனங்கைக்கொண்டோம்
துய்யபர வெளிதனிலே அய்யர்பதங்கண்டோம்
விண்ணுலகு இன்னதென்று அறிந்துகொண்டேன்யானே
மேலான பரவெளியி லொளியைக்கண்டுதானே. (11)

நரனென்ற ஆணுவத்தை நயந்தறுத்துவிடுத்தேன்
நன்மைபெற்றுக் குகைதனிலே வாழ்ந்திருக்கவடுத்தேன்
நானென்ற செருவமதைத் தணித்துவிட்டுவந்தோம்
தவமேதான் கெதியென்று சாவழியிலுகந்தோம். (12)

மௌனச்சித்தர் பாடல் முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வாழைக்குளம் வெங்கடாசலமையரவர்களி
டம்வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது



உ

திருச்சிற்றம்பலம்.

இருபத்தி யேழாவது

சூதமகாமுனி திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் 14.

உண்மையெனும் பொருளாய்க்கண் மணியதாகி
 யொளிவாகி மண்ணும்விண் ணொன்றுமாகி
ஒண்மையெனும் சித்தர்முத்தர்க் குரியதாகி
 உற்றசுழி முனையில்முச் சுடருமாகி
வண்மையெனும் ஆதார மூலமாகி
 மாசற்ற பிரணவத்தின் சொரூபமாகி
பெண்மையெனும் வடிவாகிச் சிவனுமாகிப்
 பேரான மௌனகுரு பாதங்காப்பே. (1)

அரிதான மாந்தருக்கு ஞானமார்க்கம்
 அறைகிறேன் நிறைநிறையா யோர்ந்துபாரு
சரியையொன்று படிகடந்தால் கிரியைசேர்க்கும்
 தன்மையாய் கிரியைவிட்டால் யோகமாகும்
விரிவான யோகம்விட்டுச் சென்றால்ஞானம்
 வினையமுடன் கண்டறிந்தால் முத்தியாகும்
தெரிவாய்நீ மெய்ஞ்ஞான போதந்தன்னைச்
 செப்புகிறேன் புலனதனைப் பாதறிற்சேரே. (2)

சேரப்பா கருவான முடியின்மீது
 சென்றேவெண் டாமரையின் பீடங்கண்டு
காரப்பா மனம்வேறு வழிசெல்லாமல்
 கனகமய மானபூ ரணத்தைநாடி
ஆரப்பர் கண்டோர்க்கு மவுனமாச்சு
 அடுத்திடவே யோகமது போதமாச்சு
நேரப்பா தலமெங்கும் வாசிசெல்லும்
 நிலையான நாதவொலி கேட்குந்தானே. (3)

தானான வுருவல்லோ சத்தியாச்சு
　　தனியான வம்பலந்தான் சொரூபமாச்சு
வேனான உருவருவு மற்றதாயி
　　விளங்குகின்ற முச்சுடரின் ரூபமாகி
வானான பரையுடனே சதாசிவன்றான்
　　வானவெளி தனில்வாய்வு வன்னிதோன்றி
தேனான அதிலிருந்து மனந்தான்தோன்றிச்
　　சித்தான அண்டபிண்ட மறிவாய்பாரே. (4)

அறிவல்லோ மெய்ஞ்ஞானக் கருவதாகும்
　　அஞ்ஞானம் தவிர்க்கவென்று லறிவுவேணும்
அறிவாலே சுழிமுனையைக் காணவேணும்
　　அன்னையென்ற வாலைபதம் பணியவேணும்
அறிவாலே குருபதத்தைப் போற்றவேணும்
　　அண்டமுடி மீதிற்சென் றேறவேணும்
அறிவாலே சோதிதனை யறியவேணும்
　　அதன்பின்பு முத்தியென்ற பேச்சுண்டாச்சே. (5)

உண்டான பூமிதான் முகனுமாச்சு
　　உற்றபுனல் விட்டுணுவென் றுறுதியாச்சு
பண்டான அக்கினிசங் காரனுக்கு
　　பலமுடைய வாயுவல்லோ மயேசனுக்கு
கண்டான வெளிசதா சிவனுமாச்சு
　　கருவான பூதமல்லோ வுருவதாச்சு
தொண்டான தொழில்புரிந்தால் பெரியோர்தானும்
　　சூட்சமதைச் சொல்லுதற்கு அஞ்சுவாரே. (6)

அஞ்சுவா ரிதையறியா வீணர்தானும்
　　அநேகசித் தறிவனென வெளிகிளம்பி
பஞ்சபொதி யானதொந்தி வயிர்பிழைக்கப்
　　பாசாங்கு மேசெய்து மயக்கச்செய்வான்
கெஞ்சுவான் பல்லெல்லாம் வெளியேதோணக்
　　கெம்பீர மானசொல்லை நம்பிடாமல்
பிஞ்சுகா யாகிபழுங் கனிரசம்போல்
　　பேதமுள்ள மனத்தையு முருகச்செய்யே. (7)

செய்தபின்பு தனியாய்ப்பூ ரணத்தைப்பாரு
    சேட்டைசெய்யுந் தத்துவங்க ளொடுக்கம்பாரு
உய்யவே மனத்தன்னை யறிவிற்சேரு
    உற்றநின்ற வொளிகாணத் திடந்தான்வேணும்
வையமிசை பிங்கலைதா னிரவியாகும்
    மகத்தான யிடகலையும் மதிதானாகும்
ஐயமொங் காரமதன் மத்திநிற்கும்
    சுத்தகலை யிரண்டொன்றாய்ச் சேரும்போதே. (8)

போதப்பா விட்டகுறை விந்திறலே
    புகழுடைய ஞானம்வந் தெய்தும்பாரு
நீதப்பா மதியமுத மதனையுண்ணு
    நேரான வழியைவிட்டால் வருத்தங்காணும்
ஓதப்பா விண்ணமுதம் விந்தாற்சிந்தும்
    உற்றவிடங் கண்டாலே கிட்டுமப்பா
சேதமதாய்ப் போக்கவிட்டா லொன்றுமில்லை
    திடமாகக் கண்டுண்டு தெளிந்துபாரே. (9)

பாரப்பா மனத்தாலே அறிவிற்கூடப்
    பஞ்சபூ தந்தானுஞ் செளிக்கும்பாரு
சீரப்பா பொய்யைவிட்டு மெய்யைப்பற்றச்
    செங்கதிரோன் மதிகோடி யொளியுமாகும்
நேரப்பா சொல்நிலையும் நினைப்புமற்று
    நிலையான வமுதமது மதியில்வீழும்
சேரப்பா மாளாத வழியிற்சேர்க்கும்
    தியங்காதே பூரணத்தைக் கண்டுசெல்லே. (10)

செல்லப்பா வுரைக்கவொண்ணாச் சொரூபமாகி
    சுத்தமொடு மவுனமா யரூபமாகி
சொல்லப்பா பகலிரவு மற்றதாகி
    துரியாதீ தத்தினிலே நடனமாகி
வல்லதொரு பரையுடனே பரனுமாகி
    மகத்தான நிற்குணமாய் நின்றசத்தி
நில்லப்பா சதாசிவன்று னுலகமாச்சு
    நேரான கருக்குருவைப் பொருதிப்பாரே. (11)

பொருதியதோர் மேகநாதக் குளிகைதன்னைப்
புகழ்ச்சியுடன் உண்டிடலாம் பெரியோர்முன்பு
கருதியதோர் வெண்காரம் சாதிலிங்கம்
கனமான சிவதைவேர் வசம்புசுக்கு
திருதியதோர் இந்துப்பு வாய்விளங்கம்
நேரான ஓமமொடு பெருங்காயந்தான்
விருதியதோர் காட்டாமணக்கன்வேரும்
வினையமுடன் றானெடுப்பாய் பலமொன்றாமே. (12)

பலமொன்றாய்ப் பார்த்தெடுத்துக் கல்வத்திட்டுப்
பண்பான மைபோல அரைத்தெடுத்துப்
பெலமான சாக்கிடைவேர் வாளந்தாக்கிப்
பிரியமுடன் சம்பளத்தின் சாற்றினாலே
கலனைக விடாமலேநன் றாகவாட்டிக்
கண்ணிலிடும் மைபோல வானபின்பு
நலமாக வழித்தெடுத்துக் குன்றியைப்போல்
நயனமென வுருட்டியொரு குழலில்வையே. (13)

குழலில்வைத் தாதிபரை தியானஞ்செய்து
குறிப்பறிந்து குளிகையொன் றிரண்டளிக்க
விழலான குன்மமொடு குளிர்சுரங்கள்
விதிவயிற்றி லேநிற்குந் திரைகள்வாதம்
உழலான பித்தநீர் சோகைப்பாண்டு
உற்றவித க்ஷயரோகம் வயிர்வலித்தல்
தழலான அசீரணம்பல் கனத்தகோவையுந்
தப்பாமல் நீக்கிவிடுந் தனித்துப்பாரே. (14)

சூதமுனிவர் ஞான சூஸ்திரம் 14 முற்றிற்று.

மூன்றாம் பாகம்

சம்பூரணம்.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி பங்காருசாமியார் அவர்கள் குமாரர் சாமியார் குருசாமிநாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

1979

பிள்ளை லோகாசாரியர் அருளிச்செய்த,

ஸ்ரீ வசநபூஷணத்திற்கு

ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

வியாக்கியானத்தைத் தழுவிய

ஸ்ரீ வசனபூஷண ஸாரம்.



இஃது

பெருமாள் கோயில்

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால்,

எழுதப்பெற்று,

ஸ்ரீமான்: சென்னை **M. R.** கோவிந்தஸாமி நாயுடுவால்,

காஞ்சீபுரம்,

குமரன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.



காஞ்சீபுரம்.

1927.

பிரபவஹு ஐப்பசியில் திருவோணம்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

ஸ்ரீமான். M R. கோவிந்தசாமி நாயுடு,

"திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" ஆபீஸ்,

32. பங்கர் தெரு,

C. T. மதராஸ்.

விஜ்ஞாபனம்.



இவ்விருள்தருமாஞாலத்தில் எத்தனையோ ஆசார்யர்கள் திருவவதரித்து எத்தனையோ திவ்யக்ரந்தங்களை அருளிச்செய்திருந்தாலும், நம்பிள்ளை திருவடிகளிலே ஸகல சாஸ்த்ரார்த்தங்களுங் கேட்டுணர்ந்த வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரரும் திருவடியுமான பிள்ளைலோகாசார்யர் திருவாய் மலர்ந்தருளின 'ஸ்ரீவசநபூஷணம்' என்னும் திவ்ய சாஸ்த்ரத்தோடொத்த நூல் அவதரித்ததுமில்லை, அவதரிக்கப்போகிறதுமில்லை.

ஸகல வேதவேதாந்த வேதாங்கங்களினுடையவும் அருளிச் செயல்களினுடையவும் மற்றுமுள்ள ஸ்வரூபபரங்களான நூல்களினுடையவும் ஆழ்பொருளை யறியவேண்டுவார்க்கு இந்த ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரமொன்று தவிர வேறொரு க்ரந்தமும் சரணமன்றென்பது இதில் ஆழ இழிந்து அநுபவிப்பார்க்கு அநாயாஸமாக அறியக்கூடியதாம். "யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத்க்வசித் = யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத் க்வசித்." என்னுமாபோலே, இந்த ஸ்ரீவசநபூஷணத்தில் அடங்கியுள்ள அர்த்தங்களை பாசுரப்பரப்பாலே பிறநூல்களிற் பொலியும்; இதில் இல்லாத அர்த்தம் பிறிதொன்றிலுமில்லை யென்பது திண்ணம்.

ஆகவே, ஸ்ரீவைஷ்ணவர்களாய்ப் பிறந்த அனைவர்க்கும் ரஹஸ்யத்ரயம் போலே இந்த திவ்ய சாஸ்த்ரமும் நித்யாநுஸந்தேயமாயிருக்கும். பொருள் நெஞ்சிற்படாமல் மூலமாத்திரத்தையே முகபாடஞ் செய்துகொண்டாலுமே பரம உத்தாரகமாயிருக்கின்ற இவ்வரிய நூலின் அரிய பெரிய அர்த்தங்களையும் தெரிந்துகொண்டால் இதனில் விஞ்சிய ஆத்மாநந்தம் வேறு இல்லையாம்.

ஸகல சாஸ்த்ரார்த்தங்களும் பொதிந்திருக்கப்பெற்ற இந்த திவ்ய சாஸ்த்ரத்தின் அரும்பொருளை ஸர்வஜ்ஞரான ஸ்ரீ மணவாளமாமுனிகள் தம்முடைய அற்புதமான வியாக்கியானத்திலே விரித்துரைத்தருளியிருந்தாலும், ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸபுராண ப்ரமாணங்களைப் பெரும்பாலும் நிறைத்து ஸம்ஸ்க்ருத வாக்யங்களையும் ஊடேயூடே மிகக்கலசி, சாஸ்த்ரஜ்ஞரல்லாத ஸாமாந்யஞானிகள் அவகாஹிக்க அவகாசமில்லாதபடி பரமகம்பீர சாஸ்த்ர ஸரணியாக அருளிச் செய்யப்பட்ட வியாக்கியானமாயிருக்கையாலே அதைக்கொண்டு காலக்ஷேபம் பண்ணிப் பொருளுணர்வது சிலர்க்கே கூடுமத்தனையன்றி நம்போன்ற மிதஜ்ஞாநிகளுக்குச் சிறிதும் உதவாமையாலே இந்த ஸ்ரீவசநபூஷணத்தின் அரும்பெரும் பொருள்களை நாமெல்லாரும் இழக்கவேண்டியதான குறை இந்நிலத்தில் நெடுநாளாகவே யிருந்துவந்தது.

அக்குறை நீங்குமாறு ஸ்ரீமத் உ. வே வித்வான். பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள், அருளிச்செயல்கள் ஸ்தோத்ர பாடங்கள் முதலியவற்றுக்கு எளிய தெளிய உரை இயற்றியருள்வதுபோலவே இந்த ஸ்ரீவசநபூஷணத்திற்கும் பரம ஸுலபமான உரைபோலுள்ள ஸ்ரீவசநபூஷணஸார மென்னுமிந்நூலை இயற்றியருளினது ஸ்ரீவைஷ்ணவர்களின் பெரும் பாக்கியமேயாம். மேற்குறித்த ஸ்வாமி தமது வாழ்நாட்களை எல்லாம், ஆழ்வார்களருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களுக்கும் பூர்வாசாரியர்களருளிச்செய்த ஸ்தோத்ரங்களுக்கும் ரஹஸ்யக்ரந்தங்களுக்கும் தெளிவுரை யெழுதுவதிலும், மற்றும் லோகோபகாரமான உபயவேதாந்தவித்யாப்ரவசநம் செய்வதிலுமே உத்ஸாஹத்துடன் கழியாநிற்கிற விசேஷத்தை அறியாதாரைக் கேட்டறியோம். ஸ்வாமியின், வடமொழி, தென்மொழி ஞானத்தை யாம் அதிகமாகக் கூற வேண்டியதில்லை. செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவராயிறே அவரிருப்பது. லோகம் உஜ்ஜீவிக்கவேணுமென்ற எண்ணத்துடன், வாழ்ந்துவரும் ஷை ஸ்வாமி "வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்றபடி இவ்விபூதியில் பல்லாண்டு பல்லாண்டாய் வாழவேணுமென்பதே சிறியேனுடைய ப்ரார்த்தனை.

இந்நூல் மிக எளிய நடையில் அமைந்திருந்தாலும் விஷயம் மிகக் கனத்ததாகையாலே விஷயத்தைப்பற்றின கடினத்தன்மை நீக்க முடியாததாகையால் இந்நூலும் சிறிது கடினமாகவே தோற்றுமாயினும், ஸ்வபுத்தியாலே பொருளுணர விரும்பாமல் ஓர் நல்லாசிரியரை யடுத்துக் கேட்டுணர விரும்புமவர்கட்கு இது பேருதவி புரியுமென்பதில் ஐயமில்லை.

இதற்கு மூலமான ஸ்ரீவசநபூஷண ரஹஸ்யத்தையும் இதன் முடிவிலே பதிப்பித்துச் சேர்த்திருக்கு முபகாரமும் மிகப் பெரிதே. இங்ஙனமே மற்றுமுள்ள 'தத்வத்ரயம்' முதலிய முக்கிய ரஹஸ்யங்களின் ஸாரமும் வெளிவருமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கும்

அடியார்க்கடியன்,
கி. திருமலையாசிரியன்
தமிழ்ப் பண்டிதர்
வாணியம்பாடி.

"ஆர்வசன பூடணத்தி னாழ்பொரு ளெல்லாமறிவார்
ஆர்அதுசொல் நேரி லனுட்டிப்பார்?—ஓரொருவ
ருண்டாகி லத்தனைகா ணுள்ளமே, எல்லார்க்கு
மண்டாத தன்றோ வது."

—உபதேசரத்தினமாலை.



ஸ்ரீ:

முகவுரை.



ஸகல வேதங்கட்கும் ஸாரமாகிய திருமந்திரத்தில் உரைக்கப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வம் என்ற மூன்று ஆகாரங்கள் ஆத்மாக்களனைவர்க்கும் பொதுவாகையாலே பரமபதத்தில் நித்ய ஸூரிகளைப்போலே மலர்ந்த ஞானத்தையுடையராய் எம்பெருமானுக்கு * ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னிவழுவிலா வடிமை செய்து *பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியிருக்கவேண்டிய யோக்யதைக்கு இட்டுப்பிறந்து வைத்தும் அநாதியான மாயையினாலே மறைக்கப்பட்டவர்களாய், தேஹாத்ம ப்ரமம் முதலிய அவித்யையினாலே நேர்ந்த புண்ய பாபரூபகர்மங்களுக்கேற்பப் பலவகைப்பட்ட யோநிகளில் மாறி மாறிப் பிறந்து, ஸ்வாதந்திரியம், அந்ய சேஷத்வமாகிற படுகுழியிலே விழுந்து எம்பெருமான் பக்கலில் மிகவும் பராங் முகராய் ஸம்ஸாரத்திலே அழுந்தி அளவற்ற துக்கங்களை அநுபவித்து வருந்தித்திரிகிற ஸம்ஸாரி சேதநரிலே ஆரேனுஞ் சிலர் பகவத் கடாக்ஷத்தாலே † "முக்குணத்திரண்டவை அகற்றி, ஒன்றினிலொன்றி நின்று" மோக்ஷருசியைப் பெற்றாலும், தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்னுமிவற்றை உள்ளபடி அறிந்தே உஜ்ஜீவிக்கவேண்டியிருப்பதால் அவற்றை சாஸ்த்ரங்களாலே அறியப் புகுமளவில், சாஸ்த்ரங்களில் தலையான வேதமானது "அநந்தாவை வேதா:" என்றபடி அளவற்றதாயும், அர்த்த நிர்ணயத்தில் அநேக ஸஹகாரி ஸாபேக்ஷமாயுமிருப்பதால் மந்தமதிகளுக்கு அநதிகாரமாகையாலும், அதற்குமேல் வ்யாஸர் முதலிய முனிவர் இயற்றிய ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராணங்களிலும் ஸாரஸார விவேக சதுரர்கட்கன்றி மற்றையோர்க்குக் கருத்துத்தெரியாமையாலும், ஸர்வேச்வரன் தானே ஆசாரியனாய் நின்று வெளிப்படுத்தின ஸகல வேதஸாரமான ரஹஸ்யத்ரயமும் மிக்க சுருக்கமாகையாலே மிகவும் மறைந்த பொருள்களையுடைத்தாகையாலும், மயர்வற மதிநலமருளப் பெற்று ஸகல சாஸ்த்ரங்களின் கருத்தையும் கைகொள்கனிபோலக் கண்ட ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களும் அற்ப ஞானிகளாலே பொருளுணரக் கூடாதிருக்கையாலும் ருசி பிறந்த சேதநர் இழந்தொழியும்படியிருக்கையாலே ஆழ்வாருடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாற் பெற்ற திவ்யஜ்ஞாநத்தையுடையரான நாதமுனிகள் தொடக்கமாக ஸத்ஸம்ப்ரதாயத்திற் படிந்து ஸகல சாஸ்த்ரங்களிலும் வல்லமை பெற்றுப் பரம தயாளுக்களான பூர்வாசார்யர்கள் அந்த வேதம் முதலியவற்றிலுள்ள பொருள்களைச் சுருக்கி மந்தமதிகளும் எளிதாக உணரும்படி தெளிவாக உபதேசித்து வந்ததுமன்றி ப்ரபந்த மூலமாகவும் வெளியிட்டருளினர்.

---

† ராஜஸ்தமோ குணங்களை விலக்கி ஸத்வ குணத்திலே பொருந்தி நின்று.

அப்படியே, நம்பிள்ளை திருவடிகளில் கலைவரான வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரரான பிள்ளைலோகாசார்யர் ஸம்ஸாரிகளின் இழவை ஹரிக்கமாட்டாத பரம க்ருபையாலே அவர்களை உய்விக்கும்பொருட்டுப் பல ப்ரபந்தங்களை அருளிச்செய்து, ஆசார்ய பரம்பரையாற்பெற்ற அர்த்தங்களில் அவ்வாசார்யர்கள் தாங்கள் கௌரவாதிசயத்தினால் ரஹஸ்யமாக உபதேசித்துக்கொண்டிருந்த மற்றும் பல அர்த்த விசேஷங்களனைத்தையும் ஒரு ப்ரபந்தமாக வெளியிட்டருளவேணுமென்ற திருவுள்ளத்தை ஸ்வப்நத்தில் பேரருளாளனுடைய திருவாணையினாற்பெற்று "ஸ்ரீ வசநபூஷணம்" என்கிற ப்ரபந்த ரத்நத்தை அருளிச் செய்தார்.

ரத்நங்களை நிறைத்துச் சமைத்ததொரு பூஷணத்திற்கு "ரத்நபூஷணம்" என்று பெயராகிறாப்போலே, பூர்வாசார்யர்களுடைய சிறந்த வசநங்களை நிறைத்துச் செய்தருளப்பட்டதாய், அநுஸந்திக்குமவர்களுக்கு அழகுபெறுவிக்குமதாயிருக்கையாலே இதற்கு "ஸ்ரீ வசநபூஷணம்" என்று திருநாமமாயிற்று.

"முன்னங் குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னைமிகக்கொண்டு கற்றோர் தம்முயிர்க்கு—மின்னணியாச்
சேரச் சமைத்தவரே சீர்வசனபூடணமென்
பேரிக்கலைக்கிட்டார் பின்."

என்ற உபதேசரத்தினமாலை காண்க.


இப்ரபந்தம் ஸூத்ரரூபமாய் ப்ரஹ்மஸூத்ரம்போலே ஆழ்ந்தகருத்தையுடைத்தாய் ஒருவர்க்கும் எளிதில் பொருளறியவொண்ணாதபடி யிருந்தமையை நோக்கிப் பரம காருணிகரான மணவாள மாமுனிகள் 'ஸூத்ரத்திற்கு வ்ருத்தி' என்னலாம்படியான ஒரு வியாக்கியானமிட்டருளினார். அதுதான் ஸம்ஸ்க்ருதவாக்ய பாஹுள்யத்தாலும் வ்யாக்யாநகாம்பீர்யத்தாலும் சாஸ்த்ரஜ்ஞாநிகளுக்கன்றி மற்றையோர்க்கு எளிதில் பொருளுணர்த்தவற்றல்லாமையாலே அந்த வியாக்கியானத்தைத்தழுவி ஸாராம்சங்களை எளிய நடையில் தெளிவாக வரையப்புகுகின்றேன்: குற்றங் குறைகளைப் பெரியோர் பொறுத்தருள்வாராக.

இங்ஙனம்:—

ஸ்ரீ வைஷ்ணவதாஸன்,

ப்ர. அண்ணங்கராய தாஸன்.






ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பெருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.







பிள்ளை உலகாசிரியன் திருவடிகளே சரணம்.

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த

ஸ்ரீ வசநபூஷண ஸாரம்.



“ கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தமதாதர்
தீதில் திருமலையாழ்வார் செழுங்குரவை மணவாளர்
ஓதரிய புகழ்நாலூ ருடைய பிரான்தாதருடன்
போத மணவாளமுனி பொன்னடிகள் போற்றுவனே. ”

முதல் ப்ரகரணம்.

ஸூத்ரம்.

1. கர்ம காண்டமென்றும் ப்ரஹ்ம காண்டமென்றும் இரண்டு பாகுபாடுகளையுடைய வேதம் பூர்வ காண்டத்தாலே எம்பெருமானுக்கு ஆராதந ரூபமான கருமங்களின் ஸ்வரூபம், அங்கம், பலன் முதலானவற்றையும், உத்தர காண்டத்தாலே, ஆராதகனுக்கு உரிய அவ்வெம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி முதலியவற்றையுங் கூறுகிறது. ஆகவே வேதத்தின் பொருளாகிய இவற்றை ‡ஐயந்திரிபற நிர்ணயிக்க வேண்டுமானால், மநு, அத்ரி, யாஜ்ஞவல்க்யர் முதலான மஹர்ஷிகளாற் செய்யப்பட்ட தர்ம சாஸ்திரங்களாலும், ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் முதலிய இதிஹா

‡ஸம்சயஜ்ஞானமும் விபரீத ஜ்ஞானமும் இல்லாதபடி.

ஸங்களாலும், ப்ராஹ்மம், பாத்மம், வைஷ்ணவம் முதலான புராணங்களா லுமே நிர்ணயிக்கவுமாயும்.

2. பொருள்வாசியாலே வேதம் இரண்டு பாகமாகப் பிரிவுற்றாற் போல, அதின் உபப்ரும்ஹணமான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுக்கும் அப்பொருள்வாசியாலே இருவகைப்பட்ட பேதங்களுண்டு:— அதாவது ஸ்ம்ருதிகள் கர்மகாண்டத்தை விவரிப்பதற்காகவும் இதிஹாஸ புராணங்கள் ப்ரஹ்ம காண்டத்தை விவரிப்பதற்காகவும் ஏற்பட்டனவாகையால், வேதத் திற் பூர்வகாண்டத்தின் பொருளை ஸ்ம்ருதிகளாலும், உத்தரகாண்டத்தின் பொருளை இதிஹாஸ புராணங்களாலும் நிர்ணயிக்கக்கடவதாம். தர்ம சாஸ்த்ரங்கள் ஆசார வ்யவஹார ப்ராயச்சித்தாதிகளைக் கூறுகின்றமையா லும், இதிஹாஸபுராணங்கள் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபாதிகளைக் கூறுகின்றமையாலும் இந்த நிர்ணயக்ரமம் மிக்க பொருத்தமுடைத்தாம்.

3. ப்ரஹ்மகாண்டத்தை விவரிக்கப் பிறந்த இதிஹாஸ புராணங்கள் இரண்டினுள் புராணத்திற் காட்டில் இதிஹாஸம் ப்ரபலமாகும்; ஏனெனில், இதிஹாஸமானது புராணவிசேஷங்களிலே புகழப்பட்டிருப்பதாலும், ஸகல புராணங்களுக்கும் ப்ரவர்த்தகனான சதுர்முகன் தனக்கு யாதொரு கல்பத் திலே யாதொரு குணம் விஞ்சியிருக்குமோ, அந்த குணத்துக்குத் தக்க தேவதையின் மாஹாத்மியத்தைப் புராணத்திற் கூறுகையாலே 'இல்லாத மஹிமையை ஏறிட்டுச் சொல்லுகின்றன.' என்னும்படி பக்ஷபாதிகளா யிருக்கும் புராணங்கள் போலன்றி, லௌகிகமாயும் வைதிகமாயுமுள்ள எல்லாப்பொருள்களின் நிர்ணயத்திலும் இதிஹாஸம் நிஷ்பக்ஷபாதமாய் அதிகரிக்கின்றமையாலும், மற்றுஞ்சில காரணங்களாலுமாம்.

4. இப்படி புராணத்திற் காட்டில் இதிஹாஸம் ப்ரபலமாகையால் தான், * "அப்யர்ஹிதம் பூர்வம்" [சிறந்ததை முற்கூறுவது] என்ற விதிப் படி (க) "இதிஹாஸ புராணங்களாலே" என்று இதிஹாஸம் முற்படக் கூறப்பெற்றது. இங்ஙனன்றாகில் †வியாகரண விதிப்படி "புராணேதிஹா ஸங்களாலே" என்று கூறவேண்டியதாமெனக்கொள்க.

5. வேதத்தின் உத்தரபாகத்திற்கு உபப்ரும்ஹணமான இதிஹாஸ புராணங்களுள் பிரபலமான இதிஹாஸங்களுக்குள் ஸ்ரீராமாயணம் சிறந்த தாகும்; அது தேவமாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்த க்ருபாபரவசையான பிராட்டியின் ஏற்றத்தைச் சொல்லுகின் றது. ஸாக்ஷாத் பகவதவதாரமான ஸ்ரீ வேதவ்யாஸராலே அருளிச்செய் யப்பட்ட மஹாபாரதம் பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலைகட்டித்

---

*பாணிநிவ்யாகரண ஸூத்ரம (க) ஸ்ரீ வசநபூஷணம்—முதல் ஸூத்ரம்.

†"அல்பாச் தரம் பூர்வம்" என்பது வியாகரணவிதி, அச்செழுத்துக்கள் எந் தப்பதத்தில் ஸ்வல்பமாயிருக்கின்றனவோ, அப்பதம் ஸமாஸத்தில் முன்னே ப்ர யோகிக்கப்படவேண்டும் என்பது இதன் கருத்து.

தூதுபோன ஆச்ரித பாதந்த்ரனை எம்பெருமானுடைய ஏற்றத்தைச் சொல்லாநிற்கும்.

6. ஆக, இவ்விதிஹாஸங்களிரண்டாலும்- குற்றமே வடிவான சேதநர்களை, எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காக்கி அங்கீகரிப்பிக்கின்ற புருஷகார பூதையான பிராட்டியின் வைபவமும், அப்பிராட்டியாலே சேர்விக்கப்பட்ட சேதநர்களை அங்கீகரித்து ரக்ஷிக்குநளவல்ல உபாய பூதனை எம்பெருமானுடைய வைபவமும் சொல்லப்பட்டதாயிற்று.

7. புருஷகாரமாமளவில்-க்ருபை, பாரதந்திரியம், அநந்யார்ஹத்வம் என்ற இம்மூன்று குணங்களும் வேணும். (ஏனெனில்) க்ருபையாவது-பிறர்படும் துக்கத்தைப் பொறுக்கமாட்டாமை; சேதநர் ஸம்ஸாரத்திற் படுகிற துக்கத்தைக்கண்டு பொறுக்கமாட்டாமல் எம்பெருமானோடு இவர்களைச் சேர்ப்பதற்கு உறுப்பான முயற்சிபண்ணுவதற்கு க்ருபை வேணும்; பாரதந்திரியமாவது பரம புருஷனுக்கு உரிமைப் படுகை; ஸ்வதந்த்ரனை அவனை அநுவர்த்தித்து வசப்படுத்த வேண்டியிருப்பதால் பாரதந்திரியம் வேணும். இனி அநந்யார்ஹசேஷத்வமாவது அவனுக்கன்றி மற்றொருவனுக்கும் உரிமைப்படாதொழிகை; பிராட்டி எம்பெருமானிடத்திற் சென்று "இந்த சேதநனை நீ அங்கீகரிக்கவேணும்." என்றால், "இவள் நம்மைத்தவிர வேறொரு விஷயத்துக்கு சேஷப்படாமல் நமக்கே அதிசயத்தை விளைவிக்குமவளாகையாலே நம்முடைய காரியத்தையன்றோ இவள் சொல்லுகிறாள்" என்று அவன் நினைத்து, அவள் சொன்னபடி செய்கைக்குறுப்பாக அநந்யார்ஹத்வமும் வேண்டுமாயிற்று. ஆகையால் இம்மூன்று குணங்களும் புருஷகாரத்வத்திற்கு இன்றியமையாதனவாம்.

8. இம்மூன்று குணங்களும் புருஷகாரபூதையான பிராட்டிபக்கல் இருக்கும்படியை நாம் அறிவதெப்படி? என்னில், பிராட்டி தன் நாயகனை ஸர்வேச்வரனுடைய அந்தந்த அவதாரங்கட்குத் தகுதியாக உடலெடுத்து வந்து அவதரிப்பாளாகையாலே, அவன் சக்ரவர்த்தித் திருமகனானவாறே தான் ஜநகராஜன் திருமகளாய் அவதரித்து அப்பெருமானை மூன்றுதடவை பிரிந்து இம்மூன்று குணங்களையும் வெளிப்படுத்தினளாதலால் அது கொண்டு அறியலாம். எப்பிரிவில் எக்குணம் வெளியாயிற்றென்னில், பெருமாளுடனே காட்டுக்குப் பின்சென்று தண்டகாரண்யத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே 'இராவணன் பிரித்தான்' என்றொரு வ்யாஜத்தாலே முதலில் பெருமானைப்பிரிந்து இலங்கைக்கு எழுந்தருளினவிடத்து க்ருபை வெளியாயிற்று; தேவமாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தமையாலும், அச்சிறையிருப்பிலே தன்னை இரவும் பகலும் ஹிம்ஸித்த ராக்ஷஸிகள், இராவணன் தோல்வியடைந்ததாகவும் பெருமாள் வெற்றி பெற்றதாகவும் 'த்ரிஜடை' என்பவள் கனக்கண்டமைபற்றி மிகவு மஞ்சி நடுங்குகிறவளவில், பிராட்டி அவர்களை நோக்கி 'நானிருக்க நீங்கள்

அஞ்சவேன்? அஞ்ச வேண்டா' என்று அபயப்ரதாநம் பண்ணினமையாலும், இந்த வெறும்வாய்ச்சொல்லாய் ஒழியாமல், இராவண ஸம்ஹாரத்திற்குப்பின் தனக்கு சோபநஞ்சொல்லவந்த திருவடி 'ஸீதே! இந்த ராக்ஷஸிகளை நான் சித்ரவதம் பண்ணும்படி காட்டித்தரவேணும்' என்ன, அவனோடே மன்றாடி அவ்வரக்கிகளின் குற்றத்தை நற்றமாக உபபாதித்தும், "பிறர்படும் ஹிம்ஸையைக்கண்டு பொறுத்திருக்கும்படியான மனக்கொடுமை எனக்கில்லை" என்று சொல்லி இவர்கள் திறத்தில் நீ பூர்ண க்ருபை பண்ணவேணும், என்று வேண்டியும் இப்படி ஒருநிலை நின்று அவர்களைக் காத்தருளினமையாலும் க்ருபாகுணம் விளங்கிற்று. இக்குணத்தை வெளியிடுவதற்காகவேயன்றோ முதலில் பிராட்டி பெருமாளைப் பிரிந்தது.

இனி, இரண்டாவது பிரிவாவது ராவணவதத்திற்குப் பின்பு மீண்டு பெருமாளுடனே கூடித் திருவயோத்திகர்க்கு எழுந்தருளித் * திருவயிறு வாய்த்திருக்கிற காலத்திலே, 'உனக்கு என்ன விருப்பம்?' என்று பெருமாள்கேட்டருள, 'மீண்டும் காட்டு நிலங்களிலே மஹர்ஷிகளின் பாதமூலங்களில் வஸிக்க விரும்புகிறேன்' என்று சொல்ல, அந்த விருப்பத்தையே வ்யாஜமாகக் கொண்டு லோகாபவாத பரிஹாரத்திற்காகப் பெருமாள் அவளைக்காட்டிற்குப் போகவிட அப்போது பிரிந்தது. இப்பிரிவுக்குப் பயன் பெருமாள் தன்னை அந்த:புரத்திலே வைத்த போதோடும் காட்டிலே விட்ட போதோடும் வாசியின்றி அவருடைய திருவுள்ளத்தையே பின்செல்ல வேண்டும்படியான பாரதந்திரியத்தை வெளியிடுதலாம். பெருமாள் நியமநத்தின்படி இளையபெருமாள் பிராட்டியைத்தேரேற்றிக் கொண்டுபோய்க் கங்கைக்கரை ஏறினபின் பிராட்டியைக் காட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்த நிமித்தத்தை மிக்க பரிதாபத்துடனே விண்ணப்பஞ்செய்ய, பிராட்டி அதைக்கேட்டுக் கதறி அழுது, "லக்ஷ்மணா' இது எனக்குப் பொறுக்கத்தக்க துயரமன்று; யான் இப்பொழுதே இக்கங்கையில் விழுந்து உயிரை ஒழித்துவிடலாம்; அங்ஙனஞ் செய்வேனாயின் அது மஹாகுலப்ரஸூதரான பெருமாளுக்கு ஒரு பெரிய பழிப்பாகும்; [கர்ப்பிணியான நான் இப்பொழுதே உயிரைத்துறந்தேனாகில் ஸந்தாநமே நசித்துவிடும்; இரகுவம்சம்பாழாம்; ப்ரஸவித்தபின் முடிந்தேனாகில், 'குற்றமுள்ளவளாகையாலன்றோ தன்னைத் தானே முடித்துக்கொண்டாள்' என்று உலகம் கோஷிக்க, குற்றமும் திண்ணிதாக, பிறந்த ஸந்தாநமும் ரகுகுலத்தில் அந்வயமற்றொழியும்: 'பெருமாள் ஸ்த்ரீஹத்திசெய்தார்' என்கிற அபகீர்த்தியும்பாவமும்]' என்றிப்படி பலவாறாகச்சொல்லி, உயிரைவிட வேண்டியஸமயத்தும் அது செய்யமாட்டாமல் பெருமாள்நினைவைப் பின்சென்று தன்உயிரை நோக்கிக்கொண்டிருக்கும்படியான பாரதந்திரியமன்றோ இப்பிரிவில் நன்கு வெளியாயிற்று.

* கர்ப்பிணியாயிருக்கை.

ஆகவே, இக்குணத்தை வெளியிடுவதற்காகவாயிற்று இப்பிரிவு.

இனி, மூன்றும் பிரிவாவது மறுபடியும் பிராட்டி பெருமாள் ஸந்நிதியிலே வந்திருக்கச்செய்தே பிரிந்து †பிறந்தகத்திலே புகுந்துவிட்டதாம். இப்பிரிவுக்குப் பயன் அநந்யார்ஹத்வமாகிய குணத்தை ஸர்வஸம்மதமாம்படி ப்ரகாசப்படுத்துகையாம். பெருமாள் அச்வமேதம் செய்தருளாநிற்க, வால்மீகி மஹரிஷியின் நியமனத்தாலே குசலவர்கள் வந்து ஸ்ரீராமாயணத்தைப்பாடிக்கொண்டு திரியாநிற்க, அதனைப்பெருமாள் கேட்டருளி அவர்களைக்கிட்ட அழைத்து ஒரு பெரிய பண்டித ஸபைசேர்த்துஅப்பிள்ளைகளைப் பாடச்சொல்லி, பாட்டுக்கேளாநின்றவளவிலே அவர்களைப் பிராட்டியின் பிள்ளைகளாக அறிந்ததும் பிராட்டி பக்கலிலே திருவுளஞ்சென்று, உடனே சிலதூதர்களை அழைத்து 'நீங்கள் வால்மீகிபகவானுடைய ஸந்நிதிக்குச்சென்று "ஸீதை குற்றமற்ற நல்லொழுக்க முடையவளாயின் அம்முனிவரது அநுமதிபெற்று இம்மஹாஸபையில் வந்து அனைவர்க்கும் நம்பிக்கை உண்டாகும்படி அவள், தான் மிகப்பரிசுத்தமானவளென்று ப்ரமாணஞ்செய்யக்கடவள்" என்று யான் சொன்னதாக அவரிடமறிவித்துவாருங்கள்' என்று சொல்லி முனிவர்க்கும் பிராட்டிக்கும் அறிவிப்பிக்க, அப்படியே பிராட்டி அம்முனிவரை முன்னிட்டுக்கொண்டு அந்த மஹாஸதஸ்ஸிலேவந்து ஒடுங்கி நிற்க, ஸ்ரீவால்மீகிமுனிவர் இவள் கல்மஷமற்றவள் என்பதைப் பலமுகமாகச்சொல்ல, அதுகேட்ட பெருமாள் 'அது நானுமறிவேன்; மஹர்ஷிசொன்னதுவே போதும்; ஆயினும் லோகாபவாதம் நீங்குமாறு இத்திரளிலே ஒரு ப்ரமாணங்காட்டவேணும்' என்று திருவுள்ளமானமையால், பிராட்டி கையுமஞ்ஜலியுமாய்க் கவிழ்தலையிட்டுக்கொண்டுநின்று, "அடியேன் பெருமானையன்றி மற்றெவரையும் மனத்தினாலுஞ் சிந்தியாதவளாயின் இப்பூமிப்பிராட்டி எனக்கு இடங்கொடுக்கக்கடவள்" என்றிப்படி பலவாறுகச்சொல்லி சபதம் பண்ண, அவ்வளவிலே பூமியினின்றும் ஓர் திவ்ய ஸிம்ஹாஸநம் வந்துதோன்ற, அதிலே ஸ்ரீபூமிப்பிராட்டி இவளை இரண்டு கையாலுமெடுத்துக் கொண்டுபோய் வைக்க, அவ்வாஸநத்தில் வீற்றிருந்தவாறே பிராட்டி பூதலத்தினுள் பிரவேசிக்க, அதுகண்டு விண்ணவர்கள் பிராட்டியின்மீது பூமாரிபொழிந்து புகழ்ந்தனர் என்று (உத்தர ஸ்ரீ ராமாயணத்தில்) சொல்லுகையாலே இப்பிரிவில் அநந்யார்ஹத்வம் ப்ரகாசமாயிற்று. இக்குணத்தை வெளியிடுவதற்காக வாயிற்று இப்பிரிவு. இப்படி இம்மூன்று பிரிவும் இம்மூன்று குணங்களை வெளியிடுதற்காக வன்றாகில் அபாயமற்றவளாய்க் கருமங்களுக்கு வசப்படாதவளான பிராட்டிக்கு, கர்மவச்யர்க்குப்போலே இப்படி பிரிவு வரக்கூடாதென்க.

---

† பிராட்டிக்குப்பிறந்தகம்—பூமி

9. இப்படிப்பட்ட குணங்களோடு கூடிய பிராட்டியின் புருஷகாரத்வம் எங்கே தோற்றுமென்னில், அது இவளுக்கு அவனோடு கூடியிருக்கும் தசையிலும் நீங்கியிருக்கும் தசையிலும் விளங்கும். ஸம்ச்லேஷதசையில் விளங்கினவாறு யாதெனில்:— பெருமாள் காட்டுக்கு எழுந்தருளுகிற போது இளையபெருமாளை நிறுத்திப்போவதாகக் கருதின வளவிலே 'என்னையுங்கூடக்கொண்டுபோக வேண்டு' மென்று அவர் சரணம் புகுந்து இஷ்டஸித்தி பெற்றது பிராட்டியை முன்னிட்டாதலாலும்; பிறகு பஞ்சவடியிலெழுந்தருளின போது பெருமாள் இளையபெருமாளை நோக்கி "நீர்நிழல் வாய்ந்த ஒரு இடத்தைப்பார்த்துப் பர்ணசாலை அமையும்" என்றருளிச் செய்ய, அது கேட்ட இளையபெருமாள் "ஓ! நம்தலையிலே ஸ்வாதந்திரியத்தை வைக்கபோதே பெருமாள் நம்மைக் கைவிட்டாராம்" என்று தளர்ந்து தம்முடைய பாரதந்திரியத்தைப் பெறுகைக்காகக் கைகூப்பி நின்று ப்ரார்த்திக்கும்போது பிராட்டியைப் புருஷகாரமாக முன்னிட்டுத் தம் அபேக்ஷிதத்தைப் பெறுகையாலும்; மஹாபராதியான காகாஸுரன்மேற் சீறிப் பெருமாள் அவன் தலையை அறுப்பதாக ப்ரஹ்மாஸ்த்ரத்தைத் தொடுத்து விட, அவன் எங்குஞ் சுற்றித்திரிந்த விடத்திலும் ஒரு புகலிட மில்லாமையாலே கதியற்றுச் சரணம்புக, பிராட்டி புருஷகாரமாகப் பெருமாள் அவனை ரக்ஷிக்கையாலும்-இவற்றால் ஸம்ச்லேஷதசையில் புருஷகாரத்வம் விளங்கினபடி கூறிற்றாயிற்று. இனி அது விச்லேஷதசையில் விளங்கினவாறு யாதெனில், பிராட்டி அசோகவனத்தில் சிறைப்பட்டிருக்கும்போது விபரீத புத்தியையுடைய ராவணனைப் பெருமாள்திருவடிகளிலே சேர்ப்பதற்குப் பலவாறு உபதேசங்கள் பண்ணி உபாயங்களைச் சிந்திக்கையாலும், ராவணவதத்திற்குப் பின்பு ராக்ஷஸிகளைச் சித்ரவதம் பண்ணுவதாக முயன்ற திருவடியைக்குறித்து இரங்கத்தக்கவார்த்தைகளைச் சொல்லி அவ்வரக்கிகளின் குற்றங்களைப் பொறுப்பிக்கையாலும்-இவற்றால் விச்லேஷதசையிற் புருஷகாரத்வம் விளங்கியவாறு கூறிற்றாயிற்று. இப்படி இரண்டு தசையிலும் இவள் புருஷகாரத்வம் தோற்றுகின்றது.

10. இவ்விரண்டுதசையிலும் பிராட்டி தன் புருஷகாரத்வத்தைச் செலுத்தும்விதம் யாதெனில்; ஈச்வரன் சேதநருடைய குற்றங்குறைகளையே பார்த்துச்சீறி அவர்களைப் படுகுழியிலே தள்ளவேணுமென்றிருக்கும் நிலைமையைக்குலைத்து அவர்களை அங்கீகரித்துக்கொள்ளும்படியாக ஸம்ச்லேஷதசையில் எம்பெருமானைத்திருத்துவள். ஈச்வரன் அங்கீகரிப்பதற்கு ஆள்தேடித் திரியாநிற்க, இச் சேதநன் கர்மாநுகுணமாகப் பராங்முகனாயிருக்குமளவில் அந்த நிலைமையை மாற்றி ஆச்ரயணத்திலே ருசி பிறக்கும்படி விச்லேஷதசையில் சேதநனைத்திருத்துவள்.

11. இப்படி பிராட்டி, ஈச்வரசேதநர்கள் இருவரையும் திருத்துவது எவ்வழியாலே யென்னில்:—

இருவரையும் உபதேசத்தாலே திருத்துவள். ஈச்வரனை உபதேசத்தாலே திருத்தும் வழியாவது— "இச்சேதநனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு நீர் இப்படி தள்ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறொரு போக்கிடமுண்டோ? உமக்கும் இவனுக்குமுள்ள ஸம்பந்தம் ‡கடப்ராஹாரம் பண்ணினாலும் ஒழியாததொன்றன்றோ? இவனைப் பெறுகை உம்முடைய பேறன்றோ? 'நம்வலையில் யார் அகப்படுவார்' என்று தேடித்திரிகிற உமக்கு நான் சொல்லவேணுமோ? 'ரக்ஷிக்கவேணும் ஸ்வாமி!' என்றுவந்தவிவனை ரக்ஷியாவிடில் உம்முடைய ஸர்வரக்ஷகத்வ பட்டம் என்னாகும்? 'நெடுநாளாக சாஸ்த்ரவரம்புகளைக்கடந்து பெருங்குற்றவாளனாய்த் திரிந்த இவனைத் தக்கபடி தண்டியாமல் இன்று கைப்பற்றினால் சாஸ்த்ரமர்யாதை கெடும்' என்று திருவுள்ளமாகில், அதுகொண்டு இவனை ரக்ஷியாமல் தண்டித்துவிட்டால் உம்முடைய க்ருபை முதலிய குணங்களுக்கு எள்ளுந் தண்ணீரும் விட வேண்டியதாகுமன்றோ? பராங்முகராய்த் திரிகின்றவர்களிடத்தில் சிக்ஷா சாஸ்த்ர விதியையும், அபிமுகரான சேதநரிடத்தில் க்ருபாதிகுணங்களையுஞ் செலுத்தினீராகில் மிக்க பொருத்தமாயிருக்கும்; ஆனபின்பு இவனைக் கடுகக் காத்தருளீர்" என்பதாம்.

இனி, சேதநனை உபதேசத்தாலே திருத்தும் வழியாவது "உனக்கு எங்கும் காலூன்ற இடமில்லை; ஈச்வரன் ஸ்வதந்த்ராஜ்ஞையால் அவன் உன் குற்றங்களை ஒன்றுவிடாமற் கணக்கிட்டுக் குற்றங்கட்குத்தக்கபடி தண்டிப்பான்; இந்த அநர்த்தத்தை நீ தப்பவேண்டில் அவன் திருவடிகளிற்சென்று தலை சாய்க்கையொழிய வேறு வழியில்லை. 'குற்றம் நிறைந்தவென்னை அவன் கைப்பற்றுவானோ? தண்டிக்கமாட்டானோ?' என்று அஞ்சவேண்டா; சிறிது வணங்கினவாறே குற்றங்களனைத்தையும் பொறுத்துக்கொள்ளுவதற்கும் போக்யமாகக்கொள்வதற்கும் ஈடான கல்யாண குணங்களால் பரிபூர்ணனென்று ப்ரஸித்தனாயிருப்பானொருவனன்றோ ஈச்வரன்; ஆனபின்பு, நீ சுகமாகவாழவேண்டில் அவன் திருவடியைச் சென்றுசேர்" என்பதாம்.

12. இவ்வுபதேசத்தால் சேதநனிடத்தும் ஈச்வரனிடத்தும் பலிக்கும் அம்சம் யாதெனில்; புண்ணியபாபங்களாகிற ஊழ்வினைகட்கு வசப்பட்டு ஈச்வரவிமுகனாய்த்திரிகையாகிற சேதநனுடைய கர்மபாரதந்திரியமும், இவன் பண்ணின கருமத்தையே முக்கியமாக்கி அதற்குத் தக்கவாறாகவே செய்வேன்" என்று சேதநரக்ஷணத்தில் விமுகனாயிருக்கையாகிற ஈச்வரனுடைய கர்மபாரதந்திரியமும் ஒழியும். [பிராட்டியின் உபதேசத்தைப் பெற்றபின் சேதநன் கர்மங்களுக்கு வசப்படமாட்டான், ஈச்வரனும் சேதநனுடைய கருமங்களை ஒரு பொருளாக மதியான் என்றபடி.]

‡ இஃது உறவையறுத்துக்கொள்வதற்காகச் செய்யவேண்டும்படி சாஸ்தரங்களில் ஏறபட்ட கருமம்.

13. இப்படிப்பட்ட பலன் இவ்வுபதேசத்தாலே நேராவிடில் பிறகு பிராட்டி என் செய்வாளென்னில்; உபதேசத்தாலே சேதநன் திருந்தாமற் போவதற்குக் காரணம்-அநாதிநார்வாஸனை; ஈச்வரன் மீளாமைக்குக் காரணம்-கேட்பாரற்ற ஸ்வாதந்த்ரியம்; இவ்விரண்டும் பிராட்டியின் உபதேசத்தாலே நிவர்த்தியாதொழியில், "ஐயோ! இவனுடைய துர்ப்புத்தி நீங்கி அநுகூலபுத்தி உண்டாகவேணும்" என்று சேதநன்திறத்தில் தான் பண்ணுகிற பாபநிருபையாலே அவனைத் திமனங்கெடுத்து வழிப்படுத்துவள்; ஆகையாலே சேதநனை அருளாலே திருத்துவள்:— ஈச்வரனை அழகாலே திருத்துவள்; (அதாவது-) சேதநன் குற்றங்களைப் பாராமல் அவனை அங்கீகரிக்க வேணுமென்று பிராட்டியின் வார்த்தையைக் கேட்ட ஈச்வரன் "ஆமாம் போ, உனக்கு வேறு வேலையென்ன?" என்று அவளுடைய உபதேசத்தை உதறினவாறே, கண்ணைப் புரட்டிக் கச்சைநெகிழ்த்தித் தன் அழகாலே அவனைப் பிச்சேறும்படி பண்ணி, தான் சொன்னபடி செய்தன்றி நிற்கமாட்டாதபடி பண்ணி அங்கீகரிக்கச்செய்வள். ... ...*

உபாய வைபவம்.

14. ஆக இப்படி ஸ்ரீராமாயணத்தில் புருஷகார வைபவஞ் சொல்லப்பட்டாற்போல மஹாபாரதத்தால் உபாய வைபவஞ் சொல்லப்பட்டிருக்கிறது. எங்ஙனே யென்னில்; ப்ரக்ருத்யாத்ம விவேகம், ஆத்மபரமாத்ம விவேகமாகிற தத்வவிவேகம் முதலாக ப்ரபத்திபர்யந்தமாக அர்ஜுநனுக்கு முன்பு தெரியாதிருந்த அர்த்தங்களையெல்லாம் கண்ணபிரான் தான் அறிவித்தமையாலே ஆசார்யன்தொழிலையும், அவனை விஷயீகரிக்குமளவில் புருஷகாரத்திற்காகப் பிராட்டியைத் தேடி ஓடவேண்டாதபடி இவனுடைய அபராத நிமித்தமான திருவுள்ளக் கலக்கத்தையும் தானே தணித்துக் கொண்டு இவனைச்சேர்த்துக்கொள்ளுகையாலே புருஷகாரத்தின் தொழிலையும், "நீயே எனக்கு உபாயமாகவேணும்" என்று இவன் வேண்டினால் பின்பு தான் காரியம் செய்யவமைந்திருக்க, 'நாமே இவனுக்கு உபாயமாய் நின்று அநிஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களைத் தரக்கடவோம்' என்று தானே என்றுகொண்டு 'மாமேகம் சரணம் வ்ரஜ-ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி' என்று அருளிச்செய்கையாலே உபாயக்ருத்யத்தையும் எம்பெருமான் தானே ஏறிட்டுக்கொண்டமையைச் சொல்லுகையாலே மஹாபாரதத்தால் உபாய வைபவம் சொல்லிற்றாயிற்று. ஆசாரியன் அறியாதவற்றை அறிவிக்கவும் பிராட்டி புருஷகாரஞ் செய்யவும் பெற்று, தன்னை வந்து பற்றுமவனுக்குத் தான் காரியஞ் செய்யவேண்டியிருக்க, இவை எல்லாவற்றையும் தானே ஏறிட்டுக்கொண்டது வைபவமன்றோ?

15. புருஷகாரத்துக்கும் உபாயத்துக்கும் வைபவமானது-சாஸ்த்ரங்களில் 'செய்யேல்' என்று விலக்கப்பட்ட காரியங்களைச் செய்கையாகிற

தோஷத்தையும், 'செய்' என்று விதிக்கப்பட்ட காரியங்களைச் செய்யாமை யாகிற குணஹாநியையும் சேதநனிடத்தில் பார்த்து, 'இவற்றைப் பொறுக்க மாட்டேன், உன்னை நரகங்களில் தள்ளுவேன்' என்று சீறி உபேக்ஷியாமல் தயை, க்ஷாந்தி முதலிய குணங்களால் அவனை அங்கீகரிப்பது வைபவமன்று. அப்படி அவனை அங்கீகரிப்பதற்கு அந்த தோஷத்தையும் குணஹாநியை யுமே உபஹாரமாகக்கொண்டு வாத்ஸல்ய குணத்தை விளங்கச்செய்வதே வைபவமாம்.

16. இப்படி தோஷமும் குணஹாநியும் கழிவதற்கு முன்னே அங்கீ கரிப்பதேன்? 'அவை கழிந்தால்தான் அங்கீகரிப்போம்' என்றிருந்தா லென்னை? எனில்; புருஷகாரமும் உபாயமுமான இரண்டு தத்துவமும் சேதநனை அங்கீகரிக்கும்போதைக்கு 'இவனுடைய தோஷ-குணஹாநிக ளிரண்டும் கழிந்த பிறகுதான் கைக்கொள்ளக்கூடு' மென்று நினைத்து ஆச் ரயண ருசியுடையவிவனை அங்கீகரியாதொழியில் அந்தப் புருஷகாரத்துக்கு முபாயத்துக்கும் தோஷகுணஹாநிகளிரண்டும் வரும்; ஸகல சேதநர்க் கும் இவர்கள் தாயும் தகப்பனுமாயிருக்கையாலே இச்சேதநனுடைய நன்மை தீமைகளிரண்டும் தங்களுடையதாம்படியான உறவு இருக்க, இச் சேதநனுடைய குற்றம் குறைகளைப்பார்த்து அங்கீகரியாமையாலே அப்படிப் பட்ட ஒழிக்க வொழியாத உறவுக்குக் கெடுதி விளைகை-தோஷம். இவனு டைய துயர் கண்டு இரங்காமையாலும், குற்றத்தை நற்றமாகக் கொள்ளா மையாலும் க்ருபா வாத்ஸல்யங்களுக்குக் கெடுதி விளைகை-குணஹாநி.

இத்தோஷ குணஹாநிகளை இங்ஙனன்றி வேறொரு வகையாகவும் உபபாதிக்கலாம். (அதாவது) தோஷமாவது—அக்ருத்யஞ்செய்கை; குண ஹாநியாவது-க்ருத்யத்தைச் செய்யாமை. புருஷகாரத்திற்கு அக்ருத்யஞ் செய்கையாவது-எம்பெருமானையுங்கூட சேதநன் விஷயத்தில் குற்றங்காண வொட்டாத தான் 'குற்றம் முதலியவை குலைந்தாலொழிய அங்கீகரிக்க மாட்டேன்' என்றிருக்கை. க்ருத்யம் செய்யாமையாவது—இவனுடைய தோஷாதிகளைப் பாராமல் கைக்கொண்டு ஈச்வரனோடு சேர்ப்பிக்கையாகிற தன் காரியத்தைச் செய்யாமை. இனி, ஈச்வரனுக்கு அக்ருத்யஞ்செய்கை யாவது-ஸம்ஸாரிசேதநனுடைய குறைகளைப் பார்த்துக் கைவிடாமல் இயற்கையான உறவு முறையே காரணமாக எல்லா நன்மைகளையுஞ் செய் வதற்கு * எதிர் சூழல் புக்குத்திரிகிற ஸர்வபூதஸுஹ்ருத்தான் தான் இச் சேதநனை அங்கீகரிக்குமளவில் 'இவன் குறைகள் குலைந்தாலொழிய அங்கீ கரிக்க மாட்டேன்' என்றிருக்கை. க்ருத்யஞ் செய்யாமையாவது-இவனு டைய குறைகளைப் பாராமல் கைக்கொண்டு தான் செய்யவேண்டிய ரக்ஷ ணத்தைச் செய்யாமை.

[திவ்ய தம்பதிகளிருவர்க்கும் இப்படி உபபாதித்த தோஷகுண ஹாநிகள் சாஸ்த்ரத்தை அவலம்பித்துச் சொல்லுகிறவையல்ல; இவர்களுடைய ஸ்வபாவத்தை அவலம்பித்துச் சொல்லுகிறவை எனக் கொள்க.]

17. இப்படிப்பட்ட தோஷகுணஹாநிகள் வாராமைக்காகப் பிராட்டியும் பெருமாளும் சேதநனை அங்கீகரித்தபின், "ஓ! இத்தனை நாளும் நம்மை அங்கீகரியாது விட்டவர்கள் இன்று அங்கீகரித்தது—நம்முடைய தோஷாதிகள் கழிந்தமையாலன்றோ, ஆகையால் அவை நமக்கில்லை" என்று அச்சேதநன் நினைத்தால், அவனுக்கு க்ருத்யாகரணமும், அக்ருத்ய கரணமுமாகிற தோஷ குணஹாநிகள் ஸம்பவித்துவிடும். "நெடுநாள் நம்மை உபேக்ஷித்தவர்கள் இன்று கைகப்பற்றியது நம்முடைய தோஷ குணஹாநிகளிரண்டும் குலைந்தமைபற்றியன்றோ?" என்று தப்பாக நினைக்கை அக்ருத்யகரணம். "நீசனேன் நிறையொன்றுமிலேன்" இத்யாதிகளிற்படியே தன்னுடைய நைச்யாநுஸந்தாநத்தையும், அவர்களின் குண கௌரவத்தையும் உள் கனிந்து அநுஸந்திக்கவேண்டியது க்ருத்யமாயிருக்க, அத்தைச் செய்யாமை-க்ருத்யாகரணம்.

18. ‡புருஷகாரமும் உபாயமும் இப்படி தோஷாதிகளையே உபஹாரமாகக்கொண்டு அங்கீகரித்த விடமுண்டோவென்னில்; உண்டு. ஏகாக்ஷி, ஏககர்ணி முதலான எழுநூறு ராக்ஷஸிகளும் பாஹிம்ஸையே ஜீவநமாம்படி இயற்கைப் பாவியர்களாய், பத்து மாதம் பிராட்டியை அஸஹ்யமாக ஹிம்ஸித்தவர்களென்பதை ஸ்ரீ ராமாயணம் நடையாடுகிற தேசத்தில் அறியாதாரில்லை; இப்படிப்பட்ட பாவிகளைக் குறித்துக் குற்றத்தையே நற்றமாக உபபாதித்துச் சிறிய திருவடியோடே மன்றாடி ரக்ஷித்தாளாகையாலே, தோஷமே பச்சையாக அங்கீகரித்தமைக்கு இதொன்று போராதோ? (இது புருஷகாரத்தின் அங்கீகாரத்திற்கு நிதர்சநம்.)

19. (இனி உபாயத்தின் அங்கீகாரத்திற்கு நிதர்சநம்.) அர்ஜுநனுடைய தோஷங்களைப் பச்சையாகக் கொண்டு அவனை அங்கீகரித்தருளியது மஹாபாரதத்தில் ப்ரஸித்தம். இப்படி அர்ஜுநனை துஷ்டனென்னலாமோ? அழகிற் சிறந்த ஊர்வசி தானே வந்து மேல்விழச் செய்தேயும் முறை கூறி வணங்கி ஒதுங்கி நின்றவனாகையாலே இந்திரியங்களை வென்றவர்களில் தனக்கு மேற்பட்டாரில்லை என்னும்படி யிருப்பவனாய், தர்மம், அதர்மம், பரலோகம், சேதநன், ஈச்வரன் என்றிவை முதலானவற்றைக் கூறுகின்ற சாஸ்த்ரங்களில் ப்ராமாண்ய புத்தியுடைய ஆஸ்திகர்களுக்குத் தலைவனாய், 'இவனைப் பிரிந்தால் க்ருஷ்ணன் உயிர்தரித்திருக்கமாட்டான்' என்னும்படி கண்ணபிரானுக்கு மிகவும் அபிமதனுமாயிருந்த அர்ஜுநனுக்கு தோஷம் ஏது? என்னில்; யுத்தஞ் செய்வதாக இரண்டு வகுப்பும் வந்

‡ பிராட்டியும் பெருமாளும் என்றபடி.

கணைந்து நின்ற பின்பு யுத்தமே நடக்கவேண்டியிருக்க, அப்போது அர்ஜுநன் 'ஆகா' இவர்களைக் கொன்று நாம் ஜீவிப்பதொரு ஜீவநமுண்டோ?, என்று சுற்றத்தார் மேல் காட்டிய அன்பும், இரக்கமும், கொலை செய்வதில் அஞ்சி நின்றதும் தோஷமன்றோ? இம்மூன்றும் க்ஷத்ரியனை தன் வருணத்திற்கு விருத்தங்களன்றோ? ஸ்வ வர்ணத்திற்கு உரிய தர்மங்களை அதர்மமென்று நினைப்பதும், இடமில்லாதவிடத்தில் பண்ணும் ஸ்நேஹ காருண்யங்களும் தோஷமேயாமெனக்கொள்க.

20. மேலும் இவை அற்ப தோஷமென்னும்படி வேறொரு பெரிய தோஷமும் அவனுக்கு உண்டு; அதாவது—முன்பு த்ரௌபதியைத் துர்யோதநாதிகள் மஹா ஸபையில் துகிலுரிந்து அவமானப்படுத்தியதைக் கண்டிருக்கச் செய்தே சூதிலே தோற்றபடியை நினைத்துப் பொறுத்திருந்தாலும், 'கோவிந்த!, புண்டரீகாக்ஷ! ரக்ஷமாம் சரணாகதாம்' என்று அவள் கிருஷ்ணனை சரணமடைந்த பின்பு பரிபவிக்கிற வளவில், 'எம்பெருமானடியார்களைப் பிறர் பரிபவப்படுத்தக்கண்டால் சக்தியுள்ளவனாகில் விலக்கவேணும், சக்தியற்றவனாகில் வருத்தத்துடனே கண்மறையப் போகவேணும்' என்கிற விசேஷ சாஸ்த்ர மர்யாதையை நோக்கியாவது, தன்னிடத்தில் கண்ணபிரானுக்குள்ள ஸ்நேஹ பக்ஷபாதங்களை நினைத்து, 'அவனைச் சரணமடைந்தவள் பரிபவப்படுவதை நாம் பார்த்திருந்தால் நாளைக்கு அவன் முகத்தில் எப்படி விழிப்பது?' என்றாவது விசாரித்தெழுந்து விலக்கவேண்டியிருக்க, அது செய்யாமல் இடிக்க புளிபோல் ஆடாது அசங்காது உட்கார்ந்திருந்தது இவனுடைய தோஷங்களெல்லாவற்றிற்காட்டிலும் முக்கியமாகக் கிருஷ்ணன் திருவுள்ளத்திற்பட்டுக் கிடந்தது. ஆகையால் அர்ஜுநனை துஷ்டனென்னத் தடையில்லை; அவனை ரக்ஷித்தருளியது—எம்பெருமான் தன்னுடைய வாத்ஸல்யத்தாலே யென்பது மிக்க பொருத்தமுடைத்தேயாம்.

21. த்ரௌபதீபரிபவங் கண்டிருந்த தோஷம் பஞ்சபாண்டவர்கட்கும் ஒத்திருக்குமாகையாலே, பரிபவஞ்செய்த துர்யோதநாதிகளைப் போலே பரிபவங்கண்டிருந்த இவர்களையும் தலையறுத்துப் போகடவேண்டியிருக்க, அவர்களை மாத்திரம் உயிரோடே வாழும்படி வைத்தது—த்ரௌபதிக்கு அபிமதமான திருமங்கலியம் போகாமைக்காக. அவளுடைய விரித்த தலையைக் காணமாட்டாத கண்ணன் வெறுங்கழுத்தை எப்படி காண்பன்? [இக்கால்—அடியார்களைப் பரிபவிக்கின்றவர்களைப்போலவே அப்பரிபவத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களும் தண்டிக்கத் தக்கவர் என்பதும், அப்படி தண்டனைக்கு உரியவர் தாமே அடியார்களோடு விடவொண்ணாத ஒரு ஸம்பந்த முடையவர்களாகில் அவர்களும் அவ்வடியார்களுக்காக அவனாலே ரக்ஷிக்கப் படுவர் என்பதும் விளக்கப்பட்டது.]

22 ஆனால், இப்படி தலையறுத்துப் போகடவேண்டிய அர்ஜுநனுக்கு க்ருஷ்ணன் இழிதொழில் செய்ததும் பரம ரஹஸ்யத்தை உபதேசித்ததும் எதுக்காகவென்னில்; இந்த த்ரௌபதிக்காகத்தான் அத்தனையுஞ் செய்தது. தூது போனது யுத்தத்தை விளைப்பதற்காக; ஸாரதியாய் நின்றது 'ஆயுத மெடுக்கக்கூடாது' என்ற எதிரிகளின் வேண்டுகோளுக்கு உடன்பட்டபடியால் தேர்க்காலாலே ப்ரதி பக்ஷத்தை அழிப்பதற்காக; ப்ரபத்தியை உபதேசித்தது-'யுத்தம் பண்ணமாட்டேன்' என்றிருந்தவனை "உன் சொற்படி-செய்கிறேன்" என வணங்குவித்து யுத்தத்திலே ஆஸக்தனாக்குவதற்காக. ஆக இவையெல்லாம் செய்தது சரணாகதையான இவளுடைய ஸங்கல்பத்தின் படியே துர்யோதநாதிகளை ஒழித்து இவள் கூந்தலை முடியச்செய்வதற்காக வாதலால், க்ருஷ்ணன் அர்ஜுநனுக்குத்தூதுபோனது முதலியவை த்ரௌபதிக்காக வென்னத் தட்டில்லை.

ப்ரபத்தி நியமம்.

23—25. அர்ஜுநனுக்கு ப்ரபத்தியை உபதேசிக்குமளவில், யுத்த பூமியிலே ஒரு கால விசேஷம் பாராமல் ஸ்நாநம் முதலானவையுமில்லாமலிருக்க உபதேசிப்பானேன்? இதற்கு தேசகாலாதி நியமங்களில்லையோ வென்னில்; புண்ய க்ஷேத்ரத்தில் செய்யவேணும்; வேறிடத்தில் செய்யலாகாது என்கிற தேச நியமமும், 'வஸந்தாதி காலங்களிலே செய்யவேணும், மற்ற காலங்களிலாகாது' என்கிற கால நியமமும், ஸ்நாநம் பாதப்ரக்ஷாளநம் முதலியவற்றைச் செய்தபின் செய்யவேணும், வேறுபடியாகச் செய்யக் கூடாது' என்கிற ப்ரகார நியமமும், 'த்ரைவர்ணிகராயிருக்கவேணும், அத்ரைவர்ணிகர் கூடாது' என்கிற அதிகாரி நியமமும், 'இன்ன பலனைத்தான் இது தரும்; மற்ற பலனைத் தராது' என்கிற பல நியமுமாகிற இவையெல்லாம் ஜ்யோதிஷ்டோமம் முதலிய கருமங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றனவே யொழிய ப்ரபத்திக்கு இந்த நியமங்களொன்றுமில்லை; ஆனால், இன்ன விஷயத்திலே செய்யவேணு' மென்கிற விஷய நியமமொன்று மாத்திரம் இதற்குண்டு.

26. [விஷய நியமமொழிய மற்ற நியமமில்லை யென்னும் விஷயம் உபபாதிக்கப் படுகிறது.] ஸ்ரீவிபீஷணாழ்வான் கடற்கரையிலே பெருமாளைச் சரணம்புக வந்தபோது 'இவன் அஸ்தாநத்திலே அஸமயத்திலே வந்தவனாகையாலே சங்கிக்கத்தக்க நிலைமையிலிராநின்றான்' என்று பெருமாளைக் குறித்துக்கூறிய மந்திரிகளின் பக்ஷத்தைத் தூஷிக்கிற சிறிய திருவடி "**ஸ ஏஷதேசஃ காலச்ச**" இத்யாதியாகச் சொன்ன வார்த்தைகளை நோக்குங்கால், கருத்தில் தூய்மையுடைய ஸ்ரீ விபீஷணாழ்வான் 'சரணம்' என்று வந்த தேசகாலங்களில் குறைபார்க்கக்கூடாது, அவன் வந்ததுவே தேச

ரும் காலமும்' என்கிற விதாநங்கள் ஏற்படுகிறபடியால் ப்ரபத்திக்கு தேச கால நியமமில்லை.

27. இவ்வர்த்தம் மந்த்ரரத்நமென்கிற த்வயத்தின் முதற்பதத்திலே நன்குவிளங்கும். எங்ஙனே யென்னில்;--- 'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே; ஸ்ரீமதே 'நாராயணாய நம:'' என்பது த்வயம். இது ப்ரபத்தியின் அநுஷ்டாந ரூபம்; இதில் முதற்பதம் 'ஸ்ரீமத்' பதம். ஸ்ரீசப்தத்தின் மேல் 'மதுப்' ப்ரத்யயம் ஏறி 'ஸ்ரீமத்' என்றாயிற்று. 'மதுப்' ப்ரத்யயத்திற்கு நித்ய ஸம்பந்தம் அர்த்தம். ஆகவே, 'ஸ்ரீமத்' என்பதற்கு 'பிராட்டியோடு நித்ய ஸம்பந்த முடைய' என்று பொருளாயிற்று. இந்த நித்ய ஸம்பந்தத்திற்கு ப்ரயோஜநம் ஏதெனில்; ஏதேனுமோரிடத்திலே ஏதேனுமொருகாலத்திலே ஒரு ஸம்ஸாரிசேதநனுக்கு எம்பெருமானை ஆச்ரயிக்க ருசி பிறந்தால், சுழல் காற்றுப்போலே க்ஷணந்தோறும் சுழன்று வருகிற நெஞ்சிற் பிறந்த அந்த ருசி மற்றொரு க்ஷணத்தில் மாறிவிடக்கூடு மாதலால் அப்படி மாறுவதற்கு முன்னமே அந்த ருசி பிறந்த க்ஷணத்திலேயே ஆச்ரயிக்கும்படி ஸௌகரியமாயிருப்பதற்காக எம்பெருமானோடே பிராட்டி நித்ய ஸம்பந்தமுடையவளாயிருக்கிறாள். ஆகையாலே ப்ரபத்திக்கு தேசகால நியமமில்லை யென்பது அந்தப்பதத்திலே நன்கு விளங்கக் குறையில்லை. [தேசகால நியமமுள்ளதாகில் ஸ்ரீமத் பதத்தில் மதுப் ப்ரத்யயம் நிஷ்ப்பலமாயொழியுமே.]

28. ப்ரபத்திக்கு இப்படி தேசகால நியமமில்லாததுபோலே ப்ரகார நியமமுமில்லை என்பதைப் பலவிடங்களிலுங் காணலாம்.

29. அஃது எங்கேகண்டதென்னில்; த்ரௌபதியானவள் துச்சாஸநனாலே இழுக்கப்பட்டுச் சபையில் வருகிறபோது ரஜஸ்வலையாயிருந்தவள் ஸ்நாநம்பண்ணியோ ப்ரபத்தி பண்ணினாள்? அவ்வசுத்தியோடே யன்றோ 'கோவிந்த புண்டரீகாக்ஷ! ரக்ஷமாம் சரணாகதாம்' என்று கண்ணபிரானை நோக்கிப்ரபத்தி பண்ணினாள். (இத்தால், ப்ரபத்தி பண்ணுவார் சுத்தராய்ப் பண்ணவேணுமென்கிற நியமமில்லாமை காட்டப்பட்டது.) எம்பெருமான் பக்கல் விமுகரான நீசர் நிறைந்த திரளிலேயன்றோ அர்ஜுநன் கண்ணபிரானிடத்தில் ப்ரபத்தியைக் கேட்டுணர்ந்தான்; (இத்தால், ப்ரபத்தி ச்ரவணம் பண்ணும்போது அது நீசர் நடுவே ஆகாதென்கிற நியமமில்லாமை காட்டப்பட்டது.)

30. இத்தால் பலித்ததென் எனில்; ப்ரபத்தியின் அநுஷ்டாந தசையிலும் ச்ரவண தசையிலும் அவர்களிருவரும் இப்படி செய்கையாலே, ப்ரபத்தியில் அந்வயிக்குமளவில் அசுத்தனாயிருக்குமவனுக்கு சுத்தி ஸம்

பாதிக்க வேண்டா, சுத்தனாயிருக்கு மவனுக்கு அசுத்தி ஸம்பாதிக்க வேண்டா; ப்ரபத்தி பண்ணுங் காலத்தில் சுத்தனாகவோ அசுத்தனாகவோ யாதொருபடி இருப்பான் அப்படியே இந்தப்ரபத்திக்கு அதிகாரியாகலா மென்றதாயிற்று.

31. இவ்வர்த்த விஷயமாக வேல்வெட்டிப் பிள்ளைக்கு நம்பிள்ளை அருளிச்செய்ததொரு வார்த்தையுண்டு:— அதாவது—'சக்ரவர்த்தித் திருமகன் கடலைச் சரணம் புகுகிறவிடத்தில் கிழக்குமுகமாயிருக்கை முதலிய நியமங்களோடே கூடினவராய் சரணம் புகுகையாலே மற்ற உபாயங்களுக்குப்போலே ப்ரபத்திக்கும் சில நியமங்கள் வேண்டியிருக்கின்றனவோ? என்று வேல்வெட்டிப்பிள்ளை நம்பிள்ளையைக் கேட்க; 'பெருமாள்பக்கல் கண்ட நியமம் இவ்வுபாயத்துக்கு அவச்யாபேக்ஷிதமாயிருப்பதொன்றன்று; உபாய பரிக்ரஹம் பண்ணின அப்பெருமாளுடைய ஆசாரசீலதையாகிற ஸ்வபாவத்தாலே வந்ததித்தனை; கடலைச் சரணம் புகும்படி பெருமாளுக்கு உபதேசித்த ஸ்ரீ விபீஷணாழ்வான் பெருமாளைச் சரணம் புகும் போது கடலிலே ஒரு முழுக்கிட்டு வந்தானென்றில்லையே; இத்தால் பெருமாள் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து ஆசாரப்ரதானராயிருக்கையாலே தம்முடைய நியமங்களோடே தாம் சரணம் புகுந்தார்; விபீஷணன் ராக்ஷஸ ஜாதீயனாகையாலே தான் நின்ற நிலையிலே சரணம் புகுந்தான். ஆகையால் யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; நின்றநிலைகளிலே அதிகாரிகளாமித்தனை என்று விளங்காநின்றது' என்று நம்பிள்ளை அருளிச்செய்தார்.

32. இனி, இப்ரபத்திக்கு அதிகாரிநியமமில்லை யென்றது எது கொண்டு? என்னில்; க்ஷத்ரியரான தர்மபுத்திராதிகளும், ஸ்த்ரீயான த்ரௌபதியும், தேவரூபத்தை மறைத்து மஹாபராதத்தைப் பண்ணின காகமும், திர்யக்யோநியிற் பிறந்தவனும் ப்ரதிகூலனுமான காளியனும், திர்யக்யோநியிற் பிறந்து அநுகூலனான ஸ்ரீ கஜேந்த்ராழ்வானும், ராக்ஷஸ ஜாதீயனான ஸ்ரீ விபீஷணாழ்வானும், ஸர்வசரண்யரான பெருமாளும், இளைய பெருமாளும் முதலானவர்களெல்லாரும் சரணம் புகுகையாலே ப்ரபத்திக்கு இன்னார்தான் அதிகாரிகள் என்று ஒரு நியதியில்லை; ருசியுடையாரெல்லாரும் அதிகாரிகளே.

33. இந்த ப்ரபத்தி இன்ன பலத்தைத்தான் தரும் என்கிற நியமமில்லையென்றது எதுகொண்டென்னில்; கீழ் அதிகாரிநியமமில்லாமைக்கு உடலாகக் காட்டப்பட்ட தர்மபுத்ர முதலான ப்ரபந்நர்கள்—அடைவே, ராஜ்யத்துக்காகவும், சேலைக்காகவும், உயிர்க்காகவும், கைங்கரியத்துக்

காகவும், இராமபிரானை அடைவதற்காகவும், கடலைத் தாண்டுவதற்காகவும், இராமபிரானை அநுவர்த்திப்பதற்காகவும், ப்ரபத்திபண்ணுகையாலே ப்ரபத்திக்குப் பலநியமமில்லை.

34. 'ப்ரபத்திக்கு விஷய நியமம்மாத்திரமுண்டு' என்று சொன்ன விஷயநியமமாவது— பரத்வாதிகளைக்காட்டிலும் ஸௌலப்யாதி குணங்கள் பூர்ணமாயிருக்கப்பெற்ற இடமே விஷயமாகை. அந்த குணபூர்த்தி தான் உள்ளது எங்கேயென்னில்; ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான எம்பெருமான் தானே சொல்லப்புக்காலும் சொல்லித்தலைக்கட்ட முடியாதபடி குணங்கள் பூர்ணமாயிருப்பது அர்ச்சாவதாரத்திலே என்று ப்ரஸித்தமிறே.

35. *மயர்வற மதிநலமருளப் பெறுகையாலே பரத்வாதிகளையெல்லாம் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கண்டிருக்கிற ஆழ்வார்கள் ப்ராப்யத்வராதிசயத்தாலே பலகாலும் ப்ரபத்திபண்ணுகிற வளவில் பலவிடங்களிலும் அர்ச்சாவதாரத்திலேயிறே ப்ரபத்திபண்ணிற்று.

36. இப்படி இவ்வாழ்வார்கள் ப்ரபத்தி பண்ணுமிடங்களில் பரத்வாதிகளெல்லாமிருக்க அர்ச்சாவதாரத்திலே பண்ணுகைக்கடி இதின் குணபூர்த்தியேயாய்த்து; ச்ருதிதன்னிலும்— "**பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே, ஸர்வம்பூர்ணம் ஸஹோம்**" என்று சொல்லியிருக்கையாலே ஸகல கல்யாண குணங்களும் அர்ச்சாவதாரத்திலே பூர்ணமென்னுமிடம் நிர்விவாதம்.

37. ஆனால் "**வாஸுதேவோஸி பூர்ண:**" என்கிற பரத்வத்திற்காட்டில் அர்ச்சாவதாரத்திற்கு ஏற்றமென்னென்னில்; உபாயமாகப் பற்றுமிடத்தில் வேண்டுமவையான ஸௌலப்ய வாத்ஸல்யாதி குணங்கள் பரத்வத்திலுமுண்டாயினும் அது பரமஸாம்யாபந்நர்க்கு முகங்கொடுத்திருக்கிறவிடமாகையாலே அங்கு அக்குணங்கள் பகல்விளக்குப்போலே ஒளிமழுங்கப் பெற்றிருக்கும்; அர்ச்சாவதாரமானவிடத்தில் நைச்யத்துக்கு எல்லைநிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கையாலே அக்குணங்கள் இங்கு இருட்டறையில் விளக்குப்போலே பேரொளி பெற்று விளங்கும்: இதுவே ஏற்றம்.

38. அவாப்த ஸமஸ்தகாமனாயிருக்கு மிருப்பு தவிர்ந்து, ஸம்ஸாரிகளிட்டது கொண்டு வயிறு நிறைய வேண்டும்படி ஸாபேக்ஷனாய், அர்ச்சக பராதீநமான ஸ்வரூபஸ்தித்யாதிகளையுடையனாய், தானிப்படி எளியனாய் வந்துநின்றால் இந்த ஸௌலப்யத்துக்கு வியந்து விரும்பி மேல்விழவேண்டியிருக்க அதுசெய்யாமல் அந்த ஸௌலப்யமே ஹேதுவாக உபேக்ஷிக்கிற

ஸம்ஸாரிகளைத் தான் விடமாட்டாதவளவன்றிக்கே அவர்களையொழியச் செல்லாமை தோற்றும்படி நிற்கிறவிடமாய்த்து அர்ச்சாவதாரம்.

39. [பரத்வாதிகள் துர்லபமென்பதும், அர்ச்சாவதாரம் ஸுலபமென்பதும் த்ருஷ்டாந்தமுகமாகக் காட்டப்படுகிறது:—]

(1) விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப் போக வேண்டாதபடி, நிற்கிறவிடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங் கொண்டு கல்லினாலல்லது குடிக்கக்கிடையாத பூமிக்குள் பதிந்த நீர்போலேயாய்த்து அந்தர்யாமித்வம். கண்டு பற்றவேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்திலே யிருக்கச் செய்தேயும் கண்ணுக்கு விஷயமன்றிக்கே அஷ்டாங்க யோகமாகிற யத்நத்தாலே காணவேண்டும்படியானதிறே இது. (2) † அவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரணஜலம் போலேயாயிற்று— இவனுக்கும் லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்வம்: (3) அப்படி அதிதூரஸ்தமன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் † அவனுக்குக் கிட்டவரிதான பாற்கடல் போலேயாயிற்று—இவனுக்கும் சென்று காணவரிதாம்படியிருக்கிற வ்யூஹம். (4) ஸமீபஸ்தமாயிருந்தும் தத்காலத்திலிருந்தவர்களுக்கு மாத்திரம் உபயோகார்ஹமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று—ராமக்ருஷ்ணாத்யவதாரங்களான விபவம். பூமியிலே அவதரித்து ஸஞ்சரித்தும் தத்காலத்திலிருந்தவர்களுக்கே ஆச்ரயணீயமாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாயிருப்பதிறே இது. (5) ஆக இவை போலன்றிக்கே, விடாய்த்தவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று—கோயில்களிலும் க்ருஹங்களிலும் எங்குமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம்.

40. ஹிதங்களை விதிக்கிற ச்ருதிஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களானவை விஷயாந்தரங்களிலே அருசி பிறக்கும்படி அவற்றின் குற்றங்களையும், பகவத் விஷயத்தில் ருசி பிறக்கும்படி அதின் மேன்மையையும் உபதேசித்தாலும் அவற்றாலே விஷயாந்தரங்களை விட்டு பகவத் விஷயத்தைப் பற்ற முடியாமல் துர்வாஸநா பலத்தாலே விஷயாந்தரங்களிலே அளவற்ற அபிநிவேசத்தை வைத்து 'பகவத் விஷய' மென்றால் கண்ணெடுத்தும் பார்க்க இசையாதிருக்கிற சேதநர்கட்கு, தன் அழகு முதலியவற்றாலே நெஞ்சைக் கவர்ந்து, தன்னைக் காணவேண்டோ மென்றிருந்த வைமுக்கியத்தை மாற்றி, கண்ட கண் மாற வைக்க மாட்டாதபடி ருசியை உண்டு பண்ணக் கடவதாய், இப்படி தன் வைலக்ஷண்யத்தைக் காண்கையாலே

† அவனுக்கு-விடாய்த்தவனுக்கு என்றபடி.

தன்னை 'நித்யாநுபவம் பண்ணப் பெறவேணும்' என்கிற ருசி பிறந்த பின், ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வகமாகத் தன்னை அடைகைக்குத் தானே ஸாதநமாய்த் தன்னை ஸாதநமாகப் பரிக்ரஹித்தால் ஸாத்யம் கைபுகுவதற்கு ஒரு தேச விசேஷத்திலே போமளவும் பார்த்திருக்க வேண்டாதே "எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே திருமாலிருஞ் சோலைக்கோனே" என்கிறபடியே பரம போக்யமாயிருக்கையாலே தானே உபேயமுமாயிருக்கும்—இவ்வர்ச்சாவதாரம்.

41. ஸௌலப்யாதி குணபூர்த்தியாலே ப்ரபத்திக்கு நியத விஷயமான இவ்வர்ச்சாவதாரத்திலே ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூன்று வகைப்பட்டிருப்பார்கள்.

42. அவர்கள் யாரென்னில்; (1) எம்பெருமானைப் பெறுதற்குறுப்பாக ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகைக்கீடான ஞானமில்லாதவர்களும், (2) ஜ்ஞாந சக்திகளுண்டாயிருக்கச் செய்தேயும் எம்பெருமானுக்கு அத்யந்த பாதந்த்ரமான ஸ்வரூபத்தின் உண்மையுணர்ச்சியாலே உபாயாந்தரங்களை ஸ்வரூப விருத்தங்களென்று விடுகைக்கீடான ஜ்ஞாநபூர்த்தியை யுடையவர்களும், (3) ஒன்றற்றும் கிரமமாக அநுஷ்டிக்க வல்லரல்லாதபடி எம்பெருமான் பக்கலுள்ள மிக்க ப்ரேமத்தாலே சிதிலகரணராயிருக்கும் பக்திபரவசர்களுமாவர். [1. அஜ்ஞர், 2. ஜ்ஞாநாதிகர், 3. பக்தி பரவசர்.]

43. உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பதில் ப்ரவர்த்திக்கைக்கீடான ஜ்ஞாநாதிகளில்லாமையாலே உபாயாந்தர சூந்யராய்க் கொண்டு பகவத் விஷயத்தில் பரந்யாஸம் பண்ணினவர்கள் அஸ்மதாதிகள்; உபாயாந்தரங்கள் ஸ்வரூபநாசகங்களென்று நடுங்கும்படியான ஸ்வரூபஜ்ஞாநபூர்த்தியாலே அநந்யகதிகளாய்க் கொண்டு ஸ்வரூபாநுரூபமாக எம்பெருமானிடத்தில் பரந்யாஸம் பண்ணினவர்கள் நாதயாமுநயதிவராதிகளான பூர்வாசார்யர்கள்; எம்பெருமானிடத்தில் ப்ரேமபூர்த்தியாலே "காலாழும் நெஞ்சழியுங் கண் சுழலும்" என்கிறபடியே சிதிலகரணராயிருக்கையாலே ஸாதநாநுஷ்டாநத்துக்கு ஆளல்லாமல் அநந்யகதிகளாய்க்கொண்டு அவன் பக்கலிலே பரஸமர்ப்பணம் பண்ணினவர்கள் பராங்குச பரகாலாதிகளான ஆழ்வார்கள்.

44. அஜ்ஞாநாசக்திகளும், ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிற இம்மூன்றினுடைய அநுஸந்தாநமும் கீழ்க்கண்ட மூவர்க்கும் ஏதேனுமொருபடி உண்டாயிருக்கச்செய்தே ஓரொன்றே இவர்களுக்கு ப்ரபத்தி நிமித்தமாகச் சொல்லுகிறது—இவற்றில் ஓரொன்றிலே இவ்வதிகாரிகளுக்கு ஊற்றமாகையாலே. [அதாவது—அநந்யகதிகளாய் ப்ரபந்நராகைக் குடலான அஜ்ஞாநாதிகள் மூன்றினுடையவும் அநுஸந்தாநம் மூவர்க்குமுண்டானாலும் மூன்றிலும் வைத்துக்கொண்டு ப்ரசுரமான ஒவ்வொன்றே தந்தாமுக்கு ப்ரபத்திஹேதுவாகத் தாம் அநுஸந்தித்திருக்கையாலே என்கை.]